ஸ்ரீ:

[illegible] நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு 23.] [illegible] புரட்டாசி [illegible] [ஸஞ்சிகை. 4

ஸ்ரீ:

## மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[இ[illegible] ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யார்.]

(தொடர்ச்சி ஸம் 23, ஸஞ் 3, 122 பக்கம்.)

(2) இந்தக் குற்றத்தை விலக்குவதற்காக இரண்டு குணங்களை உடைய பசுவாகிற த்ரவ்யத்தை விதிக்கிறது என்றால், கௌரவம் என்னும் குற்றம் வரும்.

(3) ஆகையால் 'சித்ரா' என்கிற சொல் யாகத்தின் பெயர். '[illegible]' (தயிர்), [illegible] (தேன்), [illegible] (நெய்), [illegible] (ஜலம்), [illegible] (வறுக்கப் பட்ட யவம்), [illegible] (அரிசி), [illegible] என்று ஏழு த்ரவ்யங்கள் ப்ரஜாபதி என்ற தேவதைக்குக் கொடுக்கப் படுவதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. யாகத்துக்கு [illegible] (உருவம்) தேவதையும் த்ரவ்யமும். அவைகளிரண்டும் இங்கே சொல்லப் படுகின்றன. இப்படி விதிக்கப்பட்ட யாகத்துக்குப் பலன் என்ன? என்று கேள்வி உண்டாக, '[illegible]' என்று பலன் விதிக்கப்படுகிறது. பசுவாகிய பலனை 'சித்ரா' என்று பெயருள்ள யாகத்தாலே உண்டு பண்ணு என்று அதன் பொருள். த்ரவ்யங்கள் ஒன்றைப்போல் ஒன்று இல்லாமையால்

158954

வதைகளைக் கொண்டு செய்யும் யாகத்தை 'விதா' என்று சொல்லலாம். இப்படி அர்த்தம் பண்ணினால் இந்த இடத்துக்கு வேண்டியவிதி கிடைக்கிறது. அதை விட்டு அக்னீஷோமீய பசுயாகத்திற்கு குணவிதியென்றால், ஏற்பட்டதை விடுவது, ஏற்படாததைப் பிடிக்கிறது, என்கிற இரண்டு குற்றங்கள் வரும். மேலும், 'யஜேத' என்கிற சொல்லை அநுவாதம் என்று சொன்னால் 'யிஜ்' ப்ரத்யயத்திற்கு முக்கியமான அர்த்தம் போய்விடும். (அதி-3)

37. 'த்ரிவ்ருத் பஹிஷ்பவமாநம்' 'பஞ்சதசாநி ஆஜ்யாநி' 'ஸப்தத சாநி ப்ருஷ்டாநி' என்று மூன்று வாக்யங்களிருக்கின்றன ஸோமயாகத்தில் ஸோம ரஸங்களை ஹோமம் செய்வதற்கு முன்னாலே உத்காதாவும் அவரைச் சேர்ந்தவர்களும் கானம் பண்ணும் ஸ்தோத்ரங்களுக்கு பஹிஷ்பவமாநம், ஆஜ்யஸ்தோத்ரம், ப்ருஷ்டஸ்தோத்ரம்; என்றுபெயர்கள். ஒவ்வொரு ஸ்தோத்ரத்திலும் அநேக ஸ்தோத்ரீயாக்கள் இருக்கின்றன. அவைகளின் தொகைக்கு ஸாமா (ஸ்தோமம்) என்று பெயர். பஹிஷ்பவமாந ஸ்தோத்ரத்துக்கு ஸ்தோமம், த்ரிவ்ருத் (ஒன்பது). நாலு ஆஜ்ய ஸ்தோத்ரங்களில் ஒவ்வொன்றுக்கு ஸ்தோமம் பஞ்சதச (பதினைந்து). நாலு ப்ருஷ்ட ஸ்தோத்ரங்களில் ஒவ்வொன்றுக்கும் ஸ்தோமம் ஸப்ததச (பதினேழு). இந்த வாக்யங்களில் த்ரிவ்ருத், பஞ்சதச, ஸப்ததச, என்கிற சொற்களாலே குணம் விதிக்கப் படுவதாக எல்லோரும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். பஹிஷ்பவமாநம், ஆஜ்யம், ப்ருஷ்டம், என்கிற சொற்களும் குணத்தை விதிக்[illegible] என்று ஸந்தேஹம். இரண்டு விதமான குணங்களும் விதிக்க[illegible]வாக்யபேதம் உண்டாகும். ஆகையால் பஹிஷ்பவமாநம் முதலான மூன்று சொற்களும் பெயர்கள். அவைகளாலே ஸ்தோத்ரங்களை அநுவாதம் பண்ணி த்ரிவ்ருத் முதலான குணங்கள் விதிக்கப் படுகின்றன. (அதி-3)

38 'அக்நிஹோத்ரம் ஜுஹோதி' என்கிற வாக்யத்தில் அக்நிஹோத்ரம் என்ற சொல் பெயரா? அல்லது தேவதை என்கிற குணத்தை விதிக்கிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இது பெயராக இருந்தால் தேவதையைச் சொல்லுகிற சொல் இல்லை. ஆகையால் யாகமே இல்லாமல் போய்விடும். ஆகையால் அக்நயே ஹோத்ரம் (அக்நிதேவதைக்கு ஹோமம்) என்று அர்த்தம் சொல்லி அக்நி என்கிற தேவதையாகிய குணத்தை இந்த வாக்யம் விதிக்கிறது.

ஸித்தாந்தம்:—வேறு வாக்யத்தால் (அக்நிஹோத்ரத்துக்கு ஏற்பட்ட மந்த்ரத்தாலே) தேவதை கிடைப்பதால் தேவதையை விதிக்க வேண்டியதில்லை. ஆகையால் அக்நிஹோத்ரம் என்ற சொல் பெயர். (அதி-4)



460

39. மேலே சொன்னபடியானால் அக்நிஹோத்ரேண ஜுஹோதி என்று இருக்கவேண்டாமா? 'உத்பிதா யஜேத' என்கிற இடத்தில் இருந்ததுபோல. பதில்—அக்நிஹோத்ரம் என்கிற கர்மத்துக்கு இரண்டு ஆகாரமிருக்கின்றன. முதலில் அதை உண்டு பண்ணவேணும். அப்போது அதை அக்நிஹோத்ரம் என்று த்விதீயா விபக்தி (இரண்டாம் வேற்றுமை) யுடன் சொல்லலாம். உண்டான பிறகு அது கரணமாயிருந்து பலனைக் கொடுக்கிறது. அப்போது அக்நிஹோத்ரேண ஹோமேந இஷ்டம் பாவயேத் என்று த்விதீயா விபக்தி கூடும்.

இங்கே ஒரு கேள்வி ?

'வ்ரீஹீந் ப்ரோக்ஷதி' (நெல்லை ப்ரோக்ஷிக்கிறது) என்கிற இடத்தில் நெல்லுக்கு ப்ரோக்ஷிப்பதாலே ஒரு ஸம்ஸ்காரம் உண்டு பண்ணப் படுகிறது. அதுபோல் இங்கே அக்நி ஹோத்ரத்துக்கு ஸம்ஸ்காரம் என்று சொல்ல வேண்டாமா? என்று. பதில்—'வ்ரீஹி' (நெல்) என்பது எல்லாருக்கும் தெரிந்த த்ரவ்யம். அதற்கு ஸம்ஸ்காரம் செய்யலாம். அக்நி ஹோத்ரமென்பது த்ரவ்யமன்று. அது ஒரு கர்மம். (அதி—4)

எந்த இடத்தில் தாதுவின் அர்த்தமான யாகத்தையோ ஹோமத்தையோ விதிக்கப் படுவதாகச் சொல்லக்கூடுமோ; அந்த இடத்தில் வாக்யத்தின் அர்த்தத்தை விதித்ததா சொல்லக்கூடாது, ச்ருதியால் தாதுவின் அர்த்தம் (இங்கே [illegible]மம்). திக்கப்படுகிறது. வாக்யம் என்கிற ப்ரமாணத்தாலே த[illegible]துவுடன் சேர்ந்த பதத்தின் பொருள் விதிக்கவேண்டியது. வாக்யத்தைக் காட்டிலும் ச்ருதி வலிமையுள்ள ப்ரமாணம். அக்நிஹோத்ரம் என்கிற சொல்லுக்கு ஒரு ப்ரயோஜநமில்லையே யென்றால் பெயராய் இருந்து ப்ரயோஜநத்தை அடையலாம். (சாஸ்—63.)

40. 'ஆகாரம் ஆகாரயதி' என்கிற வாக்யத்திலும் ஆகாரம் என்கிற சொல் பெயர்: உபாம்சுயாஜம் என்னும் யாகத்துக்கு வேண்டிய நெய்க்கு ஸம்ஸ்காரம் சொல்லப் படுகின்றதென்று பூர்வபக்ஷம். வேறு வாக்யத்தாலே அந்த யாகத்துக்கு த்ரவ்யம் சொல்லப்படுவதால், ஆகாரம் என்கிற சொல் பெயர், என்று ஸித்தாந்தம். (அதி-1)

41 ச்யேநேந அபிசரந் யஜேத (விரோதியைக் கொல்லுவதற்கு வழி தேடுகின்றவன் ச்யேநயாகத்தைச் செய்யவேண்டியது) என்கிற இடத்தில் 'ச்யேந' என்கிற சொல் யாகத்தின் பெயரா? அல்லது குணவிதியா? என்று ஸந்தேஹம்.

**பூர்வபக்ஷம்:**—பெயராக இருந்தால், த்ரவ்யத்தையும், தேவதையும், சொல்லாததினால், யாகமே இல்லாமல் போய்விடும். ஆகையால் ஸோமயாகத்துக்கு த்ரவ்யமாக ஏற்பட்ட ஸோமம் என்னும் கொடியைத் தள்ளிவிட்டு அதற்கு பதிலாக 'ச்யேநம்' என்கிற ஒரு பக்ஷியை வைத்துக்கொள்ள வேண்டியது என்று குணவிதி, ச்யேநம் என்பது ரூடியால் பக்ஷியைச் சொல்லுவதாலும் ஒரு குணத்தை மாத்ரம் விதிப்பதாலும் 35வது பாரா, ஸித்தாந்தம் (4) முடிவிலும் 36வது பாராவிலும் சொல்லப்பட்ட குற்றங்களில்லை.

**ஸித்தாந்தம்:**—விதிவாக்யத்தின் மேல் ஒரு வாக்யம் இருக்கிறது. அதின்பொருள் எப்படி ச்யேநம்என்னும் பக்ஷியானது, கீழே வந்து ஒருவஸ்துவைக்கொண்டு போகிறதோ, அப்படியே இந்த யாகமும் எவன் சாகவேணும் என்று ஒருவன் யாகம் செய்கிறானோ, அந்த த்வேஷம் பண்ணும் விரோதியைக் கீழே வந்து தூக்கிக்கொண்டு போய்விடுகிறது என்று. இங்கே யாகம் செய்யும் வேலைக்கு உதாஹரணம் சொல்லியிருக்கிறது. பூர்வபக்ஷத்தில் சொன்னது போல் பக்ஷியை த்ரவ்யமாக விதிக்கிறதென்றால் பக்ஷி ஒன்றுதானிருக்கும். பக்ஷியும், யாகமும் ஆகிய இரண்டு பொருள் இல்லை. அப்போது எப்படி உதாஹரணம் கூடும். யாகத்தின்பெயராக இருந்தால், உதாரணமான பக்ஷியின் குணம் யாகத்தில், இருக்கிறதென்று உதா[illegible] சரியாக இருக்கும். (அதி-5)

42 'வாஜபேயேந ஸ்வாராஜ்யகாமோ யஜேத' (ஸ்வர்க்கத்தை ஆளவேண்டும் என்று ஆசையுள்ளவன் வாஜபேயம் என்னும் யாகத்தைச் செய்யவேண்டியது) என்கிற இடத்தில் வாஜபேயம் என்னும் சொல் பெயரா? அல்லது குணத்தை விதிக்கிறதா? என்று ஸந்தேஹம்.

**பூர்வபக்ஷம்:**—'வாஜம்' என்னும்சொல்லுக்கு அந்நம் (ஆஹாரம்)என்று பொருள், 'பேயம்' என்பது குடிக்கத்தகுந்தது. குடிக்கத்தகுந்த ஆஹாரம் 'ஸுரா' (கள்ளு). ஸுரையை பாத்திரத்தில் எடுத்து வைக்கும்படி அந்த யாகத்தில் சொல்வதால், வாஜபேயம் என்னும் த்ரவ்யமாகிய குணம் விதிக்கப்படுகிறது.

**இங்கே ஒரு கேள்வி:**—இப்படிச்சொன்னால், வாஜபேயம் என்கிற குணத்தை உடைய யாகத்தாலே ஸ்வாராஜ்யத்தை உண்டுபண்ணு என்று பொருளாகும். அப்போது 'வாஜபேயம்' என்ற சொல்லுக்கு வாஜபேயவதா என்று பொருளாவதால் 'லக்ஷணை' என்ற குற்றம் வரும் என்று. பதில்—யஜேத என்கிற சொல்லின் ப்ரத்யயான விதிக்கு வாஜபேயம் என்னும் குணத்தோடும் ஸ்வராஜ்யம் என்னும், பலனோடும் சேர்ந்து ஸம்பந்தம். வாஜபேயேந த்ரவ்யேண ஸ்வாராஜ்யாய யஜேத என்று.



(3) மறுபடியும் கேள்வி: யஜேத என்பதற்கு குணத்தோடு ஸம்பந்தமானால் வாஜபேயம் என்கிற குணத்தினால் யாகத்தைச் செய் என்று பொருளாகும். அப்போது யாகம் 'கர்ம'மாகும். பலனோடு ஸம்பந்தமானால் 'யாகத்தாலே ஸ்வாராஜ்யத்தை ஸம்பாதி' என்று பொருளாகும். அப்போது யாகம் காரணமாகும். ஒரே சொல்லுக்கு ஒரே தடவை சொல்லப்பட்டதற்கு இரண்டு ஸம்பந்தம் எப்படிக்கூடும். என்று. பதில்—இது குற்றமன்று. யாகமானது பொதுவானதால் அதற்கு இரண்டும் கர்மமாயும் காரணமாயும் இருப்பது கூடும். யஜேத என்கிற சொல்லில் தாதுவால் யாகம் சொல்லப்படுகிறது. இரண்டும் ஒரே சொல்லில் சேர்ந்திருப்பதால், ஸம்பந்த மாத்ரம் ஏற்படுகிறது அது கர்மத்துக்கும், காரணத்துக்கும் பொதுவானது. இங்கே கர்மத்தைத்தான் சொல்லுகிறதென்றாவது, அல்லது காரணத்தைத்தான் என்றாவது காட்டுகிற அதற்கு ஏற்பட்ட விபக்தி (வேற்றுமை) இல்லையே. ஆகையால் பொதுவான இரண்டினுடனும் ஒரே வேளையில் ஸம்பந்தமிருக்கலாம். எந்த ஸம்பந்தம் தகுந்ததோ அது தானாகவே ஏற்படும். இப்படி ஒப்புக்கொண்டால் வாஜபேயம் என்கிற த்ரவ்யத்தாலே யாகத்தைச்செய், என்று பொருள் கிடைக்கிறது. குணவிதியானாலும் லக்ஷணை என்கிற குற்றமில்லை.

ஸித்தாந்தம். ஸ்வாராஜ்யம் என்கிற பலனுக்கு ஸாதனமாயிருக்கும்போது யாகமானது உபாதேயமாயும் விதேயமாயும் குணமாயுமிருக்கும். வாஜபேயம் என்கிற த்ரவ்யத்தினால் உண்டு பண்ணப் படும்போது உத்தேச்யமாயும் அநுவாத்யமாயும் முக்யமாயும் இருக்கும். ஒரே வாக்யத்தால் யாகத்தை பலனுக்கு ஸாதனமாயும் வாஜபேய த்ரவ்யத்தாலே உண்டு பண்ணப்படுவதாயும் சொன்னால், யாகமானது ஒரே காலத்தில் உபாதேயமாயும் உத்தேச்யமாயும் இருக்கவேண்டும். உபாதேயம் உடம்பினால் செய்யப்படுவது. உத்தேச்யம் மனதினால் ஆசைப்படப்பட்டது. இரண்டும் எப்படி சேரும். மேலும் யாகமானது விதேயமாயும் அநுவாத்யமாயும் இருக்கவேண்டும். தெரிந்ததைச் சொல்வது அநுவாதம். தெரியாததைத் தெரியப்படுத்துவது விதி. ஒரே யாகமானது எப்படி இரண்டுமாயிருக்கும். மேலும் யாகமானது முக்யமாயும் குணமாயும் ஒரே மூச்சில் எப்படி இருக்கக்கூடும்? ஆகையால் யாகத்துக்குப்பலனுடனும் த்ரவ்யத்துடனும் ஒரே வாக்யத்தால் ஸம்பந்தம் ஏற்படாது. ஆகையால் வாஜபேயம் என்கிற சொல் யாகத்தின் பெயர். (அதி-6)

ஸம்பந்தமாத்திரம் சொன்னால் யாகத்துக்குப் பலனுடனும் ஸம்பந்தம் ஏற்படாது. த்ரவ்யத்துடனும் ஏற்படாது. ஸம்பந்தம் இன்னதென்று தெரியவேணும். அப்போது யாகம் கர்மமாயாவது அல்லது கரணமாயாவது இருக்கவேணும் (சாஸ்த்ரம் 70-71)

43 சாதுர்மாஸ்யம் என்று சொல்லப்பட்ட யாகத்தில் முதலாவது பர்வம் (படி) வைச்வதேவம் என்பது. அதில் எட்டு யாகங்களை விதித்து அதன் கிட்ட சொல்லியிருக்கிறது—'வைஶ்வதேவேந யஜேத' (வைச்வதே வம் என்னும் யாகத்தைச் செய்) என்று. இது குண விதியா? அல்லது வைச்வதேவம் என்பது பெயரா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—வைச்வதேவம் என்பது பெயராயிருந்தால், தேவதையும் த்ரவ்யமும் இல்லாததால் யாகமே இல்லை. அப்போது யஜேத என்கிற விதிக்கு ப்ரயோஜனமில்லை. ஆகையால் விதித்த எட்டு யாகங்களை அநுவாதம் பண்ணி விச்வேதேவர் என்கிற தேவதையான குணம் விதிக்கப்படுகிறது.

2 ஒரு கேள்வி:—'வைஶ்வதேவீ ஆமிக்ஷா' என்று 'ஆமிக்ஷா' த்ரவ்யத்துக்கு தேவதை சொல்லியிருக்கிறதே! எதற்காக மறுபடியும் தேவதையை விதிக்க வேணும்? என்று. பதில்—பாக்கி ஏழுயாகங்களுக்கும் விச்வேதேவர்கள் என்கிற தேவதையை விதிக்கிறது. அவைகளுக்கு தேவதைகள் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறதே! என்றால் அவை யாகத்துக்கு வைத்துக் கொள்ளலாம், அல்லது விச்வேதேவர்களையாவது வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணவேணும், ஏனென்றால் வழியில்லை.

ஸித்தாந்தம்:—(1) முதலில் ஏற்பட்ட தேவதைகளையாவது, விச்வே தேவர்களையாவது ஏழுயாகங்களுக்குத் தேவதைகளாய் வைத்துகொள்ளலாம் என்று சொன்னது கூடாது. இப்படி விகல்பம் சொல்லுவது இரண்டிற்கும் வலிமை ஸமமாயிருந்தால் தான் கூடும். இங்கே அப்படியில்லை. ஏழுயாகங்களுக்கும் தேவதைகள் யாகங்களை விதிக்கிற வாக்கியங்களாலேயே ஏற்பட்டன. ஆகையால் அந்த வாக்யங்களில் சொல்லப்பட்ட தேவதைகளுக்கு வலிமை அதிகம். யாகங்கள் ஏற்பட்டபிறகு விச்வேதேவ தேவதையை விதிப்பதானால், அந்த தேவதைக்கு வலிமையில்லை. ஆகையால் விகல்பம் கூடாது.

(2) பூர்வபக்ஷத்தில் முதல் பாராவில் சொன்னபடி விதிக்கு ப்ரயோஜனமில்லை யென்பது ஸரியன்று. எட்டு யாகங்களையும் சேர்த்து வைச்வதேவம் என்று பெயர் கொடுக்கப்படுகிறது. பெயர் கொடுப்பது வீணன்று. "ப்ராசீநப்ரவணே வைஶ்வதேவேந யஜேத" என்பது முதலான இடங்



களில் இந்தச் சொல்லால் எட்டுயாகங்களைச் சொல்லும் ஸௌகரிய மிருக்கிறது. (அதி—11).

44. "யதாக்நேயோऽஷ்டாகபாலோऽமாவாஸ்யாயாம் ச பௌர்ணமாஸ்யாம் சாச்யுதோ பவதி" என்று ஒருவாக்ய மிருக்கிறது. இதில் ஆக்நேயம் என்கிற சொல் பெயரா? அல்லது,இந்த வாக்கியம் யாகங்களுக்கு அக்நி என்கிற தேவதையை விதிக்கிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—38-பாராவில் அக்நிஹோத்ரம் என்கிற சொல் பெயர் என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படியே இங்கேயும் ஆக்நேயம் என்பது பெயர்.

ஸித்தாந்தம்:—ஆக்நேயம் என்கிற சொல் பெயராயிருந்தால், தேவதை இல்லாமல் போய்விடும். "அக்நிஹோத்ரம்" என்கிற விஷயத்தில் இதற்காகவே ஒரு மந்த்ரம் விதிக்கப்படுகிறது. இங்கே அவ்விதமான மந்த்ரமுமில்லை, ஆக்நேயம் என்கிற சொல் தேவதையை விதிக்கமுடியும். ஏன் என்றால். அதின் பொருள்-அக்நியைத் தேவதையாக உடையது-என்று. அந்தச் சொல்லின கடைசியிலிருக்கும் ப்ரத்யயம் இந்த அர்த்தத்தைச் சொல்லுகிறது. இதற்கு தத்திதப்ரத்யயம் என்று பெயர்.

(2) கேள்வி:—இங்கே தேவதையையும், "அஷ்டாகபாலம்" (எட்டு கபாலங்களில் சுடப்பட்ட புரோடாசம்) என்கிற த்ரவ்யத்தையும் விதித்தால் இரண்டு வாக்யமாகுமே என்று. பதில்:—யாகமானது வேறு வாக்யத்தால் ஏற்படாததால், தேவதை, த்ரவ்யம் என்னும் இரண்டு குணங்களோடு சேர்ந்த ஒரு கர்மத்தை ஒரேவாக்யத்தால் விதிக்கலாம். (அதிக-7)

(3) இங்கே "அஷ்டாகபாலோ பவதி" என்று வாக்யம். இதைக் கொண்டு ஒருவன் செய்யவேண்டிய வேலை சொல்லப்படவில்லையே, சொல்லியிருந்தாலன்றோ அந்த வேலையைச் செய்வதற்கு முன்னாலே மந்த்ரத்தைச் சொல்லி வேலைசெய்யும் வழியைத் தெரிந்து கொள்ளவேண்டியது. ஆகையால் மந்த்ரத்தின் தேவையேயில்லை. தேவையிருப்பதாக வைத்துக்கொண்டாலும், புரோடாசத்தின் வேலையை மாத்திரம் செய்யவேண்டியது. தேவதையைச் சொல்லுகிற மந்த்ரத்தின் ஸம்பந்தம் எப்படி வாக்யத்துக்கு வரும்? மந்த்ரத்துடன் ஸம்பந்தம் ஏற்படுவதற்கு முன்னாலே யாகம் ஏற்பட்டால் தேவதையைச் சொல்லுகிற மந்த்ரத்தின் ஸம்பந்தம் வரும். அது இல்லையே. யாகம் என்கிற சொல் இல்லையே. (சாஸ்த்ரதீபிகை—74)

45. யாகங்களுக்குப் பெயரைப்பற்றிப் பேசுங்காலத்தில் த்ரவ்யங்களின் பெயர்கள் நினைவுக்கு வந்தன. அவைகளைப்பற்றி மூன்று அதிகரணங்களில் விசாரம் செய்யப்படுகிறது. அந்த த்ரவ்யங்களாவன—பர்ஹிஸ் (புல்) ஆஜ்யம் (நெய்) புரோடாசம் (அருத்தமாவால் செய்யப்பட்ட உருண்டை) ப்ரோக்ஷணீ (ப்ரோக்ஷணம் செய்வதற்கு உதவும் வஸ்து). நிர்மாத்யம் (அரணி கடைந்து எடுத்த நெருப்பு.) இவைகள் ஸம்ஸ்காரம் பண்ணப்பட்டவைகளின் பெயரா? அல்லது ஜாதிமாத்ரத்தைச் சொல்லுகின்றனவா?

பூர்வபக்ஷம்:—முதல் மூன்று சொற்கள் சாஸ்த்ரத்தில் எங்கேயும் ஸம்ஸ்காரத்தை அடைந்த வஸ்துக்களையே தெரிவிக்கின்றன. 29—பார 1—வது உட்பிரிவில் சாஸ்த்ர ப்ரஸித்தியே வலிமையுள்ளதென்று சொல்லப்பட்டதே, ஆகையால் யூபம், ஆஹவநீயம் முதலான சொற்களைப்போல் ஸம்ஸ்காரம் அடைந்த வஸ்துக்களே அவைகளின் பொருள்.

ஸித்தாந்தம்:—அவைகள் ஜாதியையே தெரிவிக்கின்றன. எங்கே எங்கே இந்த சொற்கள் வழங்குகின்றனவோ, அங்கங்கே ஜாதிதான் [illegible]கப்படுகின்றது. இதற்கு உலகத்திலாவது வேதத்திலாவது விலக்கு இல்லை, உலகவழக்கத்தில் ஸம்ஸ்காரத்தை அடையாதவைகளையும் அந்தச் சொற்கள் தெரிவிக்கின்றன. ஆகையால் ஜாதியைத் [illegible]ரிவிப்பதில் [illegible] [illegible]வைகளுக்கு ரூடி. (அதி—8)

2 ப்ரோக்ஷணீ என்கிற சொல் "ப்ரோக்ஷணீ ராஸாதய" என்று அத்வர்யு ஆக்நீத்ரனை ஏவுகிறான் "ப்ரோக்ஷணீயைக் கொண்டு வந்து வை" என்று அதின் பொருள். இங்கே இரண்டு பூர்வபக்ஷங்கள். அவைகளாவன:-

(1) வேதத்தில் எங்கேயும் ஸம்ஸ்காரத்தை அடைந்த ஜலத்தைத் தான் அந்தச் சொல்லாலே சொல்லுகிறார்கள்.

(2) ஜலக்ரீடைகளில் "ப்ரோக்ஷணிகளினால் நடுக்கம் அடைந்தவர்கள்" என்று ஸம்ஸ்காரத்தை அடையாத ஜலத்தை ப்ரோக்ஷிணீ என்னும் சொல்லால் சொல்லுவது உண்டு. மேலே (1) உட்பிரிவில் சொல்லியபடி அந்தச் சொல் ஜாதியைச் சொல்லுகிறது. அந்தச் சொல்லின் தாதுவையும் ப்ரத்யயத்தையும் கொண்டு ப்ரோக்ஷணத்துக்கு உதவியான வஸ்து என்று பொருள் கொள்ளக்கூடாது. ஏன் என்றால், ரூடி இதைக்காட்டிலும் வலிமையுள்ளது. ஒரு சொல்லானது ஒரு பொருளில் எல்லாராலும் ப்ரயோகிக்கப்பட்டு, அந்தச் சொல்லைக் கேட்டவுடன், அந்தப் பொருள் நினைவுக்கு வந்தால், அந்தச் சொல் ரூடியால் அந்தப்பொருளைக்காட்டுகிறது. தாதுவையும் ப்ரத்யயத்தையும் கொண்டு பொருளைச் சொல்லும்போது, யோகத்தால் தெரிவிக்கிறது.



ஸித்தாந்தம்:—முதல் பக்ஷம் கூடாது—ப்ரோக்ஷிணீயைக் கொண்டு வந்து வைத்த பிறகு தான் ஸம்ஸ்காரம் செய்யப்படுகிறது. ஆகையால் அத்வர்யு உத்திரவைக் கொடுக்கும்போது, எப்படி ஸம்ஸ்காரம் பண்ணப்பட்ட ஜலத்தை அது சொல்லும். இரண்டாவது பக்ஷமும் கூடாது—பெரியவர்கள் ஜலம் என்கிற ஜாதியை இந்தச் சொல்லால் சொல்லுகிறதில்லை. புதிதாய் ரூடியை உண்டுபண்ண முடியாது. ஆகையால் இங்கே ரூடி சொல்லக் கூடாது. யோகத்தாலே தான் ப்ரோக்ஷணீ என்கிற சொல் பொருளைத் தெரிவிக்கிறது. (அதி—9)

ரூடி ஏற்பட்டிருந்தால் தான்யோகத்தைக் கெடுக்கும். ரூடி ஏற்படவில்லையே. எங்கே தாதுவையும் ப்ரத்யயத்தையும் கொண்டு பொருள் ஏற்பட்டிருக்கிறதோ, அங்கே ரூடியில்லை. (சாஸ்த்ர—76)

(3) "நிர்மந்த்யேந இஷ்டகா: பசதி" (சயநத்துக்கு வேண்டிய கல்லுகளை நிர்மந்த்யம் என்னும் அக்னியால் சுடவேண்டும்) என்று ஒரு வாக்கியம். இங்கே நிர்மந்த்யம் என்பது என்ன?

பூர்வபக்ஷம்:—நெருப்பு என்கிற ஜாதியை ரூடியால் சொல்லுகிறது என்று ஒரு பக்ஷம். ரூடி இப்படி ஏற்படவில்லை. ப்ரோக்ஷணீ என்கிறசொல்லைப்போல யோகத்தால் அரணியைக்கடைந்து உண்டு பண்ணப்பட்ட நெருப்பு என்று இன்னொரு பக்ஷம்.

ஸித்தாந்தம்:— சயநம் பண்ணுங் காலத்தில் அரணியைக் கடைந்து உண்டு பண்ணின நெருப்புமாத்திரம் தான் அந்தச்சொல்லுக்குப் பொருள். உலகத்தில் அரணியைக்கடைந்து உண்டுபண்ணும் நெருப்புமன்று. ஆதானம் செய்யுங்காலத்தில் இப்படியுண்டு பண்ணி கார்ஹபத்ய அக்னியாய் ஆனதுமன்று. இப்படி ஒரு சொல் பொருளைச் சொல்லுவதற்கு யோகரூடி என்று பெயர்.

[illegible] [illegible]க்கு நெய்யும், கொஞ்சநாளைக்குமுன் வெண்ணெய்யை உருக்[illegible] நெய்யும் வெண்ணெய்யிலிருந்து உண்டான போதிலும் "நவநீதம்" என்கிற சொல் புத்து உருக்கு நெய்யைத்தான் சொல்லுகிறது. அதுபோல். (அதி-10)

ஸ்ரீ:

# பஞ்சமரின் ஜாதி.

[ஸ்ரீ. உப. வ. பாஷ்யம் ஐயங்கார், ரிடயர்ட் ஜட்ஜ்]

தீபிகையின் கடந்த ஸஞ்சிகைகளில் சண்டாள ஜாதி என்பது வேதத்
திலேயே குறிக்கப்பட்டும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் விவரிக்கப்
பட்டுமிருப்பதை பெரியோர்கள் அனேக வ்யாஸங்களால் ஸப்ரமாணமாய்
எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். சாஸ்த்ரப்படி சண்டாளர்கள் ப்ராம்ம
ணாதி இதரர்களுக்கு விசேஷ விதிகளுக்குட்பட்டு, தர்சன ஸ்பர்சன ஸம்
பாஷண ஸஹவாஸாதிகளுக்கு அநர்ஹர்கள் என்றும், இவை நேராய்
ஸம்பவித்து அசுசி ஏற்படுமாகில், அதைத் தகுந்த ப்ராயச்சித்தங்களால்
போக்கிக்கொள்ள வேண்டுமென்றும் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
ஸத்யம்.

ப்ரக்ருதம் அடியேன் இரண்டொரு விஷயங்களை ப்ரஸ்தாபிக்க விரும்
புகிறேன். அதாவது முதலில் தற்காலத்தில் பறையர் போன்ற குறிப்புஜ
ஜாதிப் பெயர்களால் அறியப்பட்டு குலந்தாங்கு ஜாதிகள் நாலிற்குட்படா
ததினால், பொதுவாயும் அநிஷ்கர்ஷமாயும், பஞ்சமர்கள் என்று சொல்லப்
படுமவர்கள் சாஸ்த்ரத்தில் கண்ட சண்டாள ஜாதியர்களா? அல்லவா?
வென்பது இவ்விஷயத்தை நாம் பக்ஷபாத மின்றியும் ப்ரஸன்னமா
தீர்க்காலோசனையுடனும் விசாரிக்க வேண்டுமென்று கூறல் மிகை.

சண்டாள ஜாதியின் உத்பத்தியை சாஸ்த்ரம் வெளியிடுகிறது. அநு
ஸ்ருஷ்டியில் அங்கீகரிக்கப்பட்ட வர்ண சதுஷ்டயத்தை ஒட்டிய தன்றெ
ன்பதும் ஸாங்கர்யத்தால் ஏற்படக்கூடிய தென்பதும் நிர்விவாதம். ப்ரதிலோ
மமாய் ப்ராம்மண ஸ்த்ரீயினிடத்தில் சூத்ரனுக்கு ப்ரதிலோம ஸம்பந்த
த்தினால் ஜநித்தவனைச் சண்டாள ஜாதியனாகச் சொல்லியிருக்கிறது.
குமாரீஸம்பவனும் ஸகோதர ஸம்பந்தத்தினால் உண்டானவனும் அப்படி
யேயாம். இப்படிப்பட்ட சண்டாளர்களுடைய ஸந்ததிகளையும் சண்டா
ளரென்று விவரித்திருக்கிறது. அஸ்து.

தற்காலம் நம்மால் பஞ்சமர்களென்று சொல்லப்படும் பறையர் பள்ளர்
முதலான ஸமூஹங்களை மேற்கண்ட சண்டாள ஜாதியர்களென்றாவது சண்
டாள ஜாதியர்களின் ஸந்ததிகளென்றாவது உறுதியிடக் கூடுமா? என்றது
ப்ரச்னை.

இந்தப் ப்ரச்னத்திற்கு ஸாதாரணமாய் ஒரு உத்தரம் கொடுக்கப்படுகி
றது. அதாவது. அநாதிக்ரமமாய் ஏற்பட்ட ஜாதியானது ஸாக்ஷாத்
தாய் நிரூபிக்கப்படுவதொன்றன்று. கொள்கையினாலும் வ்யவஹாரத்தா
லுமே நாம் ஜாதியை நிஷ்கர்ஷிக்க வேண்டும். ஒருவனை ப்ராம்மணனென்
றாவது க்ஷத்ரியாத்யிதானென்றாவது நாம் எப்படி அறிகிறோம். ப்ராம்



மண புருஷனுக்கு ப்ராம்மண பத்னியிடத்தில் உண்டானவன் ப்ராம்மண
னென்றும், இதே ரீதியாய் இதரர்களும் என்றும் சொல்வதில் ப்ரயோஜன
மில்லை. ஏனெனில் அப்பொழுது தாய் தந்தையர்களின் ஜாதியைப்பற்றி
யும் அதே கேள்வி பிறக்கும். ஆகையால் நாம் ப்ராம்மணாதி ஜாதிகளை
கொள்கையினாலும் வ்யவஹாரத்தாலுமே அறிய வேண்டும். அறிகிறோம்.
இம்மாதிரியாகவே நாம் பஞ்சமர்களை சண்டாளஜாதியர்களென்று அறியத்
தக்கது என்று.

இந்த உத்தரம் சரியானதாகத் தோன்றவில்லை. ஜாதியானது கொள்
கையினாலும் வ்யவஹாரத்தாலுமே அறியத்தக்கதென்பது ஒத்துக் கொள்
ளப்படுகிறது. ஆனால் பஞ்சமர்களை சண்டாளஜாதியர்களென்று சொல்ல,
கொள்கையாவது வ்யவஹாரமாவது கிடையாது. ப்ராம்மணன் தன்ஜாதி
யை ப்ராம்மண ஜாதி என்று சொல்லிக்கொள்வதுபோல் பஞ்சமர்களில்
ஒருவனும் தன்ஜாதியைச் சண்டாளஜாதி என்று சொல்லிக்கொள்ளவில்லை.
பஞ்சமர்கள் தங்களை பறைஜாதி பள்ளஜாதி முதலான ஜாதிகளைச் சேர்ந்த
வர்களாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்களே யொழிய வேறில்லை.
வ்யவஹாரத்திலும் அப்படியே ஏற்பட்டு வந்திருக்கிறது. அவர்கள் ஜாதி
யைச் சண்டாள சப்தத்தினால் நிரூபிக்கப்பட்டதை இதுவரை ஒருவரும் அறி
யார்கள். ஆகையால் கொள்கையைக் கொண்டோ வ்யவஹாரத்தைக் கொ
ண்டோ அவர்களைச் சண்டாள ஜாதியர்களென்று ஸாதிப்பது துஸ்ஸாத்தி
யம் என்று வெளியாகிறது.

...கார் ..டுத்துக் கொண்ட ப்ரச்னைக்கு வேறொரு உத்தரம் கொடுக்க
லாம். அதாவது சாஸ்த்ரப்படி சண்டாளஜாதியர்கள் இதரர்களால் தீண்
டத்தகாதவர்கள். தர்மாசரணகாலத்தில் தர்சன ஸம்பாஷணத்யனர்ஹர்
கள். ப்ராம்மணாத்யுயர்ந்த ஜாதியர்களான நாம் பறையர் பள்ளர் முதலான
பஞ்சமர்களை வெகு நீண்டகாலமாகத் தீண்டாதவர்களாயும் தர்மாசரண
காலத்தில் தர்சன ஸம்பாஷணத்யனர்ஹர்களாகவும் பாவித்தும் அப்பாவ
னைக்கேற்ப பஹிஷ்காரமாக அநுஷ்டித்தும் வந்திருக்கிறோம். ஆகையால்
பறையர் பள்ளர் முதலான பஞ்சமர்களைச் சண்டாள ஜாதியர்கள் என்று
அறுதியிடத்தட்டில்லை, என்று.

இந்த யுக்திவாதமும் ஆக்ஷேபஸஹிதமன்னென்று விஞ்ஞாபிக்கப்படுகி
றது. சண்டாள ஜாதியர்கள் தீண்டத்தகாதவர்களென்றும் தர்சன ஸம்பாஷ
ணத்யனர்ஹர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிற மாத்திரத்தினால் தீண்டத்
தகாதவர்களாகவும் தர்சன ஸம்பாஷணத்யனர்ஹர்களாகவும் பாவிக்கப்பட்டு
வந்திருக்கிறவர்களெல்லாரும் சண்டாளஜாதியர்கள் என்று நிச்சயிப்பது
'மனிதர்களுக்கிரண்டுகால்கள், ஆகையால் இரண்டுகால்களையுடைய ஜந்துக்

களெல்லாம்' மனிதர்கள் என்று நிச்சயிப்பதற்கொப்பாகும். சண்டாள ஜாதியர்கள் மாத்திரமேயன்று. வேறு பலரும் தர்சன ஸ்பர்சன ஸம்பாஷணாத்யநர்ஹர்களென்று சாஸ்த்ரத்திலேயே நிரூபிக்கக்கூடும். இன்னும் தர்சன ஸ்பர்சன ஸம்பாஷணாதி விஷயங்களில் ஒரே ஜாதியர்களைப்பற்றி வெவ்வேறு ப்ரதேசங்களில் வெவ்வேறு விதமான அநுஷ்டானம் ஏற்பட்டு வந்திருப்பதை நாம் அறிவோம். ஆகையால் பஞ்சமர்கள் விஷயத்தில் நடந்துவந்திருக்கும் ஆசாரத்தைமட்டும் ஆதாரமாகக்கொண்டு அவர்கள் ஜாதியைச் சண்டாள ஜாதியென்று நிஷ்கர்ஷிப்பது ஸம்பாவிதமாகத் தோன்றவில்லை.

பறையர் பள்ளர் முதலான பஞ்சமர்கள் சண்டாள ஜாதியர்களல்லாவிடில் அவர்கள் எக்காரணத்தைக் கொண்டு தீண்டாதவர்களாகவும் தர்சன ஸம்பாஷணாத்யநர்ஹர்களாகவும் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்று கேட்கக்கூடும். இதற்கு உத்தரம் சொல்ல யார் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று யோசிக்கவேண்டும். பஞ்சமர்கள் இக்கேள்விக்குப்பதில் சொல்லித் தீரவேண்டுமா? அவர்கள் 'அக்காரணத்தை யாம் அறியோம்' என்று பதில் அளித்தால் அதனால் அவர்கள் சண்டாள ஜாதியர்கள் என்று ஏற்பட்டுப்போய் விடுமா? ஆகையால் இந்தக்கேள்வியானது ப்ரக்ருதத்தில் ஸந்தர்ப்பமற்றது.

இதற்குமேல், இக்கேள்விக்கு ஒருவிதமான ஸமாதானமும் சொல்லக்கூடும். அதாவது இப்பொழுது பஞ்சமர்கள் என்று சொல்லப்படுமவர்கள் சண்டாளேதர ஜாதியர்களாயிருந்தும் கால கதியினாலும் ஹீனவ்ருத்த்யநுஷ்டானாதி ஸம்பவங்களினாலும் ஹீனத்வத்தை யடைந்து அவ்விதம் ஹீனத்தன்மையை யடையாத இதரர்களால் அக்காரணத்தைக் கொண்டே தர்சன ஸ்பர்சன ஸம்பாஷணாதிகளுக்கனர்ஹர்களாகப் பாவிக்கப்பட்டிருக்கலாம். இந்த ஸமாதானம் பஞ்சமர்களின் பஹிஷ்காரம் இவ்விதமாகவே யேற்பட்டதென்று ஸாதிக்கைக்காகப் ப்ரஸ்தாபம் செய்யப்படவில்லை. இவ்விதமாகவும் ஏற்பட்டிருக்கலாம் என்று பக்ஷாந்தர ப்ரதர்சனத்திற்காக மட்டும் உதாஹரிக்கப்பட்டதென்று கவனிக்கத்தக்கது. தகுந்தவர்களும் க்ரியாலோபம் முதலான காரணங்களால் நாளடைவில் ஹீனத்வத்தை அடையக்கூடும் என்பது

> ஶநகைஸ்து க்ரியாலோபாதிமா: க்ஷத்ரியஜாதய:
> வ்ருஷலத்வம் கதா லோகே ப்ராஹ்மணாதர்சநேந ச

முதலான ப்ரமாணங்களால் ஸுஸ்பஷ்டம்.

இனியும் இப்பரதகண்டத்தில் இப்பொழுது தீண்டாதவர்களாகப் பாவிக்கப்படும் ஜனஸமூஹங்களின் தொகையைக் கவனித்தாலும் அவர்களை



யெவரையும் சண்டாள ஜாதியரென்றுரைப்பதின் ஸாஹஸம் வெளிப்படும். ஹிந்து ஜனஸமூஹத்தின் சுமார் ஆறிலொருபாகம் தீண்டாதவர்களாகப் பாவிக்கப்படுவதாகத் தெரிகிறது. ப்ராம்மணர்களாகப் பாவிக்கப் படுமவரின் ஸங்க்யையைக்காட்டிலும் அவர்கள் ஸங்க்யை அனேகமடங்கு அதிகமாம். இத்தனை பேர்கள் சாஸ்த்ரோக்த சண்டாள ஜாதியர்களாயிருக்கக்கூடுமா? இஜ்ஜாதி சாஸ்த்ர விருத்தமாய் அதி நிந்திதமான சேர்க்கையால் உண்டாகக் கூடியதென்று முன்னமே சொல்லப்பட்டது. சாஸ்த்ரத்தை சிரஸாவஹித்தபிமானித்துக் கூடியவரையில் அதன்படி அநுஷ்டானத்தை நடத்தி வந்திருக்கும் நம் ஹிந்து ஸமூஹத்தில், இப்பொழுது தீண்டாதவர்களாகப் பாவிக்கப்படுமவரெல்லாம் சண்டாள ஜாதியரென்று நினைத்தற்குரிய அத்தனை சாஸ்த்ர கர்ஹித கொடிய பாபச்சேர்க்கைகள் நேர்ந்திருக்கக் கூடுமா? இருந்திராதென்று அறுதியிடில் அது அஸத்திய மாகுமா?

இவ்விஷயத்தில் சரித்திர ஆராய்ச்சிக்காரரின் அபிப்பிராயங்களை எடுத்துரைக்க இது இடமன்றாதலின் அவைகளைப் ப்ரஸ்தாபிக்கவில்லை. அவைகள் பஞ்சமர்கள் சண்டாள ஜாதியர்கள் என்னும் கக்ஷியை ஆதரிக்கவில்லை என்று மட்டும் சொல்லலாகும்.

இத்யாதி காரணங்களால் தற்காலத்தில் பஞ்சமர்களெனப்படுவோர்களைச் சண்டாள ஜாதியர்களென்று சொல்லப் போகாதென்று விஜ்ஞாபிக்கப்படுகிறது. ஆயின் என்? இவ்விஷயம் தனிப் ப்ரஸ்தாபத்திற்குரியதாகும்.

---

ஸ்ரீ:

# 'க்ஷீர ஸாகர' ச்லோகம்

[ஸ்ரீ. உப. வி. எஸ். வெங்கடேச பாட்டாசார்யர்]

ஸ்ரீ குலசேகர ஆழ்வார் ஒரு பலத்தையும் உத்தேசிக்காமல் பக்தி செய்த மஹான்களில் முதன்மையானவர் என்ற விஷயம் பெரியோர்களால் அறிந்ததே. ஸ்ரீஹநுமான், பீஷ்மர் முதலான மஹான்கள் எப்படிபகவானிடத்தில் ஒன்றை உத்தேசிக்காமல் அனன்யபக்தி பூண்டார்களோ, அதுபோலவே இந்த மஹானும் ஓர் நிரதிசய பக்திமான் என்பது இவர் செய்தருளியிருக்கிற க்ரந்தத்தை கவனித்தால் தெரியவருகிறது. தவிர, இவரிடத்தில் இன்னமொரு விசேஷமுமுண்டு. அதாவது இவர் ப்ரதிதினம் பெரியோர்களிடமிருந்து ஸதா இதிஹாஸ புராணச்ரவணம் பண்ணி அதனாலேயே பகவத்குணங்களிலீடுபட்டு அதன் அநுபவத்தாலேயே பகவத்பர பராய், 'எப்படி ஒரு மனிதன் தேரிலேயே பகவானை ஸேவித்து அந்த திவ்ய திருமேனியின் அழகிலீடுபட்டு

பரவசராகுவனோ; அப்படியே இவரும் ஆனார். பக்தியென்பது ஜந்மாந்த்ர பாக்ய விசேஷத்தால்தான் உண்டாகும். அதுவும் ஸத்ஸங்க ஸஹிதமாக இருக்கவேணும். பீஷ்மாதிகளுக்கோ ஜந்மாந்த்ர பாக்யவிசேஷம் மிகவும் உண்டு. அதோடு பகவதம்சம் கொண்டவர்கள். அதோடும் பகவானை ஸாக்ஷாத் கரித்தவர்கள். இப்படி இருக்கும்போது அவர்களுக்கு பக்தியைப்பற்றிக் கேழ்க்கவேணுமா இவருக்கோ ஸத்ஸங்கம் ஒன்று இருந்தது. ஆனால் பகவானை நேரில் ஸேவிக்கவில்லை. பக்தியோ இவருக்கு மிகவும் முதிர்ந்து இருந்தது. இதுதான் இவரிடம் விசேஷம்;

அப்பேர்பட்ட இந்தமஹான் 'முகுந்த மாலை' என்கிற க்ரந்தரத்நம் ஒன்றை செய்தருளியிருக்கிறார். அதன் இறுதியில் ஓர் ச்லோகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. அதன் அர்த்தம் இங்கு எழுதப்படுகிறது. திடீரென்று கடைசி ச்லோகத்தை எடுத்துக்கொள்வானேன் என்ற ஆசங்கை ஏற்படக்கூடும். அதை முதலில் நிவ்ருத்திக்கவேண்டி அதன் காரணத்தை முதலில் எழுதுகிறேன்.

பெரியோர்கள் தாங்கள் ப்ரதிதிநம் ராத்ரி சயநிக்கும்போது 'க்ஷீரஸாகர' என்று ஆரம்பித்துமேல் எழுதப்போகும் ச்லோகத்தை அநுஸந்தாநம் பண்ணிக்கொண்டுதான் சயநிப்பார்கள். ஏனென்றால், அதற்கு காரணம்:— அந்தச்லோகத்தின் அர்த்தத்தை யோஜித்தால் நன்கு விளங்கும். தவிரவும் நாம் ஸாதாரணமாக ஓர் விஷயம் கேள்விபட்டிருக்கலாம். சில மந்த்ர வாதிகள் பாரிப்லவமாக மந்த்ரங்களை ஸித்தி பண்ணிக்கொண்டு சூர்யாதிகளாலும் பூதபிசாசாதிகளாலும் உண்டான தோஷங்களையெல்லாம் நிவ்ருத்தி பண்ணிக்கொண்டு ஜீவநம் பண்ணுகிறார்கள். அப்போது ஓர் மந்த்ரவாதி, ஓர் இடத்தில் ஏதாவது மந்த்ரங்களை பண்ணி ஏவிவிடுவது வழக்கம். அப்போது இன்னமொருவன், தன் மந்த்ரசக்தியினால் அந்த ஹிம்ஸையைத் தீர்த்துவிடுவான். இப்படி வழக்கமாகப்பண்ணி ஜீவநத்தை செய்து வருகிறார்கள். அப்படி இருந்தும் அவர்களுக்கு மனதுக்கு நிம்மதியே கிடையாது. ராத்ரி படுக்கும்போது தன் தேவதைகளினால் தன்னை சத்ரு ரக்ஷை பண்ணிக்கொண்டுதான் படுப்பார்கள். ஏனென்றால் வேறொருவன் தன்னிடம் ஏதாவது ஹிம்ஸைபண்ணினால் என்ன பண்ணுவது என்ற பயம். நம் பெரியோர்களோ இந்த ச்லோக ரத்நத்தை அநுஸந்தாநம் பண்ணிப்படுத்துக் கொண்டார்களானால் எந்த ஜந்துக்கள் அவர்களின் ஸமீபம் அணுகும் பகவத்த்யாநத்துக்குக் மேல்பட்டதுவேரு ஒன்றும் கிடையாதல்லவா! அவர்களுக்கோ என்றைக்காவது தன் தேவதையினாலேயே ஹிம்ஸை ஏற்பட்டுவிடும். இந்த ஸர்வேச்வரனான பகவானைத்யாநம் பண்ணிப் படுத்துக்கொண்டால் நம்மை பகவான் எந்த இடத்திலும், எந்த காலத்திலும் காப்பாற்றுகிறான். நிர்பயமாகத் தூங்கலாம். ஆதலால் தான் பெரியோர்கள் படுக்கப் போகும்போது பகவானை த்யாநம் பண்ணுகிறார்கள். இந்த ச்லோகம் தான் சொல்லவேணும் என்ற விதிஎன்ன என்றால், இதில் விசேஷமிருக்கிறது. அதுமேல்கண்ட அர்த்தத்தால் விளங்கும்.

ச்லோகம்:—

க்ஷீரஸாகர தரங்க ஶீகராஸார தாரகித சாரு மூர்த்தயே ।
போகி போக ஶயநீய ஶாயிநே மாதவாய மதுவித்விஷே நம: ।



இந்த மஹான் முகுந்தமாலை என்கிற க்ரந்தத்தை அருளிச்செய்து விட்டு, நடுவில் அபசாராதிகள் ஏற்பட்டிருக்குமோ என்றும் சங்கையால், கடைசியில் தான் அபசாரத்தை க்ஷமிக்கும் பொருட்டு பகவானை வந்தநம் பண்ணுகிறார். நாம் க்ரந்தம் பண்ணினாலோ தப்பு இருக்கும் என்ற பயத்தால் பெரியோர்களை வேண்டுவோம். இந்த மஹானுக்கு தப்பு எங்கிருந்து வரப்போகிறது? தவிர, தான் க்ரந்தம் வைதுஷ்யப்ரகாசநத்திற்காகவும் பண்ணினதில்லையாதலால், அபசார க்ஷாபணம் தான் பண்ணிக்கொள்ளுகிறார் என்பது தெரிகிறது.

பதவுரை:— க்ஷீரஸாகர—பால் ஸமுத்ரத்தின், தரங்க—அலைகளின், சீகர, துளிகளுடைய, ஆஸார—பெருக்கினால், தாரகித—பொட்டுபோல் விழுந்திருக்கிற, சாரு—அழகான, மூர்த்தயே—திருமேனியை உடையவராயும், போகி—ஆதிசேஷனின், போக—சரீரமாகிற, சயநீய—படுக்கையில், சாயிநே—சயனித்துக் கொண்டிருப்பவராயும், மாதவாய—லக்ஷ்மீ நாயகனாயும் இருக்கிற, மதுவித்விஷே—மது என்கிற அஸுரனுக்கு சத்ருவான (அதாவது மதுவைக்கொன்ற) பகவானின்பொருட்டு, நம:—நமஸ்காரம் (வந்தனமானது இருக்கட்டும்)

நம:—இவ்விடத்தில் அஞ்ஜலி ரூபமான நமஸ்காரம் பண்ணுகிறார். லோகத்தில் ஒருவருக்கொருவர் நடுவழியில் சேரும்போது 'நமோ நம:—' என்று சொல்லி அஞ்ஜலி பண்ணுகிற வழக்கம். அந்தமாதிரி இங்கு அஞ்ஜலி பண்ணுகிறார். தவிர பகவானுக்கு அஞ்ஜலியில் மிகவும் ப்ரியமுண்டு. அவனுக்கு ஒன்றாலும் ஒன்றும் ஆகவேண்டியதில்லை. அப்படி இருக்கும்போது எதை நம்மிடத்திலிருந்து வேண்டப்போகிறான். அவன் அவாப்தஸமஸ்தகாமனல்லவா! இப்படி இருக்கும்போதும் ஒன்றை மாத்திரம் நம்மிடமிருந்து வேண்டுகிறார். அதுவும் அவருக்காக இல்லை, நம்முடைய ஓர் க்ஷேமத்தின் பொருட்டே, அஞ்ஜலி விஷயத்தில் த்ருஷ்டாந்த மொன்று கூறுவோம்:—

பீஷ்மர் நாராயணாஸ்த்ரத்தை அர்ஜுனன்பேரில் விடவும், அதை எவ்வளவோ அஸ்த்ரத்தால் தடுத்தும், பலனில்லாமல் போனபோது, அர்ஜுனனைப் பார்த்து ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்லுகிறான்—அப்பா அர்ஜுந, வருகிறது நாராயணாஸ்த்ரம்; இதுக்கு ப்ரதி அஸ்த்ரம் கிடையாது. ஆனால் ஒன்றுஉண்டு. அதுதான் அஞ்ஜலி, அதை அஸ்த்ரமாக உபயோகித்தாயானால் உன்னை ஹிம்ஸைபடுத்தாது என்று சொன்னார். அதேபடி அர்ஜுனன் தன் இருகைகளையும் தலைமேல் தூக்கிக்கொண்டு வந்தநம் செய்தான். அந்த அஸ்த்ரமும் திரும்பி க்ருஷ்ணன் திருமேனியில் மாலையாக விழுந்தது என்றிருக்கிறது. ஆதலால் அஞ்ஜலியின் ப்ராபவத்தை வர்ணிக்க நம்மால் முடியாது. இங்கு அப்பேர்பட்ட அஞ்ஜலியைப் பண்ணினார் இந்த ஆழ்வார்.

மது வித்விஷே:—

[மது என்கிற அஸுரனின் சத்ருவான பகவானை பொருட்டு.] துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் பகவானின் வ்ரதமாகையால் இங்கு துஷ்டநிக்ரஹம் பண்ணின பகவான் என்றபடி. இங்கு இந்த மஹான், சத்ருநிரஸந பூர்வகமாய் ஸ்வேஷ்டத்தை யாசிக்கிறார் என்றும் அர்த்தம் ஏற்படுகிறது.

பகவானே, சத்ருநிரஸநம் பண்ணுகிறவனாயிற்றே, அதேபோல், என்னையும் சத்ரு இல்லாதவனாகச் செய், என்பது. ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனும், ஸ்ரீஹயக்ரீவஸ்தவ

ஹவே,' என்று ப்ரார்த்திக்கிறார். சத்ரு இல்லாத இடத்தில என்னை வாஸம் பண்ணும்படி செய் என்று.

மாதவாய;—

(ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் கூடியவனை. ஸ்ரீமஹாலக்ஷ்மியின் குணமாவது, ஸதா ஸந்நிதியிலிருந்து பகவானுக்கு எப்போதும், பொறுமையை வ்ருத்தி பண்ணிக் கொண்டே இருப்பவள். ஒருவன் ஸஹ்யமான பாபம் செய்து பிறகு மனதில் பாக்ய விசேஷத்தால் பக்திதோன்றி பகவானிடம் வந்து பரார்த்திக்க, அப்போது பகவான் க்ருபை பண்ணி அந்தப் பாபத்தை ஒருவேளை பொறுத்துக் கொள்ளலாம். அஸஹ்யமான பாபத்தை பண்ணிவிட்டு பகவானிடம் போனால் அவன்தான் எப்படி பொறுப்பன்? அப்படி அவனிருந்தாலும் லோகமாதாவான ஸ்ரீமஹாலக்ஷ்மி, நம்மிடத்தில் க்ருபை கூர்ந்து பகவானிடம் சிபார்சு செய்து நம் பாபத்தை பொறுக்கும்படி நமக்காக அவனிடம் வேண்டுகிறாள். அதனால்தான் பகவான் எந்தெந்த ஸமயம் பூமியில் தர்மஸம்ஸ்தாபனார்த்தம் அவதாரம் செய்கிறானோ அப்போதெல்லாம் பகவானுக்கனுகுணமாக, ராமாவதாரத்தில் ஸீதையாயும், க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாயும், அந்தந்த ஸமயத்துக்குத்தகுந்தபடி அவதரித்து பகவானோடுகூட இருந்து நம்மைக் காப்பாற்றுகிறாள்.

'ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி |'

என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிரவும், லங்கையில் ராவணனால் அசோக வனத்தில் கொண்டு வைத்திருக்கும் போது ராக்ஷஸிகளால் மிகவும் துன்பத்தை யடைந்த ஸீதாதேவியானவள், ராவணன் வதம் ஆனபிறகு ஹநுமானால் 'துன்பப்படுத்தின இந்த ராக்ஷஸிகளை நான் வதம் பண்ணிவிடட்டுமா' என்று ப்ரார்த்திக்கப்பட்டவளாய், 'அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது அவர்கள் ஒன்றும் என்னை ஹிம்ஸை படுத்தவில்லை. ராவணன் தூண்டுதலாலல்லவோ அவனுக்குபயந்து ஹிம்ஸை படுத்தினார்கள். லோகத்தில் ஒருவன் தானாக ஒருவனையும் ஹிம்ஸைபடுத்த மாட்டான், ஒருவன் தூண்டுதலால் தான் செய்வான். ஆதலால் அவர்களை ஒன்றும் செய்யவேண்டாம் 'ந கஶ்சிந் நாபராத்யதி' என்று எடுத்துக்கூறினாள். அப்பேர்பட்ட தயாசீலையான லோகமாதா நம்மை விட்டுவிடுவாளா? அவள் நம் அபராதங்களை க்ஷமிக்கும்படி சிபார்சுசெய்வதற்காக, தகப்பனாரும் ஸந்தோஷமாக பேசிக்கொண்டிருக்கும்போது தகப்பனாரைக்கேட்டால், தன்காரியம் பூர்த்தியாய்விடும். தாயாரும் சொல்லுவள், இங்கு சயனத்தில் பகவானும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் எழுந்தருளியிருக்கும்போது தன் காரியத்தை ஸாதிக்கவெண்ணி சயனகாலத்தில் ப்ரார்த்திக்கவேணுமென்ற எண்ணத்துடன் தன்னால் இந்த விசேஷணம் போடப்பட்டது.

[க்ஷீரஸாகரதரங்க சீகராஸாரதாரகித சாருமூர்த்தயே:—

நாம் ஒருவரிடம் ஓர்காரியத்தை உத்தேசித்து போகவேண்டியிருந்தாலல்லவா 'இந்த ஸமயம் ஸந்தோஷமாக இருப்பாரா' என்று பார்த்துக்கொண்டு ஸந்தோஷ காலத்தைப்



பார்த்துப் போகவேணும். அப்போது கார்யமும் சீக்கிரம் முடிந்துவிடும். இங்கு க்ஷீர ஸமுத்ரத்தில் அதன் அலைகளிலிருந்து வருகிற திவலைகள் திருமேனியில் பட மிகவும் அழகாக சயனித்திருக்கும் போது பகவான் திருவுள்ளம் எப்படி இருக்கும் ஸந்தோஷத்துக்கு கேட்கவேணுமா? அதிலும் மாமனார் க்ருஹம் ஸமுத்ரம். அந்த மாமனார் க்ருஹத்தில் தன் பத்நியோடு வீற்றிருக்கும்போது, நாம் போய் ப்ரார்த்தித்தால் காரியம் பூர்த்தியாகத்தடையென்ன? அதிலும் ஒரு விசேஷம்; மாமனார் க்ருஹத்தில் தேவிக்கு ஸ்வாதந்த்ர்யம் அதிகமல்லவா? அதனால் இந்த ஸமயம் பகவானிடத்தில் ப்ரார்த்தித்தால் நமக்கு இஷ்டபரிபூர்த்தி உண்டாகும் என்று ஆழ்வார் வந்தனம் பண்ணினார்.

நாம் படிக்கும்போது இந்த ச்லோகத்தை அநுஸந்தானம் பண்ணுகிறதற்கு காரணம்:—

நமக்கு ராத்ரிகாலம் யோக காலம்; 'ஸ்வயமேவ ஸ்வஶக்த்யா ஸ்வயமேவ காரயதி' என்றபடி அந்த யோகத்தையும் தானே செய்துகொள்ளுகிறார். பொறுமையை உண்டுபண்ணவேண்டி, அவன் திருமார்பில் ஸதா எழுந்தருளியிருக்கிறாள் லக்ஷ்மி. அப்பேர்பட்ட ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடு கூடினவன், பகவான்.

போகிபோக சயனீய சாயினே:—ஒரு மனிதன் ஒரு விஷயத்தை ஆர அமர கேட்கவேணுமென்றால் ஸாவதானமாக இருக்கும்போது போனால்தான் கார்யத்தை ஸாதித்துக்கொண்டு வரலாம். படுக்கும் ஸமயத்தில் போகலாமா? என்ற கேள்வி வரக்கூடும். அதற்கு ஸ்தலபேதம், மநுஷ்யபேதமுண்டு. நாம் பகவத்தாதாத்ம்யத்யானத்தை செய்துகொண்டு படுக்கவேண்டும். அதனால்தான் சயனித்துக்கொண்ட பகவானை த்யானம் பண்ணுகிறோம்.

---

ஸ்ரீ:

# புருஷ ஸூக்தம்

[ஸ்ரீ உ.வே. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்]

"வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மஶாஸ்த்ரேஷு மாநவம்|
பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம்||"

[வேதங்களுக்குள் புருஷ ஸூக்தமும், தர்ம சாஸ்த்ரங்களுள் மநு ஸ்ம்ருதியும், பாரதத்தில் பகவத் கீதையும், புராணங்களுள் விஷ்ணு புராணமும் ஸாரங்கள்] என்று மஹர்ஷிகள் சொல்லி இருக்கிறார்கள். அவ்விதம் புகழ் பெற்றுள்ள புருஷஸூக்தத்தின் அர்த்தம் என்ன? அதன் கருத்து என்ன? என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

“ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:” [ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:] என்று ஆரம்பித்து “யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:” [யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:] என்பதுடன் முடிவு பெறும் பதினெட்டு ருக்குக்களுக்குப் புருஷ ஸூக்தமென்னும் பெயர் வழங்கி வருகின்றது. “அத்ப்யஸ் ஸம்பூத: ப்ருதிவ்யை ரஸாச்ச” [அத்ப்யஸ் ஸம்பூத: ப்ருதிவ்யை ரஸாச்ச] என்று ஆரம்பித்து, ‘ஸர்வம் மநிஷாண [ஸர்வம் மநிஷாண] என்பதுடன் முடிவு பெறும் ஆறு ருக்குக்களையும் புருஷ ஸூக்தத்தைச் சேர்ந்ததென்றும், அது புருஷ ஸூக்தத்தின் இரண்டாவது அநுவாகமென்றும் பெரியோர்கள் சொல்வார்கள். இவைகளை ‘நாராயணுநுவாகங்கள்’ என்றும் சொல்வதுமுண்டு. “ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்” [ஸஹஸ்ர சீர்ஷம் தேவம்] என்று ஆரம்பிக்கும் வாக்யங்களும் நாராயணுநுவாகமே. இவையெல்லாம், ‘ஸ்ரீமந்நாராயணனே பர தேவதை’ என்பதை ப்ரதிபாதிக்கிறபடியால் இவையெல்லாவற்றையும் நாராயணுநுவாகம் என்று சொல்வதற்குக் குறையில்லை.

இந்தப் புருஷ ஸூக்தம், ருக் யஜுஸ் ஸாம அதர்வ வேதங்கள் ஆகிற நாலு வேதங்களிலும் படிக்கப்பட்டிருக்கின்றது.

“ருக்வேதே ஷோடசர்ச்சம் ஸ்யாத் யஜுஷ்யஷ்டாதசர்ச்சகம் ।
ஸாமவேதேऽதர்வணே ச ஸப்தர்ச்சம் ததா வாஜஸநேயகே ॥”

ருக்வேதத்தில் பதினாறு ருக்குக்களாகவும், யஜுர் வேதத்தில் பதினெட்டு, ருக்குக்களாகவும், ஸாம வேதத்திலும் அதர்வ வேதத்திலும் ஏழு ருக்குக்களாகவும் இந்த ஸூக்தம் காணப்படுகின்றது என்பது இந்தச்லோகத்தின் பொருள். ஸ்ரீ கூரேசனும் “ஸர்வச்ருதிஷு நியதம்” [எல்லா வேதங்களிலும் இது படிக்கப்பட்டிருக்கின்றது] என்று அநுக்ரஹித்திருக்கிறார். யஜுர் வேதத்தில் இது தைத்திரீய ஆரண்யகத்தில் மூன்றாவது ப்ரச்நத்தில் காணப்படுகின்றது. இரண்டு அநுவாகங்களிலுமுள்ள இருபத்திநாலு ருக்குக்களும் அவ்விடத்தில் இருக்கின்றன. இவ்விதம் அது எல்லா வேதங்களிலும் படிக்கப்பட்டிருப்பதே இதன் மஹிமையை விளக்குவதற்குப் போதுமானது.

இதற்குப் புருஷ ஸூக்தம் என்னும் பெயர் வந்ததன் காரணம் என்னவென்றால், “ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:” [ஸ்ஹஸ்ர சீர்ஷா புருஷ:,) “புருஷ ஏவேதம் ஸர்வம்” [புருஷ ஏவேதம் ஸர்வம்] “வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்” [வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்]



என்று இந்த ஸூக்தத்தில் பலவிடங்களில் பகவான் ஒரு மஹா புருஷனாக உதாஹரிக்கப்பட்டிருப்பதுதான். இந்த ஸூக்தத்தில் மாத்ரமின்றிக்கே மற்றை ச்ருதிகளிலும் பகவான் இம்மாதிரி ஒரு புருஷனாக உதாஹரிக்கப் பட்டிருக்கிறானென்பதை,

“உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:”

[பரமாத்மாவானவன், கீழ்ச்சொல்லப்பட்டுள்ள பத்த ஜீவன்கள் முக்தஜீவன்கள் இவர்களிருவரைக் காட்டிலும் விலக்ஷணமான ஒருபுருஷ விசேஷன் என்று ச்ருதிகள் சொல்லுகின்றன] என்னும் பகவத் கீதா வாக்யத்திலிருந்து நாம் அறிகின்றோம். ஸ்ம்ருதியிலும் அம்மாதிரி வ்யவஹாரமுண்டாம்

“அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:”

[அந்தக் காரணத்தாலேயே நான் ஸ்ம்ருதிகளிலும் வேதங்களிலும் புருஷோத்தமனென்று ப்ரஸித்தனாக இருக்கிறேன்]. இவ்விதம் அவன் புருஷாகாரத்துடன் கூடினவனென்று ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் சொல்லும் பக்ஷத்தில், அவனுக்கு ஒரு விக்ரஹமுண்டு என்று ஏற்படுமே! இது ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம இத்யாதியான வாக்யங்களுக்கு விருத்தமன்றோ? என்று ஒரு சங்கை ஜநிக்கக்கூடும். ‘பகவானுடைய ஸ்வரூபம் கேவலம் ஜ்ஞானமும் ஆநந்தமுமே; அப்படி இருக்கையிலும், அவனுக்குத் தனது இச்சையால் எடுத்துக் கொள்ளப்பட்ட புருஷாகாரமான ஒரு திவ்யமங்கள விக்ரஹமுமுண்டு; அது அவனுடைய ஸ்வரூபம் போல நித்யமானதே; அது, அந்த ஸ்வரூபம்போல, நம் எல்லாருக்கும் பரம ப்ராப்யமே’ என்பதே நமது ஸித்தாந்தம். ஆனால், சில ச்ருதிகளில் ‘அவன் புமானுமல்லன், ஸ்த்ரீயுமல்லன், ஷண்டனுமல்லன்’ என்று அவன் பேசப்பட்டிருக்கிறான் என்பது உண்மையே. ச்ருதிகள் மாத்ரமின்றிக்கே, ஆழ்வாரும்,

“ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன்”

என்று பரமாத்மாவைப் பற்றிப் பேசி இருக்கிறார். இந்த வாக்யங்களின் தாத்பர்யம் என்னவென்றால், அவன் ‘நாட்டில் காண்கிற ஆணின்படியுமல்லன் பெண்ணின் படியுமல்லன்’ என்பதுதான். அதாவது—அவன் புருஷோத்தமனாகையால் ஸாமாந்ய புருஷர்களோடு அவனுக்கு ஸாஜாத்யமில்லை என்று சொன்னதாயிற்று. இதைப் பற்றி ஒரு ஐதிஹ்யத்தைப் பெரியோர்கள் சொல்வார்கள். கீழ்க்கூறப்பட்டுள்ள பாசுரத்தை பட்டர் ஒருஸமயம் அருளிச்செய்தவாறே, அங்கிருந்த ஒருவர் “இப்படி இந்த வஸ்து நாட்டில் காண்கிற மூன்றின்படியுமல்லனாகில், சூந்யமோ அது பின்னை?” என்று கேட்டாராம். அதற்கு பட்டர், “அர்த்த ஜ்ஞாநாபாவமே யன்றிக்கே சப்த

ஜ்ஞாநத்துக்கும் போந்திருந்த தில்லையீ ! ஆணல்லன், பெண்ணல்லன், அல்லாவலியுமல்லது என்றதில்லையே ! ‘அல்லன், அல்லன், அல்லன்’ என்கையாலே சப்தந்தானே அவன் புருஷோத்தமன் என்பதைத் தோற்றுவிக்கிறதில்லையோ?’’ என்றருளிச் செய்தாராம். இப்படி பகவானுக்கு ஒரு புருஷ ரூபமான ஆகாரமுண்டு என்பதை இந்த ஸூக்தம் ஸந்தேஹமறச் சொல்லுகிறபடியால் இதற்குப் புருஷ ஸூக்தமென்று பெயர் வந்தது.

இந்த ஸூக்தத்தின் அர்த்தத்தை விசாரிக்கப்புகும் நாம், முதலில் இந்த ஸூக்தம் வேதம் என்பதை நாம் நன்றாக மநஸ்ஸில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். வேதத்தின் உண்மையான அர்த்தத்தை அறிவது ஸுலபமன்று. கேவலம் பாஷாஜ்ஞாநமும் புத்திசாலித்தனமும் அதற்குப் போதுமான ஸாமக்ரியாகமாட்டா. இவைகளுடன் கூட ஒருவித சித்த சுத்தியும் அதற்கு அவசியம் அபேக்ஷிதம். லோகத்தில் ப்ரயோகம் செய்யப்படும் பதங்கள் ஸாதாரண பதங்களே. ஆனாலும் அந்தப் பதங்கள் உச்சரிக்கப்படும் பொழுது அவைகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஒருவித வ்யுத்பத்தி மாத்ரமே போதாது. பதங்களின் சேர்க்கையால் உண்டாகும் வாக்யங்களுடையவும் அந்த வாக்யங்களின் ஸமூஹங்களால் ஏற்படும் வ்யாஸ ரூபங்களான க்ரந்தங்களுடையவும் உள் கருத்துக்களை உள்ளபடி அறிவதற்கு ஒருவிதமான மந: பரிபாகமும் தேவை என்பதை இக்காலத்திய மேல்நாட்டு வித்வான்கள் முதலான எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது அநுபவத்திலும் இதை நாம் ஸுலபமாகப் பார்க்கலாம். இவ்வாறு ஸாமாந்ய வ்யவஹாரங்களின் பரிசீலநத்திற்கே வ்யுத்பத்தி ஜ்ஞாநத்துடன் மநஸ் சுத்தியும் தேவையாக இருந்தால், நமது இந்த்ரியங்களுக்குப் புலப்படாததும் அதிமாத்ரம் துரூஹமாயும் இருக்கும் ஆத்ம விஷயத்தைப் பற்றிப் பேசும் வேத வாக்யங்களின் தாத்பர்யத்தை அறியும் விஷயத்தில் மநஸ் சுத்தி அபேக்ஷிதம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? அந்தச் சுத்தியும் பகவத் பக்தி ஒன்றாலே ஏற்படத்தகுந்ததாம்.

‘‘யே த்வத்பாதாம்புஜ ஸம்ஸார ... ஸக்தி ஹீநா

தேஷாஞ்சைவ ... தைவ யதா ...’’

[எவர்களுக்கு உன்னுடைய சரணாரவிந்தங்களில் பக்தி இல்லையோ ...



ரூபமான கர்மங்களடியாக ‘ஜந்மாந்தர வாஸநை’ என்று சொல்லப்படும் ஒருவித ஸம்ஸ்காரம் நம்முடன் தொடர்ந்து வருகின்றது. அந்த வாஸநையானது ராகம் த்வேஷம் போன்ற பலவித காலுஷ்யத்தை நமது மநஸ்ஸுக்கு உண்டு பண்ணி, அது வழியாக அந்த மநஸ்ஸுக்கு விஷய க்ரஹணத்தில் ஒருவித தௌர்பல்யத்தையும் விபரீத க்ரஹண ஸ்வபாவத்தையும் ஜநிப்பித்து வஸ்துக்களின் யதார்த்த போதத்தில் நம்மை அசக்தர்களாகச்செய்துவிடுகின்றது. இந்த ராகத்வேஷம் முதலான தோஷங்கள் நமது மநஸ்ஸில் இருக்கும் வரையில் எவ்விஷயத்திலும் யதார்த்த போதமென்பது ஏற்படமாட்டாதாகையால், யதார்த்தபோதத்தை அடைய விரும்புவோர்களெல்லாரும் முதல் முதலில் அந்த வாஸநா ரூபமான தோஷத்தைப் போக்கடித்துக் கொள்வதில் ப்ரயத்நப்பட வேண்டும். அந்தத் தோஷமும் பஹுகாலமாக ஏற்பட்டு அப்படி ஏற்பட்டிருப்பதனால் ஒருவித தார்ட்யத்தையும் அது பெற்றிருப்பதால், அதைக் கேவலம் நமது முயற்சி போக்கடிக்கமாட்டாதென்றும், நம்மை ஸ்ருஷ்டித்தும் நமது நாதனாகவும் இருக்கும் பரமாத்மாவினிடம் நாம் செய்யும் உண்மையான ப்ரீதியொன்றே அதைப் போக்கடிக்கக் கூடியதென்றும் நமது பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரமாத்மா ஸ்வயம் பரிசுத்தனாகையாலும் தன்னுடன் ஸம்பந்தம் பெறுமெல்லாவற்றையும் தன்னைப்போலப் பரிசுத்தனாக்க வல்லனாகையாலும் அவனை ப்ரீதி பூர்வம் த்யாநிப்பதே நமக்கு அபேக்ஷிதமான மநஸ் சுத்தியை விளைவிக்கும் என்பது ஸர்வ ப்ரகாரத்தாலும் உபபந்நம்.

‘‘பக்த்யா த்வம் ... ஸாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்’’

[பக்தியால் சுத்தியை அடைந்த மநஸ்ஸை உடையவனாய், நான், சாஸ்த்ரங்களிலிருந்து, பகவானை உள்ளபடி அறிந்தேன்] என்னும் ஸஞ்ஜயரின் வாக்யம் இதை நன்றாக விளக்குகின்றது. இதுதான் வஸ்து ஸ்திதி.

இந்தப் புருஷ ஸூக்தம் பரமாத்மாவை எவ்வாறு ப்ரதிபாதிக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன் அந்தப் பரமாத்மாவைப் பற்றிய சில விஷயங்களை நாம் கவனித்தல் வேண்டும். முதலாவது — அவன் எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்து நிற்கிறான். அதாவது — அவன் இராத இடம் இல்லை, இராத காலம் இல்லை.

வஸ்துவில் இருக்கிறான் இந்த வஸ்துவில் இல்லை' என்று சொல்லக்கூடுமா ஞல் அவன் வஸ்து பரிச்சேதமுள்ளவனுவான். இப்படியெல்லாம் அவனைப் பற்றி சொல்லமுடியாதாகையால், அவன் மூன்றுவித பரிச்சேதங்களுமற்ற வன் என்று சொல்லப்படுகின்றான். இந்தப் பரிச்சேதங்களுள் மூன்றுவதான வஸ்து பரிச்சேதமற்றிருப்பதைக் கொண்டே [அதாவது—ஸகல வஸ்துக் களிடத்திலும் முழுவதும் வ்யாபித்து அந்தராத்மாவாக இருப்பதைக் கொண்டே] சாஸ்த்ரங்கள் 'ஜகத் முழுவதும் அவனே' என்று பேசுகின்றது. அதாவது—'நீயும் அவனே, நானும் அவனே, ஸகல ஜகத்தும் அவனே என்று எல்லாவற்றையும் அவனையும் ஒன்று போலப் பேசுவதற்கு அவன் இவ்வாறு வஸ்து பரிச்சேதமற்று இருக்கிறான் என்பதே காரணம் என்று சொன்ன தாயிற்று.

இரண்டாவது—அந்தப் பரமாத்மாவின் ஸ்வரூபம் முழுவதும் ஜ்ஞா நமே; அந்த ஸ்வரூபம் போல, அவனுல் எடுத்துக்கொள்ளப்பட்ட திவ்ய மங்கள விக்ரஹமும் முழுவதும் ஜ்ஞாநமே. ஆகையால், நமக்கு இருப்பது போல அவனுக்கு ஒவ்வொரு இந்த்ரியத்தால் மாத்ரம் ஒவ்வொன்றை அறிய வேண்டும் என்னும் நியமம் இல்லை. முழுவதும் ஜ்ஞாநமாகையால், தனது விக்ரஹத்தின் ஒவ்வொரு அம்சத்தாலும் ஸகலவித ஜ்ஞாநத்தையும் பெறுவ தற்கு அவனுக்குச் சக்தி உண்டு. இந்த அர்த்தத்தையே, "விஶ்வதஶ்சக்ஷு:" [எவ்விடத்திலும் கண்], "விஶ்வதஸ்பாத்" [எவ்விடத்திலும் கால்], என்று வேதங்கள் வெளியிடுகின்றன. இதற்கு 'அவனுடைய தேஹம் முழுவதும் கண்ணாகவே இருக்கின்றது' என்றும் 'அது முழுவதும் காலாகவே இருக்கின் றது' என்றும் பொருள் கொள்ளக்கூடாது. கண் முதலிய இந்த்ரியங்களால் நாம் செய்யும் கார்யங்களை அவன் எல்லாவற்றாலும் செய்வன் என்பதே இதன் பொருள். அதாவது—அவன் ஸர்வஜ்ஞன் ஸர்வசக்தன் என்று சொன்ன தாயிற்று.

மூன்றாவது—அந்தப் பரமாத்மாவுக்குத் தன்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த ப்ரபஞ்சம் போல, ஸ்ரீவைகுண்டம் என்னும் பெயருடன் இன்னும் ஒருலோகம் ஸமஸ்தமான போக்ய வர்க்கங்களுடனும் ஸமஸ்தமான போகோ பகரணங்களுடனும் அளவற்ற விபவத்துடனும் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாத ஸ்வரூப ஸ்வபாவங்களுடனும் தனக்கு அதீநமாகவே இருக்கின்ற தென்று ச்ருதிகள் சொல்லுகின்றன. அந்த லோகத்திலுள்ள வஸ்துக்க ளெல்லாம் இவ்விடத்திலிருக்குமவைகளைக் காட்டிலும் அதிமாத்ரம் விலக்ஷ ணங்கள். அவைகளை அப்ராக்ருதங்களென்றும் சுத்தஸத்வ மயங்களென் றும் சொல்வார்கள். அந்த லோகம் இந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் பல மடங்கு பெரியது. அதில் பரமாத்மா தனது வ்யூஹாவதாரங்களுள் முதல் மூன்று மூர்த்திகளால் வெளிப்பட்டு நிற்கின்றான். நித்யர்களென்று சொல்



லப்படும் ஸம்ஸார கந்தமற்ற ஜீவன்களும் முக்தர்களாகிற ஜீவன்களும் அந்த லோகத்தில் அந்தப் பகவானை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பரமாத்மா, அநிருத்தன் என்னும் பெயருடைய தனது வ்யூஹாவ தாரங்களின் நாலாவது மூர்த்தியால் இந்த ஜகத்தின் வ்யஷ்டி ஸ்ருஷ்டியை சதுர்முக ப்ரஹ்மா முதலானவர்களைக் கொண்டு செய்து வருகிறான். அதாவது—அவனே இந்த ஜகத் முழுவதற்கும் கர்த்தா என்று சொன்ன தாயிற்று.

நான்காவது— இப்படிப்பட்ட பரமாத்மாவை இம்மாதிரி எல்லாவற்று க்கும் காரண வஸ்துவென்றும், ஸகல கல்யாண குணங்களுடனும் கூடினவ னென்றும், எல்லாருக்கும் அந்தர்யாமி என்றும், எல்லாருக்கும் சேஷி என் றும் அநுஸந்தித்து, தாம் அவனுக்கு தாஸபூதர்களென்றும் எல்லாரும் உண ர்ந்து உபாஸித்தல் வேண்டும். எவர்கள் அவனை அவ்விதம் உபாஸிக்கி றார்களோ, அவர்களிடம் அவன் ப்ரீதி அடைந்து அவர்களை ஸம்ஸாரக் கட் டிலிருந்து நிவ்ருத்திசெய்து அவர்களுக்கு அம்ருதத்வம் என்னும் மோக்ஷத் தைக் கொடுக்கிறான். அவன் தான் அந்த அம்ருதத்வத்தைக் கொடுப்பதற்கு அதிகாரி. அவனை ப்ரீதியுடன் பஜிப்பதாகிற உபாஸநமே அவனை அடைவ தற்கு மார்க்கம்; வேறு ஒன்றும் மார்க்கமாக மாட்டாது. அதாவது—அவ ன் ஒருவனே மோக்ஷப்ரதன்; அவனை உபாஸிப்பது ஒன்றே அவனை அடை வதற்கு மார்க்கம் என்று சொன்னதாயிற்று.

இந்த விஷயங்களெல்லாவற்றையும் விவரித்துக் கொண்டு அந்த விவர ணத்தின் வாயிலாக இந்தப் புருஷ ஸூக்தம் பரமாத்மாவை ப்ரதிபாதிக்கின் றது என்று நமது பெரியோர்கள் இந்த ஸூக்தத்திற்கு வ்யாக்யாநம் செய் திருக்கிறார்கள்.

இந்த ஸூக்தத்தின் மொத்த அர்த்தத்தை முதலில் விசாரிப்போம். "ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:" என்பது முதல் 'யஜ்ஞம் யது ஹவ்ய" என்பது வரையிலுள்ள வாக்யங்களால், 'பரமாத்மாவானவன் எல்லா இடங் களிலும் எல்லாக் காலத்திலும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்து நிற்கிற ன்' என்பதும், அவைகளுக்கு அடுத்துவரும் "உதாம்ருதத்வஸ்யேஶாந:" என்னும் வாக்யத்தால், அவனே மோக்ஷத்தைக் கொடுப்பவன்' என்பதும், அதற்கு அடுத்து வரும் வாக்யங்களால் 'அவன் ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டியை உத்தேசித்துத் தன்னுடைய அம்ருத ஸ்வரூபத்தை அதிக்ரமித்து, நாலு விதங் களான வ்யூஹாவதாரங்களைச் செய்து, நித்ய விபூதி என்று சொல்லப்படும் ஸ்ரீவைகுண்டத்தில் முதல் மூன்று வ்யூஹாவதாரங்களால் நித்யர்களுக்கும்

முக்தர்களுக்கும் தர்சநம் அளித்துக்கொண்டும், இந்த லீலாவிபூதியில் தனது நான்காவது வ்யூஹாவதாரமாகிற அநிருத்தன் என்று சொல்லப்படும் மூர்த்தியினால் இந்த ஜகத்தில் காணப்படும் சேதநாசேதந ரூபங்களான ஸகல வஸ்துக்களையும் வ்யாபித்துக் கொண்டும் ஸர்வோத்க்ருஷ்டனாக நிற்கிறான்' என்பதும், சொல்லப்படுகின்றன. அதற்குப் பிறகு ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியை விவரிக்க ஆரம்பித்து "தஸ்மாத்விராளஜாயத" இத்யாதியான வாக்யங்களால், 'அந்த அநிருத்த ரூபமான வ்யூஹாவதாரத்திலிருந்து ப்ரபஞ்சத்திற்குக் காரணமாயிருக்கும் ப்ரக்ருதியையும் அந்த ப்ரக்ருதியை அதிகரணமாயுடைய சதுர்முக ப்ரஹ்மாவையும் உண்டாக்கி, அதற்குப் பிறகு அந்த ப்ரஹ்மாவைக்கொண்டு ஜகத்தின் வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்தான்' என்பதும் சொல்லப்படுகின்றது. இந்த வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஒரு மாநஸ யஜ்ஞமாக வர்ணிக்கப்படுகின்றது. இப்படி வர்ணிப்பதன் தாத்பர்யம் பின்னால் விவரிக்கப்படும். பிறகு, இப்படி ஜகத் கர்த்தாவான பரமாத்மாவின் வைபவத்தை "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்" இத்யாதியால் பேசி, அவனை உபாஸிப்பது ஒன்றே அவனை அடைவதற்கு வழியென்றும், அம்மாதிரி உபாஸித்தவர்கள் சாச்வதமான ச்ரேயஸ்ஸை அடைந்திருக்கிறார்களென்றும் சொல்லி, அதன் பிறகு இந்த ஜ்ஞாநம் சிஷ்ய ப்ரசிஷ்யர்கள் வழியாக ஜகத்திற்கு வந்ததை ஸங்க்ரஹித்து, ஸூக்தத்தின் முடிவான மந்த்ரங்களால் உபாஸநத்தையும் புருஷார்த்தத்தையும் அநுவதித்து உபதேசத்தை உபஸம்ஹரிக்கின்றது. அதாவது—எவன் பரமாத்மாவை அநந்தனென்றும் மோக்ஷ ப்ரதனென்றும் ஜகத்காரணனென்றும் ஜகத்திற்கு அந்தர்யாமி என்றும் ஸர்வஜ்ஞனென்றும் ஸர்வசக்தனென்றும் உபய விபூதி நாதனென்றும் ஸ்வர்ணமயமான விக்ரஹ விசிஷ்டனென்றும் வைகுண்ட வாஸியென்றும் அறிந்து உபாஸிக்கிறானோ அவன் அம்ருதனாக ஆகின்றான் என்று சொன்னதாயிற்று. இதுதான் இந்த ஸூக்தத்தின் கருத்து. இந்தப்பரமாத்மா ஸ்ரிய: பதியாயிருக்கும் நாராயணனே என்பதும் அவனே மற்றை இடங்களில் 'ஸத்' என்றும் 'ஆத்மா' என்றும் 'ப்ரஹ்மம்' என்றும் இம்மாதிரி பல பெயர்களால் சொல்லப்படுகிறான் என்பதும் இந்த ஸூக்தத்தின் இரண்டாவது அநுவாகத்தாலும் "ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்" என்னும் நாராயணாநுவாகத்தாலும் விவரிக்கப்படுகின்றன.

ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: । ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ।
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா । அத்யதிஷ்டத்தசாங்குலம் ।



[புருஷ: — அந்த மஹா புருஷன், ஸஹஸ்ரசீர்ஷா — ஆயிரம் தலைகளை உடையவன்; ஸஹஸ்ராக்ஷ: — ஆயிரம் கண்களை உடையவன்; ஸஹஸ்ரபாத் — ஆயிரம் கால்களை உடையவன். ஸ: — அவன், பூமிம் விச்வதோ வ்ருத்வா — பூமி முழுவதும் வ்யாபித்து, தசாங்குலம் அத்யதிஷ்டத் — பத்து அங்குலம் பரவி நின்றான்]. இதில் 'ஸஹஸ்ர' [ஆயிரம்] என்னும் சப்தத்திற்கு 'அநந்தங்கள்' என்பது குறிப்பு. அம்மாதிரியே 'தசாங்குலம்' [பத்து அங்குலம்] என்பதற்குக் 'கணக்கற்ற யோஜனைகள்' என்பது குறிப்பு. அதாவது—'ஜகத் கர்த்தாவாகிற மஹாபுருஷனுக்குத் தலைகள் கணக்கற்றவை, கண்கள் கணக்கற்றவை, கால்கள் கணக்கற்றவை. அவன் எவ்விடத்திலும் வ்யாபித்து கணக்கற்ற யோஜனைகளின் விஸ்தாரம் பரவி நிற்கின்றான்' என்று சொன்னதாயிற்று. கண் முதலிய இந்த்ரியங்களின் வழியாகவே அவன் ஜ்ஞாநத்தைப் பெறுகிறான் என்பது இன்றிக்கே, அவன் ஒரே காலத்தில் எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாக எப்பொழுதும் ஸ்வயமாகவே அறிகிறான் என்பதும், அவன் எங்கும் வ்யாபித்து நிற்கிறபடியால் தேசத்தால் அபரிச்சிந்நனென்பதும் இந்த ருக்கினுடைய தாத்பர்யம்.

புருஷ ஏவேதம் ஸர்வம் । யத்பூதம் யச்ச பவ்யம் ।

[இதம் ஸர்வம் — இதெல்லாம், புருஷ ஏவ — அந்த மஹாபுருஷனே. யத் பூதம் — எது இறந்த காலத்தில் இருந்ததோ, யச்ச பவ்யம் — எது வருங்காலத்தில் இருக்கப்போகின்றதோ, இதெல்லாம் அவனே]. இதன் தாத்பர்யமென்னவென்றால், 'அவன் இராத காலம் ஒன்றுமில்லை; அதாவது—அவன் முக்காலத்திலும் இருப்பவன்; அவனே இவையெல்லாம் என்று சொல்லும்படி எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாக அவன் இருக்கிறான்' என்பதுதான். அதாவது, 'அவன் காலத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதமற்றவன்' என்று சொன்னதாயிற்று. ஆகவே, அவன் ஒரு மஹாபுருஷன் என்பதும், அவன் எல்லாவற்றையும் ஸ்வயமாகவே அறியக்கூடியவன் எல்லாவற்றையும் செய்து முடிக்க சக்தன் என்பதும், அவன் மூன்றுவித பரிச்சேதங்களும் [அளவுகளும்] அற்றவன் என்பதும் இந்த வாக்யங்களாற் சொல்லப்பட்டன.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகில ஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்த சரண ஶ்ரவண த்வகாதீன்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகரின் குறிப்புகள்

---

பாச்சாத்ய பாஷா பரிசயம் செய்திருக்கும் நமது நிரூபகர்ளுள் பலர் நமது பூர்வாசார்யர்களாலும் மாக்ஸ முல்லர் முதலிய அநேக பாச்சாத்ய வித்வாங்களாலும் பஹுதா ப்ரகாரமாகக் கொண்டாடப்பட் நமது தர்மங்களுள்ள நமது மஹர்ஷிகளின் அஸாதாரணமான தத்வ ஸாக்ஷா ளின் தற்கால த்காரத்தின் மஹிமையை அறியாமலும், அந்தத் தத்வ ஸம் ஸ்திதி. பத்தமாக அம்மஹர்ஷிகளால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கும் க்ரந்தங்களை அப்யஸியாமலும் அவர்கள் உபதேசித்த முறையே பகவானைப் பூஜித்து அதனால் பரம நிச்ரேயஸத்தைப் பெறு வதை எல்லாம் இழந்து, ஸ்வதர்ம த்யாகம் ஸ்வாசார த்யாகம் ஸ்வ வித் யாத்யாகம், ஸ்வ ஸ்வரூப த்யாகம் முதலான கஶ்மலங்களை மேற்கொண்டு அதனால் அவர்கள் படும் பாடுகளை நாம் என்னென்று சொல்வோம்? இவை யெல்லாம் சேர்க்கை தோஷத்தால் ஏற்படும் தீமைகளே. முற்காலத்தில் மஹம்மதியர் ஸஹவாஸம் சிலர்க்குச் சில தோஷங்களை விளைவித்தன; இப் பொழுது கிருஸ்துவரின் ஸஹவாஸம் பலர்க்கு மஹத்தான பாபங்களைச் செய்கின்றன. நச்வரமாயும் அத்யல்பமாயும் துக்க மிச்ரங்களாயுமுள்ள ஸுகங்களை அபேக்ஷிப்பவர்களுக்கு ஸதாசாரங்கள் க்லேசாவஹங்களேயா கும். ஆனால், அவர்களால் இப்படி அநாதரிக்கப்படுவதால் மாத்ரம் நமது தர்மங்கள் தூஷிக்கப்பட்டனவாக ஆகிவிடுமோ? காலக் கேட்டினால் சில அஜ்ஞர்கள் தர்மங்களைக் கைவிட்டபோதிலும், அந்தத் தர்மங்களுடைய ப்ரபாவம் ஒருபொழுதும் ஒருப்ரகாரத்தாலும் குலையமாட்டாது என்பது திண்ணம்.

நமது பெரியோர்கள் ப்ரமாண சரணர்கள். நமது ஸம்ப்ரதாயங்களின் ஆசார்யர்களுள் ஒருவர்கூட தமது அபிப்ராயப்படி ப்ரமாணங்களைக் கடந்து, ஸம்ப்ரதாயங்களை ஏற்படுத்த எண்ணினவரன்று. மூல ப்ரமா ணங்கள், எல்லாருக்கும் ஸமானங்களே. அவற்றின் தாத்பர்ய விசாரத்தில்



மாத்ரம் ஸ்வல்ப பேதங்கள் அவர்களுக்குள் நேர்ந்து உள்ளன. இன்னும் ப்ராசீநங்களான ஸாங்க்யம் யோகம் மீமாம்ஸை முதலிய மதங்களுடைய ப்ரவர்த்தகர்களும், வேதத்தின் ப்ராமாண்யத்தை ஒத்துக்கொண்டே தம் தம் ஸித்தாந்தங்களைக் கல்பித்தார்கள். இக்காலத்தில் யுக்திவாதங்கள் பலப் பட்டு வருகின்றன. தேசகால வைகுண்யத்தால் அநேக ஜநங்களுடைய மநஸ்ஸிலிருந்து, பர லோகம் ஒன்று உண்டு என்னும் எண்ணமே நிவர்த் திக்கப்பட்டு வருகின்றது. நித்ய கர்மங்களின் அநுஷ்டாநத்தால் ஈச்வரன் ஆராதிக்கப்படுகிறான் என்னும் ஆலோசனை ஏற்படுவதற்கு, ஈச்வரன் ஒரு வன் உண்டு என்னும் விச்வாஸமும், அவனால் கொடுக்கப்பட்டுள்ள சாஸ்த் ரங்களில் நம்பிக்கையும் அவனிடத்தில் ஒருவித ப்ரீதியும் இம்மாதிரியான ஸாமக்ரிகள் அவசியம் வேண்டும். இவற்றின் அபாவமே நம்முடைய ப்ர புக்களின் சித்தத்தில் இப்பொழுது குடி கொண்டிருக்கின்றது. இந்த ஸ்திதியானது, நம்முடைய தேசத்தில் மாத்ரமின்றிக்கே, உலகமெங்கும் பரவி வருகின்றது. இதுவும் பகவத் ஸங்கல்பமே.

அநாதிகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்த மர்யாதைகள் ஸுலபமாகக் குலையலாம்; ஆனால் மறுபடியும் அவை ஏற்படுவது துர்லபம். அவற்றை ஏற்படுத்தும் அதிகாரிகளும் இனி ஏராளமாக உண்டாகப்போவதில்லை. தர்மம் என்பது மநுஷ்யர்களால் ஏற்படுத்தக்கூடிய வ்யவஸ்தை அன்று; அது அநாதியானதால் அநாதி ஸித்தங்களான விதிகளால் மாத்ரம் அது விதிக்கப்படக்கூடும். அப்படி அநாதிகளான தர்மங்கள் நிலைபெறும் பொருட் டும், அவைகளால் ஏற்படும் வரம்புகள் அழியாமல் இருக்கும் பொருட்டும், ஜநங்களுடைய தொழில்களும் ஆசாரங்களும் அந்தந்த ஜநங்களின் ஸம் ஸ்காரங்களுக்குத் தக்கபடி வேறுபட்டிருக்கவேண்டியபடியால், அவை களை நமது மஹர்ஷிகள் அந்தந்த ஜநங்களின் பரம்பரை க்ரமத்தை அநுஸ ரித்துப் பிரித்து வைத்திருக்கிறார்கள். எல்லாரும் தங்கள் தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வரம்பைக் கடவாமல் நடந்து வரும் பக்ஷத்தில் இந்த லோகத்தில் ஸுகத்தையும் பரலோகத்தில் ச்ரேயஸ்ஸையும் எல்லாரும் அடைவார்கள் என்பது அந்த மஹர்ஷிகளின் நம்பிக்கை. அவர்களுடைய விதிகளின் ப்ரகாரம் வர்ணப் பிரிவுகளும் ஆச்ரமப் பிரிவுகளும் இது வரை யில் பரிபாலிக்கப்பட்டு வந்தன. அப்படி அநுஷ்டிக்கப்பட்டு வந்ததால், ஜநங்களுக்கு க்ஷேமமும் நடைபெற்று வந்தது. இப்பொழுது ஸ்வல்ப காலமாக நாஸ்திகர்களுடைய ஸம்ஸர்க்கம் அதிகமாக உண்டாகி, அவர் களுடைய நாஸ்திக வித்யையால் நமது வித்யைகள் குன்றிவருவதையும், தத்காலத்தில் நமது சிறுவர்களுக்கு அப்யஸிப்பிக்கப்பட்டு வரும் வித்யை களையும் பார்க்கும் நமக்கு, 'நமது தர்மங்களெல்லாம் ஆத்யந்திகமாக நசித்து விடுமோ?' என்னும் பீதி ப்ரபலமாக உதிக்கின்றது. இதற்குத்

தகுந்த ப்ரதிகாரத்தை நமது மதத்தில் உண்மையான விச்வாஸம் செய்யும் பெரியோர்களெல்லாரும் சீக்கிரத்திலேயே தேடுதல் வேண்டும்.

"India has been for some time past in a cycle of depression, which may mean either her death approaching or merely a state of inertia from which she will rise refreshed in the morning of a new day. If it be the first, then India has been preserved until such time as the west is ready to receive the truths which she has taught. If it be the second, India will, in the essentials of her civilisation remain in whatever way her external social structure may be reformed to meet the needs of the time."

*   *   *   *   *

சென்ற ஸஞ்சிகையுடன் ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் பூர்த்தி அடைந்தது. ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்திகளின் கம்பீரமான தாத்பர்யத்தை உள்ளபடி அறிந்து அதை அபூர்வமாயும் அநதிரிக்
ஸ்ரீ வேதார்த்த தமாயும் பாஷாந்தரத்தில் வெளியிடுவதற்கு ஸூசிக்ஷிதர்
ஸங்க்ரஹமும் களான பண்டிதர்களே தகுந்த அதிகாரிகளாவார்கள்.
ஸ்ரீபரிகர விஜய ஆனால் சில ஸந்தர்ப்ப விசேஷங்களால் மஹத்தான அந்தக்
மும். கைங்கர்யத்தை அத்யந்தம் மிதஜ்ஞனுகிற அடியேன் வஹிக்கும்படி ஸம்பவித்தது. அதன் நிர்வாஹத்தில் கணக்கற்ற தோஷங்கள் நேர்ந்திருக்கக்கூடும். அவையெல்லாவற்றையும் பெரியோர்கள் க்ருபையுடன் க்ஷமித்துப் போகவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

இந்த வேதார்த்த ஸங்க்ரஹத்துடன் வெளியிடப்பட்டு வந்த "பரிகர விஜயம்" என்னும் க்ரந்தம் பூர்த்தி அடையாமல் நடுவில் நின்று விட்டதை நமது ஸஹ்ருத்துக்கள் கவனித்திருக்கலாம். வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அதற்கு அநுரூபமாக வ்யாக்யானமொன்று எழுதி வந்தார். இப்பொழுது அந்த வ்யாக்யானத்தை மேல்கொண்டு எழுதுவதற்குப் பலவித அஸௌகர்யங்கள் இருக்கின்றனவென்று அந்த ஸ்வாமி நியமித்து விட்டபடியால், அந்த க்ரந்தத்தை வேறொரு பண்டிதரைக் கொண்டு முடிவு பெறுவிப்பதற்கு ஸம்விதானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி, தாம் சோதித்து எழுதி வைத்திருந்த மூலத்தை அநுக்ரஹித்திருக்கிறார். வ்யாக்யானம் மாத்ரம் மற்றொருவரால் எழுதப்பட்டு வரும் என்பதை நமது ஸஹ்ருத்துக்களுக்கு இதன் வாயிலாக விஜ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்.

---



𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌕𑌨𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃 ।
𑌸𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥

𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌧𑍀𑌮𑌤𑍇 ।
𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀𑌂 𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ।
𑌶𑌾𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 ॥

𑌯𑌜𑍍𑌞𑍋 𑌦𑌾𑌨𑌂 𑌤𑌪𑍋 𑌹𑍋𑌮𑍋 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌪𑌿𑌤𑍃𑌤𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ।
𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌨𑌵𑌿𑌹𑍀𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍 𑌯𑌃 𑌪𑍂𑌜𑌯𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ।
𑌸 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

---

எந்த மனிதன் சக்ரத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட பிராமணனின் பொருட்டு கன்னிகையை தானம் பண்ணுகிறானே அவன் உயர்ந்த ஆனந்தங்களோடு கூடினதாயும் வேதாந்தங்களில் ப்ரஸித்தமாயுமிருக்கிற விஷ்ணுவினுடைய உத்க்ருஷ்டமான ஸ்தானத்தை அடைகிறான்.

விசேஷமான புத்தியையுடையவனாயும், ஆகையினாலேயே விஷ்ணுவினிடத்தில் பக்தியையுடையவனாயும், ஆகையினாலேயே சக்ராயுதத்தினாலே அடையாளம் பண்ணப்பட்டவனாயுமிருக்கிறபிராமணனின்பொருட்டுபிச்சையிடுவது மாத்திரத்தினாலேயே விஷ்ணுவினுடைய ஸ்தானத்தை அடைவான்.

மஹாத்மாவாயும் (எல்லாரும் கொண்டாடக்கூடிய புத்தியை உடையவனாயும்) விஷ்ணுவினிடத்தில் பக்தியுடையவனாயும் ஆகையினாலேயே சக்ராயுதத்தினால் அடையாளம்பண்ணப்பட்டவனான பிராமணனின்பொருட்டு வித்வான்கள் கீரை மாத்திரத்தைக் கொடுப்பதினால் மோக்ஷத்தை அடைந்து விடுகிறார்கள் என்பது ப்ரஸித்தம்.

சக்ராயுதத்தின் அடையாளமில்லாத பிராமணனுடைய யாகமும், தானமும், தவமும், ஹோமமும், அன்னமிடுவதும், பித்ருக்களுக்கு த்ருப்தி செய்வதும் பயனில்லாததாக ஆகிறது.

எந்த மனிதன் சங்கம், சக்ரம் இவைகளினால் அடையாளம் பண்ணப்பட்டவர்களான பிராமணர்களைப் பூஜிக்கிறானோ அவன் வேறு உலகத்திற்குப் போகாமல் விஷ்ணுவினுடைய ஸமீபத்தை அடைகிறான். இந்த விஷயத்தில் ஸந்தேஹமில்லை.

விஷ்ணுசக்ராங்கிதம் விப்ரம் யோ நமஸ்க்ருத்ய பூதலே ।
லலாடபாம்ஸுஸம்வத்ஸராணி ப்ரஹ்மலோகே மஹீயதே ।
விஷ்ணுசக்ராங்கிதம் த்ருஷ்ட்வா யோத்தாய க்ருதாஞ்ஜலி: ।
ஸ்வகீயம் குலமுத்த்ருத்ய ப்ரஹ்மலோகே மஹீயதே ॥
சக்ராங்கிதபுஜா யஸ்மின் பங்க்திமத்யே து புஞ்ஜதே ।
ஸா பங்க்தி: ஸ்வர்கலோகேஷு தேவபங்க்த்யா யுஜ்யதே ॥
சங்கசக்ராங்கிதம் விப்ரம் த்ருஷ்ட்வா யோ ঽப்யர்சயேத் ஸதா ।
பரமானந்தமாப்னோதி கிம் புனஸ்ஸைஹிகம் பலம் ॥
யே கேசித் யத்ர புருஷா: விஷ்ணுசக்ரேண லாஞ்சிதா: ।
தேஷாம் தர்சனமாத்ரேண மஹாபாதகநாசனம் ॥

---

எந்த மனிதன் விஷ்ணுவுடைய சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட பிராமணனை பூமியில் விழுந்து நமஸ்கரிக்கிறானோ அவனுடைய நெற்றியில் ஒட்டிக்கொண்டிருக்கிற தூளிகள் (மணல்கள்) எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு வருஷங்களுக்கு பிரம்மலோகத்தில் அவன் பூஜிக்கப்படுகிறான்.

எந்த மனிதன் விஷ்ணுவினுடைய சக்ரத்தினால் அடையாளம் பண்ணப்பட்டவனைக்கண்டதும் எழுந்திருந்து செய்யப்பட்ட அஞ்ஜலியை உடையவனாக ஆகிறானோ (கைகளை கூப்புகிறானோ,) அவன் தனது குலத்திற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவதோடு தானும் பிரம்ம லோகத்தில் பூஜிக்கப்படுகிறான்.

சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட தோளையுடையவர்கள் எந்த கோஷ்டியின் நடுவில் உட்கார்ந்து சாப்பிடுகிறார்களோ அந்த கோஷ்டியானது ஸ்வர்க்கலோகத்தில் தேவகோஷ்டியோடு சேருகிறது.

எந்த மனிதன் சங்கம், சக்ரம் இவைகளினால் அடையாளம் பண்ணப்பட்ட பிராமணனைக்கண்டு பூஜித்தவனாக ஆகிறானோ அவன் பரமானந்தமென்கிற மோக்ஷத்தையே அடைகிறான். இந்த லோகத்திலிருக்கிற பலன்களை அடைகிறான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப் பட்டவர்களான புருஷர்கள் எவர்களானாலும் அவர்களைப் பார்த்த மாத்ரத்தினால் மஹா பாதகங்களும் நசித்துவிடும்.



சக்ராங்கிதஸ்ய நாமானி யோ வதேத் பக்திமான் நர: ।
ஸர்வபாதகநிர்முக்த: ஸ யாதி பரமம் பதம் ॥
அக்னிதப்தேன சக்ரேண பாஹுமூலே து லாஞ்சிதா: ।
ஸர்வபாபானி ஸந்த்யஜ்ய ஸவிஷ்ணோஸ்ஸாம்யமாப்னுயு: ॥
வஹ்னிதப்தேன சக்ரேண பாஹுமூலே து லாஞ்சிதா: ।
ரௌரவாத் ஸகுலம் த்ருத்வா யாந்தி விஷ்ணோ: பரம் பதம் ॥
விஷ்ணுசக்ராங்கிதா யத்ர வஸந்தி நரபுங்கவா: ।
தத்தேசோத்பன்னமாத்ராஸ்து வைஷ்ணவாஸ்ஸம்பவந்தி ஹி ॥
விஷ்ணுசக்ராங்கிதம் விப்ரமேகாஹம் யஸ்து வாஸயேத் ।
விஷ்ணுலோகநிவாஸைஸ்ஸ பூஜ்யதே நாத்ர ஸம்சய: ॥

---

பக்தியுள்ள எந்த மனிதன் சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்டவனுடைய நாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணுகிறானோ அவன் ஸர்வ பாபங்களினின்றும் விடுபட்டவனாய் உயர்ந்த ஸ்தானமான மோக்ஷத்தை அடைகிறான்.

அக்னியினால் தபிக்கப்பட்டதான சக்ராயுதத்தினால் கையின் அடிபாகமான தோளிலே அடையாளம் பண்ணப்பட்டவர்கள் ஸர்வ பாபங்களையும் போக்கிவிட்டு ஈச்வரனுக்கு ஸமானர்களாக ஆகிவிடுகிறார்கள்.

எந்த மனிதர்கள் அக்னியினால் தபிக்கப்பட்டதான சக்ராயுதத்தினால் கையினுடைய அடிபாகமான தோளிலே அடையாளம் பண்ணப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் தனது வம்சத்தையும் வம்சத்தில் பிறந்தவர்களையும் ரௌரவம் என்கிற நரகத்தினின்று கரையேற்றிவிட்டு தாங்களும் விஷ்ணுவினுடைய உயர்ந்த ஸ்தானமான ஸ்ரீ வைகுண்டத்தை அடைகிறார்கள்.

விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட மனிதச்ரேஷ்டர்கள் எந்த இடத்தில் வஸிக்கிறார்களோ மற்றும் எவர்கள் அந்த இடத்தில் பிறவியை மாத்திரம் அடைந்திருக்கிறார்களோ அவர்கள் எல்லாரும் விஷ்ணுவினுடைய பக்தர்களாக ஆகிவிடுகிறார்கள்.

எவன் விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட பிராமணனை ஒருதினமாவது வஸிக்கும்படி செய்கிறானோ (அதாவது தனது கிரகத்தில் அவனை ஆஹாராதிகளினால் உபசரிக்கிறானோ) அவன் விஷ்ணு லோகத்தில் வஸிக்கிறவர்களினால் பூஜிக்கப்படுகிறவனாகவே ஆகிறான். இதில் ஸந்தேகமில்லை.

विष्णुभक्तियुता ये तु शङ्खचक्राङ्किता द्विजाः ।
क्रीडयाऽपि यदि ब्रूयुः स धर्मः परमो मतः ॥
यस्मिंस्तोये कृतस्नानाः वैष्णवाश्चक्रलाञ्छिताः ।
तस्मिन् स्नानं प्रकुर्वीत विष्णुलोकमवाप्नुयात् ॥
अतिपापप्रसक्तोऽपि विष्णुचक्राङ्कितस्य तु ।
पादोदकं पिबेद्यस्तु सर्वपापैः प्रमुच्यते ॥
शङ्खचक्राङ्कितान् विप्रान् यः पूजयति मानवः ।
स साक्षाद्विष्णुसालोक्यं लभते नात्र संशयः ॥
इत्यादीनि वचनानि द्रष्टव्यानि ।

एवमनेकश्रुतिस्मृतीतिहासपुराणप्रसिद्धं तप्तचक्रादिधारणं भगवच्छास्त्रे विस्तरेण प्रतिपादितम्

---

விஷ்ணுவினிடத்தில் பக்தியை உடையவர்களாயும் சங்கம், சக்ரம் இவைகளை தரித்தவர்களாயுமிருக்கிற முக்கியர்களான பிராமணர்கள் விளையாட்டுக்காகாவாவது எந்த விஷயத்தைச் சொல்லுகிறார்களோ அந்த விஷயத்தையும் உயர்ந்த தர்மத்தைப்போலவே ஆதரிக்கவேண்டும்.

சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட வைஷ்ணவர்கள் எந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்கிறார்களோ அதில் ஸ்நாநம் பண்ணுகிறவன் விஷ்ணு லோகத்தை அடைகிறான்.

எந்த மனிதன் அதிகமான பாபங்களைச் செய்திருந்தாலும் விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட பாகவதனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை சாப்பிடுகிறானோ அவனால் செய்யப்பட்ட ஸர்வ பாபங்களினாலும் அவன் விடப்படுகிறான்.

எந்த மநிதன் சங்கம், சக்ரம், இவைகளை உடைய பிராமணனை பூஜிக்கிறானோ அவன் ஸாக்ஷாத்தாகவே அந்த ஜன்மத்தின் முடிவிலேயே விஷ்ணுவோடுகூட ஒரே லோகத்தில் வாஸத்தை அடைகிறான். இந்த விஷயத்தில் ஸந்தேஹமில்லை. இவைகள் முதலான அநேகம் வசனங்கள் ஷெ ப்ரஹ்மாண்ட புராணம் மோக்ஷ தர்ம ப்ரகரணத்தில் காணப்படுகின்றன.

இப்படி அநேகங்களான வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் ப்ரஸித்தமானபடி அக்நியினால் தபிக்கப்பட்ட சங்கம், சக்ரம் இவைகளை தரிப்பதானது பகவத் சாஸ்த்ரமென்கிற பஞ்சராத்ரத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.



यथा हि श्रीविष्णुतत्त्वे नरकप्रस्तावे:—

चक्राङ्कितेभ्यो बिभ्यन्ति देव नारकराक्षसाः ।
सर्वनाशक्रिया येषां संहारकृदिदं जगत् ॥

तत्रैव तृतीयपादे:—

विज्ञापितार्थाः शिष्याः चक्राद्यङ्कसमन्विताः ।
देवा भवसमज्ञास्ते नान्येषां किङ्कराः ॥

तत्रैव अन्तिमपटले:—

चक्रादिधारणं पुंसां परसम्बन्धवेदनम् ।
पतिव्रतानिमित्तं हि वलयादिविभूषणम् ॥

तत्रैव:—

ब्रह्मचारी गृहस्थो वा वानप्रस्थोऽथ भिक्षुकः ।
एते ह्याश्रमिणः प्रोक्ताश्चत्वारः कर्मयोगतः ॥

---

ஸ்ரீ விஷ்ணுதத்வமென்கிற க்ரந்தத்தில் நரகத்தைப்பற்றிச் சொல்லுகிற ப்ரகரணத்தில் " ஓ தேவனே, எந்த ராக்ஷஸர்கள் செய்யும் கார்யமானது (ஹிம்ஸையானது) ஸர்வ ஜகத்தையும் நாசம் செய்கிறதோ, அப்படிப்பட்ட நரகத்திற்கு அதிகாரிகளான அந்த ராக்ஷஸர்கள் சக்ராங்கநம் செய்யப்பட்ட மனிதர்களைக்கண்டு பயப்படுகிறார்கள் " என்று சொல்லியிருக்கிறது.

விஷ்ணுதத்வத்தில் மூன்றாவது பாதத்தில் (ஆசார்யனால்) மந்த்ரார்த்தங்களை உபதேசிக்கப்பட்டவர்களும் சக்ராயுதத்தின் அடையாளத்தோடு கூடினவர்களுமான சிஷ்யர்கள் தேவனை ஈச்வரனுக்கு ஸமானர்களாக ஆகிறார்கள். முக்தர்களாகிறார்கள் இவர்கள் மற்றவர்களுக்கு கிங்கரர்களாக ஆகிறதில்லை—கர்மவச்யராக ஆகிறதில்லை என்றபடி.

அதிலேயே கடைசி படலத்தில் ஸ்திரீகள் பார்த்தாவோடுகூடி யிருப்பதற்கு அடையாளமாக வளைகள் திருமங்கல்யம் முதலான ஆபரணங்களை தரித்திருப்பது ப்ரஸித்தமாக விருப்பதுபோல் புருஷர்களும் பகவானுடைய சங்க சக்ரங்களை தரிப்பதானது அவர்கள் ஈச்வரனுக்கு அடிமையாகி யிருப்பதை ப்ரகாசப்படுத்துகிறது.

அதே கிரந்தத்தில் அவரவர்கள் செய்யவேண்டிய வெவ்வேறு விதங்களான கர்மங்களுடைய ஸம்பந்தத்தினால் ப்ரஹ்மசாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், ஸந்யாஸி என்று நான்கு வகையாக விருக்கிற இந்த

𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌧𑌰𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
[𑌭𑌵𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌶𑍇𑌷𑌃 ॥]

𑌶𑍍𑌰𑍀 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 :—

𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌋𑌷𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ।

𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 :—

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌾𑌶𑍍𑌰𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌚𑌕𑍍𑌰𑌲𑌿𑌙𑍍𑌗𑌧𑌰𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥

𑌨𑌾𑌰𑌦𑍀𑌯𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 :—

𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌰𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ।
𑌶𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌯𑌤𑍋 𑌦𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ॥
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌕𑍃𑌤𑌦𑍀𑌕𑍍𑌷𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ।

---

எல்லா ஆச்ரமிகளும் சங்கம் சக்ரம் இவைகளை தரித்து அதனாலேயே சாஸ்த்ரத்தில் நிலையுடையவர்களாக ஆகிறார்கள். சாஸ்த்ரப்படி அநுஷ்டிக்கிறவர்களாக ஆகிறார்கள் என்றபடி. இங்கு க்ரியா பதம் இல்லாததால் 'ஆகிறார்கள்' என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சங்கம் சக்ரம் முதலான அடையாளங்களை உடையவர்களாயும் ஏகாந்திகளுமான உத்தம ரிஷிகளோடும் சேர்ந்து விஷ்ணு ஆலயத்தை பிரதிஷ்டை செய்யவேணும் என்பதைச் சேர்த்துக் கொள்ளவும்.

வேதாத்யயனம் பண்ணினவனும் விஷ்ணுவினிடத்தில் பக்தியுள்ளவனும் சாஸ்த்ரங்களை அறிந்தவர்களுக்குள் சிறந்தவனும் சக்ராயுதத்தினுடைய அடையாளத்தை தரித்தவனும் க்ரஹஸ்தாச்ரமத்திலிருக்கிற பிராமணன் பகவானுடைய ப்ரதிஷ்டையைச் செய்வதற்கு யோக்யனாகிறான்.

வேதாத்யயனம் பண்ணினவனும், ஆசாரமுள்ளவனும், நித்ய கர்மாநுஷ்டானங்களில் ஆசையுள்ளவனும், கர்மாநுஷ்டானத்தில் சக்தியுள்ளவனும் க்ருஹஸ்தாச்ரமத்தில் இருப்பவனும், பெரியவர்களிடத்தில் பக்தியுள்ளவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், மனத்தை அடக்கினவனும், சக்ராயுதத்தின் அடையாளத்தை தரித்தவனுமான ப்ராம்மணன் ப்ரதிஷ்டையைச் செய்வதற்கு யோக்யனாகிறான்.



𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 :—

𑌸𑍂𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌸𑌾𑌰𑍍𑌘𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌿𑌤𑍈𑌃 ।
𑌵𑌹𑍍𑌨𑌿𑌤𑌪𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌲𑍋𑌹𑍈𑌸𑍍𑌤𑍈𑌰𑌙𑍍𑌕𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌹𑌿 ॥

[𑌕𑍍𑌷𑌣𑍇𑌨, 𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑍇𑌨 ॥]

𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 :—

𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌹𑌿 𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌦𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥ 𑌇𑌤𑍍𑌯𑌪𑌿 ॥

𑌵𑌿𑌹𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 :—

𑌅𑌗𑍍𑌨𑌿𑌨𑍈𑌵 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌮𑌾𑌯𑌸𑌮𑍇𑌵 𑌚 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌂 𑌤𑍁 𑌅𑌙𑍍𑌕𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌗𑌤𑌸𑌾𑌧𑍍𑌵𑌸𑌃 ॥

---

பாரமேச்வர ஸம்ஹிதையில்:—

'மங்கள ஸூத்ரங்களாலும் மந்த்ரங்களாலும் வாஸனை உள்ளதாகப் பண்ணப்பட்டவைகளாயும், (அதாவது ஸம்ஸ்கரிக்கப்பட்டவைகளாயும்) அர்க்யம் கந்தம் முதலானவைகளால் பூஜிக்கப்பட்டவைகளாயும் பிறகு அக்நியில் தப்தமாகச் செய்யப்பட்டவைகளாயு (காய்ச்சப்பட்டவைகளா) முள்ள (சக்ராதி) லோஹங்களால் ஜாக்ரதையுடன் மனிதன் அடையாளம் பண்ணப்படத் தகுந்தவனாகிறான்' என்றும்,

['𑌕𑍍𑌷𑌣𑍇𑌨' என்பதற்கு 'அவதானத்துடன்' என்பது பொருள்.]

ஸநத்குமார ஸம்ஹிதையில்:—

'சக்ரத்தை தரிப்பதோவென்றால், ஸகலபாபத்தையும் போக்கடிக்கிறது; இந்த லோகத்தில் எல்லாமங்களத்தையும் கொடுக்கிறதாயும், (கடைசி தசையில் ஸம்ஸாரத்தை (ஸம்ஸார பந்தத்தை) போக்கடிக்கிறதாயும் ஆகிறது என்றும்,

விஹகேந்த்ர ஸம்ஹிதையில்:—

'தனது வலது புஜத்தின் மேல் பாகத்தில் (தோளில்) அக்நியோடு கூடின (காய்ச்சப்பட்ட) சக்ரத்தால், பயமில்லாதவனாய் (பொருமையுடன்) அடையாளம் பண்ணிக்கொள்ளவேண்டியது' என்றும், சொல்லப்பட்டிருக்கின்றது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

---

இந்த விதமாக இன்னும் வேறிடத்திலும் அநேக வசநங்கள் பார்த்துக் கொள்ளவேண்டியது.

தாபநீயத்தில் ஆசாரமு மிருக்கிறது.—

'ப்ரஹ்மா அவனை அநுஷ்டுப் சந்தஸ்ஸுக்களால் அபிமந்த்ரிக்க (ஜபிக்க)ப்பட்டவைகளும், அம்ருதங்களால் நிறைந்தவைகளுமான ஸுவர்ண கடங்களால் அபிஷேகம் பண்ணி, சக்ரத்தால் வலது பக்கத்திலும், சங்கத்தால் இடது பக்கத்திலும் (அடையாளம் பண்ணி) காப்பாற்றினார். அவன் இந்த இரண்டுகளாலேயே நன்கு காப்பாற்றப்பட்டவனானான்' என்று.

ஸ்காந்தபுராணத்தில், ப்ருது ஸநத்குமாரர் இவர்களின் ஸம்வாதத்தில் (ஒருவர்க்கொருவர் வார்த்தை சொல்லிக்கொள்ளும் ஸமயத்தில்) ப்ருது:—

'எல்லாம் அறிந்த ஓ மஹர்ஷியே, சக்ரத்தின்மஹிமையையும் ஸ்ரீவைஷ்ணவர்களின் மஹிமையையும் சொல்வதற்கு தேவரீர் தகுந்தவராகிறீர், (கேட்க) எனக்கு மிகவும் ஆவலானது இருக்கிறது' என்று (மஹர்ஷியைப் பார்த்து) சொன்னார்.

ஸநத் குமாரர்:—

சங்கம் சக்ரம் இவைகளால் அடையாளம் பண்ணப்பட்ட மனிதனைப் பார்த்து, தேவதைகள், பித்ருக்கள், க்ரஹங்கள், இவர்கள் மிகவும் ஸந்தோ



[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]

---

டிப்பட்டவர்களாய், பூமியில் எப்பொழுதும் அவனுக்கு மங்களம் (உண்டாக வேணுமென்று) எண்ணுகிறார்கள். க்ருஷ்ணனுடைய (சங்கம் சக்ரம் முதலான) ஆயுதங்களால் அடையாளம் பண்ணப்பட்டவர்களை ம்ருத்யு ஒரு விடத்திலும் வந்து ஹிம்ஸை படுத்தான். தேசாந்தரங்களிலும் பாபங்களால் சூழப்பட்டிருந்தாலும் (அவைகளிலிருந்து அவர்களுக்கு) அது விடுதலை உண்டாக்கிவிடும்

அவர்களின் தீங்குகள் குறைந்து விடுகின்றன. ரோகங்கள் வெகுதூரத்தில் போய் நாசத்தை யடைகின்றன. சத்ருக்கள், சக்ரத்தால் அடையாளம் பண்ணப்பட்ட தேஹத்தைப் பார்த்து திரும்பிப் பாராமல் போய் விடுகிறார்கள்.

அதனாலேயே ப்ரஹ்மாண்ட புராணத்தில்:—

ப்ரஹ்மா சங்கரன் இவர்களை முதலாகக்கொண்ட இந்த்ரனோடுகூடின தேவர்கள் வ்ருத்ராஸுரனால் ஜயிக்கப்பட்டவர்களாய் பகவானிடம்போய் 'ஓ லோகநாதனே, நாங்கள் வ்ருத்ரன் என்னும் அஸுரனால் ஜயிக்கப்பட்டோம். எங்களைக் காப்பாற்று! காப்பாற்று!!' என்று முறையிட்டுக் கொண்டார்கள்.

அப்போது பகவான் சொன்னார்:—

मदायुधेषु चिह्नेषु संस्थापयित्वा सुरोत्तमाः ।
युद्ध्यन्तां समरे दैत्यान् मत्प्रसादेन संयुताः ॥

मदायुधाङ्कितान् दृष्ट्वा सर्वदैत्याः सुरद्रुहः ।
क्षयं यास्यन्ति समरे मत्प्रसादात् सुरेश्वराः ॥

प्रणम्य दण्डवच्चैनं ब्रह्मरुद्रपुरोगमाः ।
हत्वा वृत्रं महादेवाः स्वस्थानं ते समाश्रिताः ॥

तदाप्रभृति ब्रह्माद्याः सदेवाः सह वासवाः ।
ऋषयस्सिद्धगन्धर्वाः पाताले पन्नगेश्वराः ॥

वह्नौ तप्तं सुदर्शनं शङ्खं चैव विधानतः ।
धारयन्ति उदायुधाः शत्रूणां जयकाङ्क्षिणः ॥

---

'ஓ தேவ ச்ரேஷ்டர்களே, நீங்கள் என் ஆயுதங்களால் அடையாளம் பண்ணிக்கொண்டு என் அநுக்ரஹத்தையும் கொண்டு யுத்தத்தில் (அஸுரர்களோடு) சண்டைபோடுங்கள்.

ஓ ஸுரோத்தமர்களே, யுத்தத்தில் அஸுரர்கள் என் ஆயுதத்தால் அடையாளம் பண்ணிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து என் அநுக்ரஹத்தினால் நாசத்தையடைந்து விடுகிறார்கள்.

பிறகு ப்ரஹ்மா ருத்ரன் முதலான தேவதைகளும் பகவானை பூமியில் விழுந்து ஸாஷ்டாங்கவந்தநம் பண்ணிவிட்டு, அதேபடி (சக்ரத்தால் அடையாளம்) செய்து கொண்டு யுத்தத்தில் வ்ருத்ராஸுரனையும் கொன்று மிகவும் ஸந்தோஷத்துடன் கூடினவர்களாய் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

அது முதற்கொண்டு ப்ரஹ்மா முதலான இந்திரனுடன் கூடின தேவர்கள் ரிஷிகள் ஸித்தர்கள் கந்தர்வர்கள் பாதாள லோகத்திலிருக்கும் நாகச்ரேஷ்டர்கள் எல்லோரும் சத்ருக்களை ஜயிக்கவேண்டி மிகவும் ஸந்தோஷத்துடன் அக்நியில் தபிக்கப்பட்டதான சக்ரம் சங்கம் முதலான (பகவத்) ஆயுதங்களை முறையுடன் தரித்துக் கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.



तस्मात्त्वमपि राजेन्द्र कुरु कृष्णायुधाङ्कितम् ।
स्वदेहं निज संग्रामे ह्यजेयस्त्वं भविष्यसि ॥

कृष्णचक्राङ्कितो भूत्वा संग्रामं प्रविशेद्यदि ।
विजित्वा च रिपून् सर्वान् स्वदेशं प्राप्स्यसे नृप ॥
इति ॥
इतिहाससमुच्चये च:—

केचिच्चक्राङ्कितास्तत्र प्राणिनः पुण्यकारिणः ।
विचरन्ति यथाकामं पुण्यतीर्थप्रसादिनः ॥ इति ।

आरण्यपर्वणि च:—

ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्राश्च कृतलक्षणाः ॥
इति ॥

---

ஆதலால் ராஜச்ரேஷ்டனே, நீயும் உன்னுடைய தேஹத்தை கிருஷ்ணனின் ஆயுதத்தால் அடையாளம் பண்ணப்பட்டதாகச் செய்துகொள். (பிறகு) நீ யுத்தத்தில் சத்ருக்களால் ஜயிக்கமுடியாதவனாக ஆவாய்.

க்ருஷ்ணனுடைய சக்ரத்தினால் அடையாளம் பண்ணிக்கொண்டு நீ யுத்தத்துக்குப் போனாயேயானால், ஸகல சத்ருக்களையும் ஜயித்து உன் தேசத்தையும் அடைவாய். இவ்வாறு (ப்ருது மஹாராஜாவைப்பார்த்து ஸநத் குமாரர் சொன்னதாக சொல்லப்பட்டிருக்கின்றது.

இதிஹாஸ ஸமுச்சயத்திலும், 'புண்ய தீர்த்தங்களைக் கொண்டாடுகிறவர்களும் சக்ரத்தை தரிப்பவர்களும் அதனால் புண்யத்தைக் கொடுப்பவர்களாயுமிருக்கிற சில ஜநங்கள், அங்கு இஷ்டப்படி ஸஞ்சரிக்கிறார்கள்' என்றும்,

ஆரண்ய பர்வத்திலும்:—

'ப்ராஹ்மணர்கள் க்ஷத்ரியர்கள் வைச்யர்கள் சூத்ரர்கள் எல்லோரும் செய்து கொள்ளப்பட்ட (சக்ரம் முதலானவைகளின்) அடையாளத்தை உடையவர்களாக இருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

𑌕𑌾𑌶𑍀𑌖𑌣𑍍𑌡𑍇 𑌦𑍍𑌵𑍍𑌯𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑍇𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑍇:—

𑌆𑌸𑍀𑌦𑌮𑌿𑌤𑍍𑌰𑌜𑌿𑌨𑍍𑌨𑌾𑌮 𑌰𑌾𑌜𑌾 𑌪𑌰𑌪𑍁𑌰𑌂𑌜𑌯𑌃 ।
𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌧𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌰𑌂𑌜𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 ॥

𑌯𑌶𑍋𑌧𑌨𑍋 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑍁𑌧𑍀𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌦𑍈𑌵𑌤𑌃 ।
𑌸𑌦𑍈𑌵𑌾𑌵𑌭𑍃𑌥𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌿𑌕𑍍𑌲𑌿𑌨𑍍𑌨𑌶𑌿𑌰𑍋𑌰𑍁𑌹𑌃 ।

𑌵𑌿𑌨𑍀𑌤𑍋 𑌨𑍀𑌤𑌿𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑍌𑌶𑌲𑍀 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌬𑍍𑌧𑌿𑌪𑌾𑌰𑌦𑍃𑌶𑍍𑌵𑌾 𑌚 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 ॥

𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑍋 𑌮𑌧𑍁𑌰𑌾𑌲𑌾𑌪𑌃 𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 ।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌾𑌨𑍍 𑌶𑍌𑌚𑌨𑌿𑌲𑌯𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।

𑌰𑌣𑌾𑌙𑍍𑌗𑌣𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌭𑌃 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌦𑌾𑌜𑌿𑌤𑌃 ।
𑌕𑌾𑌮𑌿𑌨𑍀𑌕𑌾𑌮𑌕𑍇𑌲𑌿𑌜𑍍𑌞𑍋 𑌯𑍌𑌵𑌨𑍇𑌽𑌪𑌿 𑌵𑍃𑌦𑍍𑌧𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ।

---

காசிகண்டத்தில் 82வது அத்யாயத்தில்:—

அமித்ராஜித் (சத்ருக்களை ஜயிக்கிறவன்) என்று ஓர் அரசன் இருந்தான். அவன் சத்ருக்களின் நகரங்களை ஜயித்தவனும், தர்மிஷ்டனும், பலமுள்ளவனும், ஜனங்களை ஸந்தோஷப்படுத்துவதிலேயே எண்ணமுடையவனும், கீர்த்தியையே தனமாக உடையவனும், தான சீலனும், பண்டிதனும், ப்ராஹ்மணர்களைத் தெய்வமாகக் கொண்டாடுகிறவனும், எப்பொழுதும் யாகயஜ்ஞாதிகளைப் பண்ணி கடைசியில் அவப்ருத ஸ்நானம் செய்து அதனால் குறைந்துபோன கேசங்களை உடையவனும், வணக்கமுள்ளவனும், நீதியோடு கூடினவனும், எல்லாவித கார்யங்களிலும் ஸாமர்த்யமுடையவனும், வித்யையாகிற ஸமுத்ரத்தின் கரையைக் கண்டறிந்தவனும், ஸத்குணமுடையவனும், குணவான்களிடத்தில் ப்ரீதியை யுடையவனும், செய்தநன்றியை நினைப்பவனும், அழகாகப்பேசுகிறவனும், பாபகர்மங்களில் போகாதவனும், சுத்திக்கு இருப்பிடமாயிருக்கிறவனும், நல்ல தூக்கமுடையவனும், இந்த்ரியத்தை ஜயித்தவனும், யுத்தகளத்தில் யமன் போல் காந்தியையுடையவனும் ஜயத்தையே அடைகிறவனும், காமினீஸ்த்ரீகளின் மன்மதக்ரீடையில் (ரஸ) மறிந்தவனும், யௌவன முள்ளவனும்,



𑌧𑌰𑍍𑌮𑍈𑌧𑌿𑌤𑌕𑍋𑌶𑌶𑍍𑌚 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌬𑌲𑌵𑌾𑌹𑌨𑌃 ।
𑌸𑌭𑌾𑌗𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑍁𑌰𑍂𑌪𑌶𑍍𑌚 𑌸𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥

𑌪𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑌜𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑍋 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌪𑍂𑌜𑌿𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍂𑌷𑌣𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।

𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌳𑍇 𑌚𑍇𑌤𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌸𑌃 ।
𑌚𑌕𑌾𑌰 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌨𑌿𑌃𑌸𑌪𑌤𑍍𑌨𑌂 𑌦𑌿𑌗𑍍𑌭𑍀𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।

𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌶𑌾𑌸𑌨𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ।
𑌬𑍁𑌭𑍁𑌜𑍇 𑌸𑌕𑌲𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌸𑌮𑌰𑍍𑌪𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌤𑌦𑌾 ॥

𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌸𑍍𑌯 𑌨𑍃𑌪𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑌦𑍇 𑌪𑌦𑍇 ॥
𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑍇 𑌸𑍁𑌮𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑍇 𑌹𑌰𑍇𑌰𑌿𑌜𑍍𑌯𑌾𑌭𑌵𑌤𑍍 𑌸𑌦𑌾 ॥

---

வ்ருத்தர்களிடத்தில் ப்ரியமுள்ளவனும், தர்மத்தினால் (தர்மமாக நடந்து வருவதால்) வ்ருத்தியடைந்த பொக்கிஷத்தை உடையவனும் நிறைந்த ஸைன்யம் வாஹனம் இவைகளை உடையவனும், அதிருஷ்ட முள்ளவனும், அழகான ரூபத்தை உடையவனும், புத்தி ப்ரதிபையை உடையவனும், மிகவும் ப்ரியமுள்ள மனிதனின் ஆச்ரயத்தை உடையவனும், [அல்லது ப்ரியமுள்ள மனிதனுக்கு ஆச்ரயமாயும்] உறுதி தைர்யம் இவைகளை அடைந்தவனும், ஸமயம் இடம் இவைகளை அறிவதில் ஸாமர்த்யமுடையவனும், எப்போதும் ஸர்வ விஷயத்திலும் கௌரவிக்கத்தகுந்தவனும், ஸகல தூஷணங்களாலும் விடுபட்டவனும் இருந்தான்.

அவன் ஸ்ரீ பரவாஸுதேவனின் சரணயுகளத்தில் மனத்தைச் செலுத்திக் கொண்டு எதிரிகள் இல்லாமல், ஒருவனைப் (தனக்கு ஸமான மனிதரில்லாதவனாய்) நாலு பக்கத்திலும் பயத்தினால் விடுபட்டவனும், தடங்கலில்லாமல் ஆளுகையை உடையவனுமாக விஷ்ணு பக்தி பண்ணிக்கொண்டு ஸகலஸம்பத்தோடு கூடினவனாய் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். நாலாபக்கத்திலும் விஷ்ணுவுக்கு போகங்களை எல்லாம் அர்ப்பணம் செய்து கொண்டு அவைகளை அநுபவித்து வந்தான்.

மஹா அதிருஷ்ட சாலியான அவனுடைய மங்களமுள்ள ராஜ்யத்தில் ஒவ்வொரு உப்பரிகையிலும் அடிக்கடி விஷ்ணு பூஜைகள் பலமாக நடந்து வந்தன.

கோ³விந்த³ கோ³ப கோ³பால கோ³பீஜநமநோஹர ।
கு³ணாகர கு³ணாதீத கு³ணாட்⁴ய க³ருட³த்⁴வஜ ॥
கேஶிஹந் கைடபா⁴ராதே கம்ஸாரே கமலாபதே ।
க்ருஷ்ண கேஶவ கஞ்ஜாக்ஷ தீ³நஸம்ஸாரநாஶந ॥
புருஷோத்தம பாபாரே புண்ட³ரீகவிலோசந ।
ஜநார்த³ந ஜக³ந்நாத² ஜாஹ்நவீஜலஜந்மபூ⁴: ॥
ஜநிநாம் ஜந்மஹர்த்தா ஜந்மவ்ராதவிநாஶந ।
ஶ்ரீவத்ஸவக்ஷ: ஶ்ரீகாந்த ஶ்ரீகர ஶ்ரேயஸாம் நிதே⁴ ।
ஶ்ரீரங்க³ ஶார்ங்க³கோத³ண்ட³ ஶௌரே ஶீதாம்ஶுலோசந ॥
தை³த்யாரே தா³நவாராதே தா³ருணாதி³ து³ஷ்டத³ண்ட³க ।
தே³வகீஹ்ருத³யாநந்த³ போ⁴கி³ஶய்யாஶய ॥
விஷ்ணோ வைகுண்ட²நிலய பா³ணாரே விஶ்ருதஶ்ரவா: ।

---

கோவிந்த, கோப, கோபால, கோபீஜநங்கள் எல்லாருடைய மநஸ்ஸையும் அபஹரித்தவனே, ஸமஸ்த கல்யாண குணங்களுக்கெல்லாம் ஆகரனாக இருப்பவனே, ஹேயகுணங்களற்றவனே, குணங்களால் நிறைந்தவனே, கருடனை த்வஜத்தில் உடையவனே, கேசி என்பவனை ஸம்ஹரித்தவனே, கைடபன் என்பவனை ஸம்ஹரித்தவனே, கம்ஸனைக் கொன்றவனே, மஹாலக்ஷ்மியின் பதியே, க்ருஷ்ண, கேசவ, அழகான கண்களை உடையவனே, தீநர்களுடைய ஸம்ஸார தாபத்தைப் போக்குகிறவனே, புருஷோத்தம, பாபங்களை நிவ்ருத்திப்பவனே, தாமரைப்பூ போன்ற கண்களை உடையவனே, ஜநார்தந, ஜகந்நாத, கங்கா நதியின் ஜலத்திற்கு உற்பத்திஸ்தாநமாக இருப்பவனே, ஸம்ஸாரிகளுடைய இறப்புப் பிறப்பை நிவர்த்திக்குமவனே, ஜந்மக்கூட்டங்களையும் நாசம் செய்யுமவனே, ஸ்ரீவத்ஸத்தை மார்பில் உடையவனே, லக்ஷ்மீகாந்த, ஸ்ரீகர, ச்ரேயஸ்ஸுக்கெல்லாம் இருப்பிடமே, ஸ்ரீரங்கநாத, சார்ங்கம் கோதண்டம் முதலிய ஆயுதங்களை உடையவனே, சௌரே, சந்த்ரனைப்போல ஆஹ்லாதகரங்களான கண்களை உடையவனே, தைத்யர்களெல்லாருக்கும் தாநவர்களுக்கும் சத்ருவே, துஷ்டர்களை நிக்ரஹிக்குமவனே, தேவகீ தேவியின் ஹ்ருதயத்திற்கு ஆநந்தத்தைக் கொடுத்தவனே, ஸர்ப்பங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டனான ஆதிசேஷன் மீது சயநித்திருப்பவனே, விஷ்ணுவே, வைகுண்டத்தில் வஸிக்குமவனே, பாணாசுரனை ஸம்ஹரித்தவனே, மஹத்தான புண்ய யசஸ்ஸை உடையவனே



ந்யாயஸ்ம்ருதிஶ்ருதிபி⁴ருப த்வதா நிஸ்ருஷ்டை:
வேதா³ர்த²ப்³ருʼம்ஹணவிதா⁴வுசிதைஶ்ச ஸாத⁴நௌகை⁴: ।

---

இங்குமங்கும் ஓடி, கடைசியில் ஒரு துர் வாதத்தில் அகப்பட்டு ஆத்மாவை இழப்பவர்களுக்கும், வேதத்தைப் பெற்றும் அதன் அர்த்தத்தைச் சரிவர அறியாமல் தவறான அர்த்தங்களைச் செய்து கொண்டு அவைகளில் அகப்பட்டு அதனால் ஆத்மாவை இழப்பவர்களுக்கும் ஒரு வித வாசியும் இல்லை. இருவரும் ஆத்மாவை இழந்தவர்களாகவே ஆகிறார்களன்றோ? இருவருக்கும் தத்வநிர்ணயம் ஏற்படவில்லை என்பது கருத்து.

15. கீழ் ச்லோகத்தில் 'சிலர் ச்ருதியின் உண்மையான அர்த்தத்தை அறியவில்லை' என்று சொன்னார். அதை அறியும் உபாயம் எது என்பதை இந்த ச்லோகத்தால் விளக்குகிறார்.

[ப - ரை] த்வதா - உன்னாலே, நிஸ்ருஷ்டை: - கொடுக்கப்பட்டவும், வேதார்த்தப்ருʼம்ஹணவிதௌ - வேதத்தின் உண்மையான அர்த்தத்தை விளக்குவதில், உசிதை: ஸாதநௌகை: - உசிதங்களான ஸாதநங்களுமான, ந்யாயஸ்ம்ருதிஶ்ருதிபி: - தர்க்கம் ஸ்ம்ருதி முதலியவைகளைக் கொண்டு, த்வதநுக்ரஹாவித விஶுத்தமநோ விஶேஷா: - உன்னிடத்தில் செய்யப்பட்ட பக்தியால் பாவனையுடன் கூடியதும் கல்மஷமற்றதுமான புத்தியை உடையவர்கள், பா⁴நோ: ப்ரபா⁴ இவ - ஸூர்யனுடைய வெளிச்சத்தைக் கொண்டு வெளிப் பொருள்களைப்போல, ஶ்ருத்யர்த²ம் - ச்ருதியின் அர்த்தத்தை, விவேசநா: - பிரித்திருக்கிறார்கள்,

இந்த ச்லோகத்தில் "த்வதநுக்ரஹ" இத்யாதியான பதத்தின் அர்த்தமே ப்ரதாநமான அர்த்தம். ஏனென்றால், மநஸ் ராக த்வேஷாதிகளால் கலங்கி இருக்கும் வரையில் அது ச்ருதியின் உண்மையான அர்த்தத்தை அறிய அநர்ஹமே. அந்த ராக த்வேஷாதிகள் விலகுவதற்கு பகவானிடத்தில் மநஸ்ஸைச் செலுத்துவது தான் உபாயம். எவன் பகவானிடத்தில் மநஸ்ஸைச் செலுத்தி, அதனால் மநஸ்ஸின் தெளிவை ஸம்பாதித்துக் கொள்ளுகிறானோ அவனுக்கே ச்ருதி தனது அர்த்தத்தை வெளியிடும். கேவலம் ஸ்வ ப்ரயத்நத்தால் ச்ருதியின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள ப்ரயத்நப்பட்டால், அப்பொழுது ப்ரஜ்ஞை விபரீதத்திலேயே போய் முடியும். இது

"ஸம்ஶுத்³த⁴ஸத்த்வம் ஶாஸ்த்ராத் வேத்³மி ஜநார்த³நம்"

[பக்தியினால் சுத்தபாவத்தை அடைந்தவனுப், நான் சாஸ்த்ரத்திலிருந்து பகவானை அறிகின்றேன்] என்னும் ஸஞ்ஜய வாக்யத்தால் விளங்கும். குத்ருஷ்டிகள் தவறுவதற்கு பக்தி இல்லாமையே காரணம்.

ஶ்ருத்யர்த்தபர்யவஸிதாவ ஸாதநகதொ ஹி புஜெஷ
ஸத்கத்ஸாவி த விகஶ்யெஷு ஸஹஷிகா: ॥ க௫

யெ த்வத் பதாம்புஜ ஸநாத ஸமக்த ஹீநா
தேஷாம் ஸமீக்ஷிதவி நைவ யதார்த்தபோத: ।
வித்வம்ஸநைகநிபுணா க்ஷணதா ஜநாநாம் நேத்ரம்
நைவ வ்யோமாவி ஸம்வஶித த்வயா ॥ க௬

ஸவதந் ஸ்ம்ருதய: — தர்க்கம் மீமாம்ஸை ஸ்ம்ருதிகள் இவையெல்லாம் மஹர்ஷிகளால் செய்யப்பட்டவைகளாயிருக்க, அவைகளைப் பகவானால் கொடுக்கப்பட்டவை என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், அந்தந்த மஹர்ஷிகளைக் கொண்டு பகவானே அந்தந்தச் சாஸ்த்ரங்களைச் செய்வித்திருக்கிறான் என்பதுதான்.

வேதாவபோதநவிதய: — வேதங்களின் அர்த்தங்கள் லகுவாக அறியத்தகுந்தவையல்ல. அவைகளை விசதமாக்குவதற்கென்றே ஸ்ம்ருதி முதலியவை வெளிவந்திருக்கின்றன. ஆகையால் ஸம்ருதி முதலியவைகளை வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களென்று சொல்லுகிறார்கள்.

விஹஜந்தி — பிரிக்கிறார்கள்; அதாவது — விளக்குகிறார்கள். இவை ஹேயம் இவை உபாதேயம் என்று அவை அர்த்தங்களைப் பிரிக்கிறபடியால், அவை அவ்விதம் பேசப்பட்டிருக்கின்றன.

16. இச்ச்லோகத்தில் சாஸ்த்ரார்த்தத்தை உள்ளபடி அறிந்துகொள்ள பகவத் பக்தி ப்ரதாநகாரணமென்று சொல்லப்பட்டது. அப்படி பக்தியின்றி வேதார்த்தம் துரவகாஹம் என்பதை ஒரு த்ருஷ்டாந்தத்தைக்காட்டி விளக்குகிறார்.

[ப — ரை] யெ து - எவர்கள், த்வத்பதாம்புஜ ஸமக்தி ஹீநா: - உன்னுடைய பாதாரவிந்தங்களில் பக்தி யற்றவர்களாக இருக்கிறார்களோ, தேஷாம் — அவர்களுக்கு, ஸமீக்ஷிதவி - தர்க்கம் ஸ்ம்ருதி முதலியவைகளால்கூட, யதார்த்தபோத: — சரியான ஜ்ஞாநம், நைவ - ஒருகாலும் உண்டாகமாட்டாது. நேத்ரம் — கண்ணானது, வித்வம்ஸநைக - பிந்தத்தைப் போக்கடிக்கக்கூடிய மையை, அநாப்தவதி — அடையாமலிருக்கும் வரையில், வ்யோமாவி - உயர்ந்த வெளிச்சத்தாலும், ஸம்வஶித த்வயா - சங்கம் வெளுப்பு என்னும் ஜ்ஞாநம், ஜாது நைவ - ஒருகாலும் உண்டா



தத்வாய தத்வபரஶத வேதவாக்யை
ஸ்வார்த்தயாத் தத்ஸ்ம்ருதிஶதைவ்ய தாத்ருஶைஸ் ।

கிறதில்லையன்றோ! [காமாலை கொண்ட கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகவே தோன்றுமன்றோ ? ப்ரதாந ஸாதநம் இராவிட்டால், வேறு ஸாதநங்களெல்லாம் பூர்ணமாக இருந்தாலும் கார்யம் சாயமாட்டாது என்பது ப்ரஸித்தம்.]

17. இச்ச்லோகத்தில், 'வேத வாக்யங்களின் யதார்த்த போதம் உண்டாவதற்கு தர்க்கம் மீமாம்ஸை முதலிய சாஸ்த்ர ஜ்ஞாநம் மாத்ரம் போதாது, பகவானிடம் ருஜுவான பக்தியும் அவச்யம் வேண்டும். அந்தப் பக்தி இராவிட்டால், சாஸ்த்ர ஜ்ஞாநம் எவ்வளவு இருந்த போதிலும் யதார்த்த போதம் அவனுக்கு ஜநிக்க மாட்டாது' என்று சொல்லப்பட்டது. இப்பொழுது, அப்படிப்பட்ட பக்தியுடன் கூடிய சாஸ்த்ரஜ்ஞாநத்தால் ஏற்படும் யதார்த்த போதமானது, 'ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை' என்பதுதான் என்று விவரிக்கப்படுகின்றது

[ப - ரை] தத்வாய தத்வபரஶத வேதவாக்யை: — தத்வார்த்தத்தையே ப்ரதிபாதிக்கும் நூற்றுக்கணக்கான வேத வாக்யங்களாலும், தாத்ருஶீபி: ஸ்ம்ருதிபிரவி - அம்மாதிரி [தத்வார்த்தத்தையே ப்ரதிபாதிக்கும் நூற்றுக்கணக்கான] ஸ்ம்ருதி வாக்யங்களாலும், தத்வைவ ஸாத்விகவஸ்த்வபராணை: — தத்வத்தையே உணர்த்திக்கொண்டு அந்தக் காரணத்தாலேயே ஸாத்விகங்களாக இருக்கும் புராண ச்ரேஷ்டங்களாலும், தைவஜ்ஞ யீபிரவி - ப்ரஹ்மவித்துக்களுடைய ஜ்ஞாநங்களாலும், த்வாமேவ - உன்னையே, பரமம் -சேதநா சேதந வஸ்துக்களெல்லாவற்றுக்கும் சேஷியென்று, ஸாமர்த்யாத் - [அந்தந்த ப்ரமாணங்களின் ஸ்வாபாவிகமான] ஸாமர்த்யத்தைக் கொண்டே, நிஶ்சிநும: - நிச்சயம் செய்கின்றோம்.

தத்வாய — தத்வமாகிற அர்த்தம்; அதாவது-ஸ்ரீமந் நாராயணன் என்று சொன்னதாயிற்று. "தத்வம் நாராயண: பர:" [நாராயணனே தத்வம்] என்கிறபடி, இவ்விடத்தில் நாராயணனை தத்வம் என்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறான்

தத்வபர — இவ்விடத்தில் "பர" என்னும் பதத்திற்கு 'வாசகம்' என்பது பொருள். அதாவது—'அவனையே சொல்லுகிற.'

பரஶத — நூறைக்காட்டிலும் அதிகமான; அதாவது—அநந்தங்களான ஶ்ருதார்த்தாணி பரஶதாநி.

த்வாமேவ தத்த்வஹ்ருஸாத்த்விகஸத்புராணை:
தத்த்வஜ்ஞஸூரய இஹாபி நிர்ணிந்யு: பரேசம் ॥ கஎ

---

ஸாமர்த்யத:—'ஸாமர்த்யம்' என்பதற்கு 'ஸமர்த்தமாக இருக்கும் தன்மை' என்பது பொருள். ஒவ்வொரு வாக்யத்திற்கும் ஒவ்வொரு அர்த்தத்தையே போதிக்கும் திறமை உண்டு. அந்த அர்த்தத்தைத் தள்ளிவிட்டு வேறு அர்த்தத்தை அதன் பொருளாகச் சிற்சில காரணங்களைக் கொண்டு சிற்சில ஸமயங்களில் எடுத்துக்கொள்ளும்படி நேரக்கூடும். அப்பொழுது அந்த அர்த்தத்தை அந்த வாக்யம் தனது ஸாமர்த்யத்தால் போதிக்கின்றது என்று சொல்வது ஸாத்யப்படமாட்டாது. அப்படிபொருள் கொள்வதின்றிக்கே ஸ்வரஸமாகவே இந்த வேத வாக்யம் முதலானவைகளிலிருந்து 'ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை' என்னும் பொருள் கிடைக்கின்றது என்பது இவ்விடத்தில் 'ஸாமர்த்யத:' என்னும் பதத்தின் குறிப்பு.

ஸாத்த்விகஸத்புராணை:—புராணங்கள் ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும் மூன்று வகைப்படும். இவையெல்லாம் புராணகாரர்களாலேயே செய்யப்பட்டவை. அந்தப் புராண காரர்கள் தாம் தாம் இயற்றும் புராணங்களின் விஷயங்களை முன்னதாகவே ப்ரஹ்மாவிடமிருந்து தெரிந்துகொண்டு தம்தம் புராணங்களைச் செய்தார்களென்று சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ப்ரஹ்மாவும் ஸம்ஸாரி ஜீவன்களுள் ஒருவராகையால், அவருக்கும் மற்றை ஜீவன்களுக்குப் போல், சில காலங்களில் ஸத்வம் தலையெடுத்தும் மற்றும் சில காலங்களில் ரஜஸ் தமஸ்ஸுக்கள் தலையெடுத்தும் நிற்பது உண்டு. ஸத்வம் தலையெடுத்திருக்கும் காலத்தில் அவரால் சொல்லப்பட்டவைகளுக்கும் இதர காலத்தில் அவரால் சொல்லப்பட்டவைகளுக்கும் அர்த்தத்தில் பரஸ்பரம் விரோதம் காணப்படும் பக்ஷத்தில் ஸத்வ காலத்தில் சொல்லப்பட்டவையே யதார்த்தமென்றும், மற்றவை அயதார்த்தமென்றும் குணாநுகுணமாக ப்ராமாண்ய அப்ராமாண்யவிபாகம் செய்யவேண்டுமென்று ப்ரஹ்மாவினாலேயே ஸத்வ குணம் தலையெடுத்திருந்த ஸமயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்று சொல்லும் புராணங்களே ஸத்வம் மேலிட்டிருந்த காலத்தில் செய்யப்பட்டவை என்று அவ்விடத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதை ப்ரமாணமாகக் கொண்டே இவ்விடத்தில் ஸ்ரீ கூரேசன் நிர்ணயம் செய்கிறார்.

தத்த்வஜ்ஞா:—பரதேவதை யார் என்பதை உண்மையாக அறிந்தவர்கள் இந்தப் பதத்தால் சொல்லப்படுகிறார்கள். அவர்கள் பராசர பராங்குசர் முதலியவர்கள்.

பரேசம்—ஸகல சேதநாசேதந வஸ்துக்களுக்கும் ஈசன்.



மிக்க கன்மறு கிடையிடை யுலவுமெல் லியலார்
தொக்கி ருங்கடைக் கண்களின் சோதியுந் துவர்வா
யொக்க நீழலு நீலமு மாம்பலு முறழ்ந்து
புக்க தோரண மெனநிரை நிரையுறப் பொலியும். 5

பத்தி நித்திலப் பவனநின் றெழுதரு நிலவி
னத்தி ருப்புய வமரர்கோன் றென்றிரு * நகரைப்
பத்தி ரத்தினும் பணத்தினுஞ் சிறந்தவென் பகட்டிற்
கெத்தி ரத்தைநீ யெனப்பரி கசிப்பதை யியையும். 6

அங்கு மாலிரும் பசியவா லதனிடைச் சயனித்
தெங்க டெய்வத மெனப்பத மிறைஞ்சிடப் புகுவோர்
தங்க டாபமுன் றகன்றுய ரின்பமே தழைக்கச்
செங்க ணங்கடை விருத்தருள் செய்திடுஞ் சிவக்க. 7

கங்கை யுஞ்சர ஸ்வதியுங் கதிரவன் மகளு
மங்கு வந்துதோய் பவாகங்க ழுவியின் பருந்தப்
பங்க யச்செழுங் காடல ரமுதெனும் பயமார்
பொங்கி ருந்திரு முக்குள மெனப்பெயர் பொலியும். 8

வேறு.

மற்றுமியம் பற்கரிய மாண்பாரத் தொன்னகரில்
கற்றினமு மேய்த்த திருக்கண்ணன் கழலிணையே
பற்றென்று றையுமொரு முன்குடுமிப் பாகவதர்
பெற்றெடுத்த ரத்தினமே பெரியாழ்வா ரென்பவரே. 9

இந்தயுக நாற்பானே ழென்றகுரோ தனவருடத்
தந்தமுறு மானிமதிச் சோதித் திருநாளில்
சந்தமறைக் கலுழன்றன் பங்காமச் சால்பினரும்
வந்துதயஞ் செய்தனரவ் வந்தணர்கால் வழியிலக. 10

சாந்த மொடுதாந் தஞ்சாலுங் கருணையுறா
லேந்த ரியகல்வி மணிவண்ண னிடத்தன்புந்
தேர்ந்த வர்க்குவிண்டு சித்தரென்னுந் திருநாமம்
பார்த்தண் மிசைக்கிடந்த பரமனடியார் பணித்தார். 11

---

[* குறிப்பு:—இந்நகருக்குத் தென்றிசையில் உசுலோகஸார மென்ற வொரு நகருண்டு.]

பொன்னன் புதல்வன் பூட்கயிறை வீடணனோ
டின்னபர னன்பரெல் லோர்க்கு மித்தகையார்
பன்னற் கரியதிருப் பத்தரெனப் பார்த்தவர்கண்
மன்னுமகிழ் வுற்றறைய மாண்பா யொழுகினரால். 12

விண்டு சித்த ரெந்தை வியந்த வடவிருக்கங்
கொண்ட பெருங்கோ யிலற்குக் கொள்ளுந் திருப்பணிகள்
கண்டெதனை யான் புரிவேனென்று கருதியவன்
கொண்ட வெழிலீரைந்தவ தரிப்பைக் குறித்துணர்ந்தார். 13

ஒன்பா னவதாரத் தொன்னலன்பூ வாணிபனி
லன்பாய் மலர்த்தெரியற் காங்கெழுந்த தன்மையினே
மின்பாய் முகிலூரத் தாற்கந்த மிகும்பணியே
வன்பா யிழைத்திடுவே னென்றுமனம் வலிந்தே. 14

எல்லை யறிவரிதா யிரும்பெரிய வாராம
மொல்லென் றுடன்வளைத்தாங் கோளியுற வும்பர்களும்
புல்லரிய நாளுப் பூஞ்செடிக டாம்பதித்தே
யல்லும் பகலுமதை யாதரித்துப் போர்த்தடைவே 15

கிள்ளை மயில்போலுங் கேகயமென் புட்போலும்
வெள்ளை யனம்போலுந் விவிதநிற வேரிமலர்
கள்ளைப் பெருக்கநறுங் காலாய்த் தெடுத்தழகே
கொள்ளை கொளத்தொடுத்துக் கோவிந்தற்கே யணிவார் 16

ஈதிங் ஙனநிகழ வின்னொன்றி யம்புதுமண்
மீதெங் குங்கோல் செலுத்துமின்னு மணி முடியார்
பாதம் பணிந்தொழுகப் பாண்டியர்க ணன்றுளு
மோதம் மெனவொளிரு மதுரையெனு மோர்நகரம் 17

பத்தி மணி மாட மீதிரவிற் பைந்தொடியா
ரத்தோ ரணநகரி லாங்குலவு வாரிடையி
னத்தங் கரனகர நாயகனு நன்முகமுஞ்
சித்த முணராதே தியங்கிடுமு ரோணியமா. 18

பூட்டுந் தளையோடும் பொழியுங் கருமுகில்க
ளீட்டந் திரிவதென வெங்குமதி ரப்பிளிறும்
மோட்டின் முகபடத்த மும்மதத்துக் கைம்மலையின்
கூட்ட மசைந்தசைந்து வீதிதொறுங் கூர்ந்துலவும் 19



செங்கேழ் பரிதிமணிச் சேண்குலவு மாடமிசைச்
சிங்கா ரஞ்செய் மணியி[illegible] செப்பென் முலைமகளிர்
தங்கா தலர்விழையத் த[illegible]ரியுங் கஞ்சனம்போ
லங்கார் பலகணி யிலார்த்தொளிரும் வைகலுமே. 20

பூங்குழ லாரைம்பால் புலர்த்துமகிற் பூம்புகைவிண்
ணோங்கு மணிமாடப் பலகணியி னுள்ளிருந்து
நீங்கிப் புறம்போகை நீள்சிறையிற் பட்டமுகி
லேங்கிக் களவினிரிந் தேழுவதேய்க் குமரோ 21

பொன்மணியின் றோரணமும் பூஞ்சரமு நித்திலத்தின்
மின்வடமுந் தொங்கவகன் மேலோங்கு காவணமும்
விண்மணியின் கோபுரங்கள் வீறுஞ் சினகரமுந்
தொன்மையுறு மந்நகரி யெங்குந் துவன்றிடுமே 22

வேறு

புந்தியி னளந்து போற்றற் கரிய வப்புரியின் வைகிச்
சிந்துவே றுடங்க வையஞ் செவ்விதிற் புரக்கு மாற்றன்
முந்திய சீர்த்தி மும்மை யுலகினுர் முடலை வீரன்
இந்துவின் மரபிற் றோன்று மிருஞ்சுட ரென்ன நின்றான் 23

வல்லப தேவ னென்று வழங்குமோ ரிறைவன் வந்தோர்
சொல்லுமுன் வழங்கு மென்றுஞ் சுவணமோ டளித்த நீரே
யெல்லை யிலெவ்வி யலாகி யிடை யறுதொழு கலாலே
மல்லலங் கடலுந் தோயம் வறத்தலின் மலியு மன்றே. 24

கூடலின் கோமான் கையிற் குலவுவாண் முகிலே யென்று
மாடலை ஞகா தாகா ரெனுமன நிவக மந்த
நாடரு மசியைக் கண்டே நடலையி னிரியு மென்று
லாடலா ரவன்முன் போரி லாரெதிர்ந் தடுப்ப ரம்மா. 25

அன்னவ னொருநா ளாருமறிவுறு வேடந் தாங்கி
நன்னகர் நிலையா ராய நள்ளிர வுலவப் போந்த
தொன்னெடு மறுகி லோரில் வேதிகைப் புறத்தே துஞ்சும்
பன்னரு மறைவ லாள னொருவனைப் பரிவிற் கூவி. 26

ஆரையா நீயிவ் வூர்க்குப் புதியையா யடைந்தா யென்ன
வேரையாய் பவத்தின் விண்டு பதிப்புனல் படிந்து மீண்டு

சீரையாய் சனகி கேள்வன் செய்தசே துவின்கண் டோய
ஊரையாள் பவனே போவல் வேதிய னொருவன் யானே. 27

என்ன வவ்வேந் தனீயே யெக்கலை யுணர்ந்தா யென்ன
மன்ன வவ்வெவற் றினென்ன மதித்தடை யமுத மானும்
பொன்னெ டுமுலகம் போற்றுஞ் சுருசீ ரன்றிற மேபோது
கன்ன யமுளதொன் றீங்கு நவில்வது துணிதி நல்லோய். 28

ஆண்டெலாந் துய்க்க வோரெண் மதியி னின்முயல லாகு
மீண்டிய விரவிற் கேற்ற பகற்பொழு திமைக்க லொல்லு
மூண்டிடு முதுமைக் காய விளமையின் முயல வேண்டு
மாண்டகாய் மறுமைக் கிம்மை யடையவு முழைக்க லாமே. 29

அத்திநுண் மணலின் மிக்க வடுத்த பல்பிறவி தம்முள்
கத்திகைப் புயத்தா யொன்றிற் சிறிது மூன்றரி காண்டற்
கெத்திறத் தவர்க்கு மின்ப மேய்ந்திடு நெறியி னென்றாற்
புத்தியிற் சிறந்து பூப்போ ரொழிவரோ வதனி னென்றான். 30

அந்தண னறைந்த வந்த வரும்பொரு ளறிந்த வாழிச்
செந்தனிக் கரத்துச் செம்மல் சிக்கெனப் பவனம் புக்குத்
தந்தவுய்ந் திடுநா ளெல்லாந் தணந்தன வறிதே யென்று
சிந்தையிற் கலுழ்ந்து செல்வ நம்பியை விளித்துச் செப்பும் 31

என்குலம் படருமின் புரோகித மணியே தீம்பா
னன்கருந் திடுதற் காய வெடிப்பி னிற்க விழ்த்த நாடாப்
புன்கரும் பேதை யொப்பப் பொழுதெலாம் வறிதே போக்கி
யின்பரம் பொருளை யாராய் வின்றுசிற் றின்பந் தேக்கி. 32

போந்த நானுன் மஞானம் பொருந்தியுய்ந் திடுமா றுன்றன்
கூர்ந்த புந்தியி னாராய்ந் துகூறுக வென்ன வந்தச்
சாந்தமா நிதியாங் கல்விச் சாகர னுளத்தி னோர்ந்து
காந்து பன்மணியா மாரக் காவலற் குரைக்கு மாதோ. 33

கலைக்கடல் கடைந்து வாய்மை யறிவெனு மமிழ்து கண்ட
மலைக்கிணை யெனுமோர் சான்ற பெரியரை மணந்து வேதத்
தலைப்புறும் பொருளைத் தேறித் தணப்பரும் பிறவி நீத்துக்
கொலைக்கருங் கூர்வே லைய கூடுதி யமுத மென்றான். 34



இன்னணஞ் செவியி னேற்ற வெறுழ்வலித் தடந்தோள் வீரன்
பொன்னினற் கிழியொன் றங்கே பொளவென வுயரத் தூக்கி
யின்னதிங் கெவர்வா தத்தி னிற்றுவீழ்ந் திடுமு டக்க
மன்னெடுஞ் சமயத் தேவே மறையுறு பொருள தாமே. 35

ஆகையி னமைச்சர் காணீ ரவனியிற் பரவும் பல்ல
சாகையின் சமயத் தோர்கள் போந்தி வண்டமது கொள்கை
வாகைசேர் வகையின் வாதம் புரிகென வழங்கு கென்ன
வோகையி னுலகெங் கோட வுஞற்றின ரவரு மாங்கே. 36

கண்டது சமணர் சைவர் கபிலர் பவுத்த ரின்ன
மண்டல நிறையு நானு மதத்தின ரளப்பின் மாந்தர்
கொண்டல் கண்படுக்கு மிஞ்சிக் கூடலார் கோமான் வைகுந்
தண்டமிழ் வளருங் கோட்டி தன்னகம் பொதுளி னாரால். 37

நோக்குறு மளவே நெஞ்ச முட்கிட நுவலும் வாதம்
போர்க்கு வந்தவர் களார வாரத்திற் பொருவின் மாயன்
பாக்கியக் கெதுகொ லாமோ வெனப்பரிந் தவன்பொற் பாதம்
வாக்கினாற் பரவுஞ் சீரின் வைணவ ரலமந் தாரால். 38

வடபெருங் கோயி லானவ் வளவி லாழ்வாரின் வண்மைக்
கிடமுறுங் கனவின் கண்ணே யெழுந்து நீ மதுரைக் கேகித்
தடமறைப் பொருள்யா மென்னுந் தத்துவந் துலக்கு கென்னப்
படவர வமர்ந்தோ யென்றப் பண்ணவர் பகர்வர் மாதோ 39

கனித்திரக் கையனுயுன் கழலிணை கருதிக் கல்வி
தினைத்துணை பயில்கி லாது திரிதரு மடியே னெங்ஙன்
மனத்தினு னினைக்கொ ணாத மறையுறு பொருளை யாய்வேன்
சினத்தினி லிலங்கை செற்ற செஞ்சிலைப் புயத்தா யென்ன 40

பச்சையா லிலையின் பாயற் பரமனின் முறுவல் பூத்தே
யிச்சையா யெழுக நீயே யின்னக மிருந்தே யாமும்
மெச்சயா வருமெங் கெங்கு மெய்ப்பொருள் விளக்கு தும்பொன்
வைச்சயாப் புடனே வென்றி மணந்திவண் மீள்க வென்றான், 41

கண்விழித் தெழுந்தே யந்தக் கனவினின் பொருளை முன்னி
விண்வழுத் திருமவ் விண்டு சித்தருஞ் சனகி கேள்வ
னொண்விழுப் பதஞ்சே ராஞ்ச னேயனை யுறழ்ந்து ஞான
மெண்வழக் கிடுதற் கின்றி வீறிடக் கிளர்ந்து மன்னோ. 42

ஆரணம் பழுத்த நாவி னம்புவி யமரர் பல்லோர்
சீரினைப் புகழ்ந்து போற்றிச் சூழ்வரச் சிவிகை யூர்ந்து
நாரணன் புகழை யன்றி நவின்றிடா மதுரை மூதூர்
காரணிந் துலவுமாமை மதிற்புறச் சோலை கண்டார் 43

செல்வ நம்பி யற்குங் காளச் செழுமுகில் விண்டு சித்தன்
வெல்லும் புன்மதங் களென்று கனவின் கண்விளக் கவன்றான்
மல்லடு திணிதோண் மன்னற் குரைத்திது மகிழ மன்னன்
பல்லியந் துவைப்பப் போந்தப் பண்ணவர்க் கருகு புக்கான் 44

புக்கவர் பொருவில் பாதம் பொன்முடி படியக் கண்டம்
மிக்கவ ராசி கொண்டு மேம்படக் கொணர்ந்து பூவி
னெக்கலை வலநும் பம்பு மவைக்களத் தரியி னேந்துந்
தக்கதோ ரிருக்கை யீந்து தவியுறு சிறப்புஞ் செய்தான், 45

கறுத்திடு மனத்த ராகிக் கண்டகங் கிருந்தோ ரெல்லா
மிறுத்திடக் கிழியைத் தத்தஞ் சமய நூலெடுத் துக்கத்தி
வறுத்திடு பயரை வித்தி வண்முளை கிளம்ப நோக்கி
வெறுத்திடு முழவ ரென்ன வெம்பினர் திகைக்கும் வேலை 46

நிருபனும் செல்வ நம்பி நேயனும் விண்டு சித்தர்
மரைமல ரடியைப் போற்றி மறைப்பொருள் மலர்த்து கென்னப்
புரையறு மவனும் வேத பூரணன் புகழை நாடி
வரையறும் பெருநூல்க ளெல்லா மனத்துறத் தொகுத்தார் மன்னோ

பங்கய னருளின் வண்மீ கம்முனம் பயந்தான் போலுஞ்
சங்கமாம் பாஞ்ச சன்னி யத்தினிற் றுருவன் போலுஞ்
சிங்கமா யெழுந்த தேவன் றிருவருள் கொடுதொல் வேதந்
தங்குவான் பொருள்க ளெல்லாந் தமதகம் பொலியக் கண்டார். 48

கண்டவா முழுதுந் தேற்றுர் குலைந்தகங் கருதிச் சாம்பக்
கொண்டலி னிடித்துப் பெய்யுங் கொள்கை யாய்க் குமுறி யாடி
விண்டுவே யீறி லின்பம் விழைவுற வளிக்குந் தேவென்
றண்டரு மறிந்து தேற வரும்பொரு டெருட்டி வைத்தார். 49

வேறு.

இன்ன வண்ண மவரறு தியிட்டதாத லோடவை யிருந்தவ
ரென்ன வென்ன விதுவென்று விம்மித மதெய்தி நின்றிட விரும்பொனின்
மன்னு சுற்கமு மறுத்து மாதவர் மலர்ப்பதத் தருகு வீழ்முனம்
பொன்ன கர்த்திரு மலர்த் திரண்மழைய வைக்களத் தைதனி போர்த்ததே 50



சுருதலர் குழுமி காத்துறங் குகடை நிருப னின்புரோ கிதனுட
னருகிடன் னவரி னடிவணங் கியடி யேம்பிழைத் தவிது வொன்றுமோ
தெரிதலின் றமய லாழ்ந்துமாழ்கிய மூதேயம் யாவையும் பிழைத்தவே
பரிதல் கொண்டிவ ணெழுந்து பன்னு முனதரு ளினென்று பலபரவியே. 51

பட்ட யானைமிசை வைத்தறப் பரிய பம்பு வார்முர சதிர்ந்தெழ
வட்ட வெண்குடை நிழற்ற மிக்க பரிவார மெங்கணு நெருங்குறக்
கட்டி யம்பல ரெடுத்தி சைக்க விருகை குவித்தெவருங் காண்வர
நட்ட நீள்கொடி யடர்ந்த மாமறு கினகர் வலம்வர நடத்தினன் 52

அந்த வேலைக் கடல்வண் ணனம்புய மலங்குமா மயிலுடனவ
செந்தலைக் கலுழன் மீதிவர்ந் துதிசை முகன்முதல் விபுதர் செறியுற
நந்தகத் திலுட னெறிகனற் பொறியை நால்வகைப் படையுமின்செய
வந்தரத் தினிடை வந்துநின் றருளி யந்நல் விழவை நோக்கியே. 53

வரையெனும் பிரம ரதமிவர்ந் தொளிரு
மைந்தனைத் தசவதி னின்றவர்
வரையறும் பரம முதமுடன் விழைவினோக்
குமாறு மனமகிழ் கையில்
புரையறுந் திருவின் வில்லிபுத் தூரிறை
பூத்த ஞானமொடு வானமே
னிரையின் மின்னுகட வுளரிடைப் பொலியு
நீல மேனியனை நோக்கினர். 54

வேறு.

காலதே யங்களிற் கட்டுணு வொன்றிவண்
சாலிதின் வந்தெனின் னம்பகத் தெதிருறச்
சீலமோ டெத்தவஞ் செய்துளே னெனினுமுன்
னேலுமோ விப்பெரும் பேறியா னெய்தவோ. 55

என்றுகர் தடபனைக் காமதத் திபமிழிந்
தின்றுநா னுய்ந்தே னென்றிரு நிலம்படி யேவீழ்ந்
தொன்றுபே ருவகையிற் பலதரஞ் சிரமிசை
நன்றுசெங் கரமலர் நலமுறக் குவிகொளா 56

கண்களா லிழிதருங் களிபுனற் பெருவள
மெண்கொளா மயிர்சிலிர்ப் பேய்ந்தமெய் யெங்கணும்
மண்கொளா றென்னவே மறைசெயத் தனைமறந்
துண்களா லளிபடும் பாடுபட் டுருவேவ

காதலின் மக்களிற் காரணம் மின்றியே
தீதெனும் பரிவெனத் தேவதே வன்றனம்
கேதுகொல் நிலையுமோ வெனமனச் சங்கையி
னேதினர் மங்களா சாசனத் துலகுய 58

சாலியின் குலைபழு ததிதெலிற் சாயுமா
போலவப் புனிதரும் பொருவறுஞ் செல்வமங்
கேலவர் தெய்தவு மெம்பிரானரு டனிற்
சாலவுந் தாழ்ந்தவன் றனெனத் தாழ்ந்தரோ 59

தாமிவர்ந் தருளுதந் தாவளக் கண்டையை
மாமலர்க் கைகளிற் றுளமாய் மன்னியே
சேமமா மங்களஞ் சேருபல் லாண்டெனத்
தாமரைக் கண்ணனுக் காயவண் பாடினர். 60

ஆண்டுபூ மாதினவ் வாண்டவன் பொங்கியே
மாண்டதன் குணமலா மலரவங் கருளவே
சேண்டிகழ் வடபெருங் கோயிலான் திருவரு
ளீண்டிதிவ் வனுபவ மென்றவற் றுடியே 61

செவிமணிக் குழைகளைச் சேருநீள் விழிகளார்
குவிமுலைக் கோவியர் குரவைகொள் கண்ணனின்
கவிகளும் பிறர்களும் போற்றுமின் கதைகளைத்
திவியமா மமிழ்தினிற் றெளிவுறப் பாடியே 62

பாடுபல் லாண்டையே பான்மையிற் கொண்டுமுன்
றேடருந் திவ்விய தேசமெங் கணுமொளிர்
ஏடவிழ் துளபமா லேத்தரும் பகடினை
நாடியே பாடினர் நாகரம் போற்றவே 63

வேறு.

பெரியாழ்வார் திருமொழியென் றதற்கரும்பேர் பேசுவார்கள்
வரியாரும் பையரவப் பாயலிற்கண் வளர்பவனுந்
திரியாத ஞானியினைத் திருக்கடைக்கண் விழித்தருளித்
தெரியாதன் கெல்லவர்க்குஞ் சிக்கெனவிண் ணுடொளித்தான் 64
கந்தடுகிம் புரிகோட்டுக் கரிகிகரக் காவலனு
முயந்தனனுன் னருளினென வெம்பர்தொ ழுமாழ்வாரின்
கந்தமலர்ப் பதம் போற்றிக் கைகுவித்து நிற்கவவர்
பந்தமறு பலர்கேட்பப் பார்த்திபனுக் கீதுரைப்பார் 65


# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.
வருஷச் சந்தா: ரூ 4
தனிப் பிரதி: அணா 6


## குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமி தெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30வ தேதியே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாதவிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

2—9—34
மதராஸ்.

**Registered No. M. 916.**

## Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. **50** each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| ,, | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| ,, | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| ,, | T.D. Sreenivasachari, M.A., B.L. | ,, |
| ,, | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | ***Treasurer.*** |
| ,, | N.T. Shamanna, Solicitor. | ***Director*** |
| ,, | M. Sudarsana Iyengar, Merchant. | ,, |
| ,, | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | ,, |
| ,, | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | ,, |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

வருடம் 23] **NOVEMBER 1934** [ஸஞ்சிகை 5

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 9-JAN 1935 MADRAS



பவ ஹு ஐப்பசி மீ

**PUBLISHED BY**

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

**MADRAS.**

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 479
2. ஸ்ரீ கண்ணபிரான் பெருமை:— (கிழச்சேரி பரவஸ்து ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்) ... 490
3. ஸ்ரீ தேசிகன் வைபவம்:— [ஸ்ரீ. உ ப. ஸி. பி. ராஜகோபாலாசார்யர்]. ... 494
4. புருஷ ஸூக்தம்: - [ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்] 500
5. ஒரு தர்ம சாஸ்த்ர விஷய நிர்ணயம்:— ... 510
6. புஸ்தக விமர்சம்:— ... 512
5. ஸம்பாதகீயம்:— ... 514
7. ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 45
8. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 81
9. ஸ்ரீ வேதாந்த ஸங்க்ரஹம்:— முன்னுரை [வங்கீபுரம் ஸ்ரீ . உப. வாஸுதேவாசார்யர்] ... 1


---


### ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யானத்துடனும் கூடியது] ... ... ... ரூ. 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.


---

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.


ஸம்பு. 23.] பவ ஹுஸ ஐப்பசி மீ [ஸஞ்சிகை. 5


ஸ்ரீ:

## மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]


(தொடர்ச்சி ஸம் 23 ஸஞ் 4, 459 பக்கம்.)


இரண்டாம் அத்தியாயம்.
[முதல் பாதம்]

48. இதில் இரண்டுவாக்கியங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் ஒரே கர்மமா? அல்லது வெவ்வேறு? என்பதும், இப்படிச் செய்யும் முடிவுக்கு விலக்குகள் (அபவாதம்) உண்டாவென்பதும் விசாரிக்கப்படுகிறது.

49. 'ஸோமேந யஜேத' என்கிற வாக்கியத்தில் "யஜேத" என்கிற சொல்லில், யஜ் என்கிற தாது யாகத்தைச் சொல்லுகிறது. 'த' என்கிற ப்ரத்யயம் பாவனையை (அதாவது) உண்டுபண்ணுகை என்கிற வேலையைச் சொல்லுகிறது. எதை உண்டுபண்ணுகிறதென்றால், பதில்—அபூர்வம் என்று சொல்லப்பட்டதை. பாவனை என்பது செய்தவுடனே போய்விடுவதால் கொஞ்சகாலமிருந்து பலனைக்கொடுப்பது ஒன்றை ஒப்புக்கொள்ளவேணும். அது அபூர்வம். இதைப்பற்றி மேலே விசாரிக்கப்படும். ஆகையால் 'யஜேத' என்கிற சொல்லுக்குப் பொருள்—யாகத்தினால் பலனைக் கொடுக்

கும் அபூர்வத்தை உண்டுபண்ணு—என்று. தாதுவின் அர்த்தம், ஸாவநா, அபூர்வம்—என்கிற மூன்றுக்கும் பேதம் சொல்லவேண்டியது. சொல்லினால் தெரிவிக்கப்படாமையால் அவைகளின் பேதங்களை நேராக எடுத்துக்காட்ட முடியாது. பாவனையின் பேதங்களை யறிந்தால் வேறு யத்நமில்லாமல் அவைகளாலுண்டாகும் அபூர்வங்களின் பேதங்களை யறியலாம். பாவனைகளின் பேதங்களும் அவைகளுக்குக் காரணமான தாதுவின் அர்த்தங்களின் பேதங்களைக் கொண்டு சொல்லப்போகிறது. தாதுவின் அர்த்தங்களின் பேதங்களால் பாவனைக்கு பேதங்கள். அவைகளின் பேதங்களால் அபூர்வங்களின் பேதங்கள். ஆகையால் அபூர்வங்களின் பேதங்கள் தாத்வர்த்தங்களின் பேதங்களைப் பொறுத்திருக்கின்றன. இதைக் காட்டுவதற்காக முதலாவது அதிகாணம் (சா, 95)

50. (1) விதிவாக்கியத்தில் எத்தனை சொற்கள் இருக்கின்றனவோ, அவைகளெல்லாம் ⁑ கிரியைக்கும் காரகங்களுக்குமுள்ள ஸம்பந்தத்தை விட்டு ஒவ்வொன்றும் தனித்தனியே அபூர்வத்தைச் சொல்லுகிறதா? என்று ஸந்தேஹம்.

**பூர்வபக்ஷம்:**—அப்படியே சொல்லுகிறது. அபூர்வம் பலனைக்கொடுப்பதால் பலன். பலனுக்கு ஸாதநமாயிருப்பதால் அபூர்வத்தைப் பலன் என்று சொல்லுகிறது. எல்லா பதங்களுக்கும் பலனோடு ஸம்பந்தமிருக்கிறது.

(II) ஒரு கேள்வி—அபூர்வத்தைச் சொல்லாமல் போனாலும் கிரியையோடு ஸம்பந்தமிருப்பதால் சொற்களுக்குப் பிரயோஜநம் உண்டே—என்று. பதில்—உண்மையே. அபூர்வத்தோடு ஸம்பந்தம் முக்கியமானது. பலனாகையால் அது முக்கியம்.

**ஸித்தாந்தம்:**—அபூர்வமென்பது கொஞ்சங்கூட ப்ரமாணங்களால் அறியக்கூடியதல்லாமையால் ஒரே * கல்பனையால் வாக்கியத்தின் அர்த்தத்தை அறியக்கூடியதாயிருக்கும்போது அநேக கல்பனைகளைச் செய்வது, நியாயமன்று; ஆகையால் அபூர்வம் ஒன்று. அது ஒரே சொல்லால் தெரிவிக்கப்படுகிறது. மற்றச் சொற்கள் அந்தச்சொல்லுக்கு உதவியைச் செய்கின்றன (அதி-1 வர்ணகம். 1.)

---

⁑ "நான் அவனைக் கண்ணால் பார்த்தேன்" என்கிற வாக்யத்தில் "பார்த்தேன்" என்பது கிரியை (கிரியா). 'அவனை' என்பது கர்மகாரகம். "கண்ணால்" என்பது கரணம் என்கிற காரகம்.

* கல்பனையென்றால் பிரமாணமில்லாமல் சில ஸௌகரியத்துக்காக ஒன்றை ஒப்புக்கொள்ளுவது. ஒவ்வொரு சொல்லுக்கும் அபூர்வத்துடன் ஸம்பந்தம் சொல்லுவது ஒரு கல்பனையால் ஆகவேண்டியது. எல்லாச் சொற்களுக்கு அத்துடன் ஸம்பந்தம் சொல்ல அநேககல்பனைகள் வேண்டும்.

15847



(2) வாக்கியத்தில் ஒரே சொல்லால் அபூர்வம் தெரிவிக்கப்படுவதானால் அந்தச்சொல் எது? திரவியங்கள் முதலானவைகளைச் சொல்லும் சொற்களா? என்று ஸந்தேஹம்.

**பூர்வபக்ஷம்:**—'ஸோமேந யஜேத' என்கிறவிடத்தில் ஸோமம் என்பது ஒரு திரவியம். "ஸுவர்ணம் ஹிரண்யம் பார்யம்" (நல்லவர்ணமுள்ள தங்கத்தைத் தரிக்கவேண்டியது) என்கிற விடத்தில் ஸுவர்ணம் என்கிற சொல் ஒரு குணத்தைச் சொல்லுகிறது. இங்கே திரவியத்தையும் குணத்தையும் பலனுக்கு ஸாதநமாய் சொல்லியிருக்கிறது. அவைகள் ஏற்கனவே இருக்கின்றன. ஆகையால் உண்டாகப்போகிற பலனுக்கு ஸாதநமாகலாம். யாகமோ பலனைப்போலவே உண்டாக வேண்டியது. அது எப்படி ஸாதநமாகும்? ஆகையால் திரவியம் முதலானவைகள் பலனுக்கு ஸாதநமாயிருந்து, அபூர்வத்தைக் காட்டுகின்றன.

**ஸித்தாந்தம்:**—இதுபிசகு—ஒருவேலையில்லாமல் திரவியங்களால் பலனைக்கொடுக்கமுடியாது. அரிசியும் வெண்கலப்பானையும் விறகும் இருந்தபோதிலும் சமையல் என்னும் வேலையில்லாவிட்டால் அரிசி அன்னமாகுமா? அப்படியே யாகத்தாலேயே பலன் உண்டாகவேண்டும். யாகத்தைச் செய்வதான பாவனையைக் காட்டும் ப்ரத்யயம்தான் அபூர்வத்தைக் காட்டுகிறது. (அதி-1-வர்ணகம்-2)

51 (1) இங்கே ஒரு கேள்வி—தாதுவின் அர்த்தமான யாகம் முதலானவைகளே பாவனை. அவைகளைக் காட்டிலும் வேறான கிரியை காணப்படவில்லையே—என்று. பதில் எல்லா தாதுக்களின் அர்த்தத்துடன் செய்கை என்று ஒன்று சேர்ந்திருக்கிறது. அந்த செய்கைதான் பாவனை. தாதுவின் அர்த்தம் இருவகைப்படும். ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் 'பசதி' (சமைக்கிறான்) என்று சொன்னால், சமையலைச் செய்கிறான். (பாகம் கரோதி) என்றும் அர்த்தம் யாருக்கும் தெரியும். அதில் சமையல் (பாகம்) என்பது ஸித்தரூபம். செய்கிறான் (கரோதி) என்பது ஸாத்தியரூபம். ஸித்தரூபம் என்று காட்டுவதற்காக (பச்) என்கிற ப்ரத்யயம் விதிக்கப்படுகிறது. ஸாத்தியரூபத்தைக்காட்டுவதற்காக ஆக்யாதம் என்கிற ப்ரத்யயம் விதிக்கப்படுகிறது. ஸாத்திய ரூபமாவது அரிசி அன்னமாவதற்கு உதவும் வேலை. இதைத்தான் பாவனை என்று சொல்லுகிறது. (அதி-1-வர்ணகம்-2)

(II) இன்னமொரு கேள்வி—எல்லா தாதுக்களின் அர்த்தங்களுக்குப் பொதுவான ஆகாரம் பாவனை என்று ஏன் சொல்லக்கூடாது—என்று.

பதில்—பொது ஆகாரம் ஒன்றாயிருக்குமே. பாவனையானது ஒவ்வொரு தாதுவின் அர்த்தத்திலும் வேறாயிருக்கிறதே. அரிசி அன்னமாவதற்கு உதவியாயிருப்பது வேறு. அசைந்து ஒரு வஸ்து இன்னமொரு வஸ்துவுடன் சேருவதற்கும் அதைவிட்டுப்பிரிவதற்கும் உதவியானது வேறு. இந்த இரண்டு பாவனைகளும் வெவ்வேறாக இல்லாவிட்டால் அவைகளாலுண்டாகும் பலன்கள் வெவ்வேறாக இருக்கக்கூடுமோ? எல்லா பாவனைகளிலும் பாவனாத்வம் என்கிற பொதுவான ஆகாரமிருக்கலாம். அதினாலே அர்த்தங்களுக்குப் பொதுவான ஆகாரம் எப்படி பாவனையாயிருக்கலாம். (அதி-1-வர்ணகம் 2)

52. இப்படி 'யஜேத' என்கிற சொல்லில் ப்ரத்யயம் பாவனையைச் சொல்லுகிறது. அதற்குத் தாதுவின் அர்த்தமான யாகமானது கரணம் (பலன் உண்டுபண்ணுவதற்கு உதவியான கருவி). இரண்டும் ஒரே சொல்லில் சேர்ந்திருப்பதால் கிட்ட இருக்கிறது. த்ரவ்யம் முதலானவைகள் கரணமன்று. ஏனென்றால், வேறு பதங்களினால் சொல்லப்படுவதால், கிட்ட இருக்கவில்லை. தாதுவின் அர்த்தமான யாகம் முதலானது தனக்கு உதவியானவைகளைக்கொண்டு உண்டாகி பலனை உண்டாக்க வலிமையுள்ளதாக ஆகிறது. த்ரவ்யம் முதலானவைகள் யாகம் முதலானவைகளையுண்டு பண்ணுகின்றன. இந்த உதவியானது த்ருஷ்டமானது (எல்லாருக்கும் தெரியக்கூடியது). த்ரவ்யங்களாலே யாக முண்டாகிறது. யாகத்தினாலே ஸ்வர்க்கம் முதலான பலன் உண்டாகிறது. இப்படி உண்டாவதற்கு உதவியானது பாவனை. அதைக் க்ருதி என்றும் சொல்லுகிறது. இது ஒரு தாதுவின் அர்த்தத்தினால் சொல்லப்படவில்லை. ஏனென்றால், எல்லா தாதுக்களோடும் சேர்ந்திருக்கிறது. (அதி-1 வர்ணகம்-2)

53. பாவனை-உண்டுபண்ணுகை. எதை உண்டுபண்ணுகிறது? எப்படி உண்டுபண்ணுகிறதென்றால், ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணுகிறது. யாகத்தாலே உண்டுபண்ணுகிறது. அந்வாதாநம் ப்ரயாஜங்கள் அவஹநநம் முதலானவைகளால் உதவியைப்பெற்று உண்டுபண்ணுகிறது என்று பதில். இவைகளில் ஸ்வர்க்கத்தை ஸாத்யம் (உண்டுபண்ணப்படுவது) என்றும், யாகத்தைக் கரணம் என்றும், ஆதாநம் முதலானவைகளை இதிகர்த்தவ்யதை என்றும் சொல்லுகிறது. இப்படி பாவனைக்கு வேண்டிய எல்லாவற்றையும் காண்பிப்பதால், ஆக்யாதத்தினால் சொல்லப்பட்ட பாவனைக்கு ஒரு ப்ரகரணத்திலிருக்கும் எல்லா சொற்களும் அதையே விஸ்தாரப்படுத்துகின்றன. இப்படி ஸாத்ய(கரண)இதிகர்த்தவ்யதைகள் என்கிற மூன்றினுடன் சேர்ந்த பாவனையை ஆர்த்தீபாவனை என்று சொல்லுகிறது. (அதி-1-வர்ணகம் 2.)



2. இவ்விதமான ஆர்த்தீபாவனையானது சப்த பாவனையாலுண்டாகிறது. அதற்கு காரணம் விதியைச்சொல்லுகிற லிங் முதலானவைகள். அர்த்தவாதத்தினால் ஏற்படும் ஸ்தோத்ரம் இதிகர்த்தவ்யதை, ஆர்த்தீ பாவனையால் ஸ்வர்க்கம் உண்டுபண்ணப்படுகிறது என்பது லிங் என்றும் தாதுவின் சேர்க்கையால் கட்டப்படுகிறது. தாதுவின் அர்த்தம் கரணமென்பது த்ருதீயாப்ரத்யயாலே. அப்படியே வாக்யமிருக்கிறது —தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்ககாமோ யஜேத (ஸ்வர்க்கம் வேண்டியவன் தர்சம் என்றும் பூர்ணமாஸம் என்றும் சொல்லப்பட்ட யாகங்களைச் செய்யவேண்டியது) (அதி-1 வர்ணகம்-2)

54. 49 வது பாராவில் அபூர்வமென்பதொன்றை ஒப்புக்கொள்ள வேணுமென்று சொல்லப்பட்டது. அது வேண்டுமோ வேண்டாமோ என்று இப்போது விசாரிக்கவேண்டும்.

பூர்வபக்ஷம்:—அபூர்வமென்று ஒன்றை ஒப்புக்கொள்ளப் பிரமாணமில்லை. "யஜேத" என்கிற சொல்லாலே கரணமான யாகமும் பாவனையும் தானே சொல்லப்படுகின்றன. உடனே அழிந்துபோகும் யாகமானது வேறுபிறப்பில் வரப்போகிற ஸ்வர்க்கத்தை எப்படிக் கொடுக்கும் என்றால் சாஸ்திரம் பிரமாணமானபடியால் அது கூடும்.

ஸித்தாந்தம்:—"தர்சபூர்ணமாஸாப்யாம்" என்று மூன்றாம் விபக்தி (வேற்றுமை) யான ச்ருதியாலே யாகமானது ஸ்வர்க்கத்திற்கு ஸாதநம் என்று சொல்லப்படுகிறது. அது எப்படிக்கூடுமோ அப்படிக் கல்பிக்கவேண்டியது. பலன் வருகிறவரையில், யாகமிருக்கும் என்று கல்பிக்கலாமா? அல்லது யாகம் போய்விட்டபோதிலும் ஸ்வர்க்கத்தை உண்டு பண்ணும் என்று கல்பிக்கலாமா? முதலாவது கல்பனை கூடாது - யாகமானது ஒரு க்ஷணம்தான் இருக்கும் என்று ப்ரத்யக்ஷத்தாலே ஏற்படுகிறது. இரண்டாவது கல்பனையும் கூடாது—இறந்துபோன ஆணும் பெண்ணும் ஒரு குழந்தையையுண்டுபண்ணுவது போலிருக்கும். ஆகையால் பூர்வபக்ஷத்தில் சொன்னதைக்காட்டிலும் அபூர்வம் என்று ஒன்றை ஒப்புக்கொள்வது நல்லது. அதில் ஒரு பிரமாணத்துக்கும் விரோதமில்லை.

(2) இங்கே ஒருகேள்வி—அபூர்வத்தைக் கல்பியும்; அதுஸ்வர்க்கத்துக்கு ஸாதநமானால் யாகத்தை ஸ்வர்க்க ஸாதநமென்னும் ச்ருதியோடு விரோதம் வருமே. பதில்—யாகத்தினுடைய வியாபாரம் அபூர்வம் என்று ஒப்புக்கொள்ளுகிறோம். உதாரணம்—மரத்தை வெட்டுவதற்கு கோடாலி ஸாதநம், அதைத்தூக்கி மரத்தின்மேல் போடாமல்போனால் அது ஸாதந

மாகுமா ? கோடாலி போல் யாகம். அதின் வியாபாரம்போல் அபூர்வம், ஆகையால் கோடாலியைத் தூக்கிப்போடுவதினால் எப்படி அதுக்கு ஸாதநமாயிருப்பது போகவில்லையோ, அப்படியே அபூர்வம் ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணுவதால் யாகத்துக்கு ஸ்வர்க்கத்துக்கு ஸாதநமாயிருப்பது போகவில்லை.

(3) மறுபடியும் கேள்வி—கோடாலி போனால் அதின் வியாபாரமும் போய்விடுமே. யாகம்போனால் அதின் வியாபாரமான அபூர்வம் எப்படி இருக்கும் ? என்று. பதில்—யாகமானது அபூர்வம் என்னும் சக்தியை யுண்டுபண்ணுகிறது. யாகத்துக்கும் பலனுக்கும் நடுவில் சக்திவந்து உட்கார்ந்த போதிலும், யாகம் பலனுக்கு ஸாதநமாயிருக்கக் குறையில்லை. நெருப்புக்கும் ஒரு வஸ்துவுக்கும் நடுவில் சூடு இருந்தாலும் நெருப்பு அதைச் சுடப்பண்ணக்குறையில்லை. தணலில் ஜலத்தை வைத்து சுடப்பண்ணின பிறகு தணல் அணைந்து போனாலும் ஜலத்தில் சூடு இருக்கிறது. அப்படியே யாகத்தினால் அபூர்வம் உண்டானபிறகு யாகம் போய்விட்டபோதிலும் அபூர்வமிருக்கக்கூடும். அது யாகம் செய்தவனிட மிருக்கிறது. (அதி - 2)

55. எதினால் ஸ்வர்க்கத்தின் அநுபவம் ஆரம்பிக்கப்படுகிறதோ அது பலாபூர்வம். பிரதாநயாகத்தினால் உண்டாவது. உத்பத்தி அபூர்வம். அதின் அங்கங்கள் இருவகைப்படும். அவஹநநம் (நெல்லைக் குத்துவது) முதலானவைகள் திரவ்யங்களுக்கும் தேவதைகளுக்கும் ஸம்ஸ்காரங்களைச் செய்து, அந்த வழியாய் யாகத்துக்கு ஒரு சக்தியை (அதிசயத்தை) உண்டுபண்ணி, அதினுடைய உத்பத்தியபூர்வத்தை உண்டு பண்ணுகின்றன. இவைகளை ஸந்நிபத்ய உபகாரகமான அங்கம் என்று சொல்லுகிறது. பிரயாஜம் முதலானவைகள் உத்பத்தி அபூர்வத்திலிருந்து பலாபூர்வம் உண்டாவதற்கு உதவுகின்றன. இவைகளை ஆராதுபகாரகமான அங்கம் என்று சொல்லுகிறது. இப்படி வித்தியாஸமிருந்தபோதிலும் எல்லா அங்கங்களும் அபூர்வத்தை உண்டு பண்ணுகின்றன. தர்ச இஷ்டியில் பிரதாந யாகங்கள் மூன்றுயிருப்பதால் அவைகளின் மூன்று உத்பத்தி அபூர்வங்கள் சேர்ந்து, ஸமுதாயாபூர்வத்தை உண்டுபண்ணுகின்றன. பூர்ணமாஸ இஷ்டியிலும் இப்படியே ஒரு ஸமுதாயாபூர்வ முண்டாகிறது. இரண்டு ஸமுதாயாபூர்வங்களும் சேர்ந்து பலாபூர்வத்தை உண்டுபண்ணுகின்றன. (அதி-2)

56. விதிவாக்கியத்தில் ஆக்யாதப்ரத்யயத்தால் அபூர்வம் காட்டப்படுகிறதென்று சொல்லப்பட்டது (50 பாரா). பிரதாந கர்மத்தை விதிக்கும் போது தான் இது உண்டு. குணகர்மத்தை விதிக்கும் போது இல்லை. குணகர்மம் என்றால் ஒரு த்ரவ்யத்தை உண்டுபண்ணுவதற்கோ, அல்லது அதற்கு ஒரு ஸம்ஸ்காரத்தைச் செய்வதற்கோ வேண்டிய வேலை.



(1) வ்ரீஹீநவஹந்தி (நெல்லைக் குத்தவேண்டியது) என்கிற இடத்தில் த்ருஷ்டமான பிரயோஜநமிருக்கிறது. அதை விட்டுவிட்டு அபூர்வத்தைக் கல்பிப்பது நியாயமன்று. யஜதி (யாகத்தைச் செய்யவேண்டியது) என்கிற விடத்தில் கிரியை முக்கியமானது. அதற்காக த்ரவ்யங்களிருக்கின்றன. த்ரவ்யங்களுக்காகக் கிரியைகளிருக்கவில்லை. ஆகையால் கிரியையால் அபூர்வமுண்டாகிறது என்று சொல்வது நியாயம். இங்கே "வ்ரீஹீந்" என்கிற த்விதீயா விபக்தி (இரண்டாம் வேற்றுமை) கர்மத்தைச் சொல்லுகிறது. கர்மம் என்பது ஒருவன் அடையவேணுமென்று ஆசைப்படத்தகுந்தது. ஆகையால் அது முக்கியமானது. த்ரவ்யத்துக்காக அவஹநநம் என்னும் வேலை ஏற்பட்டிருப்பதால் அது திரவியத்துக்கு ஒருயோக்யதையை(அதிசயத்தை)ச்செய்கிறது. அபூர்வத்தையுண்டு பண்ணுகிறதில்லை.

நெல்லை அரிசியாய் ஒருவன் தானே செய்வானே; விதி எதற்கு? என்றால், பதில்—நகத்தினால் உமியை உரிக்கக் கூடாது. குத்தியே அரிசியாகப்பண்ணவேணும் என்று ஒரு நியமம் (கட்டாயம்)ஏற்படுகிறது. அதினால் ஒரு அபூர்வம் உண்டாகிறது. (அதி- 3)

அவஹநநத்தினால் அபூர்வமுண்டாகிறது என்று சொல்லுகிறவனும் நியமவிதியால் ஒரு அபூர்வம் உண்டாகிறதென்று சொல்லவேண்டும். அப்போது இரண்டு அபூர்வங்களைக் கல்பிக்க வேண்டும். அதைக் காட்டிலும் த்ருஷ்ட பிரயோஜநத்தை ஒப்புக்கொண்டு நியமத்துக்கு மாத்திரம் அபூர்வத்தைக் கல்பிப்பது நல்லது. (சாஸ்த்ர தீபிகை 207)

II "ஸ்ருச: ஸம்மார்ஷ்டி" (ஸ்ருக்குக்களைத் துடை)என்கிற விடத்தில் த்ருஷ்டமான பிரயோஜந மில்லையே. அங்கே கர்மமானது குணகர்மமா, அல்லது பிரதாந கர்மமா ? என்றால், பதில்—கீழ்ச் சொன்னபடி. 'ஸ்ருச:' என்கிற சொல்லில் விபக்தியாலே ஸ்ருக் என்பது மிகவும் அடையத்தகுந்தது. யாகத்துக்கு ஸாதநமாயிருப்பதால், அதைமிகவும் அடையத்தகுந்தது என்று சொல்லலாம். ஆகையாலே ஸ்ருக்கு முக்கியமானது. அதற்காக ஸம்மார்ஜநம் என்றும் வேலை ஏற்பட்டது. ஆகையால் அது குணகர்மம். ஸ்ருக்குக்குச் செய்யும் ஸம்ஸ்காரம் தெரியவில்லையே யென்றால் அத்ருஷ்டம் என்கிற ஸம்ஸ்காரமிருப்பதாக கல்பித்துவிடலாம். (அதி—4-சாஸ்திர-109-110)

III ஜ்யோதிஷ்டோமத்தில் ஸோமரஸத்தைப் பிடித்து ஹோமம் செய்வதற்கு முன்னால் உத்காதா ஸாமங்களைக் காநம் பண்ணுகிறான். பிறகு ஹோதா சில ருக்வேத மந்திரங்களைச் சொல்லுகிறான்: அவைகளை ஸ்தோ

த்ரம் என்றும் சஸ்திரம் என்றும் சொல்லுகிறது. அவைகள் குணகர்மமா அல்லது பிரதாந கர்மமா என்று ஸந்தேஹம்

பூர்வபக்ஷம்:—அவைகள் குணகர்மங்கள். ஸ்தோத்ரங்களையும் சஸ்திரங்களையும் சொல்லும்போது, தேவதைகளின் நினைவு வரும். அது த்ருஷ்ட பிரயோஜநம். ஆகையால் இவைகள் குணகர்மங்கள்.

ஸித்தாந்தம்:—ஸ்தோத்ரம் சஸ்த்ரம் என்கிற சொற்களில் தாதுக்களுக்குப் பொருள் ஸ்தோத்ரம் செய்யவேண்டிய தேவதைகளிடத்தில் உள்ள குணங்களைச் சொல்லுவது என்று. இது அவைகளுக்கு முக்கியமான பொருள். மந்திர வாக்யங்கள் குணங்களைச் சொல்லுவதாலுல் தாதுக்களுக்கு முக்கியமான அர்த்தம் கிடைப்பதால், விதிவாக்யத்திலிருக்கும் ஸ்தௌதி, சம்ஸதி என்கிற ச்ருதிக்கு முக்யமான பொருள் ஏற்படும். மந்திர வாக்யங்கள் குணங்களையடையாளமாகச் சொல்லி, அந்தவழியால் நினைத்துக்கொள்ளுவதற்காக தேவதைகளின் ஸ்வரூபத்தைக் காட்டினால் தாதுக்களுக்கு முக்கியமானபொருள் போய்விடும். உலகத்திலும் "தேவதத்தன் நாலுவேதங்களை அறிந்தவன்" என்று சொன்னால் அவனை ஸ்தோத்ரம் பண்ணினதாக ஆகிறது. ஏனென்றால், அவனிடத்திலிருக்கும் குணத்தைச்சொல்லுகிறது. அவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுவதானால், 'நாலுவேதந்தெரிந்த தேவதத்தனை அழைத்துக் கொண்டுவா' என்பதுபோல வாக்யமிருக்கவேணும். அப்போது அவனை ஸ்தோத்ரம் பண்ணுகிறதில்லை. அப்படியே தேவதையின் நினைவையுண்டுபண்ணுவதானால், "ஆஜ்யைஸ் ஸ்துவதே" என்கிற விதிவாக்யத்துக்குப்பொருள் ஆஜ்யைர் தேவம் ப்ரகாசயேத (ஆஜ்யம் என்கிற ஸ்தோத்ரங்களாலே தேவதையை வெளியிடு) என்று ஆகும். தாதுக்களுக்கு முக்கியமான பொருள் போய்விடும். ஆகையால் ஸ்தௌதி சம்ஸதி என்னும் ச்ருதிகளுக்கு பாதம் வாராமைக்காக ஸ்தோத்ரத்தையும் சஸ்த்ரத்தையும் பிரதாந கர்மம் என்று ஒப்புகொள்ளவேணும் (அதி-5)

57 இப்படி விதிவாக்யத்திலுள்ள ஆக்யாதமான பதமானது பிரதாந கர்மத்தையும் குணகர்மத்தையும் விதிக்கிறது. அப்படியே மந்திரத்திலுள்ள ஆக்யாதபதமும் விதிக்கிறதோ என்றால், பதில்—இல்லை. அதில் "யஜ" முதலான சொற்களிருப்பதாலே, விதிக்கும் சக்தி போய்விடுகிறது. எந்த வாக்கியத்தில் 'யத்' என்கிற சொல் இருக்கிறதோ, அந்த வாக்யம் அநுவாதமாகிறது. இதுக்கு விதிக்கிற சக்தியில்லை. (அதி-6)

முதல்பாதம் முற்றிற்று



இரண்டாவது பாதம்.

58. பாவனைகளின் பேதத்தையே கர்மபேதம் என்று சொல்லுகிறது. கர்மங்கள் வெவ்வேறு என்பதை சப்தாந்தரம், அப்யாஸம், ஸங்க்யை, ஸம்ஜ்ஞை, குணம், பிரகரணம் இவைகள் காட்டுகின்றன. இவைகளில் ஸங்க்யை என்பது ஒரே வாக்யத்தினால் விதிக்கப்படும்கர்மங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று பேதத்தைச் சொல்லுகிறது. மற்றவைகள் ஒரு வாக்யத்தால் விதிக்கப்பட்ட கர்மத்தைக் காட்டிலும் வேறு வாக்யத்தால் விதிக்கப்பட்ட கர்மம் வேறு என்று காட்டுகின்றன (சாஸ் 95)

59. சப்தாந்தரம்—ஒரே பிரகரணத்தில் ஸோமேந யஜேத (ஸோமத்தினால் யாகம் செய்) ஹிரண்யமாத்ரேயாய ததாதி (தங்கத்தை ஆத்ரேயனுக்குக் கொடு) என்று இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. யாகம் செய்வதும் தங்கத்தைக் கொடுப்பதும் ஒரே கர்மமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—பாவனையைச் சொல்லும் ஆக்யாதம் ஒன்றானதால் பாவனை ஒன்றுதான். தாது வேறாக இருக்கிறதேயென்றால்—பதில், இருந்தாலென்ன? அவைகள் பாவனையைச் சொல்லவில்லையே, ஆகையால்பாவனையை ஒன்று என்றும் வெவ்வேறு என்றும் சொலத்தகுந்தவைகளல்ல.

ஸித்தாந்தம்:—ஆக்யாதம் தான் பாவனையைச் சொல்லுகிறது. ஆனால் அந்த ஆக்யாதம் ஒவ்வொரு தாதுவிலும் வெறுஅநேக தாதுக்களின்மேலே ஒரே ஆக்யாதம் என்கிற ப்ரத்யயம் கேட்கப்படுகிறதில்லை. வியாகரணத்தாலும் எல்லாதாதுக்களின் மேலே ஒரே ஆக்யாதம் விதிக்கப்படுகிறதுமில்லை. ஆகையால் ஆக்யாதங்கள் அநேகங்கள். ஒவ்வொரு தாதுவுடன் சேர்ந்தே உண்டான ஆக்யாதத்தினால் சொல்லப்பட்ட பாவனை வேறு. ஆகையால் இங்கே யாகம் வேறு கர்மம்; தானம் வேறு கர்மம்.

60. அப்யாஸம்:—தர்சபூர்ணமாஸப் பிரகரணத்தில் ஐந்து வாக்யங்கள் இருக்கின்றன. ஸமிதோயஜதி, தநூநபாதம் யஜதி, இடோயஜதி, பர்ஹிர்யஜதி, ஸ்வாஹாகாரம் யஜதி என்று. இங்கே ஒரு கர்மமா? அல்லது ஐந்து கர்மங்களா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஒரே கர்மம். இங்கே "யஜதி" என்கிற சொல் ஐந்து தடவை சொல்லப்படுகிறது. தாதுபேதம் கீழ் அதிகரணத்தில் போலில்லை. தாதுபேதமிருந்தாலன்றோ பாவனைகள் வேறு என்று சொல்லவேணும். தாது ஒன்றுதான். ஆக்யாதமும் ஒன்றுதான். பாவனையும் ஒன்றுதான்.

ஸித்தாந்தம்:—யஜதி என்கிற சொல்லை ஒரு தடவை சொல்லி திருப்பிச் சொல்லுவதால் கர்மங்கள் வேறு. கர்மம் ஒன்றாயிருந்தால் அதை மறுபடியும் விதிப்பது வீணாகுமே.

(2) பூர்வபக்ஷம் சொன்னவன் சொல்லுகிறான்— முதல் வாக்கியத்தினால் ஒரு யாகம் விதிக்கப்படுகிறது. மற்ற வாக்கியங்களில் யஜதி என்கிற சொல்லாலே விதித்த யாகத்தை அநுவாதம் பண்ணி தநூநபாதம் முதலான குணங்கள் விதிக்கப்படுகின்றன. அவைகள் தேவதைகளோ, அல்லது திரவியங்களோ, எப்படி வேணுமானாலும் அப்படி வைத்துக்கொள்ளுகிறது. நாலு குணங்களை விதிப்பானென்றால், அவைகளில் இஷ்டமானதை வைத்துக் கொள்ளலாம் என்று கருத்து. இப்படி ஒரு பிரயோஜநங்களுக்காக அநுவாதம் பண்ணுவதால் 'யஜதி' என்கிற சொல்லை திருப்பிச் சொல்லுவது வீண் அன்று—என்று பதில். இங்கே தேவதையை விதிக்கவில்லை. தேவதையை இரண்டு வழியாய் விதிக்க வேண்டியது. (1) நாலாவது விபக்தியாலே (வேற்றுமையால்). உதாரணம்—அக்நயே ஜுஷ்டம் நிர்வபாமி' இங்கே அக்நி என்கிற சொல்லில் நான்காவது விபக்தி தேவதையைக் காட்டுகிறது. (2) தத்திதம் என்கிற ப்ரத்யயத்தாலே. உதாரணம்—'ஆக்நேயோऽஷ்டாகபாலஃ' இங்கே 'ஆக்நேயஃ' என்கிற சொல்லில் 'ஏய' என்கிற சொல் தேவதையைச் சொல்லுகிறது. இந்த இரண்டு வழியும் இங்கே இல்லாதபடியால் தேவதை என்கிற குணம் விதிக்கப்படவில்லை. த்ரவ்யமும் விதிக்கப்படவில்லை. அதை மூன்றாவது விபக்தியாலே விதிக்க வேண்டியது. அது இங்கேயில்லை. ஆகையால் 'அக்நிஹோத்ரம் ஜுஹோதி' என்கிற இடத்தில் போல் (பாரா 38) தநூநபாதம் முதலான சொற்கள் இரண்டாவது விபக்தியுடன் சேர்ந்திருப்பதால் யாகங்களின் பெயர்.

(3) முதல் வாக்கியத்தின் மேலே சொல்லப்பட்ட நான்கு வாக்யங்களிலும் 'யஜதி' சொற்கள் அநுவாதம் என்று சொன்னது பிசகு. முதல் வாக்கியத்தில் 'யஜதி' என்கிற சொல் ச்ருதியாயிருந்து எப்படி விதியைச் சொல்லுகிறதோ, அப்படியே மற்ற நாலு வாக்கியங்களிலும் 'யஜதி' என்கிற ச்ருதி விதியைச் சொல்லுகிறது. முதல் வாக்கியத்தின் கிட்ட மற்ற வாக்கியங்கள் இருப்பதால் அநுவாதம் என்று சொல்லுகிறீர். கிட்ட இருப்பது ஸந்நிதி என்கிற பிரமாணம். அது ச்ருதி என்னும் பிரமாணத்தைக் காட்டிலும் துர்பலம். இது மூன்றாவது அத்தியாயத்தில் மூன்றாவது பாதத்தில் சொல்லப்படும். ஆகையால் நாலு வாக்கியங்களும் விதியையே சொல்லுகின்றன. அப்போது முதலில் விதிக்கப்பட்ட யாகத்தை மறுபடியும் விதிப்பது கூடாதாகையால் தநூநபாதம் முதலான பெயர்களையுடைய வேறு யாகங்கள் விதிக்கப்படுகின்றன.



(4) ஒரு கேள்வி—மேலே ஸம்ஜ்ஞையால் கர்மபேதம் சொல்லப் போகிறதே (பாரா-63) அதின்படி இந்த கர்மங்கள் வேறு என்று சொல்லலாமே, அப்யாஸத்தில் என்று சொல்லுவானேன்—என்று. பதில்—அந்த இடத்தில் "அதைஷ ஜ்யோதிஃ" என்கிற வாக்யம் விசாரிக்கப்படுகிறது. அதில் யாகம் என்று தெரிவதற்கு முன்னாலேயே ஸம்ஜ்ஞையென்று தெரிவதால் கர்மம் வேறு என்று ஏற்படுகிறது. இங்கே 'யஜதி' என்கிற சொற்களாலே யாகங்கள் விதிக்கப்படுகின்றன என்று தெரிந்து, ஒரு சொல்லை மறுபடியும் சொல்லுவதாலே யாகங்கள் வேறு என்று ஏற்பட்டு, அவைகளுக்கு முதல் யாகத்தின் பெயர் கூடாதாகையால் தநூநபாதம் முதலானவைகள் பெயர்கள் என்று அறிகிறோம். ஆகையால் அப்யாஸத்தால் தான் கர்மபேதம். (அதி-2)

விதியானது அதில்லாவிட்டால் எந்த தர்மம் உண்டாகாதோ அதைச் செய்யும்படி செய்கிறது. இது விதியின் ஸ்வபாவம். பலிமையுள்ள காரணமிருந்தால் இந்த ஸ்வபாவம் மாறும். அவ்விதமான காரணமிங்கேயில்லை. (சா-124)

61. ஸங்கியை. "த்ரிஸ்ஸப்தஹோத்ராணி ஜுஹோதி" (மூன்று ஹோமங்களைச் செய்யவேண்டும்) என்கிற இடத்தில் ஒரு கர்மமா? அல்லது மூன்று கர்மங்களா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஒரே கர்மம் ...ம் அதிகரணத்தில்போல 'ஜுஹோதி' என்கிற சொல் பல தடவை சொல்லப்படவில்லை. ஒரே தடவை சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் கர்மம் ஒன்றுதான். மூன்று என்று சொல்லியிருக்கிறதேயென்றால், அந்த கர்மத்தை மூன்று தடவை செய்யவேண்டுமென்று கருத்து. ப்ரயாஜங்கள் ஐந்தாக இருக்க, அக்னிஷ்டோமத்தில் பதினொன்று ப்ரயாஜங்களை, சில ப்ரயாஜங்களைப்பல தடவை செய்வதால் செய்கிறார்கள். இதை மேலே ஐந்தாவது அத்தியாயத்தில் மூன்றாம் பாதத்தில் சொல்லப்போகிறது. அப்படியே இங்கேயும்.

ஸித்தாந்தம்—ஜுஹோதி என்கிற சொல் வேறு பதங்களின் உதவியல்லாமல் கர்மம் ஒன்று என்று சொல்லமுடியாது, வாக்கியத்தின் அம்சமான (பாகமான) ஒரு பதமானது, தனியாய் ஒரு அறிவையும் உண்டாகாது. வேறு.பதங்களின் உதவியைத் தேடும்போது மூன்று என்ற ஸங்க்யையுடன் சேர்ந்து கர்மங்களைச் அநேகம் என்று காட்டும். நீர் சொன்ன உதாரணம் ஸரியன்று, ஏனென்றால், ப்ரயாஜங்களைத் விதித்த பிறகு அக்நிஷ்டோமத்தில் பதினொன்று விதித்தால், அவைகளைத் திரும்பிச் செய்யாமல் பதினொன்று என்றும் ஸங்கியை கிடைக்காத்தாலே் ஆவிருத்தி பண்ணவேண்டியதாயிருந்தது. இங்கே விசாரிப்பதற்கு முன்னாலே கர்மம் ஒன்று என்று ஏற்படவில்லை (அதி-7)

ஸ்ரீ:

# ஸ்ரீ கண்ணபிரான் பெருமை.

(கீழச்சேரி பாவஸ்து ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்)

ஸ்ரிய: பதியான நாராயணன் ஸாதுக்களைக் காப்பதற்குச் செய்தருளிய அவதாரங்கள் பல. அவைகளில் சிறந்தவை ஸ்ரீராமக்ருஷ்ணாவதாரங்கள். ஏனெனில், அவ்வச்சமயங்களில் நேர்ந்த துன்பம் நீங்கி இன்பம் தந்து உடனே மறைந்த மீன் முதலிய அவதாரங்கள் போலன்றிக்கே பின்னுள்ளாரும் பிழைக்கும்படி ஸேது கிரைகளைக்கட்டியும், அவன் பெருமையை ஒருவர் சொல்லினும் கேட்கச் செவிடான இவ்வுலகில் பலர் ஏசினும் பல வாண்டுகள் ஆண்டவன் ஸாதுக்களை ஆண்டருளியதே காரணமாகும். இவ்விரண்டு அவதாரங்களுக்குள் ஸ்ரீராமாவதாரத்தில் நிகழ்ந்த ஸம்பவங்களை ஹேதுவாகக் கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் பல நிகழ்ச்சிகளை நடத்தினான் என்றால் கண்ணன் பெருமையை எவ்வண்ணம் பேசுவது!

அவை யென்ன வெனில்: "ஸீதையைப் பிரிந்த ராமன் எப்பொழுதும் உறங்குவதில்லை" என்று தபித்த சமயத்தில் "அங்கு கண்டேன் ஸீதையை" என்ற தூதன் இன்சொல்லைக் கேட்டுத் திருவுள்ளமுகந்தவன் பின்னவதாரத்தில் பாண்டவர்களுக்கு தூதனானனென்று பெரியார் சொல்லுவார்.

ஆவியிலுமேவிய தேவியைத் திருடிய பாவியான ராவணன் மேருவிற் பெரிய தேரில் ஏறிப் போரில் வந்து நேரில் நின்ற சமயம் தேவேந்திரன் தேரைக் கொண்டு வந்தோட்டிய தேரோட்டியான மாதலியான் செய்கையைக்காதலித்தே பின்னும் பெருமான் பலர் பார்த்திருக்கப்பார்த்திருக்கப் பார்த்தனுக்கும் தேரோட்டியதெனலாம்.

முடி சூடுவதற்கிட்ட நாளில் கானகம் புகப் புறப்படும் சமயம் பெரும் பொருள்களைத் தகுந்தவர்களுக்கு அள்ளியிறைத்த வள்ளல் கடைசியில் வறுமையினால் நொந்து வந்த ஓரந்தணனைச் சிறிது பரிஹாஸம் செய்து பசு நிரை கொடுத்த குறை தீரப் பின்னவதாரத்தில் தம்மைத் தேடி வந்த குசேலன் என்னும் வேதியனை ஆதியான இவர் தன்னில் பாதியான ருக்மிணியோடு தாமிருக்கும் தங்கமயமான சிங்காதனத்தில் வைத்து அரிய பெரிய பணிந்தனுப்பி அவன் கனவிலும் நினையாத இணையற்ற செல்வமீந்து துணையாயிருந்ததும் ஒன்றாகும்.



முதலில் அயோத்தியில் குளத்திலிருந்து ஓர் கூனி மட் (மண்) குடத்தில் நீர் கொண்டு வருவதைக்கண்ட கோதண்டதரன் தம்பியோடு அம்பினால் அக்குடத்தைத் துளைத்தும் அம்பு வெளிப்படுவதற்கு முன் மண்ணுண்டையால் அடைத்தும் செய்தருளிய பால லீலையில் அவள் அஞ்சியதைக் கண்ட காருணிகன் பின்னவதாரத்தில் ஓர் கூனியின் கூனை நிமிர்த்துக் கட்டழகியாக்கி உகந்தருளியது முண்டு.

"இருபத்தைந்து வயதுள்ளவன் என் நாதன்" நாட்டிலிருந்து காட்டிற்கேகும் சமயத்தில் பிராட்டி பேசியபடி செல்வம் நிறைந்த அயோத்திமா நகரில் காலம்போக்கியது போலன்றி, 'ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவில், ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,' என்று கோதை கூறியபடி பிறந்தவுடன் பிறவிடம் சென்று புற்பூண்டு முதலியனவும் அஸுரர் என்று ஆசங்கிக்கும்படியான இடத்தில் ஒளிந்து வளர்ந்து கஞ்சனேவிய வஞ்சப் பேய் முதலியவரைக் கஞ்ச லோசனன் அஞ்ச வடித்ததும் முக்கியமாகும்.

முன்னவதாரத்தில் வாவிகள் நியமங்களுடன் வெகு தூரம் நடந்து பாம்பன் கால்வா யென்னும் பாம்பின் வாயில் விழாது கடந்து இரு கடலும் சேருமிடத்துக் கட்டிய கல்லணையைக் கண்டு நீராடி பெரும் பாவங்களைப் போக்கி வருவதிலும் கீதையிலமிழ்ந்தவன் சுத்தனாகிறான் என்றபடி அலர்ந்த கண்ணன் முகத் தாமரையினின்று பெருகிய தேன் போன்ற ஐந்தாம் மறையான பாரதத்தின் உபநிடதமான கீதாம்ருதத்தில் முழுகி அஜ்ஞான மென்னும் அசுத்தி நீங்கி நாம் பெறும் பேறு வெகு சுவை யென்பதும் ஒரு சான்றாகும்.

தான் முடி சூடுவதன்றியே சரண மடைந்த மன்னற்கு முடி சூட்டி வைப்பதற்காக அவர்களைக் கொண்டு பல துஷ்டர்களை யழித்ததை சாக்ஷியாய்க் கண்டு களித்ததும் ஓர் சாதுர்யம் வாய்ந்த செயலாகும்.

அகலகில்லேனிறையுமென்ற பிராட்டியைப் பல நாட்கள் பிரிந்து 'ஒரு மாதத்திற்கு மேல் பிழைத்திரேன்' என்றவள் சொல்ல 'ஒரு க்ஷணமும் பிழைத்திரேன்' என்றிவன் சொல்ல நேர்ந்த நிலையை நினைத்துப் பின்னவதாரத்தில் ருக்மிணி முதலான பிராட்டிமாரோடு க்ஷணமும் பிரியாது இன்புற்றமர்ந்து எழுந்தருளியிருந்ததும் பொருத்தமாகும். முன்னவதாரத்தில் 'நான் உயிரையும் விடுவேன், உயிரிற் சிறந்த உன்னையும் இலக்ஷ்மணனோடு விடுவேன். மறையவர்க்குச் செய்த பிரதிஜ்ஞையை விடேன்' என்றருளிச்செய்தவன் முன் தேவர்களுக்குத் தான் செய்த வுறுதிக் கனுகூலமான பிதா தசரதனுடைய வார்த்தையையும் கானகம் புகுந்து நடத்தியதுண்டு.

இவ் வவதாரத்திலோ படையெடுப்பதில்லை யென்று உறுதிகூறியவன் படையோடு வந்த பீஷ்மரால் புடைக்கப் பெற்று பயம் படைத்த பார்த்தனைக் காக்கும் வியாஜத்தினால் தீர்த்தன் ரதத்தினின்று ரதாங்க (சக்ராயுத) த்தோடு குதித்துத் தன்னுறுதிக்கு முரணான பீஷ்மரின் 'கண்ணனை ஆயுதம் எடுக்கச் செய்கிறேன்' என்ற ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற பூமி நடுங்க உலகளந்த சேவடி பால் மிதித்தோடி வர:

'தன் ப்ரதிஜ்ஞையை விட்டு என் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றத் தேரில் நின்றும் குதித்து பூமி நடுங்க ஆழி யேந்திய கையனான என்னைப்பன்'

என்னும் பீஷ்ம ஸ்துதியே பெருமையைப் பெரிதும் எடுத்துக் காட்டும். ஆனையினாலன்றோ 'அர்ஜுனா' என்பக்தன் கெடமாட்டான் என்று நீ ப்ரதிஜ்ஞை செய்வாய்' என்றான்.

முன்னில் முடிசூடுவதற்குரிய வம்சத்தில் பிறந்து முடிசூட நாளிட்டு அதை யிழந்ததைக் கருதி பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற தாம் இச் சிறுபுவிபாசைப் பொருட்படுத்தாது அப்படி யில்லாத குலத்தில் அவதரித்ததும் ஓர் குறிப்பாகும்.

முன்பு இலங்கை எழுந்தருளினபோது நான்கு பக்கங்களிலும் ஸமுத்திர ராஜன் அலைகளென்னும் கைகளைக் கொண்டு அழகிய ரத்நங்களைக் காணிக்கையாகச் சேர்க்கக் குளிர்ந்த நீர்த்துளிகளைத் தாங்கிய சிரமத்தினால் மந்த மாருதம் மெதுவாய் உலாவ சுந்தரமான அந்நகரின் அழகை ஆகாத்தோடு நோக்கியவன் தனக்குச் சொந்தமாக பின்னவதாரத்தில் கடலின் நடுவில் துவாரகை யென்னும் செல்வம் மிகுந்த சீரிய நகரையாக்கி அங்கு பாக்கியசாலிகளோடு இருந்ததும் பொருந்தியதென்று பெரியோர் பணிப்பர்.

இனி இவ்வவதாரத்தில் முன்னோர்களின் ஈடுபாடு எழுதப்படுகிறது

ஒரு உபநிஷத்து தேவகீ நந்தனன் என்னும் இவர் திருநாமத்தைச் சொல்லிப் புகழ்கின்றது. கீதையிலும், 'இவனிருக்கு மிடத்தில் ஜயம்' என்றும் இதர யோகங்களைக்காட்டிலும் தேவகீநந்தனனைப் பற்றிய தியானமே சிறந்ததெனவும் கூறப்பட்டது.

மணிவண்ணன் சரிதத்தை உபதேசிக்கப் பெற்ற சுகரும் மனம் தெளிந்து தன் பிதாவான வேத வியாஸ பகவானையும் விட்டுப் புறப்பட்டு. எங்கும் அவருடைய அழகிய கதையைக் கேட்போர் உளரோவென்று சுற்றித் தேடி வந்து பாக்யவானான பரீக்ஷித்தினிடம் பரீக்ஷித்துப் பாராமலே பகர்ந்த காலத்தில் பார்த்தனும்; 'மிகவும் பொறுக்க முடியாத இப்பசியானது நீர் அருந்துவதையும் நீக்கிய என்னைப் பாதிக்க வில்லை' என்று



கூறியதும் இவ்வவதார சரிதத்தின் பெருமையின் பெருக்கைப் பெரிதும் காட்டுகின்றது.

நம்மாழ்வார் குன்ற மெடுத்த பிரானடியாரொடும் ஒன்றி நின்ற சடகோபன் கோவர்த்தன மென்னும் மலையைத் தாங்கி கோகுலத்தை யளித்தகோபாலனடியார்களோடு சேர்த்தியே தமக்கு நிரூபகமாக (அடையாளமாக) க்கூறினார். திருவாய்மொழி 3-ம்பத்து 6: வது பதிகத்தில் கண்ணனைப் பிரிந்து மோகித்த தனக்கு இதர தெய்வங்களின் ஆவேசமென்று செய்யப்படும் சிறு தெய்வங்களின் ஆராதனத்தைப் பரிஹரித்து அவன் திருநாம ஸங்கீர்த்தனமும் அவன் அடியார்களின் அடித் தூள்களும் தஞ்ச மென்றருளிச் செய்தார். ஸ்ரீராம சரிதத்தை அழகிய பாட்டுக்களில் அடைத்த கவியரசர் கம்பர் முதலானவரிருக்கும் சங்கப் பலகையில் நம் கண்ணனைப் பற்றிய 'கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே' என்ற பாசுரமடங்கிய ஓர் சிறு முறியை வைத்தபின் அப் பலகை அவர்களைப் பொய்கையில் தள்ளி அம் முறியை மட்டிலும் ஏந்தி நிற்க, கரையேறிய கவிகளின் தலைகளில் பலகைகள் குவிந்தனவென்று தமிழர் சொல்லுவர்.

பெரியாழ்வா ரென்ற பெரியாரும் கோபாலன் பால லீலைகளில் பெரிதும் ஈடுபட்டுப் பல பாசுரங்களைப் பேசி யிருக்கிறார்.

அவர் பெற்றெடுத்த பெண்பிள்ளையான கோதையும் இக்கண்ணனை விரும்பிய இடைப்பெண்கள் நோற்றநோம்பெல்லாம் தாம்நோற்றுக் கண்ணனை வந்த திருவரங்கச் செல்வனையே மணந்தாள் என்பதும் ப்ரஸித்தம்.

கருப்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ
திருப் பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கமே.

என்று மணமகனின் முகாரவிந்தத்தின் மணமும் திருப்பவளத்தின் சுவையும் அநுபவித்த திருச் சங்கை வினவினாள்.

மற்றை யவதாரங்களனைத்திலும் இது ஸமீபத்தில் நிகழ்ந்த தாகையால் சிறிது காலமுன்பிழந்த அரும் பெரும் வஸ்து வில் போல் இக்க்ருஷ்ணாவதாரத்தில் ஆழ்வார்கள் மண்டியிருப்பர் என்பது முன்னோர் கொள்கை. இக்காலத்திலும் ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் அப்படிப்பட்ட பரமபுருஷனுடைய அவதாரதினமாகிய அஷ்டமி ரோகிணீ கூடிய நன்னாளில் ஸ்ரீஜயந்தியை எல்லோரும் வெகு விமர்சையாகக் கொண்டாடி அந்த பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடைய அநுக்ரஹத்தைப் பெறுகின்றனர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ தேசிகன் வைபவம்

[ஸ்ரீ. உ. வே. பி. ராஜகோபாலாசார்யர்]

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் என்பது உலகில் இந்நாட்களில் தென்னிந்தியாவில் தெரியாதவர்களில்லை என்றே சொல்லலாம். முக்யமாக மூன்று சிறந்த ஸித்தாந்தங்கள் சங்கர, மத்வ, ராமாநுஜாசாரியரவர்களால் நியமிக்கப்பட்டுள்ளன. ஆழ்ந்து நோக்குங்கால் இப்பெரியார்கள் யாதொரு ஸித்தாந்தத்தையும் தாமாக இயற்றினார்களல்லர். முன்னோர் மொழிந்த முறைப்படி சில வற்றை அவற்றிலும் முக்யமான பிரம்ம ஸூத்ரங்கள் சிதற விடாமலும், அநுஷ்டானப் போக்குகளாயும், காலம், ஸமயம், உணர்ச்சி முதலியவைகளை செவ்வனே கவனித்து, அதற்கொத்த ஸித்தாந்தத்தை காட்டி வைத்தார்கள். இவற்றுள், ராமாநுஜ ஸித்தாந்தம் அல்லது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் என்பது இடையே யுள்ளது. இது மற்றைய இரண்டு ஸித்தாந்தங்களோடு முரண்பட்டாலும், ஒன்றுக்கொன்று ஸமரஸப் படுத்துவதாகவும், தோன்றும். அறிவுடையோர் இதன் பொருளை ஆய்ந்து கொள்ளல் வேண்டும்.

இவ்விராமாநுஜ ஸித்தாந்தம் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரவசனம் செய்யப்பட்டது. அது முதல் இதைச்சேர்ந்த ஆசார்யர்களில் அநேகர் இம்மதத்தை இயன்ற வளவில் புதுப்பித்தும், சேர்ப்பித்தும், கழித்தும், நிறவி வந்தார்கள். இதற்கு சில காலங்களில் பெரிய கிளர்ச்சியும் மற்றும் சில ஸமயங்களில் தளர்ச்சியும் நேரிட்டதுண்டு. எம்பெருமானுடைய தரிசனம் என்றே சொல்வதாலும் பின்புள்ள ஆசிரியர்கள் எல்லோரும் எம்பெருமானாரையே நடுநாயகமாக அமைத்தபடியால் தம் திறமை கொண்டு பெருமை அடைய முயன்றார்களல்லர். ஆனால் எம்பெருமானுடைய வைபவத்தையும் வாக்யங்களையும் நினைத்து நைந்து உள் கரைந்து உருகினவர்களான படியால் அதை நாங்கள் கூடியவரையில் அநுஷ்டித்து வந்தால் போதுமென்று ஆர்த்தியோடு பேணினார்கள்.

இத்தகைய ஸித்தாந்தத்திற்கு சில ஸமயங்களில் முன் கூறியபடி இடரின்றியே நிகலமுடியாததால் அச்சமயத்தில் 'தேனார்கமலத் திருமாமகள் கொழுநன்தானாகவே சில அடியார்களையே நியமித்து பரமதப் போர் செய்து, முன்போல் தரிசனம் பிரகாசமடையச் செய்தான்' என்பது பிரஸித்தம்.



அத்தகைய அதிமாநுஷ ஸத்ஸம்ப்ரதாய ஸார்வபௌமராய் வாய்ந்தவர் நம் தூப்பில்பிள்ளை என்னும் நிகமாந்த மஹாதேசிகன். மற்றயாரைப்போலல்லாமல், பரமதபங்கம், ஸ்வமதஸ்தாபனம் செய்வதில் இஸ்ஸித்தாந்தத்தில் முன் அணியில் நிற்பவர் இவர் ஒருவரே என்று கூறுவது மிகையாகாது. காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளன் கச்சிக்கு ஒவ்வாததினால் பந்தர்வினை தொத்தறவனுக்கும் அணியத்திரிக்கு யணிந்தாயுள்ள தூப்பிலில், விச்வாமித்ர கோத்திரத்தில் அவதரித்து கருவிலே திருவுடையவராய், சிறு பிராயத்திலேயே வாதி கேசரி என்னலாம்படி ஸகல சாஸ்த்ரத்திலும் விற்பன்னராயினர். இவர் அறியாத நூலும் கல்லாத கலையும் உலகில் இல்லாததினால் இல்லை என்றே சொல்லலாம். இவ்வரிய பெருந்தகையார் நாள்தோறும் கருமுகில் வண்ணனை கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கின்றானை என்றும் உள்ளம் தூயராய் அவ்வொருமை மனத்தினுள் அவன் தன்னோடொன்றாக அநவரதம் ஆழ்ந்த பக்தியில் மூழ்கினவர். இவர் வசாமகோசரமாகப் பேசும்வரைப் பேச்சுக்களும் பிரதிவாதிகளின் மனமடங்க சீர்தூக்கி இயம்பும் சாஸ்த்ர தத்வங்கள் எவர் மனத்தையும் தம்மறியாமலே தன் வசமாக்கும் வேதமொழிகள் இவர் வாயளவாய் வீறு பெற்றன.

அத்திகிரித் திருமால் முன்னம் வருந்தி அடைக்கலம் கொண்ட முக்யரென்று தாமே பேசும்படியான கரைபுரண்டொழுகும்படியான எல்லையில் மாயன் கண்ணன் தாள் பற்றினவர். இவர் எம்பெருமானிடத்துக் கொண்ட தீராதகாதலும், ஆராத அன்பும் எம்போன்றவரால் அளவிடப்பாலதன்று. பேசுவார் எவ்வளவு பேசினும் அவ்வருளாளப் பெருமாள் அருளாழி புட்கடவி அவர் வீதியொருநாள் வரும்பொழுது, திருமகளைப் பெற்றும் இவர்களின் நெஞ்சம் கோயிலாகக்கொண்டே பேர் அருளாளர் என்றும், இத்தனிப்பெரிய விருதை தாமே ஏறிவிட்டு கருணைக்கடலைத் தம் முள்ளத்துக் கொண்ட வியப்பை எவ்வண்ணம் பேசுவதென்று தாமே பகரும் திறமை எம்மால் மறக்க முடியுமோ! இதொன்றுமே யன்று. அவ்வருளாளர் மேலன்புளீட்டினால் செய்தமிழ் மாலைகள் தான் தெளிய ஓதி தமக்குமறை நிலங்களில் கட்புலனாகத்திருத்த சிறு ஐயங்களும் தெளியப் பெற்றோமென்று பேசுவதால் இத்தகைய அவதார புருஷன் திருவுள்ளத்தில் எட்டுமிரண்டும் கசடாக் கற்பித்து எட்டாத ஒண்ணுதை இடந்தரும் என்பதை தெளிவித்து, வானுள மர்ந்தவர்க்கும் வகுத்து ஆறு நிலைகள் தானுளனாய் உகக்குந்தரம் நமக்கிங்குளதென்றும், வியக்கும்போது வியன்கொள் மாநிலத்து வியப்பெய்திடாதவர் யாவர்.

அன்றே அடைக்கலம்கொண்ட நம் அத்திகிரித்திருமால் அழகினில் அன்பினில்நெக்கொசிந்து கரைந்த இவர் அப்ரீதிபரிவாஹமாய் பரமப்ரீதியுடன் இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்க பல்லூழிக்கு ஒருநைகம் மாறும் காணாத மாயனுக்கு ஆறு அரிய சூட்டு நன்மாலைகள் ப்ரபந்தங்களாக இயற்றி ஏத்தி நின்றார்.

இப்பிரபந்தங்கள்தான் அத்திகிரி மாஹாத்ம்யம், அடைக்கலம், அர்த்த பஞ்சகம், வைஷ்ணவ தினசரி, திருச்சின்னமாலை, பன்னிருநாமம், என்பவைகள். இப்பிரபந்தங்களை ஊன்றி நோக்குவார்களாயின் இயற்றினாருடைய மனப்போக்கை ஒருங்கே காணலாம்.

இவைகளை முறைமையால் வகுத்தால் அத்திகிரி மாஹாத்ம்யமும், பின்னர் வைஷ்ணவ தினசரியும், பன்னிரு நாமமும், அதற்கு பின்னர் அர்த்த பஞ்சகமும் திருச்சின்னமாலையும், அடைக்கலப்பத்தையும் அணி வகுக்கலாம். இவர் அநுதினமும் சிற்றம் சிறு காலத்தில் தித்திக்கும் திருவத்தி யூரைச்சேர்பவராதலினால், அத்திகிரி மாகாத்ம்யத்தை தாமே யநுஸந்திப்பர் போலும். பின்னர் துன்பத்த மதுர கவிகள் தோன்றக் காட்டும் தொல் வழியே நல்வழி என்று தெளிவுற்ற சிந்தையரானபடியால், ஸ்ரீ வைஷ்ணவ தினசரியும் அதற்கு பின்னர் அநுஷ்டானமும், த்வாதசநாமமும் சாற்றிக் கொள்ளும்போது அண்ணாந்தாள் அணைவிக்கும் பன்னிரு நாமப் பாட்டைப் பண்ணி பாடுவர் போலும். பின்னர் முத்திக்கு மூலமாய் பயனும் பதியுமான பரனை உள்ள பொருள்கள் அனைத்தும் உருவம் நிலை கருமங்கள், நுண்ணறிவாய் சேதநனுப் அடிமையுமாய் ஐபுரவும் ஆறிருளும் அவ்வழியுமாகதாம் அர்த்த பஞ்சகத்தில் சிந்திப்பர் போலும். தான் அநுஸந்தித்த திருமந்த்ர, த்வய, சரம ச்லோகப்பொருள்களின் பயனுப் திருச்சின்ன மாலையை வீதியாரப் பெரும்பதம் தோன்ற வழங்குவர் போலும்.

ஈண்டு தெளிவெதன் என்றால் இவர்க்கு வேறொப்பார், விழியொப்பார், கடலொப்பார், நீரொப்பார் நிலம் ஒப்பார் கெடும் பிழைகள் பொருக்கும் நீரால் வேறு ஒத்தாரும் மிக்காரும் மின்றி தாள் தனக்கே சமமாமோ என்று சங்கிக்கும்படி தனக்கும் தன் தன்மையறி வறியனன் பெருமானை "அருளாளர் தாமென்னும் தமக்கொவ்வார் தாமே" என்று வாய்படைத்த பயனாக இவர் தம் ஆவியே என்று பேசும் போது, இனி எவ்வுலகத்தெய்வர் தாம் இவர் பாட்டு அன்பு பாராட்டாதொழிவார்கள். ஆதலால் இங்கண் பெறப்படுவது யாதெனின், இவர் பிறந்த நாள் முதல் கருமணியைக் கரிகிரிமேல் கண்டு கருவினை பனைத்தும் களைந்து நன் ஞானமணிக்ப்



பெற்றவரானபடியால் அருளாளர் பாட்டு, தனியன்பு படைத்தவரெனவே கூறுதல் சாலப்பொருந்தும்.

இதுகால் சில மஹான்கள், ஸ்ரீ மகாதேசிகனுக்கு திருவஹீந்திர புரத்து அநேக வருஷகாலம் வாஸம் நேரிட்டபடியால் அவ்வஹீந்திரபுரத்து மேவு சோதியாகி தெருள்த நின்ற தெய்வநாயகனிடம் பேரன்பு உடையவரென்றும் அவரே அவருக்கு வெள்ளைப்பரிமுகராய் உள்ளத்து ஊன்றினரென்றும், ஆதலால் அவ்வெம் பெருமானையே பரம வாத்ஸல்யத்தோடே தனக்குப் பற்றாகவும் சரணாகதி செய்விக்கும், கற்றார் பிறவிப் பெருங்கடலாகக் கருதினாரென்றும், காணப்படும் கட்டுரைகள் யாம் காணாததன்று. இவ்வேருவிசேஷங் கொண்ட மற்ற எம்பெருமான்களையாவது, அதிலும் கச்சி அருளாளனை இழிந்துரைக்க முன்படுவது எவ்வாற்றானும் பொருந்தாது என்பதுடன் அருந்துயரடைவிக்கும் என்றே யாம் மாழ்கின்றோம். இது பொருத்த முடைத்தெனென்றின் யாம் கொள்ளத்தட்டில்லை. அது கருத்தை அச்சந்த மிகிழ் தமிழ் மறையோரான வேதாந்த குருவின்செந்தமிழால் அருளிச் செய்த, மும்மணிக்கோவை, பந்து கழல் அம்மானை யூசல் ஏசல், பாவு நவமணிமாலையில் யாம் கண்டு தெளிவாம். ஒரு எம்பெருமானையுகக்கும் பொழுது நம்மாழ்வார்கள் முதல் தேசிகன் ஈறாக உள்ள எண்ணரும் சீர் பெருந்தவத்தோர் கண்பயனாகவும், செவிப்பயனாகவும், அவ்வெம்பெருமானிடத்தில் பரம பக்தி தலை எடுத்து ஈடும்முதல் இயல்பேயன்றி, அது ஸமயம் பிறிதொரு பெருமானைக்குறைவாக நினைத்தாலுமன்று, குறையாக நினைப்பவர்களுமன்று.

இங்கே எதிவாணர் மடப்பள்ளி வந்த மணங்கொண்ட வார்த்தையுள் செந்தமிழ் மறையோரான வேதாந்தாரியன் இயம்பிய சொற்படியே கண்டு யாம் தெளிவாம்.

பவக்கடலே கடத்துவிக்கும் நவரத்ந மாலையில் ஸ்ரீதேசிகன் அருளிச் செய்ததில் மிக வின்பம் பட மேவும் சொல்லென்று கருதப்படுவதை யாம் கீழ்க்குறிக்கின்றோம்,

" அஞ்சலன் வருள் பொழியும் வள்ளலே
நின்வடிவழகு மறவாதார் பிறவாதாரே. "

"வாசித்தொழு மன்மதனார் மணல் தோப்பில்
மாசிக் கடலாடி மகிழ்ந்து வருவரே."

'உன் அடைக்கலம் கொண்டருளே'

"நின் பொருட்டு நீ என் பொருட்டில்லை
நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார்."

இவற்றோடு கீழ்க்கண்ட பாசுரங்களை ஒப்பு நோக்குக.

தாம் வாசியறிந்து உரைத்தவைகளானபடியினாலே வையத்துள்ளீர் வைப்பாக இவைகொண்டு வாழவேண்டுமென்பது தேசிகனது திருவாக்கு.

"ஆனை பரிதேரின்மேல் அழகர் வந்தார்
கச்சிதனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்."

"ஆரொப்பார் இவர் குணங்களனைத்தும் கண்டார்
அருளாளர் தாமென்னும் தமக்கொவ்வார் தாமே."

"உமதடிகள் அடைகின்றேன் என்றொருகால் உரைத்தவரை"

"முத்திக்கு மூலம் எனவே மொழிந்த"

"திருமகளோடொருகாலம் பிரியாத நாதன்"

இது காறும் உன்னிய பொருள்களில் யாம் சென்னிமிசையாக வைத்துக் கூறுவதும் ஒன்றுண்டு. ஸ்ரீ மகாதேசிகன் எக்காலத்திலும் எவ்வகையிலும் எம்பெருமானுடைய உள்ளத்தின் சார்வேசென்று வாராதாலும், எதிராசன் வாசகம் கற்றவரானபடியாலும் அவ்வெம்பெருமானார் தாமுகந்த அருளாளனைத்தாமுகந்த, தத்துவத்தின் தகவுரையோடும் பின்னரும் சரணாகதி என்னும் சார்வுடன் மற்றொன்றை அரணாகக் கொள்ளாதாரன்பு என்னும் உகக்குமவராகையாலே அச்சரணாகதிசாதனமும் மற்றோர் சாதனங்களில்லை. என அதுவே துணிந்து அடைக்கலப்பத்து என்று ஓர்தமிழ் மாலை தானணிந்தனர். ஆறுமதின் பயனாகறு உளத்தும், அயன் பணியும் அத்திகிரி யருளாளர் அடியிணையே என்று வேறுபொருள் கொள்ளாதவரும் இதற்கோர் கைம்மாறு மாயனும் காண்கிலான் என்று போற்றியுரைக்கும் சொற்பொழிவுகள் எவர் உள்ளத்தையும் உருக்கியுண்ணுமே.

மதிள் அத்தியூரில்தண்டொடியாள் திருமகளும் தானுமே நின்ற சதிர் நம் தூப்பில் குலமணியின் கண்களாகவும் கண்டபடியால், தாயே அதைக் "கண்டவர் விள்ளார். விள்ளக்கருதுவார் காண்கிலோரே" என்று பேசுவதே பொருத்தமுடைத்தாம். இனி இதைப் பற்றி மற்றொன்று ஒன்று வேண்டுமோ. ஸாரஸாரமாகக் கருதப்படும் அம்ருதாஸ்வாதினியில் காதற்கதியையும், ஞானத்தையும் கருமங்களையும் பேசுமிவர் சரணாகதி தனி நின்ற நிலை எனதாமே சாதித்து காவல் இனி எமக்கும் எங்கும் கடன் என்று எண்ணிக் காண வள்ளல் தன்னருளால் அடைக்கலப்பத்து அருளிச் செய்தார்.



இதுகாறும் கூறியவாற்றால் இங்கன் பெறப்படுவது யாதெனில் எழில் பெற விளங்கும் மழலை நிகர் சொற்களால் அருளாளனுடைய பெருமை பேச தாம் துணிந்தது அப்பெருமாளடிகளையே அறுபயனாகக் கொண்டாரென்பது வெளிப்படை.

தேசிகனை ஆழ்வார்களிடத்தில் குறைந்த பற்றுடையவரென்றும் தமிழ்மொழியில் அப்ரீதியுள்ளவரென்பதையாம் கேட்பதால் இது தென்னாடும் வடநாடும் சிரிக்கப் பேசும் பேச்சேயாகும். தூப்பில் குலமணியான வேதாந்தாசாரியன் என்று விளம்பப்படும் தேசிகனைசிரோரத்னமாகக்கொள்ளாதவர் யாவர்? துணிவுடையார் கூறும் தூய மொழிகள் சந்தமிகு தமிழ் மறையோயாள் அந்தமில்லா ஞானக் கதிர்ப்பரப்பும் செந்தமிழ் தூப்பில் அம்மான் கந்தமெழும் தமிழ் மறையின் பாவ வளரும் பிரபந்தங்களிலே யாம் தெளிவோம். ஆழ்வார்கள் அருளிச்செய்த தமிழ்மாலைகள் தெளியவோதி மறை நிலங்கள் தெளிந்த இறையை அவர்கள் மாட்டு அன்பு குறைந்தவரென்பது எங்ஙனம் பொருந்தும்? தந்தையென நின்ற திருமால் தாளில் சடகோபனருளினாலே தலைவைத்த விவரை தமிழானதை ப்ரமாணமாகக் கொள்ளாதவரென்று கூறுதல் மடமையாகும். நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளெல்லாம் உரைத்து நாரணனார் தாள்களிலே நாலாயிரமும் நாடி வைகிலதொகை செய்த சிலரை புனிதன் என்றும் பிள்ளை என்றும் போற்றுதலல்லாமல் இனி என் சொல் நழுவுமோ!

இத்தூய நல்லிசைப் புலவாரன் வேங்கடநாதர்தாமே தம்மை, "நாம் பெரியோர்களல்லோம். நாம் நன்றும் தீதும், நமக்குறைபருளர் என்றும் நாடுவோமே" என்று கூறும்போது இவராண்ட அந்தனர் என்ற தன்மையும் தகவும் நன்றாக வெளிப்படுகின்றன. மற்றும் பிரபந்தங்களை கோஷ்டியில் சேர்ந்து தமருடனே நாவளரும் பெரு நான்மறையோதிய நிலமெல்லாம் பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவதில் மிகவும் அவாவுள்ளவரென்பது நற்றென விளங்கும். இவர்மாட்டு நீதியறியாத நிலையறிவார்க்கெல்லாம் நிலையிதுவே யென்று பாணன் ஓதிய ஓர் இருநாளெங்கும் இரண்டும் பழமறையின் பொருளென்று வேதியர் நாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் விதையாகும் என்று விளம்புவர்.

ஸ்ரீ:

# புருஷ ஸூக்தம்

[ஸ்ரீ உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்]

[4-வது ஸஞ்சிகை 475-வது பக்கம் தொடர்ச்சி]

**உதாம்ருதத்வஸ்யேசாந: ।**

[அந்த மஹா புருஷனே, அம்ருதத்வஸ்ய—மோக்ஷத்திற்கு, ஈசாந:—ப்ரபு]. 'அவனே மோக்ஷத்தைக் கொடுப்பதற்கு சக்தன், மற்றொருவரும் அதற்கு சக்தராகமாட்டார்' என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். ஸம்ஸாரத்தில் கணக்கற்ற துக்கங்களால் பீடிக்கப்படும் ஆத்மாக்களுக்கு அவன் ஒருவனே துக்க நிவ்ருத்தியைச் செய்யக்கூடியவன் என்று சொன்னதாயிற்று. ஆக இந்த ருக்குக்களால் பகவானுடைய முக்ய தர்மங்களாகிற ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் அளவற்றிருக்கும் தன்மை மோக்ஷப்ரதத்வம் இவையெல்லாம் சொல்லப்பட்டன. இவ்விடத்தில் 'மோக்ஷம்' என்பது மற்றை புருஷார்த்தங்களுக்கும் உபலக்ஷணம்; ஆகையால், மனிதர்களுடைய ஸகல இஷ்ட ப்ராப்தியையும் ஸகலமான அநிஷ்ட நிவ்ருத்தியையும் செய்விப்பவன் அவனே என்பது குறிப்பு.

**யதந்நேநாதிரோஹதி ॥**

[(அந்த மஹாபுருஷன்) அதி—(தன்னுடைய அம்ருத ஸ்வரூபத்தை) அதிக்ரமித்து, அந்நேந—அந்ந ரூபமாக, ரோஹதி—பரிணமிக்கிறான்]. ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியை உத்தேசித்து அந்த மஹாபுருஷன் பஞ்ச பூதங்களாகப் பரிணமிக்கிறான். 'அந்நம்' என்பது ப்ருதிவியைக் குறிக்கின்றது. அந்த ப்ருதிவி மற்றை பூதங்களுக்கும் உபலக்ஷணம். கீழில் 'இவையெல்லாம் அந்த மஹாபுருஷனே' என்று சொல்லிவிட்டு, அப்படி அவன் இருக்கையிலும் அவனே மோக்ஷத்தைக் கொடுக்குமவன் என்று சொல்லியிருப்பதை, இந்த வாக்யம் ஸமந்வயம் செய்கின்றது. ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக, அவன் ப்ரபஞ்சத்திற்குக் காரணமாக இருக்கும் பூதங்களாகப் பரிணமிக்கிறான்; அதாவது தனது சரீரமாக இருக்கும் சேதநாசேதந வஸ்துக்களை ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து ஸ்தூலாவஸ்தைக்கு தனது ஸங்கல்பத்தால் மாற்றுகிறான் என்று சொன்னதாயிற்று.

**ஏதாவாநஸ்ய மஹிமா ।**
**அதோ ஜ்யாயாꣳஶ்ச பூருஷ: ।**

இதனால் பகவானுடைய வைபவம் சொல்லப்படுகின்றது. ஏதாவாந்—அவனுடைய பரிணாமமாகிற இந்த ப்ரபஞ்சம் முழுவதும், அஸ்ய - அவனுடைய, மஹிமா - பெருமையே. பூருஷ: - அந்தப் பகவானும், அத: - அந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும்; ஜ்யாயாந் - மிகப் பெரியவன்.

ஏதாவாந் - இந்தப் பதம் கீழ் ருக்கில் குறிக்கப்பட்டுள்ள 'அந்நம்' என்று சொல்லப்படும் ப்ரபஞ்சத்தின் அளவைக் குறிக்கின்றது. 'அந்நம்' என்னும் சப்தம் ப்ருதிவியைக் குறிக்கும் என்பது "தா அந்நமஸ்ருஜந்த" [கீழ் சொல்லப்பட்டுள்ள ஜலங்கள் அந்நத்தை ஸ்ருஷ்டித்தன. அதாவது, ஜலங்களைச் சரீரமாக உடைய பர ப்ரஹ்மம் அந்நமென்று சொல்லப்படும் ப்ருதிவியை ஸ்ருஷ்டித்தது] என்னும் வாக்யத்திலிருந்து விளங்கும். அப்படி ப்ருதிவியைக் குறித்துக் கொண்டு அந்தச் சப்தம், மற்றை பூதங்களுக்கும் உபலக்ஷணமாக இருக்கிறபடியால், அது ப்ரபஞ்சம் முழுவதையும் குறிக்கின்றது என்று சொல்லக்கூடும்.

பகவான் ப்ரபஞ்சமாகப் பரிணமித்தான் என்று சொல்வதிலிருந்து, 'பகவான் அந்த ப்ரபஞ்சத்தின் அளவு உள்ளவன்தானோ?' என்று உண்டாகும் ஒரு சங்கையை உத்தேசித்து, இந்த ருக், அவன் அந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு பெரியவனென்றும் அந்த ப்ரபஞ்சமே மிகப் பெரியதானதால் அதுவே அவனுடைய பெருமையை விளக்குகின்றதென்றும் விவரிக்கின்றது.

'ஏதாவாநஸ்ய மஹிமா' என்னும் இந்த வாக்யத்திற்கு 'இவ்வளவுதான் இவனுடைய பெருமை' என்று லௌகிக வித்வான்கள் பொருள் கொள்வார்கள். இப்படி பொருள் கொண்டு, இது கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அவனுடைய அபரிச்சிந்நத்வத்திற்கு அஸங்கதமாக இருப்பதால் புருஷ ஸூக்தமே அஸங்கதமென்று அவர் சொல்லத் துணிவார். இதுமாத்ரமன்று. 'அதோ ஜ்யாயாꣳஶ்ச பூருஷ:' என்பதற்கு 'கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸஹஸ்ரசீர்ஷனான புருஷனைக்காட்டிலும், இன்னும் ஒரு புருஷன் மிகப் பெரியவனாக உண்டு' என்று பொருள் கொண்டு, புருஷ ஸூக்தத்தில் இரண்டு புருஷர்கள் சொல்லப்படுகிறார்களென்றும், ஆகையால் புருஷ ஸூக்தம் சொல்வதெல்லாம் அஸம்பத்தமென்றும் பரிஹஸிக்கிறார்கள். பித்தம் பிடித்தவனுக்குப் பால் கைத்தால், அது எவனுடைய தோஷம் என்பதை அவர்கள் அறிதல் வேண்டும்.

**பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி ।**
**த்ரிபாதஸ்யாம்ருதம் திவி ॥ 3**

ஸீறில் அவன் இந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் மிகப் பெரியவன் என்று சொல்லப்பட்ட விஷயம் இந்த வாக்யங்களால் விவரிக்கப் படுகின்றது. விஶ்வா பூதாநி - இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் ஸகல வஸ்துக்களும், அஸ்ய - இந்தப் பகவானுடைய, பாதஃ - ஒரு அல்ப பாகமே. அஸ்ய - இவனுடைய, த்ரிபாத் - மற்றைப் பெரும்பாகம், அம்ருதம் - நித்யமாக, திவி - பரம வ்யோமமென்று சொல்லப்படும் அப்ராக்ருதமான திவ்ய லோகத்தில் இருக்கின்றது.

இந்த ருக்கில் காணப்படும் 'பாதஃ' 'த்ரிபாத்' என்னும் சப்தங்கள் 'நாலில் ஒரு பாகம்' 'நாலில் மூன்று பாகங்கள்' என்னும் பொருளின் வழியாக, 'அல்ப பாகம்' 'பெரும் பாகம்' என்னும் அர்த்தத்தைச் சொல்லுகின்றன. இந்த ருக்குக்கு மற்றுமொரு ரஹஸ்யார்த்தமுண்டு. நமது சாஸ்த்ரங்களில், பகவான் பக்தர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து பஹுவிதமாக திவ்யமங்கள விக்ரஹங்களை எடுத்துக் கொண்டு அவதரிக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? அந்த அவதாரங்களுள் வ்யூஹாவதாரங்கள் என்பவை முதன்மை பெற்றவை. அவையாவன— வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள் என்று சொல்லப்படும் நாலு மூர்த்திகளே. இந்த நாலு அவதாரங்களுள் முதல் மூன்று வ்யூஹங்கள் நித்ய விபூதி என்று சொல்லப்படும் மேல் லோகத்தில் ப்ரகாசித்துக்கொண்டு நிற்கின்றனவென்றும், நான்காவதாகிற அநிருத்த மூர்த்தி, லீலா விபூதியாகிற இந்த லோகத்தில் காணப்படும் சேதநாசேதந வஸ்துக்களனைவற்றையும் ஆண்டு வருகிறதென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடியால், இந்த ருக்கினால் அந்தச் சாதுர் வ்யூஹ விபாகமே நிர்த்தேசிக்கப்படுகின்றதென்று பெரியோர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். இந்த நிர்வாஹம் அடுத்து வரும் வாக்யங்களின் அர்த்தத்திற்கு மிகப் பொருந்தியிருக்கும்.

த்ரிபாதூர்த்வ உதைத்புருஷஃ ।
பாதோ஽ஸ்யேஹாபவாத்புநஃ ।

த்ரிபாத் புருஷஃ - நாலில் மூன்று பாகமான [அதாவது பெரும் பாகமான] அந்தப் புருஷன், ஊர்த்வஃ உதைத் - உயர நின்றான். அஸ்ய பாதஃ - அவனுடைய நாலில் ஒரு பாகம் [அதாவது அல்ப பாகமானது], இஹ - இந்த விபூதியில், புநஃ - திரும்பத் திரும்ப, அபவத் - உண்டாயிற்று. இதன் தாத்பர்யமென்னவென்றால், 'ப்ரஹ்ம ஸ்வரூபியான த்ரிபாத் புருஷன் இந்த ப்ரபஞ்சமாகின்ற லீலாவிபூதிக்கு வெளிப்பட்டு, நித்ய விபூதியில் மூன்று வ்யூஹங்களாய் நிற்கிறான்; அவனுடைய மற்றொரு அல்பமான பாகம் [அதாவது, அநிருத்தன் என்று சொல்லப்படும் நாலாவது மூர்த்தி], இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் கர்த்தாவாக நின்று கொண்டிருக்கிறான்' என்பது தான். இந்த ருக்கிலுள்ள 'புநஃ' என்னும் பதத்திற்கு 'புநஃ புநஃ' [திரும்பத் திரும்ப] என்பது குறிப்பு. இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாய்க் கொண்டு சில காலம் வாழ்ந்து விட்டு பிறகு ஸம்ஹரிக்கப்பட்டதாய் லயத்தை அடைகின்றது. மறுபடியும் கொஞ்ச காலம் கழிந்த பிறகு ஸ்ருஷ்டிக்கப்பட்டு, மறுபடியும் லயத்தை அடைகின்றது. இம்மாதிரி மறுபடியும் மறுபடியும் உண்டாகும் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு அநிருத்தன் என்று சொல்லப்படும் நாலாவது வ்யூஹாவதாரமே காரணம். நித்ய விபூதி என்னும் மேல் லோகம் சாச்வதமானதால், அதற்கு ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் என்பவை இல்லை. அவ்விடத்தில், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நர்களாகிற மூன்று வ்யூஹாவதாரங்களும் நித்யர்களென்று சொல்லப்படும் அநந்த கருட விஷ்வக்ஸேநர் முதலியவர்களாலும் முக்த ஜீவன்களாலும் எப்பொழுதும் ஸேவிக்கப்படுகிறவைகளாயும் முமுக்ஷுக்களுக்கு ப்ராப்யங்களாயும் உத்க்ருஷ்டங்களாக நிற்கின்றன. இவ்வாறு பகவானுடைய ஆவிர்ப்பாவத்தை ஸங்க்ரஹமாகச் சொல்லிவிட்டு, இனி ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியைப் பற்றிப் பேச, ஸூக்தம் புகுகின்றது.



ததோ விஷ்வங் வ்யக்ராமத் ।
ஸாஶநாநஶநே அபி ॥ 4.

ததஃ - பிறகு, [இந்த நாலில் ஒரு பாகமாகிற அநிருத்த மூர்த்தியானது] ஸாஶநாநஶநே - சேதநாசேதந ரூபங்களான ஸகல பதார்த்தங்களையும், அபி - ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பித்து, விஷ்வங் - பலவிதமாக, வ்யக்ராமத் - பரவிற்று. இவ்விடத்தில் 'அபி' என்பதற்கு 'அபிவீக்ஷ்ய' [ஸங்கல்பித்து] என்பது பொருள். உபநிஷத்தில் காணப்படும் 'ததைக்ஷத பஹு ஸ்யாம்' [தான் பஹுவாக வேண்டுமென்று அந்த ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது. அதாவது, தேவதைகள் மநுஷ்யர்கள் திர்யக்குக்கள் ஸ்தாவரங்களென்று பலவகையாகக் காணப்படும் வஸ்துக்களாக வேண்டுமென்று] என்பது முதலான வாக்யங்களாற் சொல்லப்படும் அர்த்தமே இந்த வாக்யத்தாலும் சொல்லப்படுகின்றது.

மூன்றாவது ருக்கும் இந்த ருக்கும், பர ப்ரஹ்மத்திற்கும் இந்த விபூதி த்வயத்திற்கும் இருக்கும் ஸம்பந்தத்தைச் சொல்லுகின்றன. லீலாவிபூதி என்று சொல்லப்படும் இந்த ப்ரபஞ்சமும் நித்ய விபூதி என்று சொல்லப்படும் அப்ராக்ருத பரமபதலோகமும் இரண்டும் அவனுடைய விபூதிகளே. இவைக

ளுள் நித்ய விபூதி என்பது பெரும்பாகம்; அதற்கு அழிவு என்பதே இல்லை; நித்யர்களும் முக்தர்களும் அவ்விடத்தில் ப்ரஹ்மாநந்தத்தை அநுபவித்துக் கொண்டு நிற்கிறார்கள். மற்றொன்றாகிற லீலா விபூதியானது ப்ராக்ருதமாகிற இந்த ப்ரபஞ்சமே; இது அவனுடைய விபூதியில் ஸ்வல்ப பாகமே; இதற்கு அழிவு உண்டு; பத்தர்களான ஜீவர்கள் தமது கர்மத்திற்கு அநுகுணமாக ஸுக துக்கங்களை இவ்விடத்தில் அநுபவித்துக் கொண்டிருப்பதுடன், தம்முடைய மேற்கொண்ட ஸம்ஸாரத்திற்கும் பரம நிச்ரேயஸத்திற்கும் உரிய கர்மங்களையும் செய்து வருகிறார்கள்.

ஸாசநாநசநே — ஸாசநம்-[போஜநம் முதலிய வ்யவஹாரத்துடன் கூடியிருக்கும் சேதந வர்க்கமாகிற ப்ராணிக் கூட்டம்]; அநசநம் [அந்த வ்யவஹாரமற்ற அசேதந வஸ்துக்கள்].

தஸ்மாத்விராட3ஜாயத |
விராஜோ அதி4 பூருஷ: |
ஸ ஜாதோ அத்யரிச்யத |
பஸ்சாத்3பூ4மிமதோ2 புர: ||—5.

கீழ் ருக்கில், அநிருத்த ரூபியான பகவானுடைய ஸங்கல்பமடியாக இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. என்று சொல்லப்பட்டது. அந்த ஸ்ருஷ்டியின் ப்ரகாரத்தை இந்த ருக்கும் அடுத்து வரும் ருக்குக்களும் விவரிக்கின்றன.

தஸ்மாத் - அந்த அநிருத்த மூர்த்தியிடமிருந்து, விராட் - ப்ரபஞ்சத்திற்குக் காரணமாயிருக்கும் ப்ரக்ருதி, அஜாயத - உண்டாயிற்று. விராஜ: அதி [யஃ] பூருஷ: — அந்த ப்ரக்ருதியை அதிகரணமாயுடைய அதன் அபிமாநி புருஷனாகிற சதுர்முக ப்ரஹ்மாவென்று சொல்லப்படும் புருஷனும், அஜாயத - உண்டானான். ஸ: — அவன், ஜாத: — உண்டானபிறகு, அத்யரிச்யத — தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபமாகவும் ஆனான். பஸ்சாத் — அதற்குப் பிறகு, பூமிம் — பூமியையும், அதோ - பிறகு, புர:- [ஜீவன்களுக்குத் தேவையான] சரீரங்களையும் [ஸ்ருஷ்டித்தான்].

'விராட்' என்று சொல்லப்படும் ப்ரக்ருதி, ப்ரளய காலத்தில் பகவானிடத்தில், 'தமஸ்' என்று சொல்லப்படும் ஸூக்ஷ்ம த்ரவ்ய ரூபமாக லயித்திருந்தது. அது இப்பொழுது ஸ்தூலமாக வெளிப்படும்படி செய்யப்பட்டது. இதற்கு மேற்கொண்ட ஸ்ருஷ்டியைச் செய்வதற்காகச் சதுர்முக ப்ரஹ்மாவும் வெளிப்படுத்தப்பட்டான். இது வரை, அந்த அநிருத்த



ரூபியான பகவான் ஸாக்ஷாத்தாகச் செய்யும் ஸ்ருஷ்டி. இதை ஸமஷ்டி ஸ்ருஷ்டி என்றும் சொல்வார்கள். இனி சதுர்முகன் முதலானவர்களைக் கொண்டு செய்விக்கப்படும் ஸ்ருஷ்டி. அதை வ்யஷ்டி ஸ்ருஷ்டி என்று சொல்வார்கள்.

இவ்விடத்தில் நாம் கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. இந்தப் புருஷ ஸூக்தம், ஆதி ஸ்ருஷ்டி எப்பொழுது என்றாவது, அதன் ப்ரகாரம் எப்படிப்பட்டது என்றாவது விவரிக்க ஆரம்பிக்கவில்லை. நமது மதப்படி, இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் எல்லாம் அநாதி. அப்படி அநாதியாக நடைபெற்றுவரும் இந்த வ்யாபாரத்தில், ஒவ்வொரு ப்ரளயத்திற்குப் பிறகும் மறுபடி ஸ்ருஷ்டி எப்படி உண்டாகின்றது என்பதை மாத்ரம் இது விளக்குகின்றது. ப்ரவாஹம் போல ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும் இந்த ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களின் ஆரம்பம் எப்பொழுது நேர்ந்ததென்றாவது எப்படி நேர்ந்தது என்றாவது, யாரால் க்ரஹிக்கக்கூடும்? வேதம் அதைச் சொல்லவில்லை; மநுஷ்யன் தனது புத்தி சக்தியைக் கொண்டு அதைக்கண்டுபிடிக்க ப்ரயத்நப்படுவதும் பரிஹஸிக்கத்தக்கதே ஆகும். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் [Herbert Spencer] என்னும் மேல்நாட்டு நிருபகரொருவர் இதைப்பற்றி விசாரித்து, பின்வருமாறு நிர்ணயித்திருக்கிறார்.

"Whatever be the ultimate element of the Universe, be it a fragment of matter, or some potential form of matter, or some more remote and still less imaginable cause, our conception of its self existence can be formed only by joining with it the notion of unlimited duration through past time. And as unlimited duration is inconceivable, all those formal ideas into which it enters are inconceivable; and indeed, if such an expression is allowable, are the more inconceivable in proportion as the other elements of the ideas are indefinite. So that in fact, impossible as it is to think of the actual universe as self-existing, we do but multiply impossibilities of thought by every attempt we make to explain its existence."

நமது சாஸ்த்ரம், இதை உணர்ந்தே, ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களை அநாதியென்று சொல்லிவிட்டது. லய தசையில் ஸகல பதார்த்தங்களும், தமது நாம ரூபங்களெல்லாவற்றையும் இழந்து, எல்லா வஸ்துக்களுக்கும் பரம காரணமாக இருக்கும் 'தமஸ்' என்று சொல்லப்படும் த்ரவ்யத்தில் லயித்து, அந்தத் 'தமஸ்' ரூபமாக பகவானுடைய சரீரமாய் அவனிடம் கிடக்கின்றன. அப்பொழுது அந்த த்ரவ்யத்திற்கு ஒருவித நாம ரூபமும் இல்லையாதலாலும், 'அந்தப் பகவானுடைய சரீரம் இது' என்று

பிரித்துச் சொல்லக்கூடாமல் அவ்வளவு ஸூக்ஷ்மமான தசையில் அது இருக்கிறபடியாலும், அதற்குத் 'தமஸ்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஜீவன்களும் அந்தத் தசையில் அசேதநங்கள் போலவே கிடக்கின்றனவாம். அப்படி ஒருவித நாமரூபமும் இராமல் இருக்கும் தமஸ்ஸை பகவான், தனது ஸங்கல்பத்தால், ஸ்தூலமான ப்ரக்ருதியாகப் பரிணமிக்கும்படி செய்வதையே நாம் ஸ்ருஷ்டி என்று வ்யவஹரிக்கின்றோம். அந்தத் தமஸ் தனது ஸூக்ஷ்ம தசையிலும் ஸ்தூல தசையிலும் பகவானுடைய சரீரமாகவே இருக்கிறபடியால், பகவானே ப்ரபஞ்சமாகப் பரிணமிக்கிறானென்றும், தன்னிடமிருந்தே பகவான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

ஸாத்யா: - இந்த ருக்கில் இருக்கும் 'ஸாத்யா:' என்னும் சப்தத்திற்கு 'ஸப்தயுஜி ஸத்தி யதஸ்ஸாஹிதாநி ஸாத்யா: - ஸரீராணி' [ஏழு தாதுக்களாலும் நிரப்பப்படுகின்றன என்னும் காரணத்தால் நமது சரீரங்களுக்கு 'பூ:' என்று பெயர் உண்டு] என்று நமது பெரியோர்கள் நிர்வாஹம் செய்திருக்கிறார்கள். இப்படி அர்த்தம் செய்வதை க்லிஷ்டமென்று சொல்லிவிட்டு, நமது லௌகிக வித்வான்கள், 'ஸூர்யாஸ ஸாத்யா:' என்பதற்கு 'மேற்கும் கிழக்குமாக' என்று பொருள் சொல்லுகிறார்கள். அந்த 'விராட்' என்பதிலிருந்து உண்டான புருஷன் பூமியில் கிழக்கும் மேற்குமாக ஒழுனான். 'ஸாத்யா:' என்பதற்கு 'கிழக்கில்' என்று அர்த்தம் சொல்வதற்கு, அந்த வாக்யத்தில் காணப்படும் 'ஸூர்யா' என்னும் பதம் இடம் கொடுக்கின்றதாம். 'ஸூர்யாஸ' என்பதற்கு 'மேற்கில்' என்று அர்த்தமாம். இது மாத்ரமன்று. இந்த ருக்கின் முதல் இரண்டு வாக்யங்களுக்குப் பின் வருமாறு உரை கூறுகிறார்கள். 'புருஷனிடமிருந்து விராட் உண்டாயிற்று; விராட்டிடமிருந்து புருஷன் உண்டானான்'. இவ்விதம் அந்யோந்யாச்ரயமான அர்த்தங்களைச் சொல்லி பிணத்துகின்றதாம் புருஷ ஸூக்தம்!

யத்புருஷேண ஹவிஷா ।
தேவா யஜ்ஞமதந்வத ।
வஸந்தோ அஸ்யாஸீதாஜ்யம் ।
க்ரீஷ்ம இத்ம: ஶரத்தவி: ॥ — 6.

சதுர்முக ப்ரஹ்மா முதலானவர்களைக் கொண்டு செய்விக்கப்படும் வ்யஷ்டி ஸ்ருஷ்டி இதற்கு மேல் விவரிக்கப்படுகின்றது. ரஸ விசேஷத்தையும் தாத்பர்ய விசேஷத்தையும் ஆச்ரயித்து, இந்த ஸ்ருஷ்டியை நேரில் ஸ்ருஷ்டியாகப் பேசாமல், அதை ஒரு யஜ்ஞமாக இந்த ஸூக்தம் பேசுகின்



றதென்று நாம் அறியவேண்டும். விஷயங்களைப் பச்சையாகப் பேசாமல் ஒரு ரூபாந்தரத்தைக் கொடுத்துப் பேசுவதில் ரஸ விசேஷமுண்டு என்பதை விளக்கவேண்டியது அவசியமில்லையாதலால், அதை விட்டுவிட்டு அர்த்த விசேஷத்தைப் பற்றி மாத்ரம் விசாரிப்போம். வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்யும்படி பகவானால் ஏவப்பட்ட சதுர்முக ப்ரஹ்மா, அதைச் செய்வதன் வழி தெரியாமல், அதற்காகப் பகவானிடமிருந்து ஸஹாயத்தை அபேக்ஷிக்கிறவனாய், அந்தப் பகவானை ஆராதித்தான் என்பதே இந்த யஜ்ஞரூப வர்ணநத்தின் தாத்பர்யம். அப்படி ஆராதிக்கப்பட்ட பகவானால் அநுக்ரஹிக்கப்பட்டவனாய்க் கொண்டு, இந்த ப்ரஹ்மா, ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்வதில் சக்தனானான். 'யஜ்ஞம்' என்பதற்கு 'தேவதாராதநம்' என்பதே பொருளாகையால், ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட ஆராதநத்தை ஒரு யஜ்ஞமாக வர்ணிப்பது உபபந்நமே. நிற்க, இந்த ஸூக்தத்தில் தத்வத்தின் ஸ்வரூபம் மாத்ரமின்றிக்கே, உபாயம் பலம் இவைகளும் விளக்கப்படுகின்றன. 'பகவான் ஸர்வஜ்ஞன், அபரிச்சிந்நங்களான ஜ்ஞாந சக்திகளை உடையவன்; அவனே மோக்ஷப்ரதன்' என்பதை விவரித்த பிறகு, இந்த ஸம்ஸாரத்தில் அகப்பட்டுக்கொண்டு அதன் தாபத்தால் வருந்தும் ஒவ்வொருவனும் அந்தப் பகவானுடைய க்ருபையினாலேயே தன்தன் இஷ்டத்தைப் பெறவேண்டி இருக்கிறான் என்னும் உண்மையையும், பரம நிச்ரேயஸமாகிற மோக்ஷத்தை விரும்புமவர்களும் அந்தப் பகவானை ஆராதித்தே மோக்ஷத்தைப் பெறவேண்டும் என்னும் உண்மையையும் இந்த ஸூக்தம் ஸூசிப்பிக்க ப்ரவ்ருத்திப்பது யுக்தமேயாகும். கடைசியில் 'தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி' [அந்தப் பகவானை இவ்விதம் அறிந்து எவன் உபாஸிக்கிறானோ, அவன் அம்ருதத்வத்தை அடைகிறான்] என்னும் வாக்யத்தாலும் இந்த அர்த்தம் விளங்கும். ஆகையால், இவ்விடத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள யஜ்ஞம் ஒருவித மாநஸ யஜ்ஞமென்பது ஸித்தம்.

யத் – [யதா] எப்பொழுது, தேவா: – தேவர்கள், புருஷேண ஹவிஷா – புருஷனாகிற ஹவிஸ்ஸால், யஜ்ஞம் - யஜ்ஞத்தை, அதந்வத – செய்தார்களோ, அஸ்ய - [அப்பொழுது] அந்த யஜ்ஞத்திற்கு, வஸந்த: - வஸந்தகாலமானது, ஆஜ்யம் - நெய்யாக, ஆஸீத் - ஆயிற்று. க்ரீஷ்ம: – கோடைகாலமானது, இத்ம: - ஸமித்தாக, ஆஸீத் - ஆயிற்று. ஶரத் - சரத்காலமானது, ஹவி: - புரோடாசமாக, ஆஸீத் - ஆயிற்று.

ஸப்தாஸ்யாஸன் பரிதய: ।
த்ரிஸ்ஸப்த ஸமித: க்ருதா: ।

தேவா யத்யஜ்ஞம் தந்வாநா: ।
அபத்நந் புருஷம் பஶும் ॥— 7.

அஸ்ய — அந்த யஜ்ஞத்திற்கு, ஸப்த பரிதய ஆஸந் - ஏழு பரிதிக இருந்தன [காயத்ரி முதலிய ஏழு சந்தஸ்ஸுக்கள் பரிதிகளாயினவாம் த்ரிஸ்ஸப்த ஸமித: - இருபத்தோரு ஸமித்துக்களும், க்ருதா: - செய்யப்ப டன [பன்னிரண்டு மாஸங்களும், ஐந்து ருதுக்களும், மூன்று லோகங்களு ஆதித்யனும், ஆக இருபத்தோரு பதார்த்தங்கள் ஸமித்துக் களாயின யத் - எப்பொழுது, தேவா: - தேவர்கள், யஜ்ஞம் - யஜ்ஞத்தை, தந்வாநா: செய்தார்களோ, [அப்பொழுது அவர்கள்] புருஷம் - அந்தப் புருஷ பஶும் - பசுவாக, அபத்நந் — கட்டினார்கள்.

தம் யஜ்ஞம் பர்ஹிஷி ப்ரௌக்ஷந் ।
புருஷம் ஜாதமக்ரத: ।
தேந தேவா அயஜந்த ।
ஸாத்யா ருஷயஶ்ச யே ॥—8.

தம் — [பசுவாகப் பாவிக்கப்பட்ட] அந்த, அக்ரத: ஜாதம் புரு ஷம் யஜ்ஞம்—[விராஜோ அதி பூருஷ: என்னும் வாக்யத்தில் சொல் யிருக்கிறபடி] முன் உண்டான புருஷனாகிற யாக பசுவை, பர்ஹிஷி (மாநஸ) யஜ்ஞத்தில், ப்ரௌக்ஷந் - விசஸநம் செய்தார்கள். தேந - அந்த புருஷ பசுவைக் கொண்டு, தேவா: - தேவர்களும், ஸாத்யா: — ஸாத்யர் களும், ருஷயஶ்ச - ருஷிகளும், அயஜந்த — யாகத்தைச் செய்தார்கள்.

இந்த ருக்குக்களின் தாத்பர்யமென்ன வென்றால், 'வ்யஷ்டி ஸ்ருஷ் யைச் செய்ய ப்ரவர்த்தித்த சதுர்முக ப்ரஹ்மா முதலில் பகவானைக் குறித் ஆத்ம ஸமர்ப்பண ரூபமான ஆராதநத்தைச் செய்தார்' என்பது தான் 'தேவா:' (தேவர்கள்) என்பவர்கள் இந்த யாகத்தைச் செய்தார்களென் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த 'தேவா:' என்னும் பதத்திற்கு 'ஸ்ருஷ் ஸாதநயோக்யா: ப்ரஜாபதிப்ராணரூபா தேவா:' (ஸ்ருஷ்டியைச் செய்வதற் யோக்யங்களான ப்ரஹ்மாவின் ப்ராணங்கள்) என்று பொருள் கொள்ள பட்டிருக்கின்றது. இந்த ந்யாயத்தை அநுஸரித்து, 'ஸாத்யா: ருஷய என்னும் சப்தங்களுக்கும் 'கர்மேந்த்ரியங்கள் ஜ்ஞாநேந்த்ரியங்கள்' என் பொருள் கொள்ளக்கூடும். பசுவாகச் சொல்லப்பட்டிருக்கும் புருஷன்



'தஸ்மாத் விராடஜாயத' என்னும் வாக்யத்தாற் சொல்லப்பட்ட சதுர்முக ப்ரஹ்மாவே என்று ஏற்படுகின்றது. இதனால் சொல்லப்படுவது என்ன வென்றால், அநிருத்த மூர்த்தியிலிருந்து வெளிவந்த சதுர்முக ப்ரஹ்மா, அந்த அநிருத்தனால் வ்யஷ்டி ஸ்ருஷ்டியில் நியமிக்கப்பட்டவனாய்க் கொண்டு, அந்த ஸ்ருஷ்டியைச் சரிவரச்செய்வதற்குத் தேவையான ஜ்ஞாநம் பலம் முதலியவற்றைப் பெறுவதற்காகத் தனது ப்ராணன் இந்த்ரியங்கள் இவைகளைக்கொண்டு அந்தப் பகவானை உத்தேசித்துத் தன்னையே மாநஸிகமாக ஸமர்ப்பித்துக் கொண்டான். அந்த ஸமர்ப்பணத்தால் த்ருப்தனாய் அந்தப் பகவான் அவனால் இஷ்டப்பட்ட ஸ்ருஷ்டியைச் சரிவரச் செய்வித்தான்' என்பது தான். 'ப்ரஹ்மாவைப் பசுவாகக் கட்டி விசஸநம் செய்தார்கள்' என்பதற்குத் தன்னையே பகவானுக்கு ஸமர்ப்பித்துக் கொண்டான் என்பதே தாத்பர்யம். இப்படி ஆத்ம ஸமர்ப்பணம் செய்வதே பெரிய பகவதாராதநமாகுமாதலால், இவ்விடத்தில் ப்ரஹ்மாவாற் செய்யப்பட்ட ஆராதநத்தின் ப்ரகாரமானது ஆத்ம ஸமர்ப்பண ரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள ஏழு பரிதிகள் இருபத்தோரு ஸமித்துக்கள் வஸந்தமாகிற ஆஜ்யம் இவை முதலியவையெல்லாம், யஜ்ஞ ரூபவர்ணநத்தை ஸமக்ரமாகச் செய்வதற்காகக் கூறப்பட்டுள்ளன வென்று மாத்ரம் க்ரஹித்தல் வேண்டும்.

இது தான் தாத்பர்யம் என்பதற்கு இந்த ஸூக்தத்தின் உபஸம்ஹார வாக்யங்களும் ப்ரமாணம். "யஜ்ஞேந யஜ்ஞமயஜந்த தேவா:" இத்யாதியான வாக்யங்களால் இவ்விடத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள மாநஸ யஜ்ஞமே குறிக்கப்படுகின்றதென்பது வ்யக்தம். அவ்விடத்தில் இப்படி யாகம் செய்வது ப்ரதமமான தர்மமென்றும், அதைச் செய்தவர்கள் 'நாகம்' என்று சொல்லப்படும் மோக்ஷத்தை அடைகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? கேவல பாஹ்ய யஜ்ஞத்திற்கு இந்தப் பலம் ஒட்டாதாகையால், இந்த யஜ்ஞத்தை ஆத்ம ஸமர்ப்பண ரூபமான மாநஸ யஜ்ஞமென்று சொல்வதே உபபந்நமாகும்.

இந்த அர்த்தத்தை அறியாத மேல்நாட்டு வித்வான்கள், இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள யஜ்ஞமானது நரபலியைக் குறிக்கின்றதென்றும், இந்த ஸூக்தத்தைச் செய்த நமது பெரியோர்கள் நரபலியில் ஆஸக்தியுடையவர்கள் என்பதற்கு இது போதுமான ப்ரமாணமாகின்றதென்றும் உத்கோஷிக்கிறார்கள். இவர்களின் புத்திசாலித்தனத்தை நாம் என்னென்று சொல்வோம்?

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்³ரஹ்மணே நம:

# ஒரு தர்ம சாஸ்த்ர விஷய நிர்ணயம்

ஒருவன் மாதா பித்ரு தீக்ஷையில், கோயில் மடம் முதலிய இடங்களில் பரார்த்த மாகத் திருவாராதகம் உத்ஸவம் முதலியவைகளைச் செய்ய அர்ஹனா? அல்லது அர்ஹனன்றா? என்பது ஸம்சயம். இந்த விஷயத்திற் சிலர்,

“பிதரௌ சேந்ம்ருதௌ யஸ்ய தே³ஹஸ்தஸ்யாஶுசிர்ப⁴வேத் ।
ந தை³வம் நாபி பித்ர்யம் ச யாவத்பூர்ணோ ந வத்ஸர: ॥”

என்னும் ஸாமாந்ய வசநத்தைக் கொண்டு அவன் அவைகளுக்கு அநர்ஹனென்று ஆக்ஷேபிப்பார்கள். அது சரியன்று; ஏனென்றால், இந்த வசநத்தை நிபந்தநக்காரர்கள் விசேஷத்தில் ஒதுக்கியிருக்கிறார்களன்றோ? வைதிக ஸார்வ பௌமர், தமது தசநிர்ணயம் என்னும் க்ரந்தத்தில் [தெலுங்கு புஸ்தகம் 123—வது பக்கம் பார்க்க] இந்த வசநத்தை உதாஹரித்து, இதில் இருக்கும் “ந தைவம்” என்பதற்கு,

“ஸ்நாநாதிகம் ச ஶ்ரௌதஸ்மார்தே ந காரயேத் । ததா² ஸ்வ
ஸ்நாநம் சைவ தர்பணம் ஸ்வாத்⁴யாயஸ்தர்பணம் வர்ஜயேத் ।
ஶ்ரௌதஸ்மார்தே ந கல்பயேத்”

என்றும், “நாபி பித்ரியம்” என்பதற்கும்,

“தா³நம் பித்ருஶ்ராத்³தா⁴தி³ விவாஹாதி³ நிஷேத⁴யேத், ததா²
யஜ்ஞம் ந ஶ்ராவணிகோபாகர்ம:”

என்றும் சாயா வ்யாக்யாநம் செய்து, இந்த ஸாமாந்ய நிஷேதத்தை விசேஷ விஷயத்தில் ஒதுக்கியிருக்கிறார். இதுபோலவே வைத்யநாத தீக்ஷிதரும் தமது ச்ராத்த காண்டம் என்னும் க்ரந்தத்தில் [தெலுங்கு புஸ்தகம் 238—வது பக்கம் பார்க்க] மேற்கண்ட வசநத்தை உதாஹரித்து,

“தை³வம் - தே³வதாராத⁴நாதி³, பித்ர்யம் - அந்யேஷாம் ஶ்ராத்³த⁴ம்
விஜ்ஞேயம்”

என்று வ்யாக்யாநம் செய்து விசேஷ விஷயத்தில் பர்யவஸிப்பித்தார். மேலும், இந்த விசாரத்தின் முடிவில்,

“பிதரௌ சேந்ம்ருதௌ யஸ்ய தே³ஹஸ்தஸ்யாஶுசிர்ப⁴வேத்”
இதி ஶ்லோகத்³வயேந உக்தஸங்கோசவ்ருத்திரிதி ஸர்வாணி ஶுப⁴
கர்மாணி விவாஹாதீ³ந்யபி கர்தவ்யாநீதி ஶிஷ்டாசாரஸித்³த⁴
வ்யவஸ்தா”

என்று சிஷ்டாசாரத்தினால் தலைக்கட்டினார்.

சிஷ்டாசாரத்தை விசாரித்ததிலும், ஸ்ரீரங்கம் காஞ்சீபுரம் முதலிய ஸம்ப்ரதிபந்ந திவ்ய தேசங்களில் பித்ரு தீக்ஷையில் ரக்ஷா பந்தநம் தவிர மற்ற ஆராதந உத்ஸவாதிகளைச் செய்து வருவதாகவே அர்ச்சகர்கள் சொல்லுகிறார்கள். மேலும் இவ்விடம் ஸ்ரீரங்கத்தில் சற்றேறக்குறைய இரண்டு வர்ஷங்களுக்கு முன் பித்ரு தீக்ஷையில் ராகவ பட்டர் என்பவர் ரக்ஷா பந்தநம் தவிர மற்ற ஆராதந உத்ஸவாதிகளைச் செய்து வந்தது அனைவரும் அறிந்த விஷயமே. இப்படி சிஷ்டாசாரத்தின் படிக்கும் நிபந்தநக் காரர்களுடைய நிர்ணயத்தின் படிக்கும் இந்த ஸாமாந்ய வசநத்தை விசேஷத்தில் ஒதுக்காவிட்டால் விசேஷ விதாயக வசநம் அகப்படும்வரை ஸ்வார்ச்சையின் ஆராதநத்திற்கும் ஸ்வ பித்ரு கார்யத்திற்கும் அநுஷ்டிக்க இடமிராமல் போகவேண்டி வரும்.

இந்த ஆசாரத்திற்கு மூலாதாரங்களாக ஸ்ரீ ப்ரச்ந ஸம்ஹிதை ப்ராயச்சித்தாத்யாயத்தில் [க்ரந்தப் புஸ்தகம் 104—வது பக்கம் பார்க்க] சில ப்ரமாண வசநங்கள் காணப்படுகின்றன.

“மாதாபித்ரோர்தீ³க்ஷிதஸ்து விப்ரோ யதி³ ஜீவத: ।
ஶ்ராத்³த⁴கர்தா ச புத்ராணாம் விவாஹேऽபி தீ³க்ஷித: ॥ 1
கங்கணம் தே ந ப³த்⁴நீயாத் ருதாசார்யமஹர்த்விஜ: ॥”
“ஏககுண்ட³விதா⁴நம் சேத் தந்த்ராசார்யஸ்ய ப³ந்த⁴நே ।
ஆசார்யஸ்த்வம் ப³த்⁴நீயாத் கங்கணம் ருத்விஜம் விநா ॥” 2
“ரக்ஷாஸூத்ரம் விநா கார்யமேகாஹோத்ஸவாதி³கம் ॥
ப⁴க்தபி³ம்போ³த்ஸவம் ச லகு⁴ஸம்ப்ரோக்ஷணம் ததா² ॥” 3

இவைகளுள் முதலாவது மாத்ரு பித்ரு தீக்ஷையுடையவர் முதலானவர்கள் கங்கணம் கட்டிக்கொள்ளக் கூடாதென்று நிஷேதிக்கின்றது; இரண்டாவது, ஏக குண்ட விதாந விஷயத்தில் ஆசார்யன் மாத்ரம் கங்கணம் கட்டிக்கொள்ளலாமென்று சொல்லுகின்றது; மூன்றாவது, ஒரு நாளுத்ஸவம் முதலியவைகளுக்கும் பக்த பிம்போத்ஸவத்திற்கும் லகு ப்ரோக்ஷணத்திற்கும் கங்கணம் வேண்டுவதில்லை யென்று சொல்லுகின்றது. முதலாவதில் கங்கணம் மாத்ரம் கட்டிக்கொள்ளக் கூடாதென்றிருப்பதால் சேஷ ந்யாயத்தால் மற்றவை செய்யலாமென்று ஏற்படுகின்றது. பக்த பிம்போத்ஸவம் கங்கணமிராமல் செய்யவேண்டியதென்றிருப்பதாலும் மாதா பித்ரு தீக்ஷையில் ஸாதாரண பக்த பிம்போத்ஸவாதிகள் செய்யலாமென்பதும் ஏற்படுகின்றது.

இப்படி தோழப்பர் தீக்ஷிதர் முதலிய நிபந்தநக் காரர்கள் விஷய வ்யவஸ்தை செய்திருப்பதாலும், ஸ்ரீ ப்ரச்ந ஸம்ஹிதையை ஒட்டி சிஷ்டாசாரம் இருப்பதாலும், ரக்ஷா பந்தந மிராத பக்த பிம்போத்ஸவாதிகளை நிராக்ஷேபமாய் பித்ரு தீக்ஷையிலும் செய்யலாமென்பது ஸித்தம். இந்தப்படி ஸ்ரீ நியமநம்.

ஸ்ரீரங்கம்
பவ ஹூ
புரட்டாசி 21உ
7—10—34

அம். வ. நரஸிம்ஹ தாஸன்,
ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ
ஸ்வாமி ஸந்நிதி ஆஸ்தாந வித்வான்.

ஸ்ரீ:

# புஸ்தக விமர்சம்

(1) "ஸித்தாந்த த்ரய ஸங்க்ரஹம். இது, மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ உ. வே. தேசிகாசார்ய ஸ்வாமியால் இயற்றப்பெற்று, கும்பகோணம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸபையின் ஆதரவின் கீழ், திவான் பஹதூர் ஸ்ரீ. உ. வே. எஸ். ராகவையங்கார் ஸ்வாமியால் ப்ரசுரிக்கப்பட்டது. இதன் க்ரயம் ரூ. 1—0—0

இந்த க்ரந்தத்தில், த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் ஆக இம்மூன்று ஸித்தாந்தங்களுடைய கொள்கைகள் ஸங்க்ரஹமாக மூன்று அதிகாரங்களில் எழுதப்பெற்றிருக்கின்றன. 'ஸித்தாந்த த்ரய பேத ஹேது நிருபணம்' என்னும் நாலாவது அத்யாயமும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதில், இந்த ஸித்தாந்த பேதங்களெல்லாம் 'தத் த்வமஸி' என்னும் ச்ருதி வாக்யத்தின் நிர்வாஹ ப்ரகாரபேதத்தைக் கொண்டு ஏற்பட்டனவென்பது விளக்கப்பட்டிருக்கின்றது. இந்த க்ரந்தம் எளிதான தமிழ் நடையில், ஸாமாந்ய ஜநங்களுக்கும் ஸுலபமாக விளங்கும்படி எழுதப் பெற்றிருக்கின்றது என்பது இதற்கு ஒரு ஏற்றமே. ஆனால் அதைக் காட்டிலும் அதிக ச்லாக்யமான வேறொரு குண விசேஷத்தை நாம் இதில் காண்கிறோம். அது என்னவென்றால், ஒவ்வொரு ஸித்தாந்தத்தின் ஸ்வரூபமும் உள்ளபடி எவ்வித ஏற்றக்குறைவுமின்றிக்கே அந்தந்த ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கும் ப்ரகாரம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்பது தான். லோகத்தில் ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை ஸங்க்ரஹமாகச் சொல்வது ஸுகரம் என்னும் நினைவு ப்ராயேண எல்லாருக்கும் உண்டு. ஸங்க்ரஹமாகச் சொல்வதில் ஸூக்ஷ்மாம்சங்களின் வர்ணநம் அநபேக்ஷிதமானாலும், சொல்லப்படும் அம்சத்தில் அந்த ஸூக்ஷ்மாம்சங்களுக்கு விருத்தமான விஷயங்கள் தோன்றாமலிருக்கும்பொருட்டும், சொல்லப்படவேண்டிய விஷயங்கள் விட்டுப் போகாமலிருக்கும் பொருட்டும் அந்தந்த வஸ்துவின் ஸகல அம்சங்களின் ஸம்சய விபர்யயங்களற்ற ஜ்ஞானம் அவச்யம் அபேக்ஷிதமேயாகும். ஆகையால், முழுவதையும் கசடறக் கற்றவர்களே சுருக்கங்கள் எழுதுவதில் தேர்ந்தவர்களாவார்கள். வேதாந்த விஷயஜ்ஞானத்தில் ஸ்ரீதேசிகாசார்ய ஸ்வாமி நிஸ்ஸமாப்யதிகரானதால், அவரால் எழுதப்பட்டுள்ள வேதாந்த ஸங்க்ரஹம் அஸாத்ருசமான மஹிமை ஒன்றை உடைத்தாயிருத்தல் வேண்டும். அந்த மஹிமை இந்த க்ரந்தத்தின் ஒவ்வொரு ப்ரகரணத்திலும் நன்கு வெளிப்படுகின்றது என்பதே இதற்கு விசேஷித்த ஏற்றத்தைக் கொடுக்கின்றது.

(2) பகவத்ஸ்தோத்ரம், (3) ஹரிபதகமல ஸ்துதி. இப்பெயர்கொண்ட இரண்டு சிறிய புஸ்தகங்கள் நாம் வரப்பெற்றோம். இரண்டும் பகவானைப் பற்றி ஸம்ஸ்க்ருத பாஷையில் பத்ய ரூபமாக எழுதப்பட்ட ஸ்தோத்ரங்கள். ஒன்று, இருபத்து மூன்று ச்லோகங்களும் மற்றொன்று நாற்பத்தி ஆறு ச்லோகங்களும் கொண்டது. இவைகளின் கர்த்தா, தக்ஷிண தேசத்தில் இருக்கும் புதுக்கோட்டை என்னும் பட்டணத்தில் வக்கீல் வேலை பார்த்து வரும் ஸ்ரீநிவாஸாசார்யர்; ப்ரஸித்த வித்வத் ஸந்ததியில் ஜநித்தவர்; இவருடைய பெரியோர்களிற் சிலரை நாம் அறிவோம். அவர்களிடமிருந்த



வைதுஷ்யத்திற்கும் ஆஸ்திக்யத்திற்கும் அநுரூபமான வைதுஷ்யமும் ஆஸ்திக்யமும் இவரிடம் இருப்பதாகவே இந்த க்ருதிகளிலிருந்து ஏற்படுகின்றது. வித்யாப்யாஸ காலம் முழுவதையும் பாஷாந்தரப் பயிற்சியில் செலுத்தி அதன் ஸம்ஸ்காரத்தையும் வாஸனையையும் நாம் பூர்ணமாக அடைந்திருக்கையிலும், பரம்பராகதமான பகவத் பக்தியும் ச்ரத்தையும் நமது நடை உடை பாவனைகளில் ஆஸக்தியும் நம்மை இன்னும் ஆத்யந்திகமாக விடாமல், இந்த க்ரந்தங்களின் கர்த்தாவிடம் போல சில பாக்யசாலிகளிடம் தங்கி நிற்கின்றனவென்பதைப் பார்க்க நமக்கு மிக்க ஸந்தோஷம் ஜநிக்கின்றது. பெரியோர்களுடைய கடாக்ஷமும் அவர்களுடைய அபிஸந்திகளும் வ்யர்த்தமாக மாட்டாவன்றோ? இந்த க்ருதிகளில் இருக்கும் பதரசனையின் ஸ்வாரஸ்யத்தையும் ஹ்ருதய ரஞ்சகங்களான அர்த்த விசேஷங்களையும் பார்க்கும் பொழுது, மஹா கவியாகப் பரிணமிப்பதற்கு அபேக்ஷிதங்களான குணவிசேஷங்களெல்லாம் இவரிடம் பூர்ணமாக இருக்கின்றனவென்றே தெரியவருகின்றது. இப்புஸ்தகங்களை அபேக்ஷிப்பவர்கள், "ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர் பி. ஏ. பி. எல். ஸ்டேட் வக்கீல், புதுக்கோட்டை" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஒன்றின் க்ரயம் அணா 2; மற்றொன்றின் க்ரயம் தெரியவில்லை.

கீழ்க்கண்டுள்ள க்ரந்தங்களையும் நாம் வரப்பெற்றிருக்கிறோம்.

(1) ப்ரணம ப்ரகாசம்:—ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பெற்று மதுரை ஸ்ரீவேதாந்ததேசிக பக்த ஸபையாரால் வெளியிடப்பட்டது. விலை அணா 2.

(2) ப்ரணம நிஷ்கர்ஷம்:—திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டித பூஷணம் தேசிகதர்சநாசார்ய மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யரால் இயற்றப்பெற்று, ஸ்ரீரங்கம் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால் வெளியிடப்பட்டது. விலை அணா 2.

(3) தத்வ துறதர்சம்:—[இரண்டாவது பிம்பத்தில் இரண்டாவது பாகம்]. ஸ்ரீ கோஷ்டீபுராபிஜநரான வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீராமதேசிகாசார்யரால் இயற்றப்பெற்று, ஸ்ரீரங்கம் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷண ஸபையாரால் வெளியிடப்பட்டது. விலை அணா. 6.

(4) தூஷணபஸரணம்:—வித்வான் புத்தங்கோட்டம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பெற்றது. கொஞ்ச காலத்திற்கு முன் ஸ்ரீதேசிகனுடைய ஸச்சரித்ர ரக்ஷா க்ரந்தத்திலிருக்கும் "அஹிர்புத்ந்ய விச்வேதேவ" சப்த விஷயமாக இவர் எழுதி இருந்த விஷயத்திற்கு, திருவையாறு உத்யான பத்ரிகை ஸம்பாதகரான ஸ்ரீ. உ. ஸ்ரீநிவாஸதாதாசார்யர், அந்த உத்யான பத்ரிகையில், ஒரு ஸமாதானம் எழுதி இருந்தாராம். அதற்கு ப்ரதி ஸமாதானமாக இது எழுதப்பட்டிருக்கின்றதென்று நாம் அறிகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகரின் குறிப்புகள்

---

**ரவீந்த்ர நாத டாகூர்**

இந்த லோகத்தில் நாகரிகம் பெற்றிருக்கும் தேசத்திய பெரியோர்களெல்லாராலும் கொண்டாடப்பட்டவராய் ஒரு மஹான், நமது தேசத்தில், பங்காளத்தில், இருந்து வருகிறார் என்பது பெரும்பாலும் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அவர் பெயர் ரவீந்த்ர நாத டாகூர். அவர் பெரிய கவி. அவருடைய கவனங்கள் பாச்சாத்ய தேசங்களில் அநேகபாஷைகளில் மொழி பெயர்க்கப் பெற்று அந்தத் தேசங்களில் ப்ரஸித்தர்களாயிருக்கும் வித்வான்களால் மிகவும் புகழப்பட்டு வருகின்றன. அவர் லோகத்திலுள்ள ஸகல ஜநங்களுடைய க்ஷேமத்தையும் உத்தேசித்து 'விச்வ பாரதி' என்னும் பெயருடைய ஒரு பெரிய வித்யாலயத்தை ஏற்படுத்தி இருக்கிறார். அதன் நோக்கம் கேவலம் வித்யாப்யாஸம் செய்வித்தல் வேண்டுமென்பது மாத்ரமன்று; அஹிம்ஸை ஸத்ய வசநம் பூததயை அத்வேஷம் இவை முதலிய நற்குணங்களையும் எல்லாருக்கும் புகட்ட வேண்டுமென்பது தான் அதன் முக்ய கருத்து. தயையும் ஸௌஹார்த்தமும் கேவலம் ஸ்வஜநங்களுக்குள் மாத்ரம் பாராட்டப்பட்டு வராமல் ஸமஸ்தமான ஜந ஸமூஹத்தைக் குறித்தும் அவை நடையாடி வரும்படி அவைகளை எல்லாருக்கும் போதித்தல் வேண்டும் என்னும் எண்ணத்துடன், இந்த மஹான், அந்தப் பாடசாலையில் பல தேசங்களிலிருந்து மாணாக்கர்களை வரவழைத்து, அவர்களெல்லாரையும் பரஸ்பரம் ப்ராதாக்கள் போல நடந்து வரும்படிப் பழக்கி வருகிறார். நாம் எல்லாரும் ஒருவரை ஒருவர் உள்ளபடி அறிந்து கொண்டு, ஒருவருடைய மனோபாவங்களை மற்றொருவர் விபரீதமாக க்ரஹியாமல் மாத்ரம் வர்த்தித்து வந்தால் இப்பொ



ழுது லோகத்தில் தென்படும் துன்பங்களில் பாதிக்கு மேலாகவே குறைந்து விடும் என்பது இவர் நம்பிக்கை. இவர் ப்ரயாஸப் பட்டுவருவதெல்லாம் அந்த நற்காலத்தை ஸம்பாதிப்பதற்காகவே.

இவர் இப்பொழுது இந்த மதராஸிலுள்ள சில பெரியோர்களால் அழைக்கப்பட்டவராய் இவ்விடம் வந்திருக்கிறார். சென்ற வாரத்தில், இந்த மதிராஸ் கார்போரேஷன் அங்கத்தினரால் அவர் ஸத்கரிக்கப்பட்டபொழுது அவர், ஜநங்களின் தற்கால ஸ்திதியைப்பற்றி சில அருமையான விஷயங்களை ப்ரஸ்தாவித்தார். அவை விவேகிகளெல்லாராலும் தீர்க்கமாக ஆலோசிக்கத் தக்கவைகளாக இருக்கிறபடியால் அவைகளை இவ்விடத்தில் ஸங்க்ரஹித்து எழுதுகிறோம். இப்பொழுது ஜகத்தின் ஸ்திதி எப்படி இருக்கின்றது என்பதை வர்ணித்து வருகையில், அவர் சொன்னதாவது:—

" இப்பொழுது ஜநங்களுக்குள் பரஸ்பரம் காணப்படும் அஸூயையைப் போலவும், பேராசையைப் போலவும், த்வேஷத்தைப் போலவும் இதுவரை இந்த ஜகத்தில் ஒருவரும் பார்த்திருக்கமாட்டார்கள். தர்ம புத்தியே அற்றுப் போயிருப்பது போலத் தோன்றுகிறது. ஒவ்வொரு தேசத்தாரும், தமது பலத்தையும் துர்பலத்தையும் கொஞ்சமேனும் ஆலோசியாமலே, பிறருக்குத் தம்மால் கூடியவரையில் எவ்விதத்தில் ஹிம்ஸை செய்யலாமென்பதையே மனத்தில் கொண்டவர்களாய், அதை ஸாதித்துக் கொள்வதற்கு வேண்டுவதான க்ரூர மார்க்கத்தைத் தேடிவருகிறார்கள். பாதாளத்தில் கொண்டுபோய்த் தள்ளும் இந்த மார்க்கத்தின் வழியாக, ஒருவரோடொருவர் பந்தயம் போட்டுக்கொண்டு ஓடுவது போல எல்லாரும் ஓடுகிறார்கள். அந்த ஓட்டத்தில், சற்று நிற்கவேண்டுமென்றாவது கொஞ்சம் மெதுவாகப் போகலாமென்றாவது நினைப்பவரைக் காணோம். ஜந ஸமூஹத்திற்கே ஸந்நிபாத ஜ்வரம் போன்ற ஒரு ஆவேசம் பிடித்திருக்கின்றது; ஒவ்வொரு வ்யாபாரத்திலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் வேண்டுமென்னும் எண்ணத்தின் ஸ்தாநத்தில் துராக்ரஹம் மேலிட்டு நிற்பதையே நாம் பார்க்கிறோம்.

அர்த்த விஷயத்திற் செலுத்தப்படும் பேராசைக்கு ஒரு வித எல்லையும் இல்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பைத்தியம் பிடித்த ஒருவன் ஆகாசத்தைப் பிடிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் தலைகால் தெரியாமல் ஓடுவதைப் போன்றதன்றோ இந்தப் பேராசை கொண்டவனுடைய போராட்டம்? கோடியுடன் கோடியைச் சேர்க்கவேண்டுமென்னும் ஆவேசத்திற்கு நிலை ஏதாவது உண்டோ? 'எவ்விதத்தில் மற்றவர்களை ஜயிப்பிக்க

லாம்? எப்பொழுது ஸகலமும் நமக்குக் கிடைத்துவிடும்?' என்னும் துராக்ரஹத்துடன் ஒருவரை ஒருவர் கொல்வதற்கு வேண்டுவனவான அஸ்த்ரங்களையும் சஸ்த்ரங்களையும் வ்ருத்தி செய்து கொண்டும் புதிய புதிய பயஹேதுக்களை உத்பத்திசெய்து கொண்டும் ஸாது ஜநங்களின் ஹ்ருதயம் நடுங்கும்படி அவர்கள் வெறிபிடித்தே நிற்பார்களல்லவோ? கடைசி காலத்து பைசாசம் போலன்றோ அவர்களுடைய மநஸ் எல்லாரையும் ஆக்ரமிக்கும்!

இக்காலத்திய லோக ஸ்திதி, அந்த ஆசையால் ஆக்ரமிக்கப்பட்டதாய் இருக்கின்றது. இந்த ஸங்கடத்தில் விவேகிகளான நாம் செய்ய வேண்டுவது என்! எல்லாருடனும் நாமும் கும்பலோடு கும்பலாகச் சேர்ந்து கொண்டு, ஜகத்தின் ப்ரளயத்தை த்வரிப்பிக்க ப்ரயத்நப்படுவது யுக்தமாகுமோ! தர்ம மார்க்கத்தை நாம் கைப்பற்றுதலன்றோ நமக்கு உசிதமாகும்? ஸர்வ ஜநங்களிடமும் ஸௌஹார்த்த புத்தியையும், பிறருக்கு உபகாரம் செய்யும் நோக்கத்தையும், அதர்ம ப்ரவ்ருத்தியை நிர்ப்பயமாக எதிர்த்து நிற்கும் தைர்யத்தையும் நாம் பயிற்சி செய்து வருவது ஒன்றே நமக்கு இப்பொழுது அநுரூபமாகுமென்று எனக்குத் தோன்றுகிறது. எல்லாரும் தர்மத்தைக் கைப்பற்றுவோம். நாம் என்பதையும் நம்முடையது என்பதையும் மறந்து, பிறருக்கு உதவி செய்வதிலேயே கருத்தைச் செலுத்துவோம். நமது ச்ரேயஸ் முழுவதும், ஒருவருக்கொருவர் நாம் அன்பு பாராட்டுவதையும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதையுமே சார்ந்து நிற்கின்றது. நமக்குக் கிடைத்துள்ள த்ரவ்யத்தைக் கொண்டு த்ருப்தி அடைந்து, நமது நடை உடை பாவனைகளில் ஸாதுத்வத்தையே பாராட்டிக் கொண்டு எல்லாருக்கும் ம்ருதுவாகவும் ப்ரியமாகவும் நாம் நடந்து வந்தால், நம்மால் ஜயிக்கப்படாத வஸ்துவும் இந்த லோகத்தில் இருக்குமோ? இந்த லோகம் மாத்ரமின்றிக்கே இந்த ப்ரபஞ்சம் முழுவதும் நமது வசமாகிவிடாதோ! இந்த மார்க்கத்திலன்றோ உண்மையான ஜயம் நிற்கின்றது? இந்தப் புதிய மார்க்கத்தை நான் உங்களிடம் சொல்லிக் கொள்ளுகிறேன். பழைய காலத்து அழுகைக் குறலை இது சமநப்படுத்தும்; புதிய ஒரு தேவ காநத்தை இது உண்டாக்கும்.''

கம்பீரமான வார்த்தைகள் இவை. சாச்வதமான ச்ரேயஸ்ஸானது வைராக்யத்தாலேயே பெறத் தகுந்தது. ராகத்தால் கிடைக்கும் ச்ரேயஸ் அல்பமே, அஸ்திரமே. ரவீந்த்ர நாத டாகூர் செய்யும் இந்த உபதேசம் மிகவும் புகழத்தகுந்தது தான். ஆனால், எப்படி அந்த வைராக்யத்தை நாம் பெறக்கூடும்? எவ்விதம் பெற்றால் அது நம்மிடம் நிலைபெற்று நிற்கும்? என்பதைப் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. அப்படி உபாயத்தைக் காண்பியாமல், அம்மாதிரியான வைராக்யத்தைப் பெறுதல் வேண்டும்



என்பதைத் திருப்பித் திருப்பிச் சொல்வதால் மாத்ரம் அது கிடைத்துவிடுமோ? அவருடைய வித்யாலயத்தில் நடைபெற்றுவரும் நடவடிக்கைகளும் அவருடைய ஸ்வாநுஷ்டாநமும், கேவலம் இச்சையாலேயே அந்த வைராக்யமும் ஸாத்விகத் தன்மையும் கிடைத்து விடுமென்று அவர் நம்பி இருப்பதாகவே தெரிவிக்கின்றன. ரஜஸ் தமஸ் தலை சாய்ந்து ஸத்வம் மேலிட வேண்டுமென்னும் வரை அவருடைய நோக்கம் புகழத்தகுந்ததே. அந்த ஸத்வ வ்ருத்தி கேவலம் இச்சையாலும் கேவலம் பேச்சினாலும் கிடைத்து விடும் என்று எண்ணும் அம்சத்தில் அவர் ப்ரமித்திருக்கிறார் என்றே நாம் சொல்லத் துணிவோம். ராகம் த்வேஷம் முதலியவைகளால் கலங்கி இருக்கும் நம்முடைய மநஸ், நாம் எல்லாரும் தம் தமக்கு உரிய சாஸ்த்ரீய கர்மங்களைக் கேவலம் பகவதாராதந ரூபமாகவும், ஸ்வப்ரயோஜந முடையது என்னும் எண்ணம் இராமலும், சரிவர அநுஷ்டித்து வந்தால் மாத்ரம், தெளிவு அடையுமே தவிர, கேவல விருப்பத்தாலும் பேச்சாலும் தெளிவடைய மாட்டாது. அது தெளிவு அடைந்தால் மாத்ரம், அது ஸாத்விகமாகும்; நம்மால் இச்சிக்கப்படும் பதவியை நமக்குக்கொடுக்கும். அப்படிப்பட்ட கர்மாநுஷ்டாநத்தால் மநஸ் தெளிவடையாதவரையில், நாம் என்ன ப்ரயத்நம் செய்தபோதிலும் நமது மநஸ் நமக்கு ஸ்வாதீநமாக நிற்கமாட்டாது. அம்மாதிரியான கர்மாநுஷ்டாநத்தை விலக்கிவிட்டு பயனைமாத்ரம் பெறுவதற்கு விரும்பும் டாகூருடைய கார்யமானது,

"ஸப்தமௌலேஸ் ஸௌதஸ்ய ஸப்தமம் தலம் ப்ரதமம் சிகீர்ஷதீவ ஹாஸ்யஸ்யைவ"

[ஏழு மாடியுடன் கூடிய கோபுரத்தைக் கட்டப்புகுகிறவன் முதலில் ஏழாவது மாடியைக் கட்ட ஆரம்பிப்பது போல பரிஹஸிக்கத் தகுந்ததே] என்று ஸமாந ப்ரகரணத்தில் ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹித்திருப்பதற்கு ஒத்ததே; எல்லாராலும் பரிஹஸிக்கத் தகுந்ததே ஆகும்.

டகூர், 'தர்ம புத்தியை வ்ருத்திசெய்துகொள்ள வேண்டும்' என்று சொல்லவில்லையா?' என்று கேட்கலாம். அவர் 'தர்மம்' என்னும் பேச்சைப் பேசுகிறார் என்பது உண்மையே. ஆனால் அவருடைய தர்மம் வேறு, நாம் சொல்லும் தர்மம் வேறு. தைவம் என்று ஒன்று உண்டென்பதும், அந்தத் தைவத்தால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு உட்பட்டு நடப்பதே தர்மமென்பதும் நமது கொள்கை. 'தைவம் உண்டோ இல்லையோ; அது எப்படிப் போனாலும் போகட்டும்; மஹா ஜநங்களுக்கு அநுகூலமென்று மஹா ஜநங்களால் எது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ அதை அநுஷ்டிப்பதே தர்மம்' என்பது அவருடைய கொள்கை. ஆஹாரம் விவாஹம் முதலிய

விஷயங்களிலும் இன்னும் வேறு ஆசாரங்களிலும் அவர் ஒருவித நிர்பந்தத்தையும் அங்கீகரிப்பதாக நமக்குத் தெரியவில்லை. ப்ரத்யுத, நம்முடைய வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந ஸம்பத்துக்களான நிபந்தனைகள் எல்லாம் தம்மால் கோறப்படும் ச்ரேயஸ்ஸுக்கு ப்ரதிகூலங்கள் என்று அவர் க்ரஹித்திருப்பதாகவே நாம் அறிகிறோம். பல தேசங்களிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும் புமான்களும் ஸ்த்ரீகளும், ஆஹாரம் முதலானவைகளிலும் ஆசாரங்களிலும் ஒருவித நியமத்திற்கும் கட்டுப்படாமல், ஓரே இடத்தில் சேர்ந்து வஸித்து, கேவலம் டகூர் முதலானவர்களுடைய உபதேசத்தால் மாத்ரம் மநஸ்ஸின் தெளிவை அடைந்தவர்களாய், அவரால் இச்சிக்கப்படுகிறபடி விரக்தாக்ரேஸரர்களாகவும் ஜ்ஞாநிகளாகவும் பரிபாகத்தை அடைந்தார்களேயானால், அது இந்த ஜகத்தில் இங்குமங்கும் காணப்படும் அபூர்வ அத்புதங்களுள் ஒன்றாகவே நாம் நினைப்போம்.

இக்காலத்திய லோக ஸ்திதி, டகூர் சொல்வது போல இருக்கின்றதென்பதில் ஆக்ஷேபமில்லை. லாய்ட் ஜார்ஜ் (Lloyd George) என்னும் ஒரு ப்ரஸித்த பாச்சாத்யர், லண்டன் நகரத்தில் இந்த மாஸம் முதலில் நடைபெற்ற ஒரு ஸங்கத்தில், பின்வருமாறு பேசி இருக்கிறார்:—

"The world to-day is a jungle and the nations are prowling through it, snarling at each other and baring their teeth. Any moment a mistaken gesture, any misunderstood arrangement may make them spring at each other's throats. Sgr. Mussolini, the greatest realist in Europe. talks about training the children of Italy from seven upwards to the use of arms. Henceforth, if that policy is to be followed by every statesman in the world, 'you will have a scroll on the walls of every school Little children, kill one another.' Don't trust human nature It is a savage race. With all my optimistic temperament I tell you there is only just time to stop war."

ராகமும் த்வேஷமும், இவர் சொல்வது போல, நம்மிடம் உந்மஸ்தகங்களாகவே இருக்கின்றன. அவைகளை அடக்குவதற்கு ப்ரயத்நப்படுபவர்களெல்லாரும் ஜகதுபகாரகர்களே. ஆனால், வைகளை அடக்குவதற்கு நமது மஹர்ஷிகள் காட்டியிருக்கும் வழியே சரியான வழி. அவ்வழி போவதற்கு ஸ்ரீ சரண்யன் எல்லாருக்கும் புத்தியைக் கொடுக்கவேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை.



𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌕𑍍𑌵𑌚𑌨 𑌕𑍇𑌚𑌿𑌦𑌿𑌹𑍇𑌶𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍
𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍁𑌪𑌗𑌮𑍍𑌯 𑌤𑌦𑍀𑌶𑌮𑌾𑌹𑍁𑌃 ।
𑌤𑍈𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌭𑌵𑌸𑍍𑌯 𑌸𑌮𑌰𑍍𑌥𑌨𑌾𑌯
𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌤𑍁 𑌸𑌾𑌽𑌚𑍍𑌯𑍁𑌤 𑌸𑌾𑌂𑌮𑍁𑌖𑍀𑌨𑌾 ॥ கஅ

18. 'இவ்விதம் ஈச்வர நிர்ணயம் செய்யக்கூடுமோ? ஈச்வரன் என்னும் சப்தம் ப்ரஸித்தமாகப் பசுபதியைக் குறிக்கின்றதன்றோ? அப்படி இருக்கையில் அந்த சப்தத்திற்கு ஸ்ரீமந் நாராயணனே வாச்யன் என்று எப்படி சொல்லக்கூடும்?' என்னும் ஒரு சங்கையைச் செய்து கொண்டு அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறார்.

[ப — ரை] 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 — சிலர், 𑌕𑍍𑌵𑌚𑌨 — சில க்ரந்தங்களில், 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 — (ஸ்ரீமந்நாராயணனைக் காட்டிலும்) வேறு தேவதையினிடத்தில், 𑌈𑌶𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 - ஈசன் என்னும் சப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதிலிருந்து, 𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍍 - லௌகிக வாக்ய ப்ரஸித்தியை, 𑌉𑌪𑌗𑌮𑍍𑌯 —அங்கீகரித்து, 𑌤𑌤𑍍 - அந்தத் தேவதாந்தரத்தை, 𑌈𑌶𑌮𑍍-ஈசனென்று, 𑌆𑌹𑍁𑌃 சொல்லுகிறார்கள். 𑌤𑍈𑌃 - அவர்களால் [அப்படி வாதம் செய்பவர்களால்,] 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌭𑌵𑌸𑍍𑌯 𑌸𑌮𑌰𑍍𑌥𑌨𑌾𑌯 - அப்படிப்பட்ட ப்ரஸித்தி ப்ராமாணிகமா இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்குத் தேவையான ஆதாரத்தைப் பெறும்பொருட்டு, 𑌤𑍍𑌰𑌯𑍀 — வேதமானது, 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 - எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். 𑌸𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀 - அந்த வேதமோவென்றால், 𑌹𑍇 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤 - ஹே அச்யுதனே! 𑌤𑍍𑌵𑌯𑌿 - உன்னிடத்திலேயே, 𑌸𑌾𑌂𑌮𑍁𑌖𑍀𑌨𑌾 — அபிமுகமாக [நோக்கத்தை உடையதாக] நிற்கின்றது.

'ஸ்ரீமந் நாராயணன் பரதேவதையா? இல்லாவிட்டால் பசுபதி பரதேவதையா? என்னும் சங்கை வரும்பொழுது, லோகத்தில் பசுபதியே 'ஈசன்' 'ஈச்வரன்' 'பரமேச்வரன்' என்னும் சப்தங்களால் சொல்லப்படுகிறபடியால் அந்தப் பசுபதியே பரதேவதையாக இருத்தல் வேண்டும் என்று ஒருவித நிர்ணயத்தைச் சிலர் செய்வார்கள்; அது சரியன்று. ஏனென்றால், வேதவாக்யத்தின் அர்த்த விசாரம் செய்யும் பொழுது லோக ப்ரஸித்தியைக் கொண்டு அர்த்தம் செய்வது ந்யாயத்திற்கு விருத்தமன்றோ? அந்த வேதவாக்யங்கள் எந்த ஸந்தர்ப்பத்தில் படிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் வேத வாக்யங்களெல்லாவற்றையும் ஸமக்ரமாக எடுத்துக்கொண்டு அவைகளின் தாத்பர்யம் எவ்விடத்தில் ஸ்வரஸமாக ப்ரவர்த்திக்கின்றதென்றும் நிஷ்பக்ஷபாதமாக விசாரித்து, அதனால் ஒரு நிர்ணயத்தைச் செய்வதே ந்யாயத்திற்கு ஒத்ததாகும். அப்படி விசாரித்தால் ஸ்ரீமந் நாராயணனையே பரதேவதையாக ஸகல வேதங்களும் சொல்லுகின்றன என்று ஏற்படும்' என்பது தான் இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகின்றது. அது எப்படி ஏற்படும் என்பது அடுத்த ச்லோகத்தில் விவரிக்கப்படுகின்றது.

யஃ ஸ்வணோரணுதரோ மஹதோ மஹீயா-
ஆத்மா ஜநஸ்ய ஜநகோ ஜகதஶ்ச யோऽஸ்தே ।

---

19. ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை என்று வேதம் சொல்லுகின்றது என்பதை அநேக ஹேதுக்களைக் கொண்டு பஹு முகமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். அவையெல்லாவற்றையும் ஸ்தோத்ர ரூபமான இந்த க்ரந்தத்தில் விவரிப்பது ஸாத்யமில்லையாதலால், அவைகளுள் ஒன்றை மாத்ரம் நிதர்சநமாக இவ்விடத்தில் காட்டுகிறார். அது என்னவென்றால்— 'உபநிஷத்துக்கள் பர ப்ரஹ்மத்தைப் பற்றி பேசுங்காலத்தில், முதலில் அது மிகப்பெரியதைக்காட்டிலும் அதிகப்பெரிது, மிகச்சிறியதைக் காட்டிலும் அதிக ஸூக்ஷ்மமென்றும், அது ஸகல சேதந வஸ்துக்கள் ஸகல அசேதந வஸ்துக்கள் எல்லாவற்றுக்கும் காரணமென்றும், அதுவே அந்தச் சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றுக்கும் அந்தர்யாமி என்றும் சொல்லிவிட்டு, அடுத்து வரும் வாக்யத்தில், அந்தப் பர ப்ரஹ்மம் வேதாத்மகமான ப்ரணவத்தின் காரணமாகிற 'அ' என்னும் அக்ஷரத்தால் சொல்லப்படுமதுவே என்றுமுடிக்கின்றது. 'அ' என்பதற்கு 'விஷ்ணு' என்பதே பொருளாகையால், ஜகத் காரணமான பர ப்ரஹ்மமும் விஷ்ணுவே என்பது ஸித்தம்' என்பதுதான்.

[ப — ரை] யஃ — எந்தப் பகவான், அணோரணுதரஃ — அதி ஸூக்ஷ்மமான வஸ்துவைக்காட்டிலும் அதிக ஸூக்ஷ்மமோ, மஹதோ மஹீயாந் — மிகப் பெரியதைக் காட்டிலும் அதிகப்பெரிதோ, யஃ — எந்தப் பகவான், ஜநஸ்ய — சேதந வஸ்துக்கள் எல்லாவற்றுக்கும், ஜநகஃ — உத்பாதகனாகவும், ஆத்மா ச — அந்தர்யாமியாகவும், ஆஸ்தே ச — இருக்கிறானோ, யஃ — எந்தப் பகவான், ஜகதஃ — அசேதந வஸ்துக்களெல்லாவற்றுக்கும், ஜநகஃ — உத்பாதகனாகவும், ஆத்மா ச — அந்தர்யாமியாகவும், ஆஸ்தே ச — இருக்கிறானோ, தம் — அந்த, வேதாந்தக ப்ரணவகாரணவர்ணவாச்யம் — வேத ஸ்வரூபமான ப்ரணவத்திற்குக் காரணமாயிருக்கும் அக்ஷரமாகிற 'அ' என்னும் அக்ஷரத்தால் குறிக்கப்படும், த்வாம் — உன்னையே, பரமேஶ்வரம் — பரமேச்வர சப்தத்தால் குறிக்கப்படுகிறவனென்று, வயமாமநாமஃ — வேதத்திலிருந்து நாம் அறிகிறோம்.

தைத்திரீயோபநிஷத்தில் சிக்ஷா வல்லி ஆநந்த வல்லி ப்ருகுவல்லி என்று மூன்று அத்யாயத்திற்குப் பிறகு நாராயணோபநிஷத் என்று நாலாவது பாகம் ஒன்று உண்டு. அது ஐம்பத்திரண்டு அநுவாகங்கள் அடங்கியது. ஆநந்த வல்லியில் 'ஆநந்தம்' என்னும் சப்தத்தால் சொல்லப்பட்டுள்ள ஸ்ரீமந் நாராயணனுடைய பாரம்யமே இந்த நாலாவது பாகத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றது. அந்தக் காரணத்தாலேயே இதற்கு 'நாராயணோபநிஷத்' என்று பெயர் ஏற்பட்டது. இந்த நாராயணோபநிஷத்தில் முதல் ஒன்



வேதாந்தகப்ரணவகாரணவர்ணவாச்யம்
தம் த்வாம் வயஞ்ச பரமேஶ்வரமாமநாமஃ ॥ ௧௯

---

பது அநுவாகங்களால் இதில் ப்ரதிபாதிக்கப்படும் வித்யையின் அங்கங்கள் உபதேசிக்கப்பட்ட பிறகு, பத்தாவது அநுவாகத்தில் பர ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் அதன் ரூபம் இவை முதலியவை ப்ரபஞ்சிக்கப்படுகின்றன. அந்த அநுவாகத்திற்கு,

"அணோரணீயாந் மஹதோ மஹீயாநாத்மா குஹாயாம் நிஹிதோऽஸ்ய ஜந்தோஃ"

என்பது முதல் வாக்யம்.

"யோ வேதாதௌ ஸ்வரஃ ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டிதஃ ॥
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய யஃ பரஸ்ஸ மஹேஶ்வரஃ ॥"

என்பது கடைசி வாக்யம். இந்த வாக்யம் இரண்டும், இந்த ச்லோகத்தில் முதல் பாதியில் முதல் வாக்யமும் இரண்டாவது பாதியில் கடைசி வாக்யமாக, ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாக்யங்களின் அர்த்தம் என்னவென்றால்:—

அணோஃ—அணுவாயிருக்கும் ஜீவனைக் காட்டிலும், அணீயாந்—மிக ஸூக்ஷ்மமும், மஹதஃ—மிகப் பெரிய ஆகாசம் முதலியவைகளைக் காட்டிலும், மஹீயாந்—இன்னும் அதிகப்பெரியவனுமாக இருக்கும் பரமாத்மாவானவன், அஸ்ய ஜந்தோஃ—இந்த ஜீவாத்மாவினுடைய, குஹாயாம்—ஹ்ருதயத்தில், ஆத்மா—உள்ளில் ப்ரவேசித்து நியமிக்கிறவனாக, நிஹிதஃ—இருக்கிறான்.

வேதாதௌ வேதாந்தே ச—வேதங்களின் ஆதியிலும் அந்தத்திலும், யஃ ஸ்வரஃ—எந்த ப்ரணவமானது ப்ரதிஷ்டிதஃ ப்ரோக்தஃ—உச்சரிக்கப்படவேண்டுமென்று ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றதோ, தஸ்ய—அந்த ப்ரணவத்தினுடைய, ப்ரக்ருதௌ—மூலமாயிருக்கிற 'அ' என்னும் எழுத்தில், லீநஸ்ய—லயித்திருக்கிற [அதாவது—அந்த எழுத்தின் ரூபத்தை அடைந்திருக்கிற] அக்ஷரத்திற்கு, யஃ பரஃ—எவன் ப்ரதிபாத்யனோ [அதாவது—அந்த 'அ' என்னும் எழுத்தால் எவன் சொல்லப்படுகிறானோ], ஸஃ—அவனே, மஹேஶ்வரஃ—பெரிய ஈச்வரன். 'சப்தங்களுக்கெல்லாம் பரம மூலமானது 'அ' என்னும் எழுத்து; வஸ்துக்களுக்கெல்லாம் பரம மூலமானவன் மஹேச்வரன்; சப்தங்களெல்லாம் வஸ்துக்களைக் குறிக்கிறபடியால், சப்தங்களுக்கு ஆதிகாரணமான எழுத்து வஸ்துக்களின் ஆதிகாரணத்தைக் குறித்தல் வேண்டும் என்று சொன்னதாயிற்று. அந்த 'அ' என்னும் எழுத்து,

ஆத்மேச்வரோऽஸி ந பரோऽஸ்தி தவேச்வரோऽந்ய:
விஶ்வஸ்ய சாயநமஸ்யஸ்ய பராயணம் ச |

---

"அகாரேணோச்யதே விஷ்ணுஸ்ஸர்வலோகேச்வரோ ஹரி:"

['அ' என்னும் பதத்திற்கு விஷ்ணுவாயும் ஸர்வலோகேச்வரனுயுமுள்ள ஹரியே பொருள்] என்னும் ப்ரமாணப்படி விஷ்ணுவையே சொல்லுகிறபடியால், அந்த விஷ்ணுவே மஹேச்வரனுகிருன் என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இம்மாதிரியான வேத வாக்யங்களை ப்ரமாணமாகக் கொண்டு, வேதங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணனை நோக்கியே அபிமுகமாக இருக்கின்றன வென்று நிர்ணயம் செய்யப்படுகின்றது.

வேதாந்தக்லுப்தஜகதேககாரணபாவாத் — கீழ் விவரிக்கப்பட்டுள்ள "யதோ வா" இத்யாதியான வாக்யத்தில் இதன் அர்த்தத்தைக் காண்க.

பரமேச்வரம்—பரமனை ஈச்வரனென்று. பர: பரோ ந யஸ்மாத் [எவனைக்காட்டிலும் உயர்ந்தவன் இல்லையோ]; அதாவது, 'எல்லாரையும் காட்டிலும் உயர்ந்தவன்,' என்று சொன்னதாயிற்று.

ஆம்நாதா:—வேதத்திலிருந்து அறிகிறோம்.

20. கீழ் ச்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்தம் இந்த ச்லோகத்திலும் அடுத்து வரும் ச்லோகங்களிலும் விவரிக்கப்படுகின்றது.

[ப - ரை] நாராயண - ஹே நாராயணனே! அச்யுத - ஹே அச்யுதனே! த்வம் – நீ, ஆத்மேச்வர: – ஜீவாத்மாக்களெல்லாருக்கும் நியந்தாவாக, அஸி – இருக்கிறாய்; அந்ய: - மற்றொரு, பர: - உயர்ந்த, ஈச்வர: - ஈச்வரன், தவ - உனக்கு, நாஸ்தி - இல்லை. விச்வஸ்ய - இந்த ப்ரபஞ்சம் முழுவதற்கும், அயநம் – ப்ராப்யனாக, அஸி - இருக்கிறாய்; அஸ்ய - இந்த விச்வத்திற்கு, பராயணம் ச - ப்ராபகனாகவும், அஸி- இருக்கிறாய். ஆகையால், த்வமேக ஏவ– நீ ஒருவனே, பர:– எல்லாரையும் காட்டிலும் உயர்ந்தவன். ப்ரஹ்மாதயோऽபி - சதுர்முக ப்ரஹ்மா முதலிய மற்றை எல்லாரும், பவதீக்ஷணலப்தஸத்தா: - உன்னுடைய கடாக்ஷத்தாலேயே அடையப்பட்டிருக்கிற உத்பத்தியை உடையவர்கள்.

நாராயண அச்யுத - இந்த இரண்டு பதங்களும், இந்த ச்லோகத்திற் சொல்லப்படும் அர்த்தத்தைக் விளக்கிறபடியால், அவை இவ்விடத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. 'நாராயண' என்னும் சப்தத்திற்குப் பலவிதமாக வ்யுத்பத்தி சொல்லப்படுகின்



நாராயணாச்யுத! பரஸ்த்வமிஹைக ஏவ
ப்ரஹ்மாதயோऽபி பவதீக்ஷணலப்தஸத்தா: || ௨௦
நித்யஸ்ஸமாப்யதிகவர்ஜித உஜ்ஜ்வலஸ்ரீ:
நித்யே ஸுகே திவி வஸந் புருஷ: புராண: |

---

றது. அவைகளுள் 'நாரங்களுக்கு (அதாவது, சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றுக்கும்) அயநம் (அந்தர்யாமி)' என்பது ஒன்று. அது இவ்விடத்தில் விவக்ஷிதம். 'அச்யுத' - எவனுக்கு ச்யவநம் (மாறுதலானது) இல்லையோ அவன் அச்யுதன்.

அயநம் பராயணம்—இவை இரண்டும், 'அவன் ப்ராப்யனாகவும் ப்ராபகனாகவும் இருக்கிறான்' என்பதைக் குறிக்கின்றன. எல்லாராலும் கடைசியாக அடையப்படவேண்டியவன் அவனே; அப்படி அவனை அடைவிக்கிறவனும் அவனே. அதாவது- 'அவனுடைய க்ருபை ஒன்றே அவனை அடைவிப்பிக்கும்; நம்முடைய ப்ரயத்நங்களெல்லாம், அந்த க்ருபையை நம்மிடம் வரவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கும் ப்ரதிபந்தகங்களை நிவர்த்திக்க மாத்ரம் சக்தங்கள்' என்பது தாத்பர்யம்.

ப்ரஹ்மாதயோऽபி—சதுர்முக ப்ரஹ்மாவும் ருத்ரனும் சிற்சிலவிடங்களில் ஈச்வரர்களென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி இந்த வாக்யம் ப்ரவ்ருத்திக்கின்றது. 'அப்படி ஈச்வரர்களென்று சொல்லப்படுமவர்களும் நாராயணனிடமிருந்து உத்பத்தியைப் பெற்றவர்கள் என்றால், நாராயணனுடைய பரம காரணத்வம் விளங்குகிறதன்றோ? "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" (எவன் முதலில் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தானோ) என்னும் வேத வாக்யமானது, நாராயணனால் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கப்பட்டவன் என்பதை விளக்குகின்றது.

21. வேதங்கள் எவனை 'நித்யன்' என்பது முதலான பதங்களால் பேசுகின்றனவோ, அவன் நீயே. அந்த வேதங்கள் அவனை லக்ஷ்மீ பதி என்றும் வைகுண்டவாஸி யென்றும் பேசுகின்றனவல்லவோ?

[ப - ரை] ஹே தரணீதர - ஹே பூமியைத் தரிப்பவனே! [த்வமேக ஏவ - நீ ஒருவனே], நித்ய: – எக்காலத்திலும் இருப்பவன்; ஸமாப்யதிகவர்ஜித: - ஒப்பு உயர்வு அற்றவன்; உஜ்ஜ்வலஸ்ரீ: - உத்க்ருஷ்டையான லக்ஷ்மியுடன் கூடியவன்; நித்யே ஸுகே திவி - நித்யமாயும் எவ்வித விகாரமும் மற்றதாயும் இருக்கும் பரம பதத்தில், வஸந் – வஸித்துக் கொண்டிருக்கும், புராண: புருஷ: - அநாதியாயிருக்கும் புருஷோத்தமன்; ஸத்த்வப்ரவர்த்தநகர: – ஸத்வ கார்யங்களை யெல்லாம் ப்ரவர்த்திப்பித்துப் பரிபாலிப்பவன்; அஸ்ய ஜகதோ நிதாநம் – இந்த ஜகத்திற்குக் காரணம்.

ஸத்த்வப்ரவர்த்தநகரோ ஜகதோऽஸ்ய நித்யம்
நாந்யஸ்த்வதஸ்தி தரணீதர வேதவேத்ய꞉ ॥ 21

யம் பூதபவ்யபவதீஶமநீஶமாஹு꞉
ரத்நாகரோதரநிலயம் யமநந்தரூபம் ।

---

ஆகையால், த்வத꞉ - உன்னைக்காட்டிலும், அந்ய꞉ -வேறொருவன், வேதவேத்ய꞉- வேதங்களால் ப்ரதிபாதிக்கப்பட்டவனாக, நாஸ்தி - இல்லை.

தரணீதர—பூமியைத்தரிப்பவனே. அவன் இந்தப் பூமியை மாத்ரம் தரிக்கிறான் என்பது இல்லை; இந்த ப்ரபஞ்சம் முழுவதையும், இந்த விபூதியைத் தவிர்த்த நித்ய விபூதியையும் அவனே தரிக்கிறான். அவைகளையும் தரிக்கிறவன் என்பதே இந்தப் பதத்தின் குறிப்பு இரண்டு விபூதிகளுக்கும் நிர்வாஹகன்.

நித்ய꞉—நிருபாதிக நித்யன். நித்யமாக இருக்கும் வஸ்து பகவான் ஒருவன் மாத்ரமன்று; ஜீவன்கள் முதலிய சில வஸ்துக்களும் நித்யங்கள். ஆனாலும், அந்த ஜீவன் முதலியவைகளுக்குக் கிடைத்திருக்கும் நித்யத்வம் பகவானால் கொடுக்கப்பட்டது; அவனுடைய நித்யேச்சையால் ஸங்கல்பிக்கப்பட்டது; அப்படி மற்றொருவனுடைய ஸங்கல்பத்தைச் சார்ந்திராத நித்யத்வத்தை உடையவன் பகவானென்பது குறிப்பு.

ஊர்ஜிதஶ்ரீ꞉—'எது ஸத்யமோ, எது ஜ்ஞாநமோ, எது அநந்தமோ அது ப்ரஹ்மம்' என்னும் வாக்யத்தால் சொல்லப்படும், ஸத்யத்வம் முதலியவைகளைக்காட்டிலும் அதிக உத்க்ருஷ்டமாக அவனுக்கு மற்றொரு அடையாளமுண்டு. அது என்னவென்றால் லக்ஷ்மியை மார்பில் உடைத்தாயிருப்பதே. அதாவது, பகவத் ஸ்வரூபத்தை நிரூபித்துக் கொடுக்குமவைகளுள், லக்ஷ்மியுடன் கூடியிருப்பதே மிக உயர்ந்தது என்று சொன்னதாயிற்று. இதுதான் 'ஊர்ஜிதஶ்ரீ꞉' என்னும் சப்தத்தின் தாத்பர்யம்.

ஸத்த்வப்ரவர்த்தநகர꞉—இதற்கு ப்ரமாணமாகப் பின்வரும் வாக்யத்தைக் காண்க. "ஏஷ நாராயண꞉ ஶ்ரீமாந் ஸத்த்வம் ப்ரவர்த்தக꞉" (இந்தப் புருஷோத்தமன் ஸர்வேச்வரன்; ஸத்வ கார்யங்களை ப்ரவர்த்திப்பித்துப் பாவிப்பவன்).

22. புருஷ ஸூக்தத்தால் ப்ரதிபாதிக்கப்படுமவனும் ஸ்ரீமந் நாராயணனே என்கிறார்.

[பதவுரை] யம் - எவனை, [ஶ்ருதய꞉ - வேதங்கள்], பூதபவ்யபவதீஶம் - இறந்த காலத்திலும் வருங்காலத்திலும் நிகழ்காலத்திலு முள்ள



யஸ்ய த்ரிலோகஜநநீ மஹிஷீ ச லக்ஷ்மீ꞉
ஸாக்ஷாத்ஸ ஏவ புருஷோऽஸி ஸஹஸ்ரமூர்த்தி꞉ ॥ 22

---

ஸ்துக்க ளெல்லாவற்றுக்கும் ஈசனென்றும், அநீஶம் - மற்றொருவனைத் னக்கு ஈசனாக உடைத்தாயிராமல் இருப்பவனென்றும், ஆஹு꞉-சொல்லு ன்றனவோ, யம் - எவனை, ரத்நாகரோதரநிலயம் — ஸமுத்ரத்தின் உள்ளில் அதாவது - க்ஷீர ஸமுத்ரத்தில்] வஸிக்கிறவனென்றும், அநந்தரூபம் - அந்தக் காரணத்தாலேயே] கணக்கற்ற அவதார விக்ரஹங்களை உடையவ னென்றும், ஆஹு꞉ — சொல்லுகின்றனவோ, யஸ்ய-எவனுடைய, மஹிஷீ- த்நியாகிற, லக்ஷ்மீ꞉ - லக்ஷ்மியானவள், த்ரிலோகஜநநீ - ஸகல ஜகத்துக்கும் ாதாவோ, ஸ꞉ - அப்படிப்பட்ட, ஸஹஸ்ரமூர்த்தி꞉ புருஷ꞉ — ஆயிரம் லைகளுடன் கூடிய புருஷோத்தமனாக, [த்வமேவ] அஸி - நீயே இருக்கிறாய்.

பூதபவ்ய—புருஷ ஸூக்தத்தில் காணப்படும் "யத்பூதம் யச்ச பவ்யம்" ன்பதை இந்தப் பதம் நிர்த்தேசிக்கின்றது.

அநீஶம்—ந விஶ்வஸ்ய ஈஶோ யஸ்ய [எவனுக்கு ஈசன் இல்லையோ.] ம் 20-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ள "த்வத்தோऽதிகோऽஸ்தி ந ஸமோऽஸ்தி தவேஶ்வரோऽந்ய꞉" என்பதன் அர்த்தமே இந்தப் பதத்தால் சொல்லப்படுகின்றது. ஈஶாநோ பூதபவ்யஸ்ய" [இருந்தவை வருமவை இவைகளுக்கு ஈசன்], ந தஸ்யேஶே கஶ்சந" [அவனுக்கு ஈசன் ஒருவனுமில்லை] என்னும் உபநிஷத் வாக்யங்கள் ப்ரமாணம்.

ரத்நாகரோதரநிலயம் [அத ஏவ] அநந்தரூபம்— க்ஷீராப்தி சாயி; ஆகையால் கணக்கற்ற ரூபங்களை உடையவன். பகவான் செய்யும் அவதாரங்களுக்கெல் லாம் க்ஷீராப்தி நாதனே மூலமென்று சொல்லுகிறபடியால், இவ்விடத்தில் க்ஷீராப்தி யில் சயனித்துக் கொண்டிருக்கிறானென்றும், கணக்கற்ற அவதார விக்ரஹங்களை உடை யவனென்றும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. "யம் ஸமுத்ரே நிவஸந்தம் வேதயந்தி" [எவனை ஸமுத்ரத்தின் உள்ளில் இருப்பவனென்று அதை அறிந்தவர்கள் சொல்லுவார்களோ] "ஏகோऽவ்யக்தோऽநந்தரூப꞉" [அது ஒன்று; அவ்யக்தம்; அனந்தங்களான ரூபங்களை உடையது] என்பவை ச்ருதி வாக்யங்கள்.

ஸர்வச்ருதிஷ்வாம்நாதம் ஶாச்வதஞ்சாகம்ப்யம்
நாராயணாஹ்வயமிதம் த்வதிவாநவத்யம்|

---

23. கீழ் ச்லோகத்தில் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" [ஆயிரம் தலைகளை உடைய புருஷோத்தமன்] என்று புருஷ ஸூக்தார்த்தம் குறிக்கப்பட்டது. அது ஸங்கதியாக இந்த ச்லோகத்தில் 'அந்தப் புருஷ ஸூக்தத்தால் ப்ரதிபாதிக்கப்படுமவனும் நீயே' என்று சொல்லுகிறார். அப்படிப் புருஷ ஸூக்தத்தால் சொல்லப்படுமது ப்ரமாணிகமே என்பதை ஸூசிப்பிக்கும் பொருட்டு அந்தப் புருஷ ஸூக்தத்திற்கும் பகவானுக்கும் அநேக ப்ரகாரங்களில் ஸாம்யம் இருக்கின்றது என்பதை விவரிக்கிறார். பகவானுடைய பரத்வத்தை விளக்கும் ப்ரமாணங்கள் அநேகங்கள் இருக்கையிலும், புருஷ ஸூக்தத்திற்கு பகவத் ஸாம்யம் இருப்பது அதன் ஏற்றத்தை விளக்குகின்றதாம். இதை, இந்த ச்லோகத்திலுள்ள 'இவ' என்னும் பதம் காண்பிக்கின்றது.

[ப–ரை] பௌருஷம் ஸூக்தம் தத்—புருஷ ஸூக்தமோ வென்றால், த்வதிவ – உன்னைப்போல, ஸர்வச்ருதிஷு ஆம்நாதம் - எல்லா வேதங்களிலும் படிக்கப்பட்டிருக்கின்றது; ஶாச்வதம் - சாச்வதமானது; அகம்ப்யம் - [ஒருவராலும்] சலிப்பிக்க வொண்ணாதது; நாராயணாஹ்வயம்—[நாராயண ஸூக்தம் என்று சொல்லப்படுவதால்] 'நாராயண' என்னும் பெயரை உடையது; அநவத்யம் - எவ்வித தோஷமுமற்றது; அஶேஷஜகத் பவித்ரம் – ஜகத் முழுவதற்கும் பரிசுத்தியைச் செய்யக்கூடியது. [அப்படிப்பட்ட புருஷ ஸூக்தம்] த்வாம் - உன்னையே, ஸர்வஸ்ய - [எல்லாவற்றுக்கும்] ஈசனென்றும், உத்தமம் பூருஷம் - புருஷோத்தமனென்றும், உதாஜஹார – சொல்லிற்று.

ஸர்வச்ருதிஷு ஆம்நாதம்—புருஷ ஸூக்தமானது, ருக் யஜுஸ் ஸாம அதர்வங்களாகிற நாலு வேதங்களிலும் படிக்கப்பட்டிருக்கின்றது. ருக்வேதத்தில் பதினாறு ருக்குக்களுடனும், யஜுர்வேதத்தில் பதினெட்டு ருக்குக்களுடனும், ஸாம அதர்வ வேதங்களில் ஏழு ருக்குக்களுடனும் காணப்படுகின்றனவென்று,

"ருக்வேதே ஷோடசர்சம் ஸ்யாத் யஜுஷ்யஷ்டாதசர்சகம் |
ஸாமவேதே ஸப்தர்சம் ததா சாதர்வணேயகே ||

என்னும் ப்ரமாணத்தால் தெரிகின்றது. இப்படி எல்லா வேதங்களிலும் படிக்கப்பட்டிருக்கிறபடியால், எல்லா வேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்படும் பகவானுக்கும் அதற்கும் ஸாம்யம் சொல்லக்கூடும்.

ஶாச்வதம்—பகவானும் சாச்வதன், இந்த ஸூக்தமும் வேதமானதால் சாச்வதமே.



நான்காய மாமறையின் மணியாய நற்பொருளைத்
தேன் காலத் தெரிப்பதுசெந் திருவை ணவமொன்றே
வான்கா ணாவழக்கு வன்மைகள் வாய்மைதவ முவகையே
நான்காணா வந்தவிந்த நாரணனுர்க் கார்ந்திகரே 66

மாயைகடந் தவனும் மன்னுமாக்க சத்துவமே
யாயகுணத் தாதிமத் தியாந்த ரகிதனுமாய்
மாயிருஞா லங்களெல்லா மண்டவயிற் றுள்ளடக்கித்
தூயமலர் ருந்தியினின் றயனைத் தோற்றுவித்து 67

ஆனைபுரித் தோன்றன்னை யவனு ளுதிப்பித்துத்
தானையொளி ராழியுடன் றனைபுரந் தளித்து
மேனைபிரண் டுமெவ ரளிக்க வீந்தருளம்
மானே மறைமுடியின் மன்னுமொரு தெய்வமரோ 68

பிரகிருதி கலவாது பிறங்குதிரு வைகுந்தத்
திரவிபல வெனவிலகு மாமணியின் மண்டபத்தே
விரவிமெழி னித்தியசூ ரித்தொகையின் வீழ்துளப்ப
பரமனருள் பாடுவதே பரகதிய முத்தியென்ப 69

அத்தகைய பேறுறற்கோ வாசிரிய ரின்னருளைப்
பத்திபுரிந் தடைவேபண் ணிடுமு பாயமென்ப
ரித்தகைய நெறிதணந்தோ ரிறப்புதிப் பினெப்பொழுதும்
மத்தமொடி யாப்புண்டு மறுகிச் சுழன்றலைவார் 70

விட்டவர்க்கும் வாப்பரிய விபூதியினைக் குரைத்தேன்
மட்டவிழு மணமாலை மன்னு வெனவருளிச்
சிட்டர்தொழ வானவர்கள் செய்யமலர் தூய்வழுத்தப்
பட்டநுதன் மும்மதங்கால் பகட்டின் மிசையியர்ந்தார் 71

ஆங்குப் புரவலனு மளப்பரிய சிறப்பளித்துத்
தாங்குசெல்வ நம்பியொடு தான்சிறிது பின்பார்ந்து
பாங்கிற் கடைக்கணிப்பும் பரிவினின்மி னெனுமொழியுந்
தாங்கியரி தின்மீண்டு தடமதிலி னுட்புகுந்தான் 72

வழுதியவை நடுவண் வாய்மையிலை நிறுத்தழகன்
எழுதருமீன் கொடிமருங்கில் வந்தியர்க ளேத்தெடுப்பக்
கெழுதகைமை யுடன்வருதல் கேட்டநக ரெல்லோரும்
முழுதுமம ரவதியின் மூதூர் வளைந்துடனே 73

பொன்னே புரிந்தொளிரும் பூரணகும் பங்களுடன்
மின்னே ரிடைமடவார் மிழற்றிவர மங்களமும்
மென்னுடும் பீலியொடு முக்குடைக்கண் மிக்குறமு
வன்னரைச் சென்றெதிர்ந்தே யந்நகரங் கொண்டணைந்தார் 74

மண்டபமும் வாவிகளும் மன்னுநக ருண்ணுழைந்த
விண்டுசித்தர் கண்டுயிலும் விண்டுநில யம்புகுந்து
தண்டமென வீழ்ந்தெழுந்து தாமரையா ளுபகநின்
பண்டையருள் கொண்டுவயம் படர்ந்தே னெனப்பரவி 75

வாகைபெற மணந்த பொற்கிழியும் வாரணமு
மீகைமலி வல்லபதே வன்கொடுத்த வெப்பொருளுந்
தோகையுறை பங்கன் றன்பொழித்த மாலடியி
லோகையுட னளித்தா ருலகம் புகழ்நலத்தார் 76

மற்றந்த வெம்பெருமான் மகிழ்ந்து கடைக்கணிக்கப்
பெற்றின்று ளவமொடுதீர்த் தப்ரசாத மெல்லாஞ்
சுற்றுமவர் கட்குச்சொல் லெமுறை யின்மொழிகள்
பற்றகலு நன்மனத்தார் பான்மையுறு மில்லிளந்தே 77

பூவாணி பன்மனைக்குப் பூவிழைந்து புக்கவற்குத்
தாவாமு தம்விளைக்கத் தாமெடுத்த பூத்தொழிலே
மேவாவு றற்கரிய மிக்கவந்த நற்பணியே
யோவாதின் சீவனமென் றன்னி யிழைத்துவந்தார். 78

விஷ்ணுசித்தர் வைபவம்

முற்றிற்று.

---

ஆக சருக்கம் 7 - க்குச் செய்யுள்—337

ஸ்ரீ:

## தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

### 8 - வது சருக்கம்

வேறு.

முன்னு ளெய்த்தோ ரருமறையோன்
முடுகுங் கங்கை யிடைமூழ்கித்
தன்னேர் பொய்கை தனிற்கிளம்பத்
தா முடனே தயைபுரிந்த
பொன்னீண் முடியி னெதுவரைசேர்
புகழார் திருநார ணன்மலர்த்தாள்
மன்னே நனவிற் கனவிடையு
மறவா தாரே பிறவாதார், 1

தெங்குங் கமுகுந் திங்களையுந்
தேன்சோர் கதலி நறும்பலவு
மெங்கும் பொதுளி வளம்பெருகு
மெழிலார் பொன்னி வளநாட்டிற்
பொங்கும் பவங்க ணினைப்பினும்போம்
பொன்பாய் நதியின் றண்கரையிற்
றங்கு மண்டங் குடியெனும்பேர்
தாங்கிப் பொலியு மோர்பதியே. 2

எழுதாக் கேள்வி நான்கினையு
மிகவா தோதி யனவரதம்
வழுவாச் செந்தீ வளர்ப்பவர்முன்
வளருங் குடுமிச் செந்தலையார்
தொழுவார்க் கின்பந் தொழுவருள்வோர்
தோலா நாவின் றுணிவுடையோர்
எழுநா ருய மனையுடையா
ரிருந்தா ராங்கின் வேதியரே. 3

காரார் கலியிற் காசினியோர்
கருதா ரெம்மை யெனக்கருணை
சேரா நீலத் திருமேனிச்
செங்கண் மாலத் திருப்பதியிற்

பாரா ணீளை பங்கயத்தா
ளுடனே நின்று பரமபதந்
தாரா வின்பந் தமையுமவன்
டந்தே யடைவோர்க் கிலகுவனால். 4

வேலைக் கண்ணா ளயிராணிக்
கேள்வன் முதலாம் விண்ணவர்க
ளேலா வேள்வி யெப்பொழுது
மிழைக்கு மறையோ ரழைப்பதினே
மேலா முலகி னடிக்கடியீங்
கிழிதம் கிதுவே மிகவினிதென்
றுலா ரவ்வூர் தனிலுறைவா
ரகலா தென்று மரம்பையரின். 5

கலியி லிருநூற் றெண்பத்தொன்
பதுவென் கழறும் பிரபவத்தின்
மலியு மொன்ப தாமதியிற்
கேட்டை நாளின் மாதவனார்
விலையில் வனமா லையின்பெருமை
விரவுந் தொண்ட ரடிப்பொடியார்
நலிவி லவ்வூ ரொருமறையோர்
மகவாய்த் தோன்றி நனிசெழித்தார். 6

நன்கே நாடு மங்கலத்தார்
நணுகுங் காலைத் திருக்குருவிற்
பொன்கேழ் வதனப் பூவமரும்
புள்ளே யென்னும் விழியிணையி
னென்கே சவனென் றிருவரங்க
னிதயங் கூர்ந்து கடைக்கணிக்க
வின்கேள் விகளே முதலாய
வெல்லா வுணர்வு மேய்ந்தனரே. 7

எனினு முலகிற் கியையவிளம்
பருவத் தெழிலோ ராசிரியன்
கனிவி னருளிற் கலைகடலின்
கரைகண் டில்வாழ் காதலகன்
றிணையாள் கண்ணற் குறுபணியே
யிழைக்க விரும்பி யெழுமதில்சூழ்



பனைசேர் கைம்மா படர்வீதித்
திருவ ரங்கம் படர்ந்தனரால். 8

படர்ந்தங் கரங்கன் கிங்கரர்கள்
பலரு மிவர்பன் புறையுளெனத்
தொடர்ந்து வழுத்த வரக்குரிய
தூய வையத் துணர்வினராய்க்
கடந்தாழ் கரியைப் புரந்தவற்குக்
கமழ்ந்த மாலைத் திருப்பணியே
நடந்தா னலமொன் றதுபுரியத்
துணிந்தே தலமு தாடியரோ. 9

பூவை முந்த மெனுமதற்குப்
புகலு மேல்பாற் பொன்னியலை
தாவுந் தடமோர் முடிக்குறையென்
றறையு மதனிற் றழையுமலர்க்
காவொன் றமைத்து வழைவகுளங்
காந்தள் குரவங் கமழ்துளவஞ்
சேவந் தியுமே முதலாய
சேருந் தருக்கள் பலநிரைத்தார். 10

இருமூன் றிருது வினுங்கமழு
மெழிலா ரலரோ மலரந்தத்
திருநந் தனத்தே தினங்கொய்த
தேமா மலரின் பூந்தொடையே
யருநா கணையான் றிருவரங்க
னங்க மெங்கு மாழ்வாரின்
பரிவோ டணிகு வதினன்றே
பகர்வர் தாமோ தரனென்றே. 11

புலனை வென்றோ ரனைவருமிப்
பொருவில் விப்ர நாரணரே
விலையின் மணியா மெனமகிழ
விளங்குங் காலை யொருபகலின்
மலர்சே ரணங்கு மாயவரின்
மதிசே ரெழில்சேர் முகநோக்கி
நலனை விஞ்சு திருப்பவளந்
திறந்தே குயிலி னவில்குற்றான். 12

கூடா தனையுங் கூட்டுமிணை கூடாக் கொற்ற முனக்குளதென்
றூடா நிற்றி யாண்பாலா யம்மை யெதிர்நின் றுநிகினு
நாடி நின்ற விவர்பாலுன் னவியும் பகுதி புரிகுவதென்
காடாள் வித்தே யைவரையுங் காத்த கரியோ யெனவுரைத்தாள். 13

கனகத் தொருதூண் போழ்ந்தெழுந்தோ னிலவே காலும்புன்முறுவ
லினிதிற் புரிந்தென் னிளமயிலே யிவரிற் பெரியோர் காமுகரி
லவனிக் கண்ணே யொருவருமின் றெனவே யாரு மறைதாயாம்
மனதிற் களிக்க நீயின்னே மாடுஞ் திறலைக் காண்டியென. 14

அருளி யாங்கே பொன்னுலகில் வதியு மரம்பை யாயமதின்
மருளு முனிவ ரெனும்வனப்பே மணந்தா டேவ தேவியென்பாள்
சுருளுங் கரிய குழற்சகியர் சூழக் காம்ப னூரிடையே
யுருளுந் தேரார் மறுகொரு மனையின் வதிய வுரைசெய்தான். 15

பையா ரரவப் பாம்பணைபான் பணித்த பணிதன் றலைசுமந்து
செய்யா ரரிதோய் சேல்விழியச் சேண்பா லணங்கு விண்ணிழிந்து
மெய்யார் முலையும் பொய்யிடையு மேவு மாயம் புடைசூழச்
செய்பார் திங்கை யவரணையச் செறிந்தா ளவ்வூ ருறைந்தாளே. 16

உறையுங் காலை யொருபோழ்தவ் வொளிகால் கபோலப் பளிக்குடையாள்
உறையூ ரிறையி னுழையேகிமீளு மமையத்துயிர்க்குறுக
ணிறையும் புரியா விப்பிரநா ராய ணன்ற னிரும்பொழிலில்
குறைய வழிபோ மிளைப்பொருதண் குருந்தி னடியி னொதுங்கினரால் 17

நின்றங் கரிய வுடன்பிறந்தா ணிலவுந் திங்கண் முகநோக்கிக்
குன்ற நாணுங் குவிமுலையாய் தனதன் வனமுங் குறைந்துடையு
மன்றன் மலரே மலிதருமிம் மறைபோ னறையே பொழிபொழிலி
னென்ற னிதயம் பொங்குமித னெழினன் கடைவே காணுகவே.

அளியின் பாட னல்லுசவு மலரு மலரா மருக்கியமு
மிளியுஞ் சுவையின் மகரந்த மெனுமேந் தரிய பாத்தியமுந்
தளிரா நவபீ தாம்பரமே தாங்கு வனமான் கொண்டுநமக்
கொளிசேர் தருக்க ணிரையினிழைத் திடுமே யுயரா தித்தியங்காண்.

தனுவு நாணு முரனுழந்து தளருங் கணையுந் தடந்தேருந்
துனைவிற் பசிய பாய்மாவுந் துனிசெய் கரிய காகளமு
மினுமா மிவையே முதற்பலவா மிகலுக் குரிய வெப்பொருளு
நனியீங் கீண்டிக் கிடப்பதினே யனங்க வீர னனிசிறும். 20



துவளும் வல்லித் துணைப்புயமுந் தளிரே சேர்த துவர்வாயு
நவமா மலரி னின்னகையும் பாத மென்னு நளிர்சாந்துங்
கவலுந் தணந்தோர் களகண்டத் திசையின் முகம னும்படைத்து
மிவருங் காத லிவ்வனமான் செறிவோர்க் கின்ப மிழைப்பதுபார். 21

குரவந் தளவங் குருவழைமா கோடல் படர்மா தவிநீல
மரவிந் தங்கை ரவமுதலா மளவி நான்கு வகைமலரிற்
பெருகு மதுவிற் படிந்துதவழ் பிள்ளைத் தென்ற லிவணடைவோர்
வருகவருகென் றனவின்மகிழ்ந் தெதிர்கொள் வகையே மானுமரோ.

வில்லார் குழையைக் கிழித்தகன்ற வேலேய் விழியா யிப்பெரிய
செல்லார் பாத பஞ்செறிந்து சினையே தழையுஞ் செழும்பொழிலே
ரெல்லா நோக்கி யெனதிதயந் தணிந்த தினியா மேகுதுமென்
றல்லார் கரிய குழலுரைக்க வவளு முறுவல் பூத்தறைவாள். 23

முனியு மருளு முகிழ்முலையாய் முராரி யரங்கன் வேட்டமிழைத்
தனையா முலகுக் கலரவளோ டணைபா விங்ங னயர்வுயிர்க்கின்
இனையா வந்த வழிநடப்பி னெமதா மயர்விங் ககல்வதுமோர்
வினையோ வென்றிவ் வணமொழிந்தே விபின மடைய நோக்கினரால்.

வேறு.

அவ்வா றவர்வன மெங்கணு மாடிப் படர்தரவங்
கொவ்வா நலத்துயர் விப்பிர நாரா யணரொருபால்
வெவ்வா றுறுபகை வென்றவர் விழைவோ டாலவாலத்
தெவ்வா யடங்கலுங் கொத்துபு வீர்பைம் புனல்விடுத்தார். 25

ஆரோ விவருட லெங்கணு மடர்வுற் றெழுமயிரே
நேரா யவர்முக மீசையி னிலங்கண் டிடுந்தாடி
சீரார் மரைமணி சேர்திருத் துளவத் தொடுதிகழு
மேரார் வடமகன் மார்பக மெங்கும் மிளைந்திலகும். 26

அங்கங் களினீ ராறெனுந் திருமட் குறியவிருந்
திங்கட் கதிரென வேயிரு தந்தங் களுந்திகழு
மிங்கிச் செழுவன பாலக ரிவரே யெனமதியா
வஞ்சப் புரிகுழ லாரிரு வோரும் மருகணைந்தார். 27

அணைந்தே சுகமென வாய்திறந் தவர்பா லுரையாடப்
பணந்தா முரவல் குற்சிறு பைந்தோ கையுமவர்மற்

றிணங்கா தவளுட னேகற் கிருந்தார் வெறுமனைபம்
மணந்தாழ் குழன்மட வாண்முறு வல்பூத் தனள்புகல்வாள். 28

என்னை யிதுமுன் னாபடி யிருகால் பெறுமிலங்கோ
கொன்னை பிறந்துழ லின்சுகங் கூடா தவையோ ரலியோ
மன்னை யானை யெதிர்வந் தெழின்மாற்றந் தருபொழுது
மென்னோர் முகந்தனை நோக்குத லின்றும் மெவருறைவார் 29

என்றே சியமொழி முன்மயில் செவியேன் றிடவெம்பி
நன்றே யுறைசெய் தாயிவர் நளினு பதிபதமே
யன்றே யுயும்வழி யென்றவன் பணியே விழைந்தயல்வே
றென்றே தெனினுந் தந்திரு வுளத்தே யகன்றுறைவார். 30

உனதா ரெழிலுடன் மாமையு முயர்சா யலுமயில்போல்
வனமான் விழிகொடி யாவரு மருளப் புரிசெயலுந்
தனமே தவத்தினர் பாலெது மாடுங் கிளர்தங்காய்
கினையா தொருதீங் கிங்ஙன மகல்வா யனகிகர்வாய். 31

என்னா வியம்பிட வன்னவ ளென்மா விறலறியாய்
சின்னா ளிலிப்புலன் வென்றவர் சிக்கும் வகைமயலிற்
பண்ணா விடிலுன தாளடி யாளாம் வகைபடிவேன்
சொன்னே னிதுநின் னம்மென நனிசீ றினள்சொன்னாள். 32

கேட்டே முனமுழி தந்தவன் கிளிமா லூறுமொழியாய்
விட்டே னுனைவி டேகுவ னெனவின் டுறுசேடிக்
கூட்டங் கொடுசென் றாளிவ ளுளமா வலிகொடுதம்
மீட்டந் தணைந்த வனைதனி யுடனே யிருந்திப்பால். 33

வெயிலை யெறிபணி யாவையும் விண்டாள் விலையறியா
மயலை புரிமல ரேபயில் பட்டா டையும்விட்டாள்
புயலேய் குழற்பூ வுங்களைந் துடைகந் தையினுடுத்தாள்
செயலே தறியாள் போலவர் நயனக் கெதிர்சென்றாள். 34

சென்றன் னவர்பா தந்தன் செங்கை குவித்திறைஞ்சிக்
குன்றன் னவின்குணத் தோயடி யாளிந் நகர்குடிகொ
ளொன்றின் மனவிலை மாதனை யுறவா டியேயலர்பாற்
சென்றாண் பொருமெகுத் தீயென வென்றே நனிசீறும். 35

ஸ்ரீ:

பகவத் பாஷ்யகாரரால்

(ஸ்ரீராமாநுஜாசார்யரால்)

அநுக்ரஹிக்கப்பட்ட

# வேதார்த்த ஸங்க்ரஹம்

ஸ்ரீ ஸுதர்சந ஸூரியின்

தாத்பர்ய தீபிகையை அநுஸரித்து

வங்கிபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யரால்

தமிழ் பாஷையில் எழுதப்பட்டுள்ள உரையுடன்

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

அச்சுப் பதிப்பிக்கப் பெற்றது.

All Rights Reserved.

MADRAS

பவ வருஷம் ஐப்பசிமீ 1உ] [18—10—1943.

ஸ்ரீ:

# பூமிகை.

ஆஜாநஸம்ஶுத்தவிபோதவாஸநாபூர்வோ
வேதாந்தஸூக்திவிஸரேஷு ச யே விஶிஷ்டா: ।
தத்வாதிவம்ஶஜநஸஜ்ஜநவம்ஶஶ்ரேஷ்டாந்
ஶ்ரத்தாவிதி ஶ்ருதி தத்ப்ருஷ்டி விவீக்ஷிதாந: ।

## விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ராசீநத் தன்மை

வேதாந்திகளென்று வ்யவஹரிக்கப்படும் வைதிகர்கள், இக்காலத்தில் இந்தத் தேசத்தில் மூன்று வகுப்பினர்களாகக் காணப்படுகிறார்கள். ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர்; ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர்; ஸ்ரீ மத்வாசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர். இவர்களெல்லாரும் நமது உபநிஷத்துக்களை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டவர்களே. ஆனால் அந்த உபநிஷத் வாக்யங்களுக்குப் பொருள் கொள்வதில் மாத்ரம் அவர்கள் வெவ்வேறான அபிப்ராயம் கொண்டவர்கள். இவர்களுள் முதல் இரண்டு வகுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டு வரும் ஸித்தாந்தங்கள் மிகவும் ப்ராசீநங்களென்றே சொல்லக்கூடும். ஸ்ரீ சங்கராசார்யருக்கு முன் ஸ்ரீ கௌடபாதர் என்றும் ஒரு ஆசார்யரும், அவருக்கு முன் வேறு பல ஆசார்யர்களும் அத்வைத மதத்தை உபதேசித்து வந்தார்களென்று தெரிய வருகின்றது. அவர்களுக்கு முன்னும் அதி ப்ராசீநர்களான ஒரு அத்வைத வர்க்கத்தார் இருந்ததாகவும் அந்த வர்க்கத்தாரிடமிருந்து இந்த ஆசார்யர்கள் பிரிந்து வந்திருப்பதாகவும் ஊஹிக்கக் காரணம் உண்டு. ஆனால் அந்த ப்ராசீந அத்வைதிகள் மாயாவாதத்தை, ஸ்ரீ சங்கராசார்யர் ஒப்புக்கொண்டது போல ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய பரம்பரையும், ஸ்ரீ போதாயநரென்று ப்ரஸித்தரான ஒரு மஹர்ஷி காலம் முதல் வந்திருப்பதாகத் தெரிகின்றது. அந்தப் போதாயநருடைய காலமும், வேதாந்த ஸூத்ரங்களைச் செய்தவராயும் மஹாபாரதத்தின் கர்த்தாவான வ்யாஸ மஹர்ஷியென்றே எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டவராயும் இருக்கும் ஸ்ரீ பாதராயணருடைய காலத்திற்கு ஸமீபித்த காலமென்றே சொல்லலாம். இந்தப் போதாயநர், ஸ்ரீ பாதராயணருடைய வேதாந்த ஸூத்ரங்களுக்கு, மிகவும் விஸ்த்ருதமாக 'வ்ருத்தி' என்னும் பெயருள்ள ஒரு வ்யாக்யாநத்தைச் செய்திருந்ததாக அறிகிறோம். இந்த வ்ருத்தி க்ரந்தத்தில் உரைக்கப்பட்டுள்ள பல விஷயங்கள் சங்கர பாஷ்யத்தில் பூர்வ பக்ஷமாகக் கூறப்பட்டுள்ளன. இந்த வ்ருத்தி க்ரந்தத்திற்கு 'டங்கர்' என்னும் பெயருள்ள ஒரு ஆசார்யர் ஒரு வ்யாக்யாநம் எழுதி இருந்தாராம். இந்த டங்கருடைய வாக்யங்களை 'வாக்ய காரருடைய வாக்யங்கள்' என்று பாஷ்ய காரர்கள் உதாஹரித்திருக்கிறார்கள். 'ப்ரஹ்மாநந்தி' என்று பாஷ்ய காரர்களால் சொல்லப்பட்டுள்ள வேதாந்தியும் இந்த டங்கரே என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தின் வ்யாக்யாந கர்த்தாவாகிய ஸ்ரீ ஸுதர்சநாசார்யர் அம்மாதிரி 'டங்கரே

ப்ரஹ்மநந்தி' என்று சொல்லியிருப்பதுடன், ஸ்ரீ வேதாந்த தேசிகரும், தமது 'தத்வ டீகை' என்னும் க்ரந்தத்தில் அம்மாதிரியே அநுஸந்தித்திருக்கிறார். இந்த டங்கர் ஒரு பெரிய ப்ரஹ்ம வித்தாகவும் வாதங்களில் அதி ஸமர்த்தராகவும் இருந்திருக்கவேண்டுமென்றே ஒத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் தேசத்து வித்வானென்னும் பொருளை விளக்கும் 'த்ரமிடாசார்யர்' என்னும் பெயரை உடைய மற்றுமொரு விசிஷ்டாத்வைத ஆசார்யர், ஸ்ரீ பாதராயண ஸூத்ரங்களுக்கு பாஷ்யமொன்றையும் உபநிஷத்துக்களுக்கு பாஷ்யமொன்றையும் இயற்றியிருந்ததாகவும் அறிகின்றோம். ஸ்ரீராமாநுஜாசார்யர், இந்த த்ரமிடாசார்யராற் செய்யப்பட்டுள்ள ஸூத்ர பாஷ்யத்தையே 'பாஷ்யம்' என்று பெயரிட்டு, அதிலிருந்து பல வாக்யங்களைத் தமது ஸ்ரீ பாஷ்யத்தில் ஸங்க்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யருடையச் சாந்தோக்ய பாஷ்யத்திற்கு உரை எழுதுமிடத்தில், ஆநந்தகிரி என்று ப்ரஸித்தரான அத்வைத வேதாந்தி த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து, அதை ஒரு பெரிய க்ரந்தமாகப் பேசியிருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்திலும், சிற்சில விடங்களில், அக்காலத்தில் வேறொரு பாஷ்யமும் இருந்திருக்கவேண்டுமென்பதை ஸூசிப்பிக்கும் சில வாக்யங்களைக் காண்கிறோம். இந்த த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்தையே அவர் மனத்தில் வைத்துக்கொண்டு அம்மாதிரி எழுதி இருக்கலாமோவென்று நினைக்க ஹேது உண்டு. அக்காலத்தில் வேறு ஒரு பாஷ்யமும் இருந்ததாகத் தெரியவில்லை. வேதாந்த ஸூத்ரங்கள் முதலிய பல மூல க்ரந்தங்களுக்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் அவருடைய காலத்திற்கு முன்னிருந்த வேறு விசிஷ்டாத்வைத ஆசார்யர்களும் உபநிஷத்துக்களுக்கு ஒரு விசிஷ்டாத்வைத பாஷ்யம் எழுதாமல் விட்டுவிட்டதற்கும், அப்பொழுது இந்த த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யம் ப்ரசாரத்தில் இருந்து வந்ததே காரணமாக இருக்கலாமென்று நினைக்கக்கூடும்.

த்ரமிடாசார்யருக்குப் பிறகு ஸ்ரீவத்ஸாங்கரென்றும் குஹதேவரென்றும் இரண்டு பெரிய ஆசார்யர்கள் இருந்ததாகவும் தெரிகின்றது. ஸ்ரீ வத்ஸாங்கர் என்பவர் த்ரமிடாசார்யருடைய ஸூத்ர பாஷ்யத்திற்கு ஒரு வ்யாக்யானம் எழுதி இருந்தாராம். குஹதேவர் என்பவர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஷயமாக சில பெரிய க்ரந்தங்களை இயற்றியிருந்ததாக ஏற்படுகின்றது. ஆனால் இவ்விடத்தில் கூறப்பட்டுள்ள க்ரந்தங்களுள் ஒன்றாவது இப்பொழுது அகப்படவில்லை. ஸ்ரீ பாஷ்யத்திலும் ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் உதாஹரிக்கப்பட்டுள்ள சிற்சில வாக்யங்கள், 'அந்த க்ரந்தங்கள் ஒரு காலத்தில் இருந்தன' என்பதை விளக்குகின்றனவே தவிர வேறு ஒரு சிஹ்நங்களும் அவைகளைப் பற்றி இப்பொழுது இல்லை. இந்த ஆசார்யர்களுடைய பெயர்கள் மாத்ரம் ஸ்ரீ யாமுநாசார்யருடைய ஸித்தித்ரயத்திலும் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் பெருமையுடன் புகழ்ந்து பேசப்பட்டிருப்பதை எல்லாரும் பார்க்கலாம். ஸித்தித்ரயத்தில், டங்கர் பாஷ்யக்ருத் ஸ்ரீ வத்ஸாங்க மிச்ரர் ஆக இம்மூன்று விசிஷ்டாத்வைத ஆசார்யர்களின் பெயர்கள், பர்த்ருமித்ரர் பர்த்ருஹரி ப்ரஹ்மதத்தர் முதலிய சில அத்வைத ஆசார்யர்களின் பெயர்களுடன் கூட உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹத்தில், போதாயநர் டங்கர் த்ரமிடர் குஹதேவர் கபர்த்தி பாருசி என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. மஹா வித்வான்களாகிய இந்த ஆசார்யர்களுடைய க்ரந்தங்களெல்லாம் இவ்விதம் லுப்தங்களாகிவிட்டன என்பது மிகவும் சோகிக்கத்தகுந்ததே. ஆனாலும், அந்த க்ரந்தக் காரர்களாற் சொல்லப்பட்டுள்ள அருமையான விஷயங்



களெல்லாம், இப்பொழுது ப்ரசாரத்தில் இருந்து வரும் ஸ்ரீயாமுநாசார்யருடைய ஸித்தித்ரயம் முதலான க்ரந்தங்களிலும், ஸ்ரீராமாநுஜாசார்யருடைய ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹம் இந்த இரண்டு க்ரந்தங்களிலும் உதாஹரிக்கப்பட்டுப் பரிபாலிக்கப் பட்டிருக்கின்றன வென்பது கொஞ்சம் ஆச்வாஸகரம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ராசீநத்தன்மை இவ்வளவு மாத்ரமன்று. ஸ்ரீ விசிஷ்டாத்வைதிகள் எல்லாரும் பாஞ்சராத்ர மதாநுஸாரிகள். இந்தப் பாஞ்சராத்ரம் என்பது ஸ்ரீமந் நாராயணனாலேயே வெளியிடப்பட்டது என்பது அவர்களுடைய கொள்கை. இந்தப் பாஞ்சராத்ரத்தில், ஆலயங்களிலும் க்ருஹங்களிலும் பகவானை அர்ச்சாரூபியாக ஆராதநம் செய்ய வேண்டுமென்கிற க்ரமங்கள் சொல்லப்பட்டிருப்பதுடன்கூட, உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்களும் விஸ்தாரமாகவும் தெளிவாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சித்சிதீச்வரர்களென்னும் தத்வ த்ரயமும், சேதநாசேதநங்களுக்கும் பகவானுக்குமுள்ள சரீர சரீரிபாவமும், ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்பதும் இவை முதலியவைகளே பாஞ்சராத்ரத்திற் செய்யப்பட்டுள்ள தத்வ நிர்ணயங்கள். பகவானைச் சரணமாக அடைவதே நமக்குப் பரமமான ஹிதம் என்று பாஞ்சராத்ரத்தாற் செய்யப்படும் உபதேசமும் உபநிஷத்திற்கு ஒத்ததென்பதே விசிஷ்டாத்வைதிகளின் கொள்கை. புருஷார்த்த விஷயத்திலும், உபநிஷத் சொல்வதற்கும் பாஞ்சராத்ரம் சொல்வதற்கும் எவ்வித விசேஷமும் இல்லை. ஆகையால், பாகவத மதமென்று சொல்லப்படும் பாஞ்சராத்ர ஸித்தாந்தமே ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமென்று சொல்லக்கூடும். இந்தப் பாஞ்சராத்ர ஸித்தாந்தம் மஹா பாரதத்தில் விஸ்தாரமாகப் பேசப்பட்டிருக்கின்றது. ஸ்ரீபாதராயணர், தமது வேதாந்த ஸூத்ரத்திலும், இந்தப் பாஞ்சராத்ரத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறார். ஆகையால் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது ஸ்ரீ வ்யாஸர் காலத்திற்கும் முந்தினது என்று சொல்லக் கூடும். ஸூத்ரங்களாவது பகவத் கீதையாவது பாஞ்சராத்ர தந்த்ரங்களாவது எவ்வளவு காலத்திற்கு முன் எப்பொழுது எழுதப் பெற்றன வென்பதைக் குறிப்பிட்டு நிர்ணயிப்பதற்கு, நமக்கு இப்பொழுது கிடைக்கும் ஸாமக்ரிகள் போதுமானவையல்ல வென்பது உண்மையே. இது வரையில் நிரூபகர்களெல்லாராலும் மஹத்தான ப்ரயாஸத்துடன் இது விஷயமாகச் செய்யப்பட்டிருக்கும் ப்ரயத்நங்களெல்லாம் விபலமாகவே போயிருக்கின்றன. ஆனாலும், ஸ்தூலமாக இந்த க்ரந்தங்களெல்லாம் பழைய காலமாக வழங்கி வந்து கொண்டிருக்கின்றன வென்று சொல்வதற்கு அந்த ஸாமக்ரிகள் போதுமானவைகளே. அவைகளை அவலம்பித்து, நாம், ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீவ்யாஸர் காலத்திற்கு முன்னிருந்து வழங்கிவரும் ஸித்தாந்தமாகவே சொல்லக்கூடும். ஆழ்வார்களாலும் இந்த ஸித்தாந்தமே ஆதரிக்கப்பட்டிருக்கிறபடியால் இதை மிக ப்ராசீநமென்றே ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.

## ஸித்தாந்தத்தின் ஸ்வரூபம்

இப்படி பஹுகாலமாக ப்ரசாரத்தில் இருந்துவரும் இந்த ஸித்தாந்தத்திற்கு உபநிஷத்துக்கள் எப்படி முக்ய ஆதாரமாகின்றனவென்றும் அந்த உபநிஷத் வாக்யங்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை எப்படி போதிப்பிக்கின்றனவென்றும் விசாரிக்க வேண்டியது விவேகிகளுக்கு ப்ராப்தம். ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில், ஸ்ரீராமாநுஜாசார்யர், இந்த விசாரத்தையே செய்திருக்கிறார். 'ஸமஸ்த கல்யாணகுண கணங்களு

டன் கூடினவனும் ஹேய குணமொன்றுமே தொடப்படாதவனுமாயிருக்கும் ஸ்ரீமந் நாராயணனே ஜகத் எல்லாவற்றுக்கும் பரம காரணமான வஸ்து; சேதந வஸ்துவாகிற ஜீவாத்மா அசேதந வஸ்துக்களாகிற ப்ராக்ருத வஸ்துக்கள் இவையெல்லாவற்றையுங் காட்டிலும் அவன் அத்யந்த விலக்ஷணன்; அவன் சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றையும் தனது சரீரமாக உடைத்தாயிருக்கிறான்; அவனே ஸகல சேதநர்களாலும் கடைசியாக அடையத் தகுந்தவன்; அப்படி அவனை அடைவதற்கு அவனுடைய க்ருபையே முக்ய உபாயம்; அந்த க்ருபைக்கு நாம் அவனிடத்திற் செய்யும் பக்தி ப்ரபத்திகள் வ்யாஜங்களாகின்றன; அந்தப் பக்தியும், வேதநம் உபாஸநம் முதலிய சப்தங்களால் குறிக்கப்படும் ஜ்ஞாந விசேஷமே; அது, உபாஸகர்களாற் செய்யப்படும் வர்ணாச்ரம கர்மாநுஷ்டாநத்தை அங்கமாக உடையது; அந்தப் பகவான், தனது திவ்யேச்சையால், ஒரு ஸ்தாந விசேஷத்தில் பக்தர்களுக்கு ஆநந்தகரமான ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்துடன் ஆவிர்பவித்து நிற்கிறான்; அந்த விக்ரஹமும் அந்த ஸ்தாநமும் அவனுடைய ஸ்வரூபம் போலவே எல்லாருக்கும் பரம ப்ராப்யம்' இத்யாதியான அர்த்தங்களே உபநிஷத்துக்களில் ப்ரதி பாதிக்கப்படுகின்றனவென்று இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகின்றது.

உபநிஷத்துக்களில் நாம் இருவகைப்பட்ட வாக்யங்களைக் காண்கிறோம். சில வாக்யங்கள், 'ப்ரஹ்மம் குணங்களற்றது' என்று சொல்லுகின்றன; வேறு சில வாக்யங்கள், 'ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாநம் பலம் முதலிய கல்யாணகுணங்களெல்லாம் உண்டு' என்று சொல்லுகின்றன. இவை இரண்டும் பரஸ்பர விருத்தங்களானமையால் இரண்டும் தத்வங்களாக இருப்பது உபபந்நமாகமாட்டாது. இவைகளுள் ஏதாவதொன்றே தத்வமாக இருக்கக்கூடும். ஆதலால், வேதங்களின் ஆப்தத்வம் ஸித்திக்கவேண்டுமானால் இந்த இரண்டுவித வாக்யங்களுக்கும் பரஸ்பரம் விரோதம் வாராமல் ஒருவித ஸமந்வயத்தைச் செய்வது ஸாத்யமோவென்பதை விசாரிக்கவேண்டியது அவச்யமாகின்றது. குணங்களெல்லாம் குணியின் பரிச்சேதத்தை வெளியிடுபவையாதலால், அபரிச்சிந்நமான ப்ரஹ்மத்திற்குக் குணங்களைச் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததாகமாட்டாது என்று வாதம் செய்து, ஸ்ரீ சங்கராசார்யர், நிர்க்குண வாக்யங்களுக்கே ப்ராதாந்யம் கொடுக்கல் வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார். 'ஏகமேவாத்விதீயம்' [வஸ்து ஒன்றே, இரண்டாவது இல்லை] 'நேஹ நாநாஸ்தி' [பல வகைப்பட்டது என்பதே இவ்விடத்தில் இல்லை] இத்யாதியாக ப்ரஹ்மைக்யத்தை விளக்கும் வாக்யங்களே அவருக்கு ப்ரமாணம்; 'ப்ரஹ்மத்திற்குக் குணங்கள் உண்டு' என்று சொல்லும் வாக்யங்களெல்லாம் அவருக்கு அப்ரமாணங்களாகின்றன. இவை, கார்ய ப்ரஹ்மமென்று வ்யவஹரிக்கப்படும் மாயா க்ரஸ்த ப்ரஹ்மத்தைப் பற்றியவையென்று அவைகளை அவர் ஒதுக்கிவிடுகிறார். இம்மாதிரி 'உயர்ந்த ப்ரஹ்மத்தைப்பற்றிய வாக்யங்கள் சில, தாழ்ந்த ப்ரஹ்மத்தைப் பற்றியவை மற்றவை' என்று விபாகம் செய்வதற்கு உபநிஷத்தில் ப்ரமாணமொன்றும் காணப்படவில்லை என்பதே ஸ்ரீ ராமாநுஜாசார்யர் இதற்குச் செய்யும் முக்ய ஆக்ஷேபம். உபநிஷத்துக்கள், நிர்க்குண ப்ரஹ்மம் என்று ஒன்று உண்டு என்று ஓரிடத்திலும் பேசவே இல்லையாதலால், நிர்க்குண வாக்யங்களுக்கு க்ஷயம் விநாசம் முதலிய ஹேய குணங்கள் ப்ரஹ்மத்திற்கு இல்லையென்பதில் தாத்பர்யமென்றே நாம் பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பதுதான் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய அபிப்ராயம்.

'சேதநாசேதந வஸ்துக்கள் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட வஸ்துக்களென்றும் அவை ஸத்யங்களென்றும் சொல்வது, ப்ரஹ்மம் ஒன்றே உண்டு என்று சொல்வ



தற்கு விரோதமாகாதோ?' என்று ஜநிக்கும் சங்கைக்குப் பின்வருமாறு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. அவை வேறுபட்ட வஸ்துக்களானாலும், அவை ப்ரஹ்மத்தைவிட்டுத் தனித்து நிற்க யோக்யதையற்றவைகளாகவும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாகவும் இருக்கிறபடியால், ப்ரஹ்மம் ஒன்றே இருக்கிறது என்று சொல்லும் வாக்யங்களுக்கு சேதநாசேதநங்களின் இருப்பு ஒரு ப்ரகாரத்தாலும் விரோதிக்கமாட்டாது. ப்ரளய தசையிலும் ஸ்ருஷ்டி தசையிலும் இந்த ப்ரஹ்மமொன்றே உண்டு; ப்ரளய தசையில் மிகவும் ஸூக்ஷ்மமாய் ஸர்வவித நாம ரூபங்களுமற்று நிற்கும் சேதநாசேதநங்களை தனது விசேஷணமாக அந்த ப்ரஹ்மம் உடைத்தாயிருக்கின்றது; ஸ்ருஷ்டி தசையில் அந்தச் சேதநாசேதந வஸ்துக்களே, அந்த ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தால், ஸூக்ஷ்மதசையை விட்டு ஸ்தூலங்களாகி, ப்ரளயதசையிற்போலவே அந்த ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாக இருக்கின்றன. இவ்வாறு அந்த விசேஷணங்களுக்கு ப்ரஹ்மத்தைவிட்டுப் பிரிந்து தனித்த இருப்பே ஒருபொழுதும் இல்லையாதலால், ப்ரஹ்மம் ஒன்று தான் உண்டு என்று சொல்வதற்கு ஆக்ஷேபம் இருக்க இடமில்லை. இதுதான் அவராற் சொல்லப்படும் ஸமாதாநம். 'ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம், மற்றவை அஸத்யம்' என்பதையும் விசிஷ்டாத்வைதிகள் ஒருவாறு ஒத்துக்கொள்ளுகிறார்கள். 'ஸத்யம்' என்னும் சப்தத்திற்கு விகாரத்திற்கு ஆஸ்பதமில்லாமலிருப்பதைப் பொருளாகச் சொல்லி சேதநாசேதநங்களை விசேஷணங்களாக உடைய தர்மியாயிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு எவ்வித மாறுதலும் இல்லையாதலாலும் விசேஷணமாயிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களுக்கு மாத்ரம் ஸ்ருஷ்டி ப்ரளயகாலங்களில் மாறுதல்கள் உண்டாகிறபடியாலும் ப்ரஹ்மம் ஸத்யமாகவும் மற்றவை அஸத்யங்களாகவும் ஆகின்றனவென்று சொல்லக்கூடும் என்று வாதிக்கிறார்கள். சேதநர்களுக்கு ஜ்ஞாநத்தின் ஸங்கோச விகாஸங்களாகிற மாறுதலும், அசேதந வஸ்துக்களுக்கு ஸ்வரூபத்திலேயே மாறுதலும் உண்டு. அந்தக் காரணத்தாலேயே அவைகள் அஸத்யங்களாகின்றனவென்று அவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. விசேஷணங்களாய் நிற்கும் சேதநாசேதநங்களில் ப்ரஹ்மத்தின் ஸங்கல்பமடியாக இவ்விதங்களான மாறுதல்கள் தென்பட்டபோதிலும், அவைகளை விசேஷணங்களாயுடைய ப்ரஹ்மத்தை அந்த மாறுதல்கள் ஸ்பர்சிக்கமாட்டாவென்பதும் அவர்களுடைய கொள்கை. இப்படி அவர்கள் கொள்கை கொள்வது, அவித்யையால் ப்ரஹ்மம் ஆக்ரமிக்கப்பட்டபோதிலும் அந்த அவித்யையின் கார்யங்களால் அந்த ப்ரஹ்மம் தொடப்படாமலே இருக்கின்றது என்று அத்வைதிகளால் ஒத்துக்கொள்ளப்படும் கொள்கையைப் போன்றதே. இவ்வாறு 'ப்ரஹ்மம் குணமற்றது' என்னும் அர்த்தமுள்ள உபநிஷத் வாக்யங்களுக்கு ஹேயகுணங்கள் இல்லை என்பதில் தாத்பர்யமென்றும், ஸ்ருஷ்டியைச் சொல்லும் வாக்யங்களுக்கு சேதநா சேதந வஸ்துக்களாகிற விசேஷணங்கள் மாத்ரம் மாறுதலை அடைகின்றனவென்பதில் தாத்பர்யமென்றும், ப்ரஹ்மைக்யத்தைச் சொல்லும் வாக்யங்களுக்கு விசேஷணங்களுடன் கூடிய விசேஷ்யமாகிற ப்ரஹ்மத்திலேயே தாத்பர்யமென்றும், 'ப்ரஹ்மம் அத்விதீயம்' [அதாவது, இரண்டாவது இல்லை] என்னும் வாக்யங்களுக்கு அந்த ப்ரஹ்மத்தைத் தவிர்த்து வேறு நியந்தா இல்லையென்பதில் தாத்பர்யமென்றும், அர்த்தம் கொள்ளும் பக்ஷத்தில் விருத்தங்கள் போலத்தோன்றும் வாக்யங்களுக்கெல்லாம் சரியான ஸமந்வயம் சொல்லப்பட்டு விடுகின்றனவன்றோ?

## க்ரந்தத்தின் விஷய விவரணம்.

இவையெல்லாம், வேதவாக்யங்களுக்கு ஸவிசேஷ ப்ரஹ்மத்தை நிரூபிக்கும் முதல் பாகத்தில், இந்த க்ரந்தத்தில், விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை விவரிக்குமிடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஆர்ஜவமும், வேத வாக்யங்களின் உள்ளபடியான தாத்பர்யத்தைக் கண்டுபிடிப்பதிலும் அவைகளைத் தெளிவாக வெளியிடுவதிலுமுள்ள திறமையும், உண்மையை அறியவேண்டும் என்பதிலுள்ள ஆக்ரஹமற்ற சுத்தமான ஆவலும், இவை முதலிய சிறந்த குணங்கள் அத்யாச்சர்யமாகப் ப்ரகாசிப்பது இந்த க்ரந்தத்தை அவதானத்துடனும் ச்ரத்தையுடனும் படிக்குமவர்களெல்லாருக்கும் நன்கு விளங்கும். இவ்விதம் பல ப்ரகாரமாகத் தமது பக்ஷத்தை ஸாதிக்கும் ப்ரமாணங்களை உபந்யஸித்து விட்டு, பிறகு பரமத சங்கையின் நிரஸநத்தில் இந்த க்ரந்தம் ப்ரவ்ருத்திக்கின்றது. சங்கர பாஸ்கர யாதவப்ரகாச மதங்களை நிரஸிப்பதுடன், ஸ்ரீமந் நாராயணனைத் தவிர்த்த வேறு தேவதைகளுக்குப் பரம காரணத்வத்தைச் சொல்லும் மதங்களும் நிரஸிக்கப்படுகின்றன. வேதவாக்யங்களை எடுத்தாக் கொண்டாலும் அந்த வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாகிற ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களை எடுத்துக்கொண்டாலும், சரியான ந்யாய விசாரம் செய்பவர்களுக்கு, எல்லா வாக்யங்களாலும் ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமாகச் சொல்லப்படுகிறான் என்பது நன்றாக விளங்கும். இதற்குப் பிறகு, இதுவரை உபபாதிக்கப்பட்ட அர்த்தத்தை த்ருடப்படுத்தும் பொருட்டு வ்யுத்பத்யபாவ வாதமென்று சொல்லப்படும் மீமாம்ஸா மதம் கண்டிக்கப்படுகின்றது. ஸ்ரீ பாஷ்யம் முதலியவைகளில் இது ஸங்க்ஷேபமாக காணப்படும் யுக்திகளையும் ப்ரமாணங்களையும் காட்டிலும் விசேஷித்த யுக்திகளையும் ப்ரமாணங்களையும் இவ்விடத்திற் காணலாம்.

இவ்வாறு வேறு மதங்களின் நிரஸநத்தைச் செய்த பிறகு, விசிஷ்டாத்வைதிகளைத் தவிர்த்த மற்றை வேதாந்திகளுக்கு அநபிமதமான நித்ய விபூதியின் ஸமர்த்தநத்தைக் கடைசியாகச் செய்கிறார். இந்த ப்ராக்ருத ப்ரபஞ்சத்திற்கு வெளிப்பட்டு அப்ராக்ருதமான ஸ்தாந விசேஷம் ஒன்று இருக்கின்றது என்றும், அதில் ஒரு பொழுதும் கர்ம பந்தத்தில் அகப்படாத சில ஜீவ கோடிகள் எப்பொழுதும் பரமாத்மாவின் மஹிமையைப் பார்த்து அதனால் உண்டாகும் ஆநந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்களென்றும், அவ்விடத்தில் பகவான் திவ்ய மங்கள விக்ரஹமொன்றை எடுத்துக்கொண்டு நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறானென்றும், இவையெல்லாம் பரமாத்ம ஸ்வரூபத்திற்கு, மற்றை ப்ராக்ருத ப்ரபஞ்சம் போல, ப்ரகாரங்களாக இருக்கையிலும் அவைகளைப்போல ப்ரளய காலத்தில் எவ்வித லயத்தையும் அடையாமலே அந்தப் பரமாத்மாவின் நித்ய ஸங்கல்பம் காரணமாக நித்யங்களாகவே இருக்கின்றனவென்றும், இந்த ஸ்தாந விசேஷத்தை அடைவதற்கு முக்த ஜீவன்களால் போகப்படும் மார்க்கமொன்று அர்ச்சிராதியாகக் கிடக்கிறதென்றும் உபநிஷத் வாக்யங்களிலிருந்து ஏற்படுகின்றன வென்பது இவ்விடத்தில் உபபாதிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை ஸமர்த்திப்பதில் ச்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளின் வாக்யங்களே ப்ரமாணங்களாக அவலம்பிக்கப் பட்டிருக்கின்றன. இம்மாதிரி கேவலம் சாஸ்த்ர ப்ரமாணத்தை மாத்ரம் ஆதாரமாகக் கொண்டு இவை ஸமர்த்திக்கப் பட்டிருக்கின்றன என்னும் காரணத்தால், இவை அவ்வளவாக ஆதரணீயங்களாக மாட்டா வென்பது சில இக்காலத்திய நிரூபர்களின் அபிப்ராயம். ஏதோ ஒரு அபிநிவேசத்தால் ஸ்ரீ பாஷ்யகாரர் இவைகளை



விசிஷ்டாத்வைத மதக்கொள்கைகளுள் கொண்டுவந்து சேர்த்துவிட்டாரென்றும் இப்படி இவைகள் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் அவரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசிஷ்டாத்வைத மதம் மற்றை அம்சங்களில் மிக ச்லாக்யமாக இருப்பதால் இந்தத் தோஷம் அதை அவ்வளவாகப் பாதிக்கமாட்டாதென்றும் இந்த நிரூபகர்கள் க்ரந்தங்களில் எழுதி இருப்பதை நாம் படித்திருக்கிறோம். ஆனால், எவ்விதத்தில் இந்தக் கொள்கையின் அப்யுபகமம் விசிஷ்டாத்வைத மதத்திற்குக் குறைவை உண்டு பண்ணுகின்றது என்பது மாத்ரம் நமக்கு விளங்கவில்லை. யுக்திகளால் எவையெவை ஸ்தாபிக்கத் தகுந்தவைகளோ அவையவை மாத்ரம் ஸாதுவென்று நம்மால் ஒத்துக்கொள்ளத்தகுந்தவை என்பது அவர்களின் அபிப்ராயமாக இருக்கும் பக்ஷத்தில், ஆப்த வாக்யங்களைக் கொண்டு மாத்ரம் ஸ்தாபிக்கத் தகுந்தவைகளான அதீந்த்ரிய வஸ்துக்களையெல்லாம் அவர்கள் நிராகரிக்க ப்ரஸங்கிக்கும். அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் முதலிய எல்லா வேதாந்திகளும் அதீந்த்ரிய விஷயங்களின் விஷயத்தில் வேதாந்தங்களையும் ஸ்ம்ருதி முதலிய உபப்ருஹ்மணங்களையுமே ப்ரமாணமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த்ரியங்களுக்குக் கோசரங்களாயிருக்கும் விஷயங்களைத் தவிர்த்து மற்றை ஒன்றிலும் யுக்திக்கு அவகாசம் இல்லையாகையால், இந்த்ரியங்களுக்கு எட்டாததான நித்ய விபூதி விஷயத்தில் யுக்திகளுக்கு இடமில்லையென்று சொல்வது அந்த நித்ய விபூதிக்காவது அதன் உண்மையை ஒத்துக்கொள்ளும் விசிஷ்டாத்வைதத்திற்காவது எவ்வித குறைவையும் உண்டாக்கமாட்டாது. ஸர்வசக்தனான ஈச்வரன் இம்மாதிரி ஒரு லோகத்தை ஸ்ருஷ்டிக்கவோ அல்லது அதை நித்யமாக ஸ்தாபிக்கவோ அஸாதாரணமான திவ்ய மங்கள விக்ரஹமொன்றை எடுத்துக்கொள்ளவோ எப்படி அசக்தனாவான்? ஆகையால், இந்த நித்ய விபூதியைக் கண்டு ஒருவரும் பயப்படுவதற்குக் காரணமில்லை. வேதத்தின் ப்ராமாண்யத்தை ஒத்துக்கொள்பவரெல்லாரும் இந்த விபூதியை ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்; இதை ஒத்துக்கொள்ளாவிட்டால் அவர்கள் வேதத்தின் ப்ராமாண்யத்தில் அதிசங்கை செய்தவராவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை.

## க்ரந்த கர்த்தாவின் சரித்ரம்.

இந்த க்ரந்தத்தை அருளிச்செய்த ஸ்ரீ ராமாநுஜாசார்யர், சென்னைப் பட்டணத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ கேசவ ஸோமயாஜி என்னும் மஹாநுக்குப் புத்ரராகச் சற்றேறக்குறைய 917 வருஷங்களுக்கு முன் அவதரித்தார். ஸ்ரீ யாமுநாசார்யருடைய சிஷ்யர்களுள் ஒருவரான ஸ்ரீ சைல பூர்ணருக்கு இரண்டு ஸஹோதரிகள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவராகிய காந்திமதி என்பவரே ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய தாயார். பால்யத்தில் பால சிக்ஷையெல்லாம் முடிந்தபிறகு, மேல்கொண்ட வித்யாப்யாஸத்திற்காக அப்பொழுது காஞ்சீபுரத்தில் ப்ரஸித்த வித்வானாக இருந்த யாதவப்ரகாசர் என்பவரிடம் இந்தக் குழந்தையின் அம்மானாகிற ஸ்ரீ சைல பூர்ணர் இவரை ஒப்புவிக்க, இவர் அந்த ஆசார்யருடைய க்ருஹத்திலேயே வஸித்துக்கொண்டு அவரால் அப்பொழுதைக்கப்பொழுது நல்வழியில் சிக்ஷிக்கப்பட்டவராய், அவரிடமிருந்து தர்க்கம் மீமாம்ஸை முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களையெல்லாம் பூர்ணமாகவும் தெளிவாகவும் கற்றுக்கொண்டார். பூர்வ மஹர்ஷிகளின் காலத்தில் குழந்தைகளை ஆசார்யர்களிடம் வித்யாப்யாஸத்திற்கு ஒப்புவித்தால், அந்தக் குழந்தைகள், அந்த ஆசார்யனுடைய க்ருஹத்திலேயே இருந்துகொண்டு, பிக்ஷாசரணத்தால் கிடைக்கும் அந்நத்தை ஆசார்யனிடம் கொண்டுவந்து ஸமர்ப்பித்துவிட்டு, பிறகு அவருடைய

அநுமதி பெற்றவர்களாய் அவரால் கொடுக்கப்படும் அந்நத்தைப் புஜித்து அம்மாதிரி வர்த்தித்து வருவது வழக்கம். ஸ்ரீ ராமாநுஜாசார்யர் காலத்திலும் அந்த வழக்கம் நடையாடி வந்ததாகத் தெரிகின்றது. பால்யத்தில் அம்மாதிரியான சிக்ஷை சிறுவர்களுக்கு ப்ராப்தமாகும் பக்ஷத்திலன்றோ, அச்சிறுவர்களுக்கு நற்குணமும் நன்னடத்தையும் நன்ருக ஏற்படும் ? இந்த ஏற்பாட்டுக்கு நேர் விருத்தமாக இக்காலத்திய சிறுவர்கள் ஸ்வதந்த்ரமாகத் தமக்கு இஷ்டப்பட்ட இடங்களில் புஜித்துக்கொண்டு தமக்கு அபிருசியான இடங்களில் வஸிக்கும்படிக்கும் ஸதஸத் விவேகமிராமல் ஸங்கங்களைச் செய்து கொள்ளும்படிக்கும் தாய் தந்தைகளால் கைவிடப்பட்டு நிற்கிருர்களே. இதைப் பார்க்கும் நமக்கு இனி ஜந ஸமூஹத்திற்கு நன்மை எப்படி ஸம்பவிக்கப் போகின்றதென்று பெருத்த சங்கைகள் மனத்தில் உதிக்கின்றன. இக்காலத்திய சிறுவர்கள் தெய்வ பக்தியிராமலும் பெரியோர்களிடம் எவ்வித மர்யாதையையும் பாராட்டாமலும் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்படாமலும் மனம்போன போக்கே நடந்து வந்தால், அப்படி அவர்கள் நடப்பது முழுவதும் அவர்களை நாம் பால்யத்தில் வளர்த்து வருவதிலுள்ள தோஷங்களின் பலமென்றே அறிதல்வேண்டும்.

யாதவ ப்ரகாசரிடம் ஸிக்ஷிதராய் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் வித்யைகளை அப்யஸித்து வருகையில், ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு வேதாந்தவித்யையை அப்யஸிக்கும் பாக்யம் நேர்ந்தது. சில வேதாந்த க்ரந்தங்கள் படித்த பிறகு உபநிஷத்துக்களைப் படிக்க ஆரம்பித்து அப்படிப்பில் ஸ்வல்ப காலம் சென்றபொழுது சில உபநிஷத் வாக்யங்களுக்கு யாதவ ப்ரகாசரால் சொல்லப்பட்ட அர்த்தம் தமது மநஸ்ஸுக்கு ப்ரசஸ்தமாகத் தோன்றவில்லையாதலால் வேறுவிதமாக அர்த்தம் சொல்லலாகாதோ வென்று இரண்டொரு தடவை சிஷ்யர் ஆசார்யரைக் கேட்க, அதுகாரணமாக இருவர்களுக்கும் அப்ரீதி உண்டாகி இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகும்படி நேர்ந்தது. அதற்குப் பிறகு ஸ்ரீ ராமாநுஜாசார்யர், தேவராஜப் பெருமாள் ஸந்நிதியில் எம்பெருமானுக்கு யதோசிதம் பல வித கைங்கர்யங்களைச் செய்து வர்த்தித்து வருகையில், அவருக்கு அநுரூபமான ஒரு மனைவி நேரவே அவளைத் திருமணம் செய்துகொண்டு அவர் க்ருஹஸ்த தர்மங்களைச் செய்துகொண்டு காலத்தை நயிப்பித்து வந்தார். இந்த ஸமயம் ஸ்ரீ யாமுநாசார்யர் அதிவ்ருத்தராயிருந்த காலம். ஸ்ரீரங்கத்தில் இருந்துகொண்டு அவர் அநேக சிஷ்யர்களுக்கு அப்பொழுது வேதாந்த க்ரந்தங்களை ப்ரவசநம் செய்து வந்து கொண்டிருந்தார். கர்ணகர்ணிகமாக ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய மேதையையும் பகவத் பக்தியையும் அநுஷ்டாநப் பெருமையையும் பற்றி ஸ்ரீ யாமுநாசார்யர் கேட்டு, அவரைத் தம்மிடம் அழைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆவலுடையவராய், மஹா பூர்ணர் என்னும் தமது சிஷ்யரொருவரை ஸ்ரீரங்கமிருந்து காஞ்சீபுரத்திற்கு அனுப்பினர். ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஏற்கெனவே ஸ்ரீ யாமுநாசார்யருடைய மஹிமையைப் பற்றிப்பல வாறுகக் கேட்டிருந்த படியால், இவ்விதம் அவர் தம்மை அவரிடம் வரும்படி நியமித்ததைப் பெரியதொரு பாக்யமாக நினைத்து உடனே அந்த மஹா பூர்ணருடன் ஸ்ரீரங்கம் புறப்பட்டுப்போனர். அவர் ஸ்ரீரங்கம் சேர்ந்த தினத்தில், அவர் வருவதற்கு இரண்டொரு முஹூர்த்தம் முன்னதாக ஸ்ரீ யாமுநாசார்யருக்கு ப்ராண வியோகம் நேர்ந்து விட்டது. அப்படி நேர்ந்ததில் மிக்க சோகமடைந்தவராய், ஸ்ரீராமாநுஜாசார்யர், ஸ்ரீயாமுநாசார்யருடைய உத்தர க்ரியைகள் முடியும் வரையில் அவ்விடம் இருந்துவிட்டு, திரும்ப காஞ்சீபுரம் வந்து முன்போலவே பகவத் ஸந்நிதியில் கைங்கர்யங்களைச் செய்து கொண்டு வந்



தார். அந்தக் காலத்தில், ஸ்ரீ தேவராஜப் பெருமாளிடம் இருந்த ப்ரீத்யதிசயத்தால் காலம் முழுவதையும் பெருமாள் ஸந்நிதியிலேயே செலுத்திக் கொண்டுவேறு விஷயங்களெல்லாவற்றையும் மறந்து பகவதேக சித்தராய் வர்த்தித்து வந்த காஞ்சீபூர்ணர் என்னும் ஒரு சூத்ர பக்தருடன் இவருக்கு ஸமாகமம் நேர்ந்தது. அப்பொழுது அவ்விருவருக்கும் பரஸ்பரம் ஸௌஹார்த்தம் ப்ரபலமாக உண்டாயிற்று. இவ்விதம் அந்த ஸுஹ்ருத்துடன் பகவத் குணாநுபவத்தைச் செய்துகொண்டு ஸ்வல்ப காலம் கழிந்தபின், ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு ஸ்ரீரங்கம் போகவேண்டுமென்றும் ஸ்ரீ யாமுநாசார்யருடைய சிஷ்யரான ஸ்ரீ மஹாபூர்ணரிடமிருந்து மந்த்ரோபதேசங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் த்வரை ஒன்று உண்டாகி ஸ்ரீகாஞ்சீபூர்ணரிடம் தமது அபிப்ராயத்தைச் சொல்லிவிட்டு அவரிடமிருந்து புறப்பட்டு வருகையில், மார்க்கத்தில் ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீமஹாபூர்ணரை ஸந்திக்கும்படி நேர்ந்தது. எதிர் பாராத இந்த ஸந்தியால் இருவரும் மிக்க ஸந்தோஷம் அடைந்தார்கள். உடனே அவ்விடத்திலேயே ஸ்ரீ மஹாபூர்ணர் ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு 'அஷ்டாக்ஷரம்' என்னும் மந்த்ர ரத்நத்தை உபதேசம் செய்தார். உபதேசம் ஆனபிறகு இருவருமாகக் காஞ்சீபுரம் சேர்ந்து கொஞ்சகாலம் வேதாந்த விசாரங்களைச் செய்துகொண்டு காலத்தைப்போக்கி வந்தார்கள். பிறகு, ஸ்ரீ மஹாபூர்ணர் காஞ்சீபுரம் திரும்பிப் போகும்படி ஸம்பவிக்கவே, ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸம்ஸாரத்திலிருந்து விரக்தராய் நான்காவது ஆச்ரமத்தை ஸ்வீகரித்து, ஸ்ரீதேவராஜப் பெருமாள் ஸந்நிதியிலேயே இருந்துகொண்டு, தம்மை ஆச்ரயித்த ஆஸ்திகர்களெல்லாருக்கும் வேதாந்த ப்ரவசநம் செய்து கொண்டு வந்தார். இக்காலத்தில், காஞ்சீபுரத்திற்கு ஸமீபத்தில் இருக்கும் கூரம் என்னும் க்ராமத்தில் வஸித்து வந்த மிக்க தநிகரான ஸ்ரீ கூரேசன் என்னும் ஒரு ஆஸ்திகரும், ஸ்ரீராமாநுஜாசார்யருடைய பாகிநேயரான தாசரதி என்பவரும் இன்னும் மற்றவர்களும் அவரை ஆசார்யனுக வரித்து அவருடைய முக்ய சிஷ்யர்களாக இருந்து வந்தார்கள்.

இவ்விதம் ஸ்வல்ப காலம் சென்றபிறகு ஸ்ரீரங்கத்திலிருந்து அநேக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீராமாநுஜாசார்யரை ஸ்ரீரங்கம் வரவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி, தமது ஆப்த சிஷ்யரான தாசரதி என்பவருடன் ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தார். இவர் காஞ்சீபுரத்தை விட்டுப் புறப்பட்டுப் போன ஸ்வல்ப தினங்களுக்கெல்லாம், ஸ்ரீ கூரேசனும், தமது தநமெல்லாவற்றையும் ஏழை ஜநங்களிடம் பங்கிட்டு விட்டு, தாமும் தமது பத்நியுமாக ஸ்ரீராமாநுஜாசார்யரிடம் போய், அவ்விடத்தில் உஞ்ச வ்ருத்தி செய்து அதனுல் ஜீவித்து, ஆசார்ய கைங்கர்யத்தைச் செய்து கொண்டு பரமாநந்தத்தை அநுபவித்து வந்தார். ஸ்ரீராமாநுஜாசார்யரும், இந்த ஸமயத்தில், தமக்கென்று சில உயர்ந்த ரஹஸ்ய உபதேசங்களை ஜாக்ரதையுடன் ஸம்ரக்ஷித்துக் கொண்டு வந்த ஸ்ரீயாமுநாசார்ய சிஷ்யர்களான கோஷ்டீபூர்ணர் முதலான ஆசார்யர்களை, சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறபடி உபஸதநம் செய்து அவர்களிடமிருந்து அந்த உபதேசங்களெல்லாவற்றையும் யதாவத்தாகப் பெற்றுக் கொண்டார். ஸ்ரீகோஷ்டீபூர்ணரிடமிருந்து மந்த்ரங்களை க்ரஹிப்பதற்காக ஸ்ரீராமாநுஜாசார்யர் பதினெட்டு தடவை ஸ்ரீரங்கமிருந்து திருக்கோட்டியூர் போய் வந்ததாக ஐதிஹ்யம் சொல்லுகின்றது. இக்காலத்தில்தான், திருப்பதி யாத்ரையாகப் போய் அவ்விடத்தில் ஒருவர்ஷகாலமிருந்து தமது அம்மானுகிற ஸ்ரீ சைலபூர்ணரிடமிருந்து ஸ்ரீ ராமாயணத்தின் ரஹஸ்யார்த்தங்களை க்ரஹித்தார்.

இப்படி ரஹஸ்யார்த்தங்களின் உபதேசங்களெல்லாவற்றையும் பெற்ற பிறகு, பூர்வாசார்யர்களால் பரம்பரையாக உபதேசிக்கப்பட்டுவந்துள்ள விசேஷார்த்தங்களெல்லாவற்றையும் பிற்காலத்தில் வரும் மஹா ஜநங்களின் உபகாரத்தின்பொருட்டு க்ரந்த ரூபமாக எழுதிவைக்கவேண்டுமென்னும் ஓர் அத்யுதாரமான எண்ணம் ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு உதித்தது. அதன் பலமாக அவர் அநுக்ரஹித்தருளிய முதல் க்ரந்தம், இந்த ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹமே. பிறகு ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரத்திற்கு பாஷ்யம் எழுத ஆரம்பித்தவராய், அதைப் பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் ப்ரகாரம் எழுத விரும்பி, அதற்காக ஸ்ரீ ராமாநுஜாசார்யர் தமது சிஷ்யராகிற ஸ்ரீ கூரேசனுடனும் இன்னும் வேறு சிஷ்யர்களுடனும் உத்தரதேச யாத்ரை போய் காச்மீரதேசம் சேர்ந்து அவ்விடத்தில் இருந்த ஸ்ரீபோதாயந வ்ருத்தியைப் படித்து, பிறகு அவ்விடமிருந்து திரும்பி ஸ்ரீ ரங்கம் வந்து, ஸ்ரீ கூரேசனுடைய ஸஹாயத்தைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யத்தை அநுக்ரஹித்தருளினர். இந்த யாத்ரையில் ஸ்ரீகூரேசனைத் தவிர்த்து வேறு அநேக சிஷ்யர்களும் கூடப் போனார்களென்றும், முதலில் ஆழ்வார் திருநகரி முதலிய தக்ஷிணதேசங்களுக்குப்போய் பிறகு அங்கிருந்து அநந்தசயநம் மார்க்கமாக த்வாரகை மதுரை பதரீகாச்ரமம் போய் அங்கிருந்து காச்மீரம் சேர்ந்ததாகத் தெரியவருகிறது. காச்மீரத்தில் இருக்கும் பொழுது அவர்களுக்கு வ்ருத்தி க்ரந்தத்தைப்படிப்பதற்கு மாத்ரம் அநுமதி கிடைத்ததென்றும் அதன் ப்ரதி ஒன்றை எழுதிப் போவதற்கு அங்கிருந்தவர்கள் அநுமதி கொடுக்கவில்லையென்றும், அதற்காக ஸ்ரீ கூரேசன் அங்கிருந்த காலத்தில் வ்ருத்தி க்ரந்தம் முழுவதையும் நெட்டுருச் செய்து வந்தார் என்றும் ஐதிஹ்யம் சொல்லுகின்றது. வ்ருத்தி க்ரந்தத்தின் வாக்யங்களென்று சில வாக்யங்கள் ஸ்ரீ பாஷ்யத்தில் தென்படுகின்றனவென்பதே இவர் வ்ருத்தி க்ரந்தத்தின் ஆதாரத்தைக் கொண்டே ஸ்ரீபாஷ்யத்தை அநுக்ரஹித்தார் என்பதற்குப் போதுமான ப்ரமாணம். இந்த வ்ருத்தி க்ரந்தத்தைப் படிக்கும்பொருட்டு இவர் காச்மீர யாத்ரை செய்தார் என்பது உண்மையாக இருக்குமோவென்று சங்கிப்பார் சிலருண்டு. பாதக ப்ரமாணம் அகப்படாத வரையில் ஐதிஹ்யங்கள் எல்லாம் நமக்கு ப்ரமாணங்களேயாகையால், இப்படி அவர்கள் சங்கிப்பதற்கு எவ்வித ஹேதுவுமில்லை.

ஸ்ரீ பாஷ்யத்தை அநுக்ரஹித்த பிறகு, வேதாந்த ஸாரம் வேதாந்த தீபம் என்னும் க்ரந்தங்களையும், ஸ்ரீ பாஷ்யத்தின் ஸங்க்ரஹமாக படிக்கிறவர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து, தனித்தனியே செய்தருளினர். இவைகளுக்குப் பிறகு பகவத் கீதாபாஷ்யமும் கத்யத்ரயமும் நித்ய க்ரந்தமும் அநுக்ரஹிக்கப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் இருந்துகொண்டு இவர் ஆச்ரிதர்களை அநுக்ரஹித்த காலத்தில் ஆயிரக்கணக்காக ஜநங்கள் இவருடைய திருவடிகளை ஆச்ரயித்தார்கள். சற்றேறக்குறைய எழுநூறு ஸந்யாஸிகளும், எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்று பிறகு ஸ்ரீராமாநுஜாசார்யரால் பொறுக்கி எடுத்து நியமிக்கும் படியான பலவித யோக்யதையுள்ள பெரியோர்களும், இன்னும் கணக்கற்ற அநேக புண்ய புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஸ்ரீராமாநுஜாசார்யரை தைவமாகவே தொழுது வந்ததாகத் தெரிகின்றது. சற்றேறக்குறைய எழுபது திருநக்ஷத்ரங்கள் ஆகும் வரையில் அவர் அவ்விடமே இருந்தார். ஸ்ரீயாமுநாசார்யருக்கு ப்ராண வியோகம் நேர்ந்த பொழுது, ஸ்ரீராமாநுஜாசார்யர் அவருடைய தேஹத்தை ஒத்துப் பார்த்ததாகவும், அப்பொழுது அவருடைய வலதுகை விரல்களுள் மூன்று விரல்கள் முடங்கி இருந்ததைப்பார்த்து ஸமீபத்தில் இருந்தவர்களை 'இது என்?' என்று கேட்க அவர்கள் 'ஸ்ரீயாமுநாசார்யருக்கு மூன்று மனோரதங்கள் இருந்தன; அவை நிறைவேறாததால் அந்த மூன்று



விரல்களும் முடங்கி இருக்கின்றன' என்று சொன்னதன்பேரில், ஸ்ரீராமாநுஜாசார்யர் அந்த மனோரதங்களைத் தாம் நிறைவேற்றி வைப்பதாக ஒத்துக் கொண்டதாகவும், அப்படி அவர் ஒத்துக்கொண்டவுடன் அந்த விரல்கள் நிமிர்ந்ததாகவும் ஒரு ஐதிஹ்யமுண்டு. ஸ்ரீவ்யாஸ ஸூத்ரங்களுக்கு பாஷ்யம் ஒன்று எழுதவேண்டும் என்பது அந்த மூன்று மனோரதங்களுள் ஒன்று. அது இப்பொழுது நிறைவேறிவிட்டது. மற்றை இரண்டும், ஸ்ரீசடகோபனிடமும் ஸ்ரீபாராசர மஹர்ஷியிடமும் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாருக்குமுள்ள ப்ரதிபத்தியை ஸூசிப்பிக்கும் பொருட்டு அவர்களுடைய பெயரைத் தகுந்த பாத்ரங்களான இரண்டு ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களுக்கு வைக்கவேண்டும் என்பவைதாம். இவைகளையும் நிறைவேற்றும் பொருட்டு, தமது அம்மானுகவும் ஆசார்யனுகவுமிருந்த ஸ்ரீசைல பூர்ணருடைய குமாரருக்கு ஸ்ரீசடகோபனுடைய திரு நாமமாகிற 'குருகேசன்' என்னும் பெயரையும், தமது ஸுஹ்ருத்தாகவும் சிஷ்யராகவுமிருந்த ஸ்ரீகூரேசனுடைய குமாரருக்கு 'பராசரர்' என்னும் பெயரையும் ஸ்ரீ ராமாநுஜாசாரியர் அநுக்ரஹித்தார் என்பதும் ஐதிஹ்யம். இவர்கள் இருவரும் அந்தந்தப் பெயருக்குத் தகுந்த பாத்ரங்களே என்பது அவரவர்கள் செய்துள்ள க்ரந்தங்களால் நன்கு வெளிவரும். குருகேசன் என்பவர் ஸ்ரீசடகோபனுடைய திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி' என்னும் ஒரு அத்யத்புதமான வ்யாக்யாநத்தைச் செய்தருளியிருக்கிறார். ஸ்ரீபாராசரரால் செய்யப்பட்டுள்ள க்ரந்தங்களுள் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யமும், ஸ்ரீரங்கராஜ ஸ்தவமும் ஸ்ரீகுணரத்நகோசமும் இவை மூன்றுமே அவருடைய ப்ரஸித்திக்குப் போதுமானவை.

வார்த்தகத்தில் ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு ஸ்வல்ப கஷ்டங்களைக் கொடுக்கும் ஸம்பவங்களும் சில நேர்ந்தன. அப்பொழுது சோள தேசத்து அரசனுயிருந்த குலோத்துங்க சோழன் என்னும் ஒரு வீர சைவன், 'சிவனே பரதேவதை' என்பதை ஒத்துக்கொண்டு ஒரு பத்ரத்தை அனுப்புதல் வேண்டுமென்று ஒரு கட்டளையை ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு அனுப்பினன். ஸ்ரீ கூரேசன் என்னும் ஸ்ரீராமாநுஜாசார்யருடைய சிஷ்யர், தாமே போய் நாராயண பரத்வத்தை ஸ்தாபித்து வருவதாக ஸ்ரீராமாநுஜாசார்யரிடமிருந்து அநுமதிபெற்று, சோள ராஜனுடைய ஸதஸ்ஸுக்கு, ஸ்ரீ மஹாபூர்ணர் என்னும் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய முதல் ஆசார்யருடன் கூடப் போய்ச் சேர்ந்தார். அங்கே போய் இருவரும் வாதம் செய்த காலத்தில் அரசனுக்குக் கோபம் உண்டாகி அவர் இவர்களுடைய கண்களையும் பிடுங்கிவிடும்படி உத்தரவு செய்தான். அப்படியே அவர்களுடைய கண்கள் பிடுங்கப்பட்டன. அந்த வ்ரணத்துடன் அவர்கள் திரும்பி ஸ்ரீரங்கம் வரும் காலத்தில் ஸ்ரீ மஹாபூர்ணருக்கு வ்ரணத்தின் வ்யதை அதிகரித்து மார்க்கத்திலேயே மரணம் நேர்ந்தது. ஸ்ரீ கூரேசன் மாத்ரம் ச்ரமப்பட்டு ஸ்ரீரங்கம் சேர்ந்தார். அப்பொழுது ஸ்ரீரங்கத்தில் அரசன் உத்தரவால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பட்டணத்திலுள் ப்ரவேசம் தடைபட்டிருந்த படியால் அவர் அங்கிருந்து திரும்பி பெரிய ப்ரயாஸத்துடன் மதுரை நோக்கிப்போய் திருமாலிருஞ்சோலை சேர்ந்து அவ்விடத்திலுள்ள சில ஸாது ஜநங்களால் ஆதரிக்கப்பட்டு அவ்விடத்திலேயே வஸித்து வந்தார். அரசனிடமிருந்து முதல் உத்தரவு வந்தவுடனே, ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீரங்கத்தில் இருக்க பயந்து, ஸ்ரீகூரேசனுக்கு என்ன நேர்ந்ததோவென்று சங்கித்துக்கொண்டே, சில சிஷ்யர்களுடன் ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்பட்டு இரவிலேயே வெளிவந்து, க்ராமத்திலிருந்து க்ராமம் ஓடி, நீலகிரிக் காட்டைச்சேர்ந்து, கடைசியாக மைஸூருக்கு மேற்கில் 50 மைல் தூரத்திலுள்ள வஹ்நி புஷ்கரிணி என்னும் ஒரு இடம் போய் அங்கிருந்து புறப்

பட்டு தங்கக்கூடிய இடமொன்றைத் தேடிவருகையில், கிழக்கில் ஸாளக்ராமம் என்னும் ஒரு க்ராமம் சேர, அவ்விடத்தில் இருந்தவர்கள் கொஞ்சம் ஆதரிக்கவே அவ்விடத்திலேயே சில காலம் தங்கி இருந்தார். ஆந்த்ர பூர்ணர் என்று பிறகு ப்ரஸித்தி பெற்ற சிஷ்யர் ஒருவர் அப்பொழுது அவரை ஆச்ரயித்தார். 'அந்த ஸமயத்தில், ஸமீபத்திலிருந்த தொண்டனூர் என்னும் ஒரு இடத்தில், த்வாரஸமுத்ரம் என்னும் ஒரு சிறிய ஜைன தேசத்தரசன், பிசாசத்தால் பீடிக்கப்பட்ட தனது புத்ரியுடன் மாந்த்ரிகர்களைத் தேடி வந்திருந்தான். ஸ்ரீராமாநுஜாசார்யர் அவ்விடம் போனபொழுது, அந்த அரசன் யாரோ ஒரு பெரியவர் அவ்விடம் வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு அவரை வரவழைக்க, அவர் அந்த அரசனிடம் போய் அவனுடைய வேண்டுகோளின் பேரில் அவனுடைய பெண்ணுக்கு சிகித்ஸை செய்வதாய் ஒத்துக்கொண்டு இரண்டொரு நாள் தன்னுடைய கமண்டலு தீர்த்தத்தால் பகவந் நாமத்தை ஜபித்து அந்த ராஜ குமாரத்தியை ப்ரோக்ஷித்து வந்தார். அந்த ப்ரோக்ஷண மாத்ரத்தாலே அந்தப்பெண் ஸகல வ்யாதியும் நீங்கினவளாய் எழுந்திருக்க, அரசன் மிக்க ஸந்தோஷமடைந்து, ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய மஹிமையையும் அவருடைய சுப குணங்களையும் பார்த்து அவருடைய திருவடிகளை ஆச்ரயித்து, பிறப்பினால் தனக்குக் கிடைத்திருந்த ஜைந மதத்தைத் துறந்து வைஷ்ணவ மதத்தைத் தழுவினவனானான். பிறகு அவ்விடத்தில் அநேக ஜைநர்கள் ஒன்று சேர்ந்து ஸ்ரீராமாநுஜாசார்யருடன் மதவிஷயமாக வாதம் செய்ததாகவும், அப்பொழுது ஸ்ரீராமாநுஜாசார்யர் ஒரு திரைக்குள் போய் ஆயிரம் சிரஸ்ஸுகளுடன் கூடிய ஆதிசேஷனாக ஆவிர்ப்பவித்து, எல்லாருக்கும் ஏக காலத்தில் ப்ரத்யுத்தரம் அளித்ததாகவும், அது கண்ட ஜைநர்கள் பயந்து திக் விதிக்காக ஓடி விட்டதாகவும், ஐதிஹ்யம் சொல்லுகின்றது.

இம்மாதிரி அந்தத் தொண்டனூரிலேயே இருபது வர்ஷகாலம் இருந்துகொண்டு ஸ்ரீராமாநுஜாசார்யர் அநேக ஜநங்களுக்கு ஆத்மோஜ்ஜீவநோபாயங்களை அநுக்ரஹித்து வந்தார். அப்பொழுது அவ்விடத்தில் அவருடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்களுள் அநேக ப்ரஸித்த வித்வான்களுமுண்டு. அவர்களுடைய ஸந்ததியில் ஜநித்த சில பெரியோர்கள் இப்பொழுதும் அவ்விடத்தில் காணப்படுகிறார்கள். மைஸூருக்குச் சொஞ்சம் வடக்கிலுள்ள மேல்கோட்டை என்று வழங்கிவரும் திருநாராயணபுரம் என்னும் திவ்ய தேசத்தில் ஓரிடத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய மங்கள விக்ரஹமொன்று பூமியில் புதைந்து கிடக்கின்றது என்று ஸ்வப்நத்தில் தெரியவர, ஸ்ரீராமாநுஜாசார்யர் மறுதினம் அவ்விடம்போய் அந்த விக்ரஹத்தைக் கண்டுபிடித்து எடுத்து அதை அந்தத் திருநாராயணபுரத்திலேயே ப்ரதிஷ்டை செய்து, அவ்விடத்தில் அந்தப் பகவானுக்கு ஒரு பெரிய கோயிலையும் கட்டினார். அப்பொழுது மற்றொரு நாள் ஸ்வப்நத்தில் மற்றுமோர் அதிசயம் அவருக்குத் தென்பட்டது. ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய மூர்த்தியாகிற ராமப்ரியர் என்னும் விக்ரஹமொன்று டில்லியில் ஒரு ம்லேச்ச ராஜ புத்ரியிடம் இருப்பதாகவும் 'அதை மீட்டுக்கொண்டு வருவதாகவும் அந்த ஸ்வப்நத்தில் காணவே, உடனே அவர் அதைக்கொண்டு வருவதற்கு உத்யுக்தராய் டில்லிக்குப்போய் மஹத்தான ப்ரயாஸத்தின் பேரில் தமது இஷ்டத்தை ஸாதித்துக்கொண்டு, திரும்பி வந்து, திருநாராயணபுரத்தில் அந்த விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிறபடி நித்ய திருவாராதநங்களும் உத்ஸவம் முதலானவைகளும் சாச்வதமாக நடைபெறுவதற்கு வேண்டுவனவான ஏற்பாடுகளையும் செய்துவைத்தார். மைஸூர் மஹாராஜனும் ஸ்ரீராமாநுஜாசார்யருடைய ஜ்ஞாநத்தையும் சக்தியையும் கண்டு அவரி



டம் பூர்ண ப்ரதிபத்தி யெய்து பகவத் கைங்கர்யத்திற்கு அபேக்ஷிதங்களான உபகாரங்களெல்லாவற்றையும் செய்து வந்தான். ஸ்ரீ கூரேசனுக்கும் ஸ்ரீமஹா பூர்ணருக்கும் நேர்ந்த விபத்தும் அவருடைய காதுக்கு அப்பொழுது பரம்பரையாக எட்டிற்று. அவர்களைப்பற்றி மிகவும் துக்கித்து ஸ்ரீ கூரேசனைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் அவர் அவ்விடமிருந்து புறப்பட்டார். அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் அவர் ப்ரயாணத்திற்கு ஸந்நாஹம் செய்வதைப்பார்த்து, அவருடைய ப்ரதிக்ருதி ஒன்றை விக்ரஹ ரூபமாகத் திருநாராயண புரத்தில் எழுந்தருளப் பண்ணுவதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்வநுமதியைக் கொடுத்துவிட்டு, அவ்விடமிருந்து புறப்பட்டு அதிக த்வரையுடன் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார்.. சோளதேசத்தரசனாகிய குலோத்துங்கனுடைய காலமும் அதற்குள் முடிந்துவிட்டபடியால் இவருக்கு ஸ்ரீரங்கம் வருவதிலும் அவ்விடத்தில் முன்போல ஸித்தாந்த ப்ரவசநம் செய்வதிலும் எவ்வித ச்ரமமும் ஸம்பவிக்கவில்லை. நேத்ர ஹீநரான ஸ்ரீ கூரேசனையும் ஸந்தித்து, அவருடைய துக்கத்தால் மிகவும் துக்கிதராய், அவருடைய மநஸ்ஸுக்கு ஆச்வாஸகரங்களான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டும் ஹிதங்களான கார்யங்களைச் செய்துகொண்டும் யதா பூர்வம் ஸித்தாந்தத்தைத் தழையச் செய்வதில் ப்ரவ்ருத்தராய் கொஞ்ச காலம் எழுந்தருளி இருந்தார். சோளதேசத்தரசனுடைய கொடிய ராஜ்ய நிர்வாஹம் நடந்துவந்த பொழுது, சிதம்பரத்தில் திருக்கோயில் கொண்டிருந்த ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாளுடைய விக்ரஹத்திற்கு அபாயம் வரும்போல இருந்ததைப் பார்த்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த விக்ரஹத்தை அவ்விடமிருந்து எடுத்துக்கொண்டு திருப்பதியில் ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்னும் வ்ருத்தாந்தம் அவருக்கு அப்பொழுது தெரிய வந்தது. அதை அறிந்த அவர், ஸ்ரீ கோவிந்தராஜனை மறுபடியும் ப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்று விரும்பி, அதற்காகத் திருப்பதிக்கு எழுந்தருளி, அவ்விடத்து ஜநங்களுடைய ப்ரார்த்தனையின் பேரில், திருப்பதியிலேயே ஒரு கோயிலை நிர்மாணம் செய்து அந்த விக்ரஹத்தை அவ்விடத்தில் ப்ரதிஷ்டை தெய்தார். இப்பொழுதும் கீழத்திருப்பதியில் அந்த எம்பெருமான் ஸேவை ஸாதிப்பதை எல்லாரும் பார்க்கலாம். பிறகு அவ்விடமிருந்து ஸ்ரீரங்கம் திரும்பி எழுந்தருளி, கொஞ்ச காலம் முன்போல ஜநங்களுக்கு உபகாரகமான கார்யங்களைச் செய்துகொண்டிருந்து விட்டு, ஸ்ரீ பகவானுடைய நியமநம் நேரவே ப்ராக்ருதமான இந்தத் திருமேனியை விட்டு விட்டு, நித்ய விபூதியை அலங்கரிக்கும்படி ஸம்பவித்தது. அப்படி திருநாட்டுக்கு எழுந்தருளுகையில் அவருக்கு நூற்று இருபது திரு நக்ஷத்ரங்கள் ஆயின. அவர் திருநாட்டுக்கு எழுந்தருளுவதற்குக் கொஞ்ச காலம் முன்னதாகவே ஸ்ரீகூரேசனும் பரமபதமடைந்தார்.

இது, இந்த மஹாநுடைய திவ்ய சரித்ரம். இவர் ஸகல கல்யாண குணங்களாலும் நிறைந்தவராக இருந்தார் என்பதை நிரூபிக்க ப்ரயத்நப்படுவது அநாவச்யமே. இவருடைய சரித்ரத்தில், இவ்விடத்திற் சொல்லப்படாமலிருக்கும் சில ஐதிஹ்யங்களை யதார்த்தமென்று நினைத்து இவர்மீது சிலர் அது காரணமாகச் சில தூஷணங்கள் செய்வதை நாம் அறிவோம். அந்த ஐதிஹ்யங்களெல்லாம் பொய்யாகையால், அந்தத் தூஷணத்திற்கு அவகாசமே இல்லை. ஒரு ஸமயத்தில் ஸ்ரீகாஞ்சீபூர்ணர் என்னும் தமது சூத்ர ஸுஹ்ருத்தைத் தமது க்ருஹத்திற்கு போஜநத்திற்குக் கூப்பிட்டு அவரிடத்தில் தனக்கிருந்த ப்ரீத்யதிசயத்தால் அவர் போஜநம் செய்த பிறகு பாக்கியிருந்த அந்நத்தைத் தாம் புஜிக்க ஸ்ரீராமாநுஜர்சாயர் உத்யுக்தராயிருந்தாரென்றும், தமது ஆசார்யரான மஹா

பூர்ணரும் தாமுமாக ஒரே க்ருஹத்தில் வஸித்திருந்த பொழுது ஒரு ஸமயத்தில் தமது பத்நி ஆசார்ய பத்நியுடன் சச்சரவு செய்ததைப் பார்த்து, கோபங்கொண்டு, பத்நியை அவளுடைய தகப்பன் க்ருஹத்திற்கு அனுப்பிவிட்டு, அந்தக் கோபத்தாலேயே க்ருஹஸ்தாச்ரமத்தை விட்டு விட்டு நாலாவது ஆச்ரமத்தை அங்கீகரித்தாரென்றும், ஸ்ரீ கோஷ்டி பூர்ணரிடம் பதினெட்டு தடவை போய் அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட ரஹஸ்ய மந்த்ரங்களை, அவருடைய நியமனத்திற்கும் அவரிடம் தாம் செய்திருந்த ப்ரதிஜ்ஞைக்கும் விருத்தமாக, மந்த்ர க்ரஹணம் செய்து கொண்ட உத்தரக்ஷணத்திலேயே, பஹிரங்கமாக அதிகாரி அநதிகாரி வாசியற, எல்லாரும் உஜ்ஜீவநத்தைப் பெறவேண்டுமென்னும் எண்ணத்துடன் பெருங்கும்பலில் ஸகல ஜநங்களுக்கும் தெரியும்படி உறக்கச் சொல்லி உபதேசித்துவிட்டாரென்றும், தாம் ஸந்யாஸியாக இருந்த காலத்தில் ஒருஸமயம் தமக்கு ஒரு ஆபத்நேரவே தம்மை அந்த ஆபத்திலிருந்து தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு வேஷம் மாறுடி க்ருஹஸ்தர் போல வஸ்த்ரம் முதலியவைகளைத் தரித்துக் கொண்டு அம்மாதிரி அநுஷ்டாநாதிகளைச் செய்து வந்தாரென்றும், டில்லியிலிருந்து ஸ்ரீராம ப்ரிய விக்ரஹத்தை மீட்டு வருவதில் பஞ்சமர்களால் தமக்குக் கிடைத்த ஸஹாயத்தைப் பற்றி, அவர்களுக்கு அந்த ஆலய ப்ரவேசத்தை, அது சாஸ்த்ரவிருத்தமென்று தெரிந்து கொண்டே, அநுக்ரஹித்தாரென்றும், தொண்டனூரில் ஜைநர்களை வாதத்தில் ஜயித்த பிறகு அந்த அரசன் தனக்கு விதேயனாயிருப்பதை அவலம்பித்து, அவனைக் கொண்டு தமக்கு ப்ரதி வாதிகளாயிருந்த அநேக ஜைநர்களைக் கல் காணத்தில் போட்டு ஆட்டு வித்தாரென்றும், இன்னும் இவ்விதங்களான பல ஐதிஹ்யங்களைச் சிலர் சொல்லி வருவது உண்டு. அவையெல்லாம் சாஸ்த்ரத்திற்கு விருத்தமான நடவடிக்கைகளானதால், அப்படி சாஸ்த்ரத்திற்கு விருத்தமான அநுஷ்டாநத்தில் அவர் ப்ரவர்த்தித்தார் என்று சொல்வது கொஞ்சமேனும் நம்பத்தகுந்ததன்று. ஸ்ரீராமாநுஜாசார்யரிடம் தமக்குள்ள கௌரவாதிசயத்தால், அவருடைய சிஷ்ய ப்ரசிஷ்யர்களுட் சிலர், இம்மாதிரி ஐதிஹ்யங்களைக் கல்பித்து அவருடைய சரித்ரத்தில் சேர்த்து விட்டாரென்றே நாம் க்ரஹித்தல் வேண்டும். பாதக ப்ரமாணங்களுள்ள ஐதிஹ்யங்களெல்லாம் அப்ரமாணங்களே.

ஸர்வ ஜநங்களும் ஆத்மோஜ்ஜீவநம் பெறவேண்டும் என்னும் தீவ்ரமான ஆவலும், வர்ணத்தாலும் தநத்தாலும் ஜ்ஞாநத்தாலும் அதி நிஹீநர்களாயுள்ளவர்களிடமும் நற்குணங்கள் ஏதாவது தென்பட்டால் அதை எவ்வித ஆக்ரஹமுமின்றிக்கே ப்ரீதியுடன் ஆதரிக்கும் உதாரத்தன்மையம், பூத தயையும், ஸத்ய வசநமும், இன்னும் இவைபோன்ற பல உத்தம குணங்கள் ஸ்ரீராமாநுஜாசார்யரிடம் ஸ்வாபாவிகங்களாகவே இருந்து வந்தன வென்பது அவருடைய சரித்ரத்திலிருந்து நன்கு விளங்கும். இவையெல்லாவற்றையுங் காட்டிலும் மிக உயர்ந்ததான வேறு ஒரு குண விசேஷம் அவரிடம் இருந்தது. அந்தக்குணம் புருஷ ப்ரயத்நத்தாலாவது ஜ்ஞாந விசேஷத்தாலாவது ஸாதித்துக்கொள்ளத்தகுந்ததன்றாகையால், அதை அவர் பகவானுடைய அருளாலேயே பெற்றிருந்தார் என்று சொல்லவேண்டும். அந்தக்குணமாவது, அவர் பகவானிடத்தில் செய்து வந்த உத்தமமான ஹார்த்த பக்தியே. ப்ரீதி என்பது புருஷ ப்ரயத்நத்தால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதன்று. அது ஹ்ருதயத்திலிருந்து தானாக ப்ரவஹிக்கவேண்டுமென்று லௌகிக நிரூபகர்கள் சொல்வார்கள். அந்த ப்ரீதி ஸாமாந்ய ஜநங்களிடம் செய்யப்பட்டதாயிருந்ததேயானால் அதைஜந்மாந்தர வாஸநையால் உண்டானதென்றும், அதுவே பகவத் விஷயத்திற் செய்யப்பட்டு அதிசயிதமாயிருந்ததேயானால் அதைப் பகவத் க்ருபையால் ஏற்பட்டதென்றும் வைதிகர்கள் சொல்வார்கள். ஆழ்வார் விஷயத்திற் போல ஸ்ரீராமாநுஜாசார்யர் விஷயத்திலும் இந்த ப்ரீதி எவ்வித மயர்வுமற்றதாகவும் மிக அதிசயிதமாகவும் இருந்தபடியால் எம்பெருமான் அருள அது கிடைத்ததென்றே சொல்லுதல் வேண்டும். ஸ்ரீராமாநுஜாசார்யருடைய ஜ்ஞாநப் பெருமையைப் பற்றி அவருடைய க்ரந்தங்களே பறக்கப் பேசும்.



இம்மஹாந் செய்தருளி யிருக்கும் க்ரந்தங்களாவன:— (1) ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம், (2) ஸ்ரீ பாஷ்யம் என்று சொல்லப்படும் சாரீரக ஸூத்ரபாஷ்யம், (3) பகவத் கீதா பாஷ்யம், (4) வேதாந்த ஸாரம், (5) வேதாந்த தீபம், (6) கத்ய த்ரயம், (7) நித்ய க்ரந்தம், ஆக ஏழு.

ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய காலம்:—917—1037 A. D.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

[illegible]

𑌶𑍍𑌰𑍀𑌃

## 𑌵𑌿𑌷𑌯 𑌸𑍂𑌚𑌿𑌕𑌾


### 1. 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌃 [1—20]

| | | | |
|---|---|---|---|
| 1 | 𑌮𑌂𑌗𑌲𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 | ... | 1—4 |
| 2 | 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃 | ... | 5—16 |
| 3 | 𑌶𑌂𑌕𑌰𑌪𑌕𑍍𑌷𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 | ... | 17—19 |
| 4 | 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌪𑌕𑍍𑌷 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 | ... | 20 |
| 5 | 𑌯𑌾𑌦𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌪𑌕𑍍𑌷 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 | ... | 20 |

### 2. 𑌶𑌂𑌕𑌰𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 [21—122]

| | | | |
|---|---|---|---|
| 6 | '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌪𑌰𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑌾𑌸𑌃 | ... | 21—65 |
| 7 | '𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌶𑍋𑌧𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌪𑌰𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑌾𑌸𑌃 | .... | 66—82 |
| 8 | 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑌾𑌵𑌃 | ... | 83—85 |
| 9 | 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑍍𑌯𑍇𑌵 | .... | 86—90 |
| 10 | 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌃 | ... | 91—95 |
| | [𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 [illegible] 𑌮𑌤𑌨𑌿𑌰𑌾𑌸𑌃] | ... | 95—99 |
| 11 | 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌭𑍇𑌦𑌨𑌿𑌰𑌾𑌸𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌃 | ... | 99—122 |

### 3. 𑌶𑌂𑌕𑌰𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 [122—163]

| | | | |
|---|---|---|---|
| 12 | 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | .... | 122—140 |
| 13 | 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | .... | 140—146 |
| 14 | 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | ... | 146—148 |
| 15 | 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | ... | 148—150 |
| 16 | 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌰𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | ... | 151—154 |
| 17 | 𑌸𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 | ... | 154—163 |

### 4. உத்தரவாக்ய அதிகரணா: — [163—181]


| | | |
|---|---|---|
| 18 | ஸாக்ஷாத்வாக்ய அதிகரணம் ... | 163—173 |
| 19 | யாஜ்ஞவல்க்யகாலவாக்ய அதிகரணம் ... | 173—181 |


### 5. ஸ்வபக்ஷஸ்தாபனம் — [182—425]


| | | |
|---|---|---|
| 20 | ஸூக்ஷ்ம வேதநாவேதநாத ப்ரஹ்மணஸ்ஸ ஸவிசேஷத்வ ... | 182—210 |
| 21 | ப்ரஹ்மண: ஸகலப்ரவர்த்தகத்வம் ... | 210—213 |
| 22 | உபாயஸ்ய ஸக்திநிரூபணம் ... | 213—231 |
| 23 | தத்ர ஶ்ருதி ப்ரமாணம் ... | 232—248 |
| 24 | ப்ரஹ்மணோ நியந்த்ருத்வ ஸமர்த்தனம் ... | 249—2 4 |
| 25 | ஸக்திநிரூபண விசார: ... | 255—267 |
| 26 | நாராயணஸ்யைவ உபேயத்வ ஸமர்த்தனம் ... | 268—331 |
| 27 | வ்யாப்தத்வ ஸாவயவாதி நிராஸ: ... | 332—371 |
| 28 | நித்யவிபூதி ஸமர்த்தனம் ... | 377—419 |
| 29 | உபஸம்ஹார: ... | 411—425 |


---


## கும்பகோணம் திவான்பஹதூர் V. K. ராமாநுஜாசாரியர் எழுதி அச்சிட்ட தமிழ் புஸ்தகங்கள்.

**1. ச்ரௌதம்** விலை ரூ 1—0—0

இதில் வேதத்தில் கர்மகாண்டத்தில் சொல்லப்படும் அக்னி ஹோத்ரம், தர்சம், பூர்ணமாஸம் என்கிற இஷ்டிகளும், அக்னிஷ்டோமம் என்கிற ஸோம யாகமும் விரிவாயும், மீமாம்ஸையைப் படிக்கிறவர்களுக்குத் தெரியவேண்டிய மற்ற யாகங்கள் சுருக்கமாயும் சொல்லப்படுகின்றன. வேதாந்த தீபிகையில் அச்சிடப்பட்டுவரும் மீமாம்ஸா சுருக்கத்தைப் படிக்கிறவர்களுக்கு இது அவசியம் வேண்டியது.

2. ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த கீதாபாஷ்யம் கிரந்த அக்ஷரத்திலும் அதற்கு எளிதான தமிழ் நடையில் உரையும், அதின் வ்யாக்யானமான தாத்பர்ய சந்திரிகையிலிருந்து குறிப்புகளும் அடங்கியது.

| | |
|---|---|
| முதல் ஆறு அத்தியாயம் | ரூ. 1—4—0 |
| இரண்டாவது ஆறு அத்தியாயம் | ரூ. 1—0—0 |
| கடைசி ஆறு அத்தியாயம் | ரூ. 0—12—0 |

3. ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த **ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில்** உள்ள **அதிகார ஸங்கிரஹப் பாட்டுக்களும்**, அவைகளுக்கு எளிதான தமிழ்நடையில் பதவுரையும், கருத்தும் விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. 0—8—0

4. அதே புஸ்தகத்தில் பிரமாணங்களாகக்காட்டப்பட்ட **ஸம்ஸ்க்ருத வசனங்களுக்கும், தமிழ் வசனங்களுக்கும், அநுப்பதங்களுக்கும்** எளிதான தமிழ்நடையில் மொழிப்புரை. ரூ. 1—0—0

5. அதே புஸ்தகத்தில் ஒவ்வொரு அதிகாரத்தில் முதலிலும் கடைசியிலுமிருக்கும் **அதிகாரஸங்கிரஹ ச்லோகங்களுக்கும்** அவைகளுக்கு எளிதான தமிழ் நடையில் பதவுரையும். கருத்தும், விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. இது அச்சிடப்பட்டு வருகிறது. விலை 0—8—0 ஆக இருக்கும்.

---

N. B — இவைகளை வேண்டுகிறவர்கள் கும்பகோணம் பாட்டராசாரியார் தெருவில் ஸ்ரீ-உ-வே சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்டராசாரியருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

Registered No. M. 916.

## Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Indian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| " | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| " | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| " | T.D. Sreenivasachari, M.A., B.L. | " |
| " | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| " | N T. Shamanna, Solicitor. | *Director* |
| " | M. Sudarsana Iyengar, Merchant. | " |
| " | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | " |
| " | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | " |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] DECEMBER 1934 [ஸஞ்சிகை 6

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

9-JAN 1935

பவ ௵ 



கார்த்திகை

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. புருஷ ஸூக்தம்:—[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்] 521
2. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 529
3. கடிதங்கள்:— ... 540
4. ஸம்பாதகீயம்:— ... 544
5. பரிகர விஜயம்:— ... 91
6. ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 53
7. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 89
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:— அட்டவணை [வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 1


---


### ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யானத்துடனும் கூடியது] ... ... ... ரூ. 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.


ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.


ஸம்பு. 23] பவ ஹு கார்த்திகை மீ [ஸஞ்சிகை 6


ஸ்ரீ:

## புருஷ ஸூக்தம்

[ஸ்ரீ உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்]

[5-வது ஸஞ்சிகை 509-வது பக்கம் தொடர்ச்சி]

கீழ் ருக்குக்களில் 'விராட்' என்பதிலிருந்து புருஷன் உண்டானானென்றும், அவனைப் பசுவாக வைத்துக் கொண்டு தேவர் முதலானவர்கள் யஜ்ஞமொன்றைச் செய்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. 'விராட்' என்பது ப்ரபஞ்சத்திற்குக் காரணமான ப்ரக்ருதியைக் குறிக்கின்றதென்றும், அதிலிருந்து உண்டான புருஷனானவன் அதை அதிகரணமாயுடைய அதன் அபிமானி புருஷனாகிற சதுர்முக ப்ரஹ்மாவென்றும், அந்த ப்ரஹ்மா தன்னுடைய கார்யமாக நியமிக்கப்பட்டிருக்கிற வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் சரிவரசெய்யும் பொருட்டு அதற்கு வேண்டுவதான ஜ்ஞாந சக்திகளையடைய அபேக்ஷித்து பகவானைக் குறித்து ஆத்ம ஸமர்ப்பண ரூபமாகிற ஒரு மாநஸ யஜ்ஞத்தைச் செய்தாரென்றும், இந்த ருக்குக்களை பூர்வாசார்யர்கள் விவரித்திருக்கிறார்கள். அம்மாதிரி யஜ்ஞம் செய்வதே சதுர்முக ப்ரஹ்மா முதலான ஸகல ப்ரஜைகளுக்கும் சரியான உஜ்ஜீவனோபாயம் என்பது சாஸ்த்ர ஸித்தம். பகவத் கீதை,

"ஸஹ யஜ்ஞை꞉ ப்ரஜா꞉ ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி꞉"

[ஸ்ருஷ்டி காலத்தில், பகவான், அசேதந ப்ராயர்களாகத் தன்னிடத்தில் லயித்திருந்த ப்ரஹ்மா முதலிய சேதந வர்க்கத்தைப் பார்த்து, அந்தச் சேதநர்களெல்லாரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்னும் உதாரமான இச்சையுடன், தனது ஆராதநமாகிற யஜ்ஞத்தின் நிஷ்பத்தியின் பொருட்டு யஜ்ஞங்களுடன் கூட இந்த ப்ரஜைகளெல்லாரையும் ஸ்ருஷ்டித்து, அவர்களைப் பார்த்து பின்வருமாறு ஒரு வார்த்தையையும் சொன்னான்] என்று சொல்லுகின்றதன்றோ? ஆகையால் பகவதாராதந ரூபமாகிற யஜ்ஞமே ஸகல ஜீவன்களுக்கும் சரியான உஜ்ஜீவநோபாயம். இதை வற்புறுத்தும் பொருட்டே இந்தப் புருஷ ஸூக்தத்தில், 'சதுர்முக ப்ரஹ்மாவும் தனது உஜ்ஜீவநத்தை அடைய விரும்பி பகவதாராதந ரூபமாகிற யஜ்ஞத்தைச் செய்தான' என்று சொல்லி, பிறகு, உபஸம்ஹரிக்குமிடத்திலும் யஜ்ஞங்களைச் செய்வதே பரமமான தர்மமென்றும் அவைகளைச்செய்தே 'நாகம்' என்று சொல்லப்படும் மோக்ஷத்தை மஹாத்மாக்களெல்லாரும் அடைந்தார்களென்றும் முடிக்கின்றது. இதை வெளியிடுவதே புருஷஸூக்தத்தின் பரமமான தாத்பர்யம்.

158954

தஸ்மாத்யஜ்ஞாத்ஸர்வஹுத꞉ |
ஸம்ப்ருதம் ப்ருஷதாஜ்யம் |
பஶூக்ம்ஸ்தாக்ம்ஶ்சக்ரே வாயவ்யான் |
ஆரண்யான் க்ராம்யாஶ்ச யே ||—9.

தஸ்மாத் - அந்த, ஸர்வஹுத꞉ யஜ்ஞாத் - 'ஸர்வஹுத்' என்னும் யஜ்ஞத்திலிருந்து, ப்ருஷதாஜ்யம் - தயிருடன் கலக்கப்பட்ட நெய்யானது, ஸம்ப்ருதம் - உண்டாயிற்று. [ஸ꞉ - அந்த யஜ்ஞத்தின் கர்த்தாவாகிற ப்ரஹ்மா], வாயவ்யான் பஶூன் - வாயுவை அபிமாநி தேவதையாயுடைய பசுக்களையும், ஆரண்யான் - காட்டு ம்ருகங்களையும், யே க்ராம்யா꞉ - க்ராமங்களில் எவை காணப்படுகின்றனவோ, தான் - அவைகளையும், சக்ரே - ஸ்ருஷ்டித்தார்.

ப்ருஷதாஜ்யம்— தயிருடன் கலந்த நெய். இது ஸகல போக்ய பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். எவை எவை ப்ராணி வர்க்கத்தின் தேஹயாத்ரைக்கு அபேக்ஷிதங்களோ அவையெல்லாம் இவ்விடத்தில் விவக்ஷிதங்கள்.



ஸர்வஹுத꞉— ப்ரஹ்மாண்ட தேஹாபிமாநியாக உண்டான புருஷன் இந்த யஜ்ஞத்தில் ஹோமம் செய்யப்படுகிறபடியால் இந்த யஜ்ஞத்திற்கு 'ஸர்வஹுத்' [ஸர்வமும் ஹோமம் செய்யப்படும் யஜ்ஞம்] என்று பெயர். இது மாநஸிகமாகச் செய்யப்படும் யஜ்ஞம்; ஆத்மாவே ஹவிஸ்ஸாக ஸமர்ப்பிக்கப் படுகிறபடியால், ஸர்வமும் ஹோமம் செய்யப்படுகின்றது என்றும் இந்தப் பெயருக்கு நிர்வாஹம் செய்யக்கூடும். அன்றிக்கே, ஸர்வன் என்று பகவானுக்கு ஒரு பெயர்; அவனை உத்தேசித்து ஹோமம் செய்யப்படுகிறபடியால் 'ஸர்வ ஹுத்' என்று இந்த யஜ்ஞம் வ்யவஹரிக்கப்படுகின்றதென்றும் சிலர் சொல்வார்கள்.

தஸ்மாத்யஜ்ஞாத்ஸர்வஹுத꞉ |
ருச꞉ ஸாமானி ஜஜ்ஞிரே |
சந்தாம்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத் |
யஜுஸ்தஸ்மாதஜாயத ||—10.

தஸ்மாத் ஸர்வஹுத꞉ யஜ்ஞாத் - அந்த ஸர்வஹுத் என்னும் யஜ்ஞத்திலிருந்து, ருச꞉ - ருக்குக்களும், ஸாமானி - ஸாமங்களும், ஜஜ்ஞிரே - உண்டாயின. தஸ்மாத் - அந்த யஜ்ஞத்திலிருந்து, சந்தாம்ஸி - சந்தஸ்ஸுக்கள், ஜஜ்ஞிரே — உண்டாயின. தஸ்மாத் - அந்த யஜ்ஞத்திலிருந்து யஜு꞉ - யஜுஸ்ஸும். அஜாயத - உண்டாயிற்று.

இந்த யஜ்ஞத்தைச் செய்த பிறகே வ்யஷ்டி ஸ்ருஷ்டி முழுவதும் செய்யப்பட்டதாகையால், இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் வஸ்துக்களெல்லாம் இந்த யஜ்ஞத்திலிருந்து உண்டாயின வென்று சொல்லப்படுகின்றது. 'எல்லாம்' என்று மொத்தமாகச் சொல்வதற்கு பதிலாகச் சிலவற்றை உபலக்ஷணமாகக்காட்டி பேசுவதும் உண்டன்றோ?

'வேதங்கள் நித்யங்களல்லவா? அவை உண்டாயின வென்று எப்படி சொல்லக்கூடும்?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். நித்யமாக இருக்கும் வேதமானது, ஒவ்வொரு ஸ்ருஷ்டியிலும், மந்த்ர த்ரஷ்டாக்களான மஹர்ஷிகளுக்கு, பகவத் ஸங்கல்பத்தால் ஸ்புரிக்கிறபடியால், அப்படி ஸ்புரிப்பதே அவைகளின் ஸ்ருஷ்டியாகச் சொல்லப்படுகின்றது. 'இவ்விடத்தில் ருக் யஜுஸ் ஸாமம் ஆக இம்மூன்று வேதங்கள் மாத்ரம் ப்ரஸ்தாவிக்கப்படுகிறபடியால், இந்த ஸூக்தம் உண்டான காலத்தில் அதர்வவேதம் இல்லையோ' என்றும் சிலர் சங்கிப்பார்கள். அதர்வ வேதமும் இவ்விடத்தில் உபலக்ஷிதமென்பது அந்தச் சங்கைக்கு ஸமாதாநம். 'சந்தாம்ஸி'

என்பதை ப்ரஸித்தச் சந்தஸ்ஸுக்களுக்கு வாசகமாக எடுத்துக்கொள்ளாமல், வேதங்களையே சொல்வதாக எடுத்துக்கொண்டு, அவைகளுள் அதர்வ வேதமும் அடக்கப்பட்டிருக்கின்றது என்றும் ஸமாதாநம் சொல்லக்கூடும். அன்றிக்கே, 'ருக் யஜுஸ் ஸாமம் என்னும் சப்தங்கள் அந்தந்த வேதங்களுக்கு வாசகங்களாக இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்படவில்லை; அவை சிற்சில வேத பாகங்களையே இவ்விடத்தில் குறிக்கின்றன; அம்மாதிரியான பாகங்கள் அதர்வ வேதத்திலும் இருக்கிறபடியால், அந்த வேதமும் இவ்விடத்திற் சொல்லப்பட்டதாகின்றது' என்றும் ஒரு நிர்வாஹமுண்டு. 'எல்லாம் உண்டாயிற்று' என்று சொல்லுமிடத்தில் சிலவற்றை உபலக்ஷணமாகச் சொன்னால், அதில் சில விட்டுப் போயின வென்று ஆக்ஷேபிப்பது சரியன்று.

தஸ்மாதஶ்வா அஜாயந்த ।
யே கே சோபயாதத: ।
காவோ ஹ ஜஜ்ஞிரே தஸ்மாத் ।
தஸ்மாஜ்ஜாதா அஜாவய: ॥—11.

தஸ்மாத் — அதிலிருந்து, அஶ்வா: - குதிரைகள், அஜாயந்த - உண்டாயின. யே கே ச உபயாதத: - எவை எவை கீழ் மேல் ஆகிற இரண்டு பல் வரிசைகளுடன் கூடினவையோ, [அவைகளும் உண்டாயின]. தஸ்மாத் — அதிலிருந்து, காவ: - பசுக்கள், ஜஜ்ஞிரே - உண்டாயின. தஸ்மாத் — அதிலிருந்து, அஜாவய: - வெள்ளாடு செம்மறி ஆடுகளும், ஜாதா: — உண்டாயின.

யத்புருஷம் வ்யதது: ।
கதிதா வ்யகல்பயந் ।
முகம் கிமஸ்ய கௌ பாஹூ ।
காவூரூ பாதாவுச்யேதே ॥—12.

இந்த மாநஸ யஜ்ஞத்தில், விராட்டுக்கு அபிமாநியான புருஷனை ஒரு தேஹ விசிஷ்டனாக அநுஸந்தித்து ஹோமம் பண்ணின பொழுது, எந்த எந்த அங்கங்களிடமிருந்து எந்த எந்த வஸ்துக்கள் உண்டாயின வென்பதை ஒரு ப்ரச்ந உத்தர ரூபமாக இந்த ருக்கும் இதற்குப் பின் வரும் ருக்குக்களும் விவரிக்கின்றன.

யத் — எப்பொழுது, புருஷம் — [விராட்டுக்கு அபிமாநியான] புருஷனை, வ்யதது: — பசுவாக ஸங்கல்பித்து ஹோமம் செய்தார்களோ,



(அப்பொழுது) கதிதா - எவ்வளவு பாகமாக (எந்த ப்ரகாரங்களாக), வ்யகல்பயந் - கல்பித்தார்கள்? அஸ்ய - அவருக்கு, கிம் - எது, முகம் — முகமாக இருந்தது? கௌ - எவை, பாஹூ - கைகளாக இருந்தன? கௌ - எவை, ஊரூ - தொடைகளென்றும், கௌ - எவை, பாதௌ - பாதங்களென்றும், உச்யேதே — வ்யவஹரிக்கப் பட்டன?

ப்ராஹ்மணோऽஸ்ய முகமாஸீத் ।
பாஹூ ராஜந்ய: க்ருத: ।
ஊரூ ததஸ்ய யத்வைஶ்ய: ।
பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத ॥—13.

அஸ்ய — அந்தப் புருஷனுக்கு, ப்ராஹ்மண: — ப்ராஹ்மணன், முகம் - முகமாக, ஆஸீத் - ஆனான்; ராஜந்ய: - க்ஷத்ரியன், பாஹூ — கைகளாக, க்ருத: - செய்யப்பட்டான்; தத் - அப்பொழுது, யத் வைஶ்ய: — வைச்யனென்று சொல்லப்படுமவன், ஊரூ - தொடைகளாக, (க்ருத: - செய்யப்பட்டான்;) ஶூத்ர: - சூத்ரன், பத்ப்யாம் - கால்களிலிருந்து அஜாயத - உண்டானான்.

இந்த ருக்கில், கடைசி வாக்யத்தில் சூத்ரர்களைப் பற்றி பேசுகையில் அஜாயத [உண்டானான்] என்று விசேஷித்துச் சொல்லி இருப்பதால், இதற்கு முன் வாக்யங்களில் காணப்படும் 'ஆனான்' என்பது முதலான ஸமாந்ய பதங்களுக்கும் 'உண்டானான்' என்பதையே பொருளாகக் கொள்ளுதல் வேண்டும். ஆகையால், அந்தந்த அங்கங்களிலிருந்து அந்தந்த ஜாதி உண்டாயிற்று என்று சொன்னதாயிற்று. இதை அநுஸரித்து, கீழ் ருக்கில் காணப்படும் ப்ரச்நங்களுக்கும், 'எந்த எந்த அங்கங்களிலிருந்து யார் யார் உண்டானார்கள்' என்பதையே தாத்பர்யமாக எடுத்துக் கொள்வதே உசிதமாகும்.

இந்த ப்ரபஞ்சத்தில் காணப்படும் வஸ்துக்களெல்லாம் விராட் புருஷனிடமிருந்து உண்டாயின என்பதே இந்த ஸூக்தத்தின் பரம தாத்பர்யம். ஆனாலும், ஒவ்வொரு வஸ்து ஒவ்வோரு அங்கத்திலிருந்து உண்டாயிற்று என்று ஸூக்தம் சொல்வதைக் கேவலமாஞ்ஜகமாகச் சொல்லப்பட்ட சொற்களாக எடுத்துக் கொள்வது உசிதமாக மாட்டாது. அந்தந்த வஸ்துவின் தர்மங்களுக்கு அநுரூபமாக ஒவ்வொரு அங்கம் உத்பத்தி ஸ்தாநமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? இம்மாதிரியே மேல் ருக்குக்களிலும் உத்பத்தி ஸ்தாநம் குறிப்பிட்டிருப்பதைக் காண்க.

சந்த்ரமா மநஸோ ஜாத: ।
சக்ஷோ: ஸூர்யோ அஜாயத ।
முகாதிந்த்ரஸ்சாக்நிஸ்ச ।
ப்ராணாத்வாயுரஜாயத ॥—14.

சந்த்ரமா: - சந்த்ரன், மநஸ: - மநஸ்ஸிலிருந்து, ஜாத: - ஜநித்தான். ஸூர்ய: - ஸூர்யன், சக்ஷோ: - கண்ணிலிருந்து, அஜாயத - ஜநித்தான். இந்த்ரஸ்ச - இந்த்ரனும், அக்நிஸ்ச - அக்நியும், முகாத் - முகத்திலிருந்து. (அஜாயேதாம் - உண்டானார்கள்). வாயு: - வாயு, ப்ராணாத் - ப்ராணத்திலிருந்து, அஜாயத - உண்டானான்.

நாப்யா ஆஸீதந்தரிக்ஷம் ।
சீர்ஷ்ணோ த்யௌ: ஸமவர்த்தத ।
பத்ப்யாம் பூமிர்திச: ச்ரோத்ராத் ।
ததா லோகாம் அகல்பயந் ॥—15.

அந்தரிக்ஷம் - பூமிக்கும் மேல்லோகத்திற்கும் நடுவிலுள்ள இடைவெளி, நாப்யா: - நாபியிலிருந்து, ஆஸீத் - உண்டாயிற்று. த்யௌ: - த்யுலோகமென்று சொல்லப்படும் மேல் லோகமானது, சீர்ஷ்ண: - தலையிலிருந்து, ஸமவர்த்தத - உண்டாயிற்று. பூமி: - பூமியானது, பத்ப்யாம் - கால்களிலிருந்தும், திச: - திக்குக்கள், ச்ரோத்ராத் - காதிலிருந்தும்; (உண்டாயின). (எப்படி சந்த்ரன் முதலியவைகளை மநஸ் முதலிய ஸ்தாநங்களிலிருந்து கல்பித்தார்களோ) ததா - அப்படியே, லோகாந் - அந்தரிக்ஷம் முதலிய லோகங்களையும், அகல்பயந் - கல்பித்தார்கள்.

வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ।
ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே ।
ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர: ।
நாமாநி க்ருத்வாऽபிவதந் யதாஸ்தே ॥—16.

கீழ்ச் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை உபஸம்ஹரித்து, இப்பொழுது இரண்டு ருக்குக்களால் பகவானுடைய வைபவத்தை ச்ருதியே புகழ்ந்து பேசுகின்றது.



ய: தீர: - எந்த ஸர்வஜ்ஞன், ஸர்வாணி ரூபாணி - ஸர்வ வஸ்துக்களுடைய சரீரங்களையும், விசித்ய - விசேஷமாகச் செய்து, நாமாநி - அந்தந்த வஸ்துக்களைக் குறிக்கும் பெயர்களையும், க்ருத்வா - ஏற்படுத்தி, அபிவதந் - அந்தந்த வஸ்துக்களை அந்தந்தப் பெயரால் வ்யவஹரித்துக் கொண்டு, தமஸ: - ப்ராக்ருதி மண்டலத்தின், பாரே - மேலான ஸ்தாந விசேஷத்தில், ஆஸ்தே - விளங்கிக் கொண்டிருக்கிறானோ, ஏதம் - இந்த, மஹாந்தம் - பெரிய, ஆதித்யவர்ணம் - ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை உடைய, புருஷம் - புருஷனை, அஹம் வேத - நான் அறிவேன்.

தீர:—அளவற்றும் அழிவற்றுமிருக்கும் ஜ்ஞாநத்தை உடையவன் 'கேவலம் ஸங்கல்பத்தால் ப்ரபஞ்ச வ்யாபாரம் முழுவதையும் செய்வதற்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநம் சக்தி முதலியவைகளை உடையவன்' என்பது குறிப்பு.

ஸர்வாணி ரூபாணி விசித்ய—'இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் தேவன் மநுஷ்யன் திர்யக் ஸ்தாவரம் இவைகளுடைய சரீரங்களெல்லாவற்றையும் அவையவைகளின் கர்மத்துக்குத்தக்கபடி அமைப்பித்துக் கொண்டு' என்பது தாத்பர்யம். கீழ் ருக்குக்களிற் சொல்லியிருக்கிறபடி ப்ரஹ்மா செய்த ஆராதநத்தால் த்ருப்தி அடைந்த பகவானே, ப்ரஹ்மாவைக்கொண்டு ஸகல வஸ்துக்களையும் செய்வித்தானன்றோ ?

தமஸ: பாரே—ப்ராக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்ட ஒரு ஸ்தாந விசேஷத்தை இது குறிக்கின்றது. அந்த ஸ்தாநத்தை ஸ்ரீ வைகுண்டமென்று சொல்வார்கள். கீழ் சொல்லியிருக்கிறபடி தேச கால வஸ்து பரிச்சேதமற்றும் மோக்ஷ ப்ரதனாகவும் ஜகத்திற்குக் காரணமாயும் உபயவிபூதி நாதனாகவுமிருக்கும் பகவான், அந்த ஸ்தாந விசேஷத்தில், ஒரு திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனாக இருக்கிறானென்று இந்த ருக்கிலுள்ள 'ஆதித்யவர்ணம்' என்னும் பதம் விளக்குகின்றது. 'ஆதித்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை உடைய விக்ரஹத்துடன் கூடினவனை' என்பது இந்தப் பதத்தின் பொருள்.

இந்த ருக்கும் அடுத்து வரும் ருக்கும் ருக்வேத ஸூக்தத்தில் இல்லை. அந்தக் காரணத்தால் இவை இரண்டும் பிற்பாடு யாரோ ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டனவாக இருத்தல் வேண்டுமென்று நமது லௌகிக வித்வான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். மேலும், இவைகளின் சந்தஸ்ஸும் வேறுபட்டிருப்பதுடன், வாக் சைலியும் மாறுபாட்டை அடைந்திருக்கிறதாம். இந்தக் காரணங்களால் இவை ப்ரக்ஷிப்தங்களாம். இப்படிச் சொல்பவர்களின்

இஷ்டஸித்தியை ஸாதித்துக் கொடுப்பதற்கு, இவர்கள் சொல்லும் ஹேதுக்கள் போதாவாகையால், இந்த வாதம் ஆதரிக்கத்தகுந்ததன்று. இம்மாதிரி ஹேதுக்களைக் கொண்டு வாக்யங்களை ப்ரக்ஷிப்தங்களென்று ஒதுக்கப் புகுந்தால், ஒருவிடத்திலும் நிலைபெறாமல கணக்கற்ற வாக்யங்கள் ஒதுக்கப்படும்படி நேரும். பூர்வாபரவிரோதத்தாலும் அஸாங்கத்யத்தாலும் இன்னும்இவை போன்ற பலமான ஹேதுக்களாலும் முரண் படாமலிருக்கும் வரையில் வாக்யங்களெல்லாம் ப்ரக்ஷிப்தங்களல்லவென்றே அங்கீகரிப்பதன்றோ வைதிகம்ய மிராதவர்களின் மார்க்கம்? அப்படிப்பட்ட ஹேதுக்களொன்று மிவ்விடத்தில் இல்லையாதலால் இவைகளை ப்ரக்ஷிப்தங்களென்று சொல்லத் துணிவது ஸாஹஸமே. ப்ரத்யுத, கீழ் உபபாதிக்கப்பட்டுள்ள விஷயங்களை இந்த மந்த்ரங்கள் உபஸம்ஹரித்துச் சொல்லும் அழகைப் பார்த்தால, இம்மாதிரியான உபஸம்ஹாரமிராமல் இந்த உபபாதகம் ஸமக்ரமாகுமோவென்றும், இந்த இடத்திற்கு இவைகளைப் போல வேறு வாக்யங்களும் பொருத்தமுடையனவாக இருக்குமோ வென்றும் நினைக்கும்படியாக இருக்கும். ரஸமறியாதவர்கள் செய்யும் ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமும் உண்டோ!

> தாதா புரஸ்தாத்யமுதாஜஹார ।
> ஶக்ர: ப்ரவித்வாந் ப்ரதிஶஶ்சதஸ்ர: ।
> தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி ।
> நாந்ய: பந்தா அயநாய வித்யதே ॥—17.

புரஸ்தாத - ஸ்ருஷ்டிகாலத்தில், தாதா – சதுர்முக ப்ரஹ்மா, யம் – எந்தப்பகவானைப்பற்றி, உதாஜஹார –[தனக்குப் பின் வந்த தேவர்களுக்கு] உபதேசம் செய்தாரோ, ப்ரவித்வாந் ஶக்ர: –[அப்படி ப்ரஹ்மாவிடமிருந்து உபதேசம் பெற்று] அதனால் விசேஷித்த ஜ்ஞானத்தைஅடைந்த இந்த்ரன், [யமுதாஜஹார —எவனைப்பற்றி, தன்னை ஆச்ரயித்த ப்ரதர்த்தநன் முதலானவர்களுக்கு உபதேசித்தானோ], ப்ரதிஶஶ்சதஸ்ர: - நாலுதிக்குக்களும் (அதாவது - நாலுதிக்குக்களிலுமுள்ள பெரியோர்களெல்லாரும்), (யமுதாஜஹ்ரு: – எவனைப்பற்றி லோகத்து ஜநங்களுக்கு உபதேசம் செய்தார்களோ, தமஹம் வேத - அவனை நான் அறிவேன்) என்று முன் வாக்யத்துடன் அந்வயம். தம் - அப்படிப்பட்ட புருஷனை, ஏவம் – கீழ் விவரித்திருக்கிறபடி, வித்வாந் – அறிந்து உபாஸிக்கிறவன், இஹ - இந்த லோகத்திலேயே, அம்ருதோ பவதி-மோக்ஷத்தை அடைந்தவனாகின்றான் [அதாவது - மோக்ஷத்தை அடைந்தவன் போல பகவதநுபவத்தைப் பெறுகின்றான்]. அயநாய - அப்படிப்பட்ட பகவதநுபவத்திற்கு, அந்ய: பந்தா:– வேறு உபாயமொன்றும், ந வித்யதே - இல்லை.



இந்த ருக்கிலுள்ள 'யமுதாஜஹார' என்பதற்கு 'எவனைப்பற்றி உபதேசம் செய்தானோ' என்று பொருள் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் இந்தத் தத்வ உபதேசம், பகவானிடமிருந்து பாம்பரையாக நமக்குக் கிடைத்திருக்கின்றது என்பது சொல்லப்பட்டதாகிறது. இது இந்த உபதேசத்திற்கு ஒரு ஏற்றம். அன்றிக்கே 'யமுதாஜஹார' என்பதற்கு, 'எவனை ஸ்தோத்ரம் செய்தாரோ' என்று பொருள் கொள்ளக் கூடும். அப்பொழுது, 'எவன் ப்ரஹ்மாவினாலும் இந்த்ரனாலும் இன்னும் மற்ற பெரியோர்களாலும் ஸ்தோத்ரம் செய்யப்பட்டிருக்கிறானோ, அவனை அறிந்து உபாஸிப்பவனே மோக்ஷம் பெறுவன்' என்பது பொருள் ஆகும்.

வித்வாந் – இதற்கு 'அறிந்தவன்' என்பது மாத்ரமே பொருளாவது போல இருந்தாலும், உபநிஷத்துக்களில் வேதநம் [அறிவது] உபாஸநம் [உபாஸிப்பது] பஜநம் [பஜிப்பது] முதலிய பதங்கள் எவ்வித பேதமுமின்றிக்கே ப்ரயோகம் செய்யப்படுகிறபடியால், உபாஸநத்தையே விசேஷித்த அர்த்தமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பெரியோர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள்.

அம்ருத இஹ பவதி—'இவ்விடத்திலேயே மோக்ஷம் கிடைக்கின்றது' என்று சொல்லப்பட்டிருந்த போதிலும், கர்ம பந்தம் இருக்குமளவு மோக்ஷம் ஸம்பவியாதாதலால், மோக்ஷத்திற்கு ஸமமான பகவதநுபவத்தைப் பெறுகிறானென்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

> யஜ்ஞேந யஜ்ஞமயஜந்த தேவா: ।
> தாநி தர்மாணி ப்ரதமாந்யாஸந் ।
> தே ஹ நாகம் மஹிமாந: ஸசந்தே ।
> யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா: ॥—18.

தேவா: - தேவர்கள், யஜ்ஞேந- அந்த மாநஸிக யஜ்ஞத்தால், யஜ்ஞம்- ஆராதிக்கத்தகுந்த மஹா புருஷனை, அயஜந்த – ஆராதித்தார்கள். தாநி தர்மாணி - அந்தத் தர்மங்கள், ப்ரதமாநி - முக்ய தர்மங்களாக [மோக்ஷத்தைப் பெறுவதற்கு உத்க்ருஷ்டமான தர்மமாக], ஆஸந் - ஆயின. தே மஹிமாந: – அப்படிப் பட்ட தர்மாநுஷ்டாநத்தைச் செய்யும் மஹாத்மாக்கள், யத்ர - எவ்விடத்தில், பூர்வே ஸாத்யா: தேவா: – அநாதிகாலமாக இருந்து வரும் நித்யர்களென்று சொல்லப்படும் ஸூரிகள் ஸந்தி - இருக்கிறார்களோ, (தம்) நாகம் - அந்த அப்ராக்ருதமான ஸ்தாநத்தை, ஸசந்தே - அடைகிறார்கள்.

இந்த ருக், ஸூக்தத்தின் கருத்தைச் சுருக்கிச் சொல்லுகின்றது. முதல் பாதியில் உபாயத்தின் ஸ்வரூபமும், இரண்டாவது பாதியில் புருஷார்த்தத்தின் ஸ்வரூபமும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. உபாயம் ஆத்மஸமர்ப்பணரூப பகவதாராதநமாகிற யஜ்ஞமே; புருஷார்த்தம், தமஸ்ஸுக்கு அப்புறத்தில் இருக்கும் நித்யர்களுடைய வாஸஸ்தாநமாகிற அப்ராக்ருத லோகமே. "யஜ்ஞோ வை விஷ்ணு:" என்கிறபடி விஷ்ணுவே ஆராதிக்கத் தகுந்த மஹாபுருஷன். இவ்விடத்திலிருக்கும் 'யஜ்ஞம்' என்னும் பதம் அந்த மஹாபுருஷனைக் குறிக்கின்றது. 'யஜ்ஞேந' என்னும் பதம், கீழில் ப்ரஹ்மாவால் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ள ஆத்ம ஸமர்ப்பண ரூபமான யாகத்தைக் குறிக்கின்றது. 'தேவா:' என்னும் பதத்தால், கீழ் விவரித்திருக்கிறபடி ப்ரஹ்மாவினுடைய ப்ராணேந்த்ரியங்கள் சொல்லப்படுகின்றன. 'ப்ராணேந்த்ரியங்கள் யாகத்தைச் செய்தன' என்று சொல்வதால், அந்த யாகம் ஆத்ம ஸமர்ப்பணமாகிற மாநஸிக யஜ்ஞமென்று ஏற்படுகின்றது. இப்படி ஆத்ம ஸமர்ப்பணத்தால் பகவானை ஆராதிப்பதே ப்ரதாநமான தர்மமாயிற்று. அது எப்படித் தெரிகின்றதென்றால், 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:' [ஆகையால், மற்றை எல்லா தபஸ்ஸுகளைக்காட்டிலும் ந்யாஸத்தை (அதாவது- ஆத்ம ஸமர்ப்பணத்தை) உத்க்ருஷ்டமான தபஸ்ஸென்று சொல்லுகிறார்கள்] இத்யாதியான வாக்யங்கள் வ்யக்தமாகச் சொல்லவில்லையோ! இவ்விதம் ஆத்மஸமர்ப்பண ரூபமான ஆராதநத்தால் பகவானை ஆராதிப்பவர்களே 'ப்ரஸித்தர்களான பெரியோர்கள்' என்று சொல்லப்படுகிறார்கள். 'மஹிமாந:' என்னும் பதத்திற்கு 'மஹிமையுடன் கூடினவர்கள்' என்பது பொருள். அப்படி உயர்ந்த தர்மமாகிற ஆத்ம ஸமர்ப்பணம் செய்கிறவர்களை 'மஹாத்மாக்கள்' என்று ச்ருதியே புகழ்ந்து பேசுகின்றது. 'நாகம்' என்பதற்கு 'தேவர்கள் வஸிக்கும் லோகம்' என்பது பொருள். இவ்விடத்தில் ஸாதாரண தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்க லோகத்தை இது குறிக்கவில்லை. ஆனால் 'யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:' என்பதால் குறிக்கப்படும் நித்யஸூரிகள் வஸிக்கும் ஸ்ரீவைகுண்டத்தையே இது குறிக்கின்றது; "தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" (அதுதான் பரம ப்ராப்யமான விஷ்ணுவின் ஸ்தாநம்; அதையே நித்யஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்) என்பது முதலான வாக்யங்கள் சொல்லுகிறபடி, நித்ய ஸூரிகளால் வஸிக்கப்படுகிற அந்த விஷ்ணுலோகமே முமுக்ஷுக்களால் அடையப் படுகின்றது.

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(தொடர்ச்சி ஸம் 23 ஸஞ் 5, 489 பக்கம்.)

62 கீழே சொன்ன உதாரணத்தை பாஷ்யகாரர் ஒப்புக்கொள்ளவில்லை. ஏன் என்றால், ஆஹுதி என்கிற சொல்லுக்கு த்ரி (மூன்று) என்கிற சொல் விசேஷணமாயிருப்பதால், கர்மங்கள் அநேகங்கள் என்று வெளிப்படையாகத் தெரிகிறது. அவர் கொடுக்கும் உதாரணம்—"ஸப்ததச ப்ராஜாபத்யாந் பசூநாலபேத" (ப்ராஜாபதி தேவதைக்குக் கொடுப்பதான பதினேழு பசுவை உபாகரணம் பண்ணு) என்று. இதில் சொன்னது ஒரு கர்மமா? அல்லது அநேக கர்மங்களா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— "ப்ராஜாபத்யாந்" என்கிற சொல்லுக்கு, ப்ராஜாபதி எந்தப் பசுக்களுக்குத் தேவதையோ, அவைகளை என்று பொருள். பசுக்கள் என்பது ஒரே த்ரவியம். தேவதையும் ஒன்று. இரண்டும் ஒன்றாயிருப்பதால் யாகத்தின் உருவத்தில் பேதமில்லை. ஆகையால் கர்மம் ஒன்றுதான். பதினேழு என்னும் எண்ணானது பசுவின் பன்மையைச் சொல்லுகிறது. அதுக்கும் க்ரியைக்கும் ஸம்பந்தமில்லை.

ஸித்தாந்தம்:— "ப்ராஜாபத்ய" என்கிற சொல்லுக்கு நீர் சொன்னது பொருளன்று. ப்ரஜாபதி எந்தப் பசுவுக்குத் தேவதையோ, அது என்றுதான் பொருள். இப்படிப்பொருள் கொள்ளும்படி ப்ரஜாபதி என்கிற சொல்லுடன் தத்தித ப்ரத்யயத்தைச் சேர்த்து ப்ராஜாபத்ய என்கிற சொல்லையுண்டு பண்ணி, அதின் பொருளாகிய ப்ரஜாபதி தேவதைக்கு கொடுப்பதான் பசுவை ஆலம்பநம் (உபாகரணம் பண்ணுதல்) செய்யவேணும் என்றும், அவைகள் அநேகம் என்றும் காட்டுவதற்காக இரண்டாவது விபக்தியையும் பன்மையைக் காட்டும் ப்ரத்யயத்தையும் சேர்க்கவேண்டியது. இவை தத்திதங்களில் விபக்தி பன்மையைக்காட்டும் உருபுக்கு முன்னாலே வருவது. தத்தித உருபு சேரும்போது விபக்திக்கே இடமில்லையே. பன்மை உருபுக்கு எங்கே இடமிருக்கும். ஆகையால் ப்ராஜாபத்ய என்கிற சொல்லாலே ஒரே பசுவைத் த்ரவ்யமாகவும் ப்ரஜாபதியைத் தேவதையாகவும் உடைய யாகம் விதிக்கப்படுகிறது. இவ்விதமான யாகங்கள் அநேகங்கள் என்று காட்டுவதற்காக பன்மை உருபு. அநேகம் என்பது எத்தனையென்று காட்டுவதற்காக 'ஸப்ததச' (பதினேழு) என்னும் சொல். ஆகையால் இங்கே ஸங்க்யை (எண்) யால் கர்மபேதம் விதிக்கப்படுகிறது. (அதி - 7)

கர்மம் ஒன்றாகவே இருந்தால் 'ஸப்தத³ஶ' என்னும் எண்ணுக்கு ப்ரயோஜநமில்லாமல் போய்விடும். எப்படியென்றால்—இந்த யாகத்துக்கு உதவி செய்யும் யாகங்களை இங்கே சொல்லவில்லை. த்ரவ்யம் பசுவாயிருப்பதால் அக்நிஷ்டோமயாகத்தில் சேர்ந்த அக்நீஷோமீய பசு யாகத்தைப் போல் செய்ய வேண்டியது என்று அநுமாநம் எட்டாவது அத்தியாயத்தில் சொல்லப்போகிறது. இதற்குச் சோதகம் என்று பெயர். கர்மம் ஒன்றாயிருந்தால் சோதகமும் ஒன்றுதான். அப்போது ஒரு பசுவின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட பதினொரு பாகங்களிலிருந்து தான் ஹோம த்ரவ்யத்தையெடுக்கும்படி நேரிடும். பதினேழு பசு என்று விதித்தது வீணாய்ப் போய்விடுமே. ஆகையால் யாகம் ஒன்று அன்று. யாகங்கள் அநேகங்களாயிருந்தால் ஒவ்வொரு யாகத்துக்கும் ஒவ்வொரு சோதகம் ஏற்படும். பதினேழுயாகங்களுக்குப் பதினேழு சோதகங்கள் ஏற்படும். ஒவ்வொரு பசுவிலிருந்தும் பதினொரு பாகங்கள் ஹோம த்ரவ்யங்களாக எடுக்கப்படும். விதிக்கு முழு பிரயோஜநமு முண்டாகும்.

2 இங்கே ஒரு கேள்வி:—“ப்ராஜாபத்யாந்” என்று உபதேசம். அதாவது அப்படி விதிவாக்யத்தில் ச்ருதி இருக்கிறது. உபதேசத்துக்கு சோதகத்தைக் காட்டிலும் வலிமை அதிகமென்று மேலே சொல்லப்போகிறது. ஆகையால் உபதேசத்தைக் கொண்டு சோதகத்தைத் தள்ளிவிடக் கூடாதா? என்று. பதில்-இரண்டுக்கும் விரோதமிருந்தால், செய்யலாம். விரோதமில்லையே. “ப்ராஜாபத்ய” என்கிற சொல்லுக்கு இரண்டு வழியாயும் பொருள் கொள்ளலாமே. (சாஸ் - 144)

63 ஸம்ஜ்ஞை (பெயர்)—“அத² ஏஷ ஜ்யோதி:, அத² ஏஷ விஶ்வஜ்யோதி:-அத² ஏஷ ஸர்வஜ்யோதி: ஏதேந ஸஹஸ்ர த³க்ஷிணேந யஜேத” என்று ஒரு விதி இருக்கிறது. இங்கே ஜ்யோதி: என்பது கீழே சொன்ன யாகமா? அல்லது வேறு கர்மமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—கீழே சொன்ன ஜ்யோதிஷ்டோமம் என்னும் யாகத்தை “ஏஷ ஜ்யோதி:” என்று அநுவாதம் செய்து ஆயிரம் பசு தாநமாகிய தக்ஷிணையை விதிக்கிறது. ஆகையால் இது யாக விதியன்று. குணவிதி.

ஸித்தாந்தம்:—சொன்னதை ஒப்புக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், “அத²” (மேலே) என்கிற சொல்லாலே ஜ்யோதிஷ்டோமத்தின் ப்ரஸ்தாவம் நின்றுபோய்விட்டது. அப்படியானால், “ஏஷ ஜ்யோதி:” (இந்த ஜ்யோதி:) என்கிற இடத்தில் “ஏஷ:” (இந்த) என்பது பொருந்தாதே என்றால்—



பதில்—அந்தச் சொல் கிட்ட இருப்பதைச் சொல்லுகிறது. கீழே கிட்ட இருப்பதை எப்படிச் சொல்லுகிறதோ? அப்படியே மேலே கிட்ட இருப்பதையும் சொல்லக்கூடும். மேலே கிட்ட இருப்பது “ஜ்யோதி:” என்று பெயருள்ள கர்மம். அது கீழே சொல்லி முடிந்ததைத் தெரிவிக்கச் சக்தியில்லாமையால், புது கர்மத்தின் பெயராயிருந்துகொண்டு இந்தக் கர்மத்தைச் சொல்லுகிறது. ஆகையால் ஸம்ஜ்ஞையால் கர்மபேதம் உண்டாகிறது. (அதி - 8)

'விஶ்வஜ்யோதி:', “ஸர்வஜ்யோதி:” என்கிற இடத்திலும் இதே ந்யாயம் தான்.

இங்கே ஜ்யோதி: விஶ்வஜ்யோதி:, ஸர்வஜ்யோதி: என்கிற சொற்களால் சொல்லப்பட்டவைகளும் “யஜேத” என்பதில் அடங்கிய யாகமும் ஒன்றையே சொல்லுகின்றன. ஆகையால் அவைகள் யாகங்களின் பெயர்கள். கீழே சொன்ன யாகத்தின் பெயரைக் காட்டிலும் இவைகள் வேறாக இருப்பதால் கர்மங்கள் வேறுதான். இப்படி எண்ணுவது பிசகு என்று சொல்லுவதற்கு பலமான காரணமிருந்தால் அப்படிச் சொல்லலாம். அவ்விதமான காரணமோ இங்கே இல்லை. (சாஸ் - 146)

64 குணம்:— “தப்தே பயஸி த³த்⁴யாநயதி ஸா வைஶ்வதே³வீ ஆமிக்ஷா வாஜிப்⁴யோ வாஜிநம்” (கொதிக்கிற பாலில் தயிரைச்சேரு, அது விச்வேதேவர் என்னும் தேவதைக்குக் கொடுக்கப்படும் ஆமிக்ஷையாக ஆகிறது. வாஜிநத்தை வாஜி என்னும் தேவதைகளுக்கு கொடுக்கவேண்டியது) என்று ஒரு வாக்யமிருக்கிறது. பால் திரிந்து சக்கையும் தண்ணீருமாகிறது. சக்கைக்கு ஆமிக்ஷா என்னும் தண்ணீருக்கு வாஜிநம் என்றும் பெயர். இங்கே ஒரு யாகத்துக்கு ஆமிக்ஷா த்ரவியம், விச்வேதேவர் தேவதை. வாஜிநம் என்பதை வாஜி என்னும் தேவதைகளுக்கு கொடுப்பது ஒரு யாகம். இரண்டும் ஒரு யாகமா? அல்லது வெவ்வேறா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—முதல் யாகத்துக்குத் தேவதையான விச்வேதேவர்களையே வாஜீ என்கிற சொல்லாலே அநுவாதம் பண்ணி வாஜிநம் என்பதை அவர்களுக்குக் கொடுக்கும்படி விதிக்கப் படுகிறது. ஆகையால் இது குணவிதி. வாஜம் என்பது அந்நம். அதையுடையவர்கள் வாஜிகள். ஆமிக்ஷையாகிய அந்நத்தை ஸாப்பிடுகிற விச்வேதேவர்கள் வாஜிகள். இங்கே ஒரு கேள்வி—விச்வேதேவர்களுக்குத் தான் ஆமிக்ஷையாகிய த்ரவ்யம் ஏற்பட்டிருக்கிறதே என்று. பதில்-அத்துடன் சேர்த்து வாஜிநத்தையும் அவர்களுக்கு கொடுக்கலாம்; அல்லது அதையாவது இதையாவது கொடுக்கிறது என்று.

ஸித்தாந்தம்:—இது பிசகு:-விதியானது யாகத்தைச்சொல்லும்போதே அதற்கு ஆமிக்ஷை என்னும் த்ரவ்யத்தை அத்துடன் சேர்த்து விதித்தது. அந்த யாகம் ஏற்பட்டபிறகு விதிக்கப்பட்ட வாஜிநம் என்பதற்கு அதில் வந்து சேர இடம் கிடையாது. ஆகையால் வாஜிநம் என்பதற்கு வேறு தேவதை வேண்டும். அது வாஜி என்பதற்குப் பொருள் வேறு தேவதை என்று முடிவு செய்கிறது. ஆகையால் [அதாவது த்ரவ்யமும் தேவதையும் வேறாயிருப்பதால்] கர்மம் வேறு. (அதி - 9)

ஆமிக்ஷா என்கிற த்ரவ்யம் பலமானது. யாகம்உண்டாகும் போதே விதி வாக்கியத்தில் சேர்த்துச் சொல்லப்படுவதால். இது ச்ருதி என்கிற ப்ரமாணம். வாக்கியம் என்கிற ப்ரமாணத்தாலே தான் வாஜிநம் என்பதை அத்துடன் சேர்க்கவேண்டியது. வாக்கியத்தைக் காட்டிலும் ச்ருதி பலமுள்ளது. ஆகையால் வாஜிநம் அந்த யாகத்தில் சேராது. இங்கே ஒரு கேள்வி — யாகத்தை மாத்திரம் பிரித்து அநுவாதம் செய்ய வேண்டும். வாஜிநம் என்பதற்கு தேவதை வேண்டியிருப்பதால். அப்போது சொன்ன குற்றமில்லையே என்று. பதில்—யாகத்தை விதிக்கும் வாக்யத்திலிருந்து யாகத்தின் ஸ்வரூபத்தை எடுத்து கொள்ளுகிறீர். அது அநுவாதமாகும். அந்த ஸ்வரூபம் என்னமாயிருக்கும் என்று ஆலோசிக்கும்போது, அது ஆமிக்ஷை என்னும் த்ரவ்யத்துடன் சேர்ந்தே இருக்கிறது. ஆகையால் அதைப் பிரித்துக் தனியாக எடுக்கமுடியாது. (சாஸ்த்ரம்—145)

65. கீழே சொன்னது குணத்தாலே கர்மபேதம் ஏற்படுவதற்கு ஒருவழி. இன்னமொருவழி. யாகத்தை விதித்த பிறகு இரண்டு குணங்களை சிலவிடங்களில் விதிக்க வேண்டியதாயிருக்கும்போது வாக்யபேதம் என்னும் குற்றம் வரும். அதற்காக இரண்டு குணங்களோடு கூடிய வேறு கர்மம் விதிக்கப்படுவதாகச் சொல்லவேணும். (சாஸ்த்ரம்—146-147)

உதாரணம்:—த்ரிவ்ருதக்நிஷ்டுதக்நிஷ்டோமஃ, தஸ்ய வாயவ்யாஸ்வேகவிம்ஶமக்நிஷ்டோமஸாம க்ருத்வா ப்ரஹ்மவர்சஸகாமோ யஜேத என்று விதித்து, அதன் கிட்ட இன்னொரு வாக்யமிருக்கிறது—"தஸ்யைவ ரேவதீஷு வாரவந்தீயமக்நிஷ்டோமஸாம க்ருத்வா பஶுகாமோ ஹ்யேதேந யஜேத" என்று. அக்நிஷ்டோமம் என்னும் யாகத்தைப்போல், த்ரிவ்ருத்அக்நிஷ்டுத் என்னும் யாகம்செய்யப்படுகிறது. அதில் கடைசியில் உத்காதா என்பவர் காநம் பண்ணுகிற ஸ்தோத்ரத்துக்கு அக்நிஷ்டோம ஸாம என்றுபெயர். ப்ரஹ்மவர்சஸ (வேதத்தைப் படிப்பதினால் வரும் தேஜஸ்ஸும்) வேணுமென்கிறவன் விதிக்கிற ஸாமத்தை அக்நிஷ்டோம ஸாமமாக காநம் பண்ண வேண்டியது என்று ஒரு விதி. அதே யாகத்தில் விதிக்கப்பட்ட வேறு ஸாம



த்தைக் காநம் பண்ணினல் பசுமாடுகள் கிடைக்கும் என்று இன்னுமொரு விதி. இங்கே இரண்டாவது சொன்னது முதல் சொன்ன யாகத்தைக் காட்டிலும் வேறு யாகமா? அல்லது அதே யாகமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— அதே யாகம், "தஸ்யைவ" என்று இரண்டாவது விதிவாக்யத்திலிருக்கிறது. அவைகளில் "தஸ்ய" (இதினுடைய) என்கிற சொல்லாலே முன்னாலே சொல்லப்பட்டது நினைவுக்கு கொண்டு வரப்படுகிறது. 'ஏவ' (இதுவே) என்கிற சொல்லாலே வேறொன்றுமன்று என்று காட்டப்படுகிறது. ஆகையால் முதலில் விதித்த யாகத்திலேயே பின் வாக்கியத்தில் சொன்ன குணம் அதாவது ஒரு ஸாமம் பசு பலனுக்காக விதிக்கப்படுகிறது.

ஸித்தாந்தம்:—விதிக்கப்பட்ட ஸாமமானது விதித்த யாகத்துக்கு ஸாதநம் என்றும் சொல்லப்படுகிறது. நம் என்னும், பசு என்கிற பலனுக்கு ஸாதநம் என்றும் இரண்டும் குணங்கள். ஏற்கனவே ஏற்பட்ட யாகத்தில் இரண்டு குணங்களை விதித்தால் இரண்டு வாக்யமாகும். ஒரே வாக்யமாய் பொருள் கொள்ளக்கூடுமானல் வாக்யபேதம் பண்ணுவது குற்றம். யாகம் ஏற்படாவிட்டால், அனேக குணங்களோடு கூடிய யாகத்தை ஒரே வாக்யத்தாலே விதிக்கலாம். (பாரா 3ப்) ஆகையால் இரண்டாவது வாக்யம் முதலில் விதிக்கப்பட்ட கர்மத்தைக் காட்டிலும் வேறு கர்மத்தை விதிக்கிறது. (அதி 12)

2. இங்கே ஒரு கேள்வி—'தத்நா இந்த்ரியகாமஸ்ய ஜுஹுயாத்' என்று ஒரு விதி இருக்கிறது. இதின் பொருள்:—அக்நிஹோத்ரம் என்கிற ஹோமத்தைச் செய்யும்போது, இந்திரியங்களுக்கு பலம் வேணுமென்கிறவன் தயியை (தயிரை) ஹோமம் செய்யவேண்டியது என்றும், இங்கே ஹோமத்துக்குத் தயிர் ஸாதநமென்றும்; அது இந்திரியங்களுக்குப் பலத்தைக் கொடுப்பதற்கு ஸாதநம் என்றும் தெரிகிறதே. இப்படி குணங்கள் இரண்டாலும் புது யாகம் விதிக்கப்படவில்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதே. அந்த ந்யாயம் ஏன் இங்கே கூடாது—என்று. பதில்—இரண்டு இடங்களுக்கும் வித்தியாஸம் உண்டு. ததி (தயிர்) ஹோமத்துக்கு ஸாதநமென்று இதே ப்ரகரணத்தில் வேறு வாக்யத்தாலே ஏற்பட்டிருக்கிறது. பலனுடன் தயிருக்கு ஸம்பந்தம் மாத்திரம் விதிக்க வேண்டியது. இங்கே அப்படியன்று. குறித்த ஸாமம் யாகத்துக்கு ஸாதநம் என்று யார் சொன்னர்? யாகத்துக்கு அங்கம் ஸ்தோத்ரம், ஸ்தோத்ரத்துக்கு அங்கம் ஸாமம். ஸ்தோத்ரமும் ப்ரகரணத்தில் சொல்லப்படவில்லை. அக்நிஷ்டோமத்தைப் போல் செய்யவேண்டியதென்கிற அநுமானத்

தால் ஏற்படுகிறது. ஆகையால் குறித்த ஸாமத்தைக் கொண்டு யாகத்தை செய்யவேண்டிய தென்று விதிக்கப்படுவதால், இரண்டு குணங்களை விதிக் வேண்டியது. (சா 154-155)

3. இன்னமொரு கேள்வி:—ஒரு கர்மத்துக்கு விதிக்கப்பட்ட குணம னது அதின் அங்கத்தின் வழியாய் கர்மத்துக்கு உதவி செய்யலாமே. ஆகை யால் ஸாமமானது ஸ்தோத்ரத்தின் வழியாய் யாகத்துக்கு உதவி செய் லாம்—என்று. பதில்:—இந்த நியாயம் யாகத்துக்கே அங்கமாக குணத்தை விதித்து அது அதுக்கு நேரே ப்ரயோஜநப்படாவிட்டால், அதின் அங் த்துக்கு உதவி செய்து அந்த வழியாய் ப்ரயோஜநப்படும். இங்கே யாக துக்கு அங்கமாக ஸாமம் விதிக்கப்படவில்லை. அதின் அங்கத்துக்கன்றே அங்கமாக விதிக்கப்படுகிறது. (சா 154-155)

66. ப்ரகரணம்:—குண்ட பாயினாம் அயநம் என்பது ஒரு வருஷ தில் செய்கிற ஸத்ரயாகம். அதில் "[illegible]" என்று வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—உபஸ என்கிற யாகங்களைச் செய்து ஒரு மாதம் அக்நி ஹோத்ரம் செய்யவேண்டி யது—என்று. இங்கே விதிக்கப்படுவது நிநம் செய்யவேண்டிய அக்நிஹோத் ரமா? அல்லது வேறு கர்மமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—நிநம் செய்யவேண்டிய அக்நி ஹோத்ரம் தான். அதை அநுவாதம் செய்து மாஸம் என்கிற குணம் விதிக்கப்படுகிறது. அது முன் னாலே ஏற்படவில்லை.

ஸித்தாந்தம்:—பூர்வபக்ஷம் சொல்லுகிறவரைக் கேட்போம். இங்கே எது விதிக்கப்படுகிறது? மாதம் மாத்திரமா? அல்லது உபஸத்யாகங்களும் கூடவா? மாதம் மாத்திரம் என்று சொல்லக்கூடாது. நிநம் செய்யும் அக்னி ஹோத்ரத்தில் உபஸத்து யாகங்களில்லை. இரண்டையும் விதிப்பதா னால் வாக்யபேதம் என்றும் குற்றம் வரும். அவர் கேட்கிறார்:—நீர் வேற கர்மம் என்று சொல்லுகிறீரே, அதற்கு என்ன ப்ரமாணம்—என்று. பதில்:-ப்ர கரணம் வேறாயிருப்பதே ப்ரமாணம். இங்கே அக்நி ஹோத்ரத்தின் ப்ரகரண மில்லை. அதின் நினைவு வருவதற்குக் காரணமில்லை. ஸத்திர யாகங்களைச் சொல்ல ஆரம்பித்து இந்த வாக்யம் சொல்லப்பட்டிருப்பதால்.

2. அவர் மறுபடியும் கேட்கிறார்— ப்ரகரணம் வேறாக இருந்தால் அக்நி ஹோத்ரத்தை அநுவாதம் பண்ணி, குணவிதி என்று நான் சொன் னதைக் கேட்டு வேறு பதில் சொன்னீரே-என்று. பதில் ; ம்—அக்நிஹோத்ர



என்கிற சொல்லாலே அதின் ப்ரகரணம் என்று ஸந்தேஹ முண்டாகலாம். அதை வாக்யபேதம் என்னும் குற்றம் வருமென்று காட்டித் தீர்க்கப்பட் டது. ப்ரகரணம் வேறு என்று தானாக ஏற்பட்டதைத் தள்ளி, இரண்டும் ஒரே ப்ரகரணம் என்று சொல்லி குணவிதி என்று சொல்ல ஆரம்பித்தீர். அக்நி ஹோத்ரம் என்னும் சொல் அநுவாதமன்று என்று காட்டுவதால் ப்ரகரணம் வேறு என்பது நினைத்து அப்போது ஒவ்வொரு நாளும் செய்யும் அக்நி ஹோத்ரம் வேறு, இந்த கர்மம் வேறு என்று ஏற்படுகிறது.

3. அக்நி ஹோத்ரம் என்கிற சொல்லை ஏன் உபயோகித்தது என்றால் இந்த கர்மத்தை அதைப்போலவே செய்யவேண்டியதென்று காட்டுவதற் காக.

4. இன்னமொரு கேள்வி—உபஸத் யாகங்களையும் மாஸத்தையும் சேர்த்து ஒரு புது கர்மம் விதிக்கப்படுகிறதென்று சொல்லலாமே! (பாரா 65) ப்ரகரணத்தாலே கர்மபேதம் என்று சொல்லுவானேன்? என்று. பதில்:— முதலில் ப்ரகரணபேதம் தெரிகிறது. அதினால் கர்மபேதம் ஏற்படுகிறது. அதை குணபேதம் பலப்படுத்துகிறது. (பாதம்-3-அதி-11)

கிட்ட இல்லாத கர்மமானது மனதில் தோன்றாது. ஒரு சொல்லாலே அது தோன்றலாம். அப்போது விதிக்கப்படும் குணம் உபாதேயமாய் செய் யத்தகுந்ததாய் இருக்கவேணும். இங்கே ப்ரகரணம் கிட்ட இல்லாமல் போனாலும், அக்நிஹோத்ரம் என்கிற சொல்லாலே நினைவுக்கு வரலாம். மாஸம் என்கிற குணம் செய்யப்படுவதானால் "[illegible]" என்கிற இடத்தில் போல, இது ஹோமங்களை விதிக்கிற இடத்திலில்லை. ஆனபோதிலும் கர்மங்களை விதிக்கிற இடம் நினைவுக்கு வருகிறது. ஏனென் றால், அதில் விதிக்கப்படுவது உபாதேயம். அந்த வாக்யத்தின் பொருள் எந்த ஹோமத்தைச் செய்கிறானோ, அது ஆஹவநீயத்தில் என்று. இங்கே மாதம் என்பது உபாதேயமன்று. ஆகையால் நாள்தோறும் செய்யும் அக்நி ஹோத்ரம் நினைவுக்கு வாராது. ஆகையால் விதிக்கப்படுவது வேறு கர்மம். (சா-174)

67. ஒரு விஷயத்தையும் ஆரம்பிக்காமல் ([illegible]) தனியாய் ஒரு வாக்யம் சொல்லப்படுகிறது. "[illegible]" (தேஜஸ்ஸை ஆசைப்படுகிறவன் ஆக்நி தேவதைக்கு எட்டுக் கபாலங்களில் சுடப்பட்ட புரோடாசத்தை கொடுப்பதற்காக நிர்வாபம் செய்யவேண்டி யது) என்று. தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளில் இந்த யாகம் இருக்கிறது. அது தானா இங்கே சொல்லப்படுவது? அல்லது வேறு கர்மமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அதுதான். அதை அநுவாதம் பண்ணி பலன் விதிக்க படுகிறது. கீழ் பாராவில் சொன்ன நியாயம் இங்கே வராது. அங்கே ஸ ரயாகங்களைச் சொல்ல ஆரம்பித்து வாக்யம் சொல்லப்பட்டது. ஆகை யால் ப்ரகரணம் வேறு. இங்கே தனியாய் வாக்யம் இருக்கிறது. ஆகை யால் ஒரு ப்ரகரணத்தையும் சேர்ந்த தன்று. வேறு ப்ரகரணம் என்பது எப்படி? மேலும் மாதம் உபாதேயமன்று. அக்நிஹோத்ரத்தைச் செய்து அதை அடையமுடியாது. பலனே உபாதேயம். தர்ச பூர்ணமாஸங்களில் அடங்கின அக்நிதேவதையின் யாகத்தைச் செய்து தேஜஸ்ஸை அடைய ஒருவன் ஆசைப்படலாம். ஆகையால் இது பலவிதி.

ஸித்தாந்தம்:—ப்ரகரணம் வேறு என்று சொல்ல முடியாமல் போனா லும், வாக்யம் தனியாயிருப்பதால் அக்நி தேவதையின் யாகம் நினைவுக்கு வராது. அது கிட்ட இருக்கவில்லை. ஆகையால் இந்த கர்மம் வேறுதான் வாஜி நியாயத்தால் (பாரா 64) கர்மபேதத்தைச் சொல்லமுடியாது. யாகத் துக்குத் த்ரவ்யமும் தேவதையும் தர்சயாகத்தில் போலிருப்பதால், யாகம் இரண்டிடத்திலும் ஒரேமாதிரி.

2. ஒரு கேள்வி—வேறு ப்ரகரணம் என்பதும் கிட்ட இல்லாமை (ஸந்நிதி) தானே. ஆகையால் அதுவே கர்மபேதத்துக்குக் காரணமாக லாமே என்று. பதில்—உண்மையே. முன் சொன்ன நியாயத்தைத் தான் இங்கே விரிவாய்ச் சொல்லுகிறது. மாஸம்போல் பலனும் உபாதேயமன்று உபாதேயமாயிருந்தால் ஒன்றுக்கு ஸாதகமானதால் பலன் என்கிற தன்மை போய் விடும். பலனில் ஆசையானது விஷயங்களின் குணங்களைப் பார்த் துத்தானே வருவது, விதியைக் கேட்டு வருவதன்று. இரண்டு அதிகர ணங்களில் நியாயம் ஒன்றாயிருந்தாலும் வேறாயிருந்தாலும், தேஜஸ்ஸை ஆசைப்படுமவன் செய்யும் இஷ்டிவேறு கர்மம். (பாதம்-3-அதி 12)

கிட்ட இல்லாமை (ஸந்நிதி) மாத்திரம் கர்ம பேதத்துக்குக் கார ணமென்றும் பலன் உபாதேயமென்றும் எவன் எண்ணுகிறானோ அவனுக் காக இந்த அதிகரணம் ஏற்பட்டது. (சா—176)

68 கர்மபேதத்தை காட்டும் நியாயங்களுக்கு அபவாதங்கள்.

1 ஸமுதாயவிதி:—தர்ச பூர்ணமாஸ ப்ரகரணத்தில் ஆறு யாகங் கள் விதிக்கப்படுகின்றன. அமாவாஸ்யையில் மூன்றும், பௌர்ணமியில் மூன்றும் அந்த இடத்தில் இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன "ய ஏவம் விதுவாந் பௌர்ணமாஸீம் யஜதே (எவன் இப்படி தெரிந்து பௌர்ணமாஸி



என்கிற யாகங்களைச் செய்கிறானோ) "ய ஏவம் விதுவாந் அமாவாஸ்யாம் யஜதே" (எவன் இப்படி அறிந்து அமாவாஸ்யா என்கிற யாகங்களைச் செய் கிறானோ) என்று. இந்த இரண்டு வாக்யங்கள் ஆறு யாகங்களை காட்டி லும் வேறு யாகங்களை விதிக்கின்றனவா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—வேறு யாகங்களைத்தான் அப்போது த்ரவ்யத்தையும் தேவதையையும் சொல்லவேணுமே என்றால் த்ருவா என்பதில் இருக்கும் நெய் த்ரவ்யம். இது எல்லா யாகங்களுக்காக எடுத்து வைக்கப்படுகிறதெ ன்று ஒரு வாக்யம் இருக்கிறதே. தேவதைகள் மந்த்ரங்களால் காட்டப் படுகின்றன. ஆகையால் இந்த இரண்டு வாக்யங்களும் யாகங்களை விதிக் கின்றன. இப்படி இல்லாவிட்டால், இவைகளுக்கு ப்ரயோஜநம் இல்லா மல் போய்விடும்.

2. மேலும், வேறு இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. "பௌர்ணமாஸ்யாம் பௌர்ணமாஸ்யா யஜேத" (பௌர்ணமியில் பௌர்ணமாஸி என்கிற யாகத்தைச் செய்) "அமாவாஸ்யாயாம் அமாவாஸ்யயா யஜேத" (அமா வாஸ்யையில் அமாவாஸ்யை என்கிற யாகத்தைச் செய்) என்று. இவை களுக்கு ப்ரயோஜநமில்லாமல் போய் விடும். அவைகள் யாகங்களைச் செய்ய வேண்டிய காலத்தை விதிக்கிறது என்று சொல்லக் கூடாது. ஆறு யாகங் களை விதிக்கும் வாக்யங்களிலேயே காலம் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு யாகங்கள் விதிக்கப்படுகிறதானால், அவைகளுக்கு காலம் விதிக்கப் படுகிறதென்று சொல்லலாம்.

ஸித்தாந்தம்:—த்ரவ்யம் நீர் சொன்னபடி ஆகலாம்; தேவதைகள் ஏற் படமாட்டாது. நீர் சொல்லுகிற மந்த்ரங்கள் ஆஜ்யபாகங்கள் என்னும் யாகங்களுக்கு ஏற்பட்டவைகள். அவைகளில் அக்நி ஸோமன் என்கிற சொற்கள் இருக்கின்றன. அவைகள் ஆஜ்யபாகங்களின் தேவதைகள் இது லிங்கம் என்னும் ப்ரமாணம். மேலும் ப்ரயாஜங்களுக்கு அடுத்த மேலே ஆஜ்யபாக யாகங்களைசெய்யவேண்டியது. மந்த்ரங்களைச் சொல்லுமிடத்தில் ப்ரயாஜ மந்திரங்களுக்குமேலே இந்த மந்திரங்கள் இருக்கின்றன. ஆகை யால் க்ரமம் என்னும் ப்ரமாணத்தால் ஆஜ்யபாகங்களுக்கு மந்த்ரங்கள் ஆகையால் நீர் சொல்லும் யாகங்களுக்கு மந்த்ரத்தினால் தேவதை ஏற்பட வில்லை. தேவதைகள் இல்லாமையால் யாகங்களும் ஏற்படாது.

2 அப்போது நாம் விசாரிக்கும் இரண்டு வாக்யங்களுக்கும் ப்ரயோ ஜநம் இல்லையே யென்றால், ப்ரயோஜநமுண்டு. ஆறுயாகங்களில் அமாவா ஸ்யையில் செய்யும் மூன்று யாகங்களை ஒரு கூறாகவும், பௌர்ணமியில்

செய்யும் மூன்று யாகங்களை ஒரு கூறாகவும் செய்கின்றன. இப்படி இரண்டு கூறுகளாக அந்த ஆறு யாகங்களும் ஏற்பட்டால் "தர்ஶபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்ககாமோ யஜேத" (ஸ்வர்க்கம் வேண்டு மென்று ஆசைப்படுகிறவன் தர்சம் என்றும், பூர்ணமாஸம் என்றும் சொல்லப்பட்ட யாகங்களைச் செய்யவேண்டியது) என்கிற வாக்யத்தில் ஆறு யாகங்களையும் த்விவசநத்தாலே சொல்லக்கூடும். த்விவசநம் என்றால் இரண்டைச் சொல்லுகிற ப்ரத்யயம்.

3 பூர்வபக்ஷத்தில் 2-வது பாராவில் சொன்ன இரண்டுவாக்யங்களுக்கும் பிரயோஜநமுண்டு; ஒவ்வொரு கூறையும் சேர்த்துச் செய்யவேண்டுமென்று அந்த வாக்யங்கள் சொல்லுகின்றன.

4 இங்கே ஒரு கேள்வி—நீர் ஆறுயாகங்களை விசாரிக்கப்பட்ட வாக்யங்கள் அநுவாதம் செய்கிறவன் என்று சொல்லுகிறீர், அதை ஏன் திருப்பிச் சொல்லக்கூடாது? அதாவது இந்த இரண்டு வாக்யங்களும் யாகங்களை விதிக்கின்றன. ஆறுயாகங்களைச் சொல்லும் வாக்யங்கள் அநுவாதம் செய்து, த்ரவ்யத்தையும் தேவதையையும் விதிக்கின்றன—என்று. பதில்—ஏற்பட்ட யாகத்தை அநுவாதம் செய்து ஒருவாக்யத்தால் இரண்டு குணங்களை விதிக்க முடியாது. ஆறுயாகங்களைச் சொல்லுகிற வாக்யங்கள் அநுவாதம் பண்ணாமல் விதிக்கிறதென்றால், இரண்டு குணங்களோடு கூடிய யாகங்களை விதிக்கக் கூடும்.

5 விசாரிக்கும் இரண்டு வாக்யங்களும் யாகங்களை விதிக்கவில்லை என்று கீழே சொல்லப்பட்டது. யாகங்களை விதிப்பதானால், அநேக குற்றங்கள் ஏற்படும். முதலாவது இந்த ப்ரகரணத்தில் ஆகார ஹோமங்கள், ப்ரயாஜங்கள், ஆஜ்ய பாகங்கள் முதலான அங்க யாகங்களும் ஆறு ப்ரதாந யாகங்களும் விதிக்கப்படுகின்றன. எவை பலனை கொடுக்குமோ அவைகள் ப்ரதாந யாகங்கள். அவைகளுக்கு உதவி செய்யுமவைகள் அங்கங்கள். இவைகள் எல்லாத்துக்கும் பலனுடன் ஸம்பந்தம் ஏற்பட்டு எல்லாம் ப்ரதாநயாகங்களாக ஆய்விடும். ஆறுயாகங்களை இரண்டு கூறாகப்பண்ணி தர்சம், பூர்ணமாஸம் என்னும் சொற்களாலே அவைகளைச் சொன்னால் பலனோடு ஸம்பந்தம் அவைகளுக்குத்தான் உண்டு. அவைகள் ப்ரதாநயாகங்களாகவும் மற்றவைகள் அங்கங்களாகவும் ஆகும். இரண்டாவது "தர்ஶபூர்ணமாஸாப்யாம்" என்கிற சொல்லில் த்வி வசநத்தை மாற்றி "தர்ஶபூர்ணமாஸை:" என்று பஹுவசநமாகச் செய்யவேணும். (அதி-3)

69. குணவிதி:—அக்னிஹோத்ர ப்ரகரணத்தில் "ததிநா ஜுஹோதி" தயிரால் ஹோமத்தைச்செய்—என்று ஒரு வாக்யமிருக்கிறது. அது யாக விதியா? அல்லது குணவிதியா? என்று ஸந்தேஹம்



பூர்வபக்ஷம்:—ப்ரகரணத்தில் விதிக்கப்பட்ட கர்மத்தைக் காட்டிலும் வேறு கர்மம் விதிக்கப்படுகிறது. இப்படியே 65 வது பாராவில் வாஜிந யாகம் வேறு என்று தீர்மானிக்கப்பட்டது.

ஸித்தாந்தம்:—அந்த விஷயம் வேறு, இது வேறு. வைச்வதேவயாகமானது ஆமிக்ஷா என்னும் த்ரவ்யத்துடன் சேர்ந்தே விதிக்கப்பட்டது. அப்படி அக்நி ஹோத்திரம் விதிக்கப்படவில்லை. ஒரு குணமும் விதிக்கப்படாததால் அந்த ஹோமம் குணத்தைத் தேடுகிறது. ஆகையால் இது குணவிதி. 'பயஸா ஜுஹோதி' என்கிற இடத்திலும் இப்படியே முடிவு செய்யவேணும். பால் (பயஸா) தயிர் முதலானவைகள் யாகம் ஏற்பட்ட பிறகு விதிக்கப்படுவதால், அவைகளுக்கு வலிமை ஸமமாவிருக்கிறது. ஒரே த்ரவ்யத்தால் யாகம் நிறைவேறுமானதால் இஷ்டப்படி எதை வேணுமோ அதை யெடுத்துக்கொள்ளலாம். (அதி-10)

70. பலஸம்பந்தவிதி:—அக்நி ஹோத்ர ப்ரகரணத்தில் ஒருவாக்யமிருக்கிறது. "ததநேந்த்ரியகாமஸ்ய ஜுஹுயாத்" (இந்திரியங்களுக்கு வலிமையை வேண்டுகிறவன் தயிரால் ஹோமம் செய்யவேண்டியது) என்று. இது அக்நி ஹோத்ரத்தைக் காட்டிலும் வேறு கர்மமா? அல்லது அதை அநுவாதம்செய்து வேறொன்றை விதிக்கிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—வேறு கர்மம். சொல்லப்பட்ட பலனானது யாகமில்லாமல் த்ரவ்யத்தாலே மாத்ரம் கிடைக்கமாட்டாது.

ஸித்தாந்தம்:—வேறு கர்மமானால் வாக்யத்துக்குத் தயிரை உடைய ஹோமத்காலே இந்திரியங்களுக்கு வலிமை உண்டு பண்ணு என்று பொருளாகும். அப்போது "ததி" என்கிற சொல்லுக்கு "ததிமதா" என்று பொருளாகுமானதால் லக்ஷணை என்கிற குற்றம் வரும். தயிர் என்கிற குணத்தோடு கூடிய கர்மத்தை விதிப்பதினால் கௌரவம் என்னும் குற்றம் வரும், இருப்பதை விடுவது, ஸம்பந்தமில்லாத ப்ரகரணத்தை உண்டு பண்ணுவது என்கிற குற்றங்களும் உண்டு. ஆகையால் பலனுக்காக குணம் மாத்திரம் விதிக்கப்படுகிறது. "ததிநா ஜுஹோதி" என்னும் வாக்யத்தால் குணம் விதிக்கப்பட்டதே என்றால் அதினால் பலனுடன் ஸம்பந்தம் ஏற்படவில்லை; அது இங்கே விதிக்கப்படுகிறது. யாகமில்லாமல் பலன் வருமா என்று சொன்னதற்குப் பதில்:-ப்ரகரணத்தில் விதிக்கப்பட்ட அக்நி ஹோத்ரத்தை இங்கே அநுவாதம் செய்கிறது. (அதி-11)

ஸ்ரீ:

# கடிதங்கள்

## (1)

## ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபா.

### [33-வது வருஷப் போதுக்கூட்டம்]

இந்த ஸபையின் 33வது வருஷப் பொதுக் கூட்டமானது வழக்கம் போல் மேலக்கோட்டை (திருநாராயணபுரம்) ஸ்ரீ நாராயணஸ்வாமி ஸந்நிதியில் 1934ளு ஏப்ரல்மீ 20உ ஸாயம் 4-30 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ உ. வே. வித்வான் மாதூர்பாக்கம், வெங்கிடாசாரியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவைப் பார்ப்பதற்காக அநேகம் பெயர்கள் வந்திருந்தார்கள். அநேகம் ஸ்த்ரீகளும் வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்யமானவர்களின் பெயர்கள் பின்வருமாறு:—

மஹாமஹோபாத்யாய பண்டித ரத்நம் மஹாவித்வான் லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியர், மஹாவித்வான் T. A. எம்பெருமானார், இவர்களும், புரோஹித திருநாராயணய்யங்கார், தேவசிகாமணி ராமாநுஜாசாரியார், திருநாராயணய்யங்கார், ஸ்ரீநிவாஸ கோவிந்தய்யங்கார், ஸாங்க்ய தீர்த்த ஜக்கு வெங்கிடாசாரியர், திருவாய்மொழி ராமாநுஜாசார்யர், திருவாய்மொழி கிருஷ்ணய்யங்கார், வெங்கிட நரஸிம்ஹாசாரியர், கோமடம் திருநாராயணய்யங்கார், R. A. ஐய்பரய்யங்கார், ஸ்ரீரங்கம் ஸம்பத் குமாராசாரியர், H. ஸ்ரீநிவாஸாச்சாரியர், முதலிய வித்வான்களும், வேத வித்வான். பராங்குசாசாரியர். ப்ரயோக வித்வான், ஆக்கரணி ராமஸ்வாமி ஐய்யங்கார், பண்டிட் மூடும்பி அனந்தாசாரியர், சீலத்த நல்லி திருநாராயணய்யங்கார், ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்களும், N. பாஷ்யாச்சாரியர், வைணிக ராமஸ்வாமி ஐய்யங்கார் (ஸ்ரீரங்கம்), R. சாமிஐய்பங்கார், B. A. (அஸிஸ்டெண்ட் கமிஷனர் மைஸூர்), B. K. கருடாசாரியர் (பெங்களூர் முனிஸிபாலிடி ப்ரஸிடெண்டு), L. E. ஸௌந்திர வரதாசாரியர் (அட்வோகேட் சித்தூர்) K. V. ராமாநுஜாசாரியார் (அட்வோகேட். கண்டோன்மெண்டு), M. A வெங்கிடாசாரியர் B. A., B. L. (ரிடயர்டு போலீஸ் ஸூபிரென்டெண்ட்), M. A. ரங்காசாரியார் B. A., (டிப்டி கண்ட்ரோலர்), N. ஸம்பத் ஐய்யங்கார், (ரிடயர்ட் அக்ஸிகல்சரர் கெமிஸ்டு), M. A., அப்ளாச்சாரியர் (ஹெஜண்டு ஸ்ரீ காண்டேச்வரா பாங்கி நஞ்சங்கூடு), K. கிருஷ்ணமாசாரியர் (P & R Charities, மதராஸ்), N. S. ஸர்வோத்தமா B. S. C., N. பகவத் ப்ரஸாத் B. A., S. V. கிருஷ்ணய்யங்கார், ஆஜி ராமாநுஜ ஐய்யங்கார், M. B. ஸ்ரீநிவாஸாச்சாரியர், (ப்ளீடர் நஞ்சங்கூடு) M. நரஸிம்மய்யங்கார், (ப்ளீடர் ஸ்ரீரங்கப்பட்டணம்), பேஷ்கார். C. N. யாதவமூர்த்திராவ், R. ஆழ்வார் ஐய்யங்கார், B. A., A. ஸம்பத்குமாராசாரியர் M. A., M. அழகியசிங்காசாரியர், M. A. B. T., T. R. ஸம்பத்குமாராசாரியர், M. A., M. G. நாராயணய்யங்கார், M. Sc., M.E. வரதராஜய்யங்கார். B A. பாரிஜாதம் நரஸிம்மாசாரியார்., M. T. ச்யாமா ஐய்யங்கார், டாக்டர் M. N. கிருஷ்ண ஸ்வாமி L. M. P., ஸாஹுகார் கராடி. வெங்கட்ராம செட்டி, N. சிங்கய்யங்கார். (P. W. D.) M. N. வெங்கிடாசாரியார் (மைஸூர் ரயில்வே). M. கிருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார் (ரிடயர்டு போஸ்ட்மாஸ்டர்) அ



ஸயம் சேஷய்யங்கார், முதலிய ப்ரமுகர்களும், M. ராமசந்திர ராவ், சேஷகிரி ராவ், முதலிய உபாத்யாயர்களும், வந்திருந்தனர்.

ஸபையின் கார்யதர்சி. ராவ் பகதூர். R. நரஸிம்ஹாச்சாரியர் M. A. அவர்கள் வருஷாந்தர அறிக்கையை வாசித்தபிறகு, வழக்கம் போல் ஸம்ஸ்க்ருத காலேஜில் 1934ளு ஏப்ரல்மீ 16உ முதல், 4 நாட்களில், ஸெக்ரெட்டரி, அவர்கள், ஷை காலேஜ் ப்ரின்ஸிபால் அவர்கள் இந்த இரண்டு பேர்களின் மேல் பார்வையில் நடந்த பரீக்ஷைகளில் தேறியவர்களுக்கு அக்ராஸனாதிபதியால் பரிசுகள் அளிக்கப்பட்டன.

பரீக்ஷைக்கு மநுசெய்த 111பேர்களில் 73 பேர்கள் பரீக்ஷைக்கு வந்தார்கள். அதில் 65 பேர்கள் தேறினார்கள். பரீக்ஷைக்கு வந்தவர்கள் மேலக்கோட்டை, மைஸூர், மேலபுரம், நாகமங்கலம், கிருஷ்ணராஜப்பேட்டை, ஸ்ரீரங்கப்பட்டணம், ஹஸ்ஸான், சாந்திக்ராமம், பெங்களூர், மல்லேச்வரம், காஞ்சிபுரம், ஸ்ரீ பெரும்பூதூர், மதுரை, இப்படிப்பட்ட ஊர்களிலிருந்து வந்திருந்தார்கள்.

சென்ற வருஷம் மநு செய்தவர்கள். 79. வந்தவர்கள் 64. தேறினவர்கள் 5., ஹையர் க்ரேட். வேதாந்தம் 3, வேதம் 3, திவ்யப்ரபந்தம் 1, ஆக 7, இண்டர்மீடியேட்.

திவ்யப்ரபந்தம், 6, வேதம் 19, ஆக 25, லோயர்கிரேட்.

5-வதுளு 1, (யாஜுஷ பூர்வப்ரயோகம்) 4-வது வருஷம் 1, 3-வது வருஷம் 4, 2-வது வருஷம், 13, 1-வதுவருஷம் 14, ஆக மொத்தம் 33.

ஸபையானது க்ராமம், மல்லேச்வரம், பெங்களூர் என்ற இடங்களில் 3 பாடசாலைகளை வஹித்துவருகிறது. இரண்டுபாடசாலைகளிலிருந்து பையன்கள் பரீக்ஷைக்குப் போய் தேறியிருக்கிறார்கள்.

பரிசுகளின் மதிப்பு 5ரூபா முதல் 40ரூபா வரையிலிருந்தது. பையன்களுக்குக் கொடுத்த பரிசுகளின் ப்ரத்யேகப் பரிசுகளுள்பட மதிப்பு ரூபா 650.

திவான் பகதூர் M. O. பார்த்தஸாரதி அய்யங்கார் முதலிய தர்மகர்த்தாக்கள். மிகவும் தாராளமாக கீழ் சொல்லப்போகும் 6 ப்ரத்யேகப்பரிசுகளை அளித்திருக்கிறார்கள்.

ஹையர் க்ரேட்டுக்கு ரூபா 30 மதிப்புள்ள இரண்டு பரிசுகள். இண்டர்மீடியேட் க்ரேட்டுக்கு ரூபா 15 மதிப்புள்ள இரண்டு பரிசுகள், லோயர் க்ரேட்டுக்கு ரூபா5 மதிப்புள்ள இரண்டு பரிசுகள்.

ஸ்ரீ. M. K. திருமலாசாரியார் அவர்களின் 28 ரூபா மதிப்புள்ள பரிசானது, திவ்ய ப்ரபந்தக் கக்ஷியில் மிகவும் கெட்டிக்காரனான பையனுக்கும், ஸ்ரீ வெங்கட்ரங்க அய்யங்கார் அவர்களின் 25 ரூபா மதிப்புள்ள பரிசு வேதாந்தத்தில் மிகவும் கெட்டிக்காரனான பையனுக்கும் அளிக்கப்பட்டது. ஸ்ரீ உ. வே L. C. ஸௌந்திரவரதாச்சாரியர் அவர்கள் (சித்தூர்), M.P. அப்ளாச்சாரியர் (நஞ்சங்கூடு), M. C. பெரியஸாமி, ஸ்ரீநிவாஸய்யங்கார் (மைஸூர்) முதலிய பெரியோர்களால் 5ரூபா மதிப்புள்ள பரிசுகளும், அநேகருக்கு குறைந்தமான அநேக ப்ரத்யேக பரிசு கொடுக்கப்பட்டன.

ஸபையில் பரீக்ஷைக்காக சொல்லிக் கொடுத்த 5 உபாத்யாயர்களுக்கும் ரூபா 130, நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது.

எல்லாவருஷம் போல் வருஷாந்த்ரக்ராண்டுகள், ஸ்ரீ பரகால ஸ்வாமியிடமிருந்தும் மேன்மைதங்கிய மைஸூர் மஹாராஜா அவர்களிடமிருந்தும் முசரை டிபார்ட் மெண்டிலிருக்கும் மண்டயம் ஸ்ரீமதி அலமேலு அம்மாள் க்ராமங்களிலிருந்தும், பெற்றுக்கொள்ளப்பட்டன. இன்னும் அநேகம் கனவான்களிடமிருந்தும், அநேக செட்டிகளிடமிருந்தும், நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஸபையினாலும், மேலக் கோட்டை வித்வான் ஸாங்க்ய தீர்த்த - ஐக்கு, வெங்கிடாசாரியாராலும், மதருஸ் ஸ்ரீ ராவ்பகதூர் ரங்கநாதம் செட்டியாராலும், புஸ்தகங்களும் கொடுக்கப்பட்டன.

பரிசு அளித்து முடிந்தவுடன் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஒட்டி மிகவும் உருக்கமான சொற்பொழிவுகள், ஸ்ரீ உப. வே. மஹாமஹோபாத்யாய-பண்டிதரத்நம்-மஹாவித்வான் லக்ஷ்மீபுரம். ஸ்ரீநிவாஸாசாரியார் வித்வான். திருநாராயணய்யங்கார் அக்ராஸநாதிபதி முதலியோர்களால் நடத்தப்பட்டன.

அக்ராஸநாதிபதிக்கு நன்றி செலுத்திய பிறகு, மேன்மைதங்கிய மைஸூர் மஹாராஜா அவர்களுக்கு தீர்க்காயுஸையும், மேன்மேலும் வ்ருத்தியையும் கொடுக்கும்படி பாகவானை ப்ரார்த்தித்து கூட்டம் 6-30க்கு இனிதாக முடிவுபெற்றது.

(2)

ஸ்ரீ வே. தீ. ஸம்பாதகருக்கு:—

நம் ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான ஆசாரியர்களையும், பண்டிதர்களையும், வித்வான்களையும் வேதாந்த தீபிகையை ஆதரிக்கும் மற்ற பிரமுகர்களையும் அநேகம் ப்ரணாம பூர்வகமாக ஸேவிக்கிறேன்.

நம் முன்னோர்கள் அநாதிகாலமாகவே வேதவேதாந்தங்களிலும் சாஸ்த்ரங்களிலும் காவ்யங்களிலும் முதிர்ந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவையாவும் என்போலொத்தவர்களால் லுப்தமாகி விட்டன. அநாகரீகம் முழுவதும் பரவி விட்டன.

மனிதனாய்ப்பிறந்த ஒவ்வொருவனும் இவ்வுலகத்தில் தன்னுடைய ஆத்மா நல்ல கதி அடையும்படி தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்வது அவனுடைய முக்ய கடமையாகும். எவ்விதமான ஸத்கர்மங்களைச் செய்வது ஸத்கர்மத்திற்கு அங்கம். ஸ்ரிய:பதியினுடைய வாக்கிலிருந்து வந்த வேதம், உபநிஷத்து, ஸூத்ரங்கள் ப்ரமாணமாகும். அவைகளை நாம் அடைவதற்கு ஆசாரம் ப்ரமாணமாகும்.

ఆచారాల్లభతే హ్యాయురాచారాదీప్సితాః ప్రజాః
ఆచారాద్ధన మక్షయ్య మాచారో హన్త్యలక్షణం



தற்காலத்தில் அநேகமாய் குருகுலவாசம் நின்றுவிட்டது. கிராமாந்திரங்களில் சந்தியாவந்தனம் அடியேன் பார்த்தமட்டில் நூற்றுக்கு பத்து பேருமே யொழிய மற்றவர்களை நாம் சொல்வதற்கில்லை அப்படி தெரிந்தவர்களை, நாம் கிட்டி அதனுடைய அர்த்தம் கேட்டால் அவர் கருத்துத் தெரியவில்லை. நமக்கு முக்யமான விதி சந்தியாவந்தனம். அதில் ப்ராத:கால விதி, ஆசமனவிதி ஸ்நானவிதி, புண்ட்ரதாரண விதி, ஸந்தியாவந்தன விதி முதற்கொண்டு ப்ரம்ஹ யஜ்ஞம் ஔபாஸனம் பகவதாராதனம், வைச்வ தேவம் இத்யாதிகள் தினே தினே செய்யவேண்டியது என்று ஏற்படுகின்றது. அர்த்தம் தெரியாமல் செய்வது வீண் என்று ஏற்படுகின்றது. இது நிரம்பவும் முக்யமான விஷயம். ஆனபடியால் அநுஷ்டானவிதிக்கு ஏற்பட்ட ச்லோகமும் அதற்குச்சரியான தமிழில் அர்த்தமும் தெரிவிக்கவேணுமாய் விநய பூர்வமாய் அடியேன் பிரார்த்திக்கின்றேன். ஸ்ரீ சரண்யன் அருள் புரிவாராக.

பவ வருஷ அற்பசி 29ந் தேதி } கோமாண்டூர் தி. சுந்தரதாஸன்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।
யோऽஜஸ்ர: ப்ரவிஸ்ய ஸ்ரீ வாசஸ்பதிம் ப்ரஸாத்ய
ஸஞ்ஜீவயத்யவிமுக்தியாம: ஸ்வயாத்ர ।
சந்த்ராம்ஸு ஸத்வபாணாம்புவணத்வராஜீது
பூர்ணாஸஜோ ஸமவதே வாஸஷாய தஸ்மை ॥

## ஸம்பாதகரின் குறிப்புகள்

---

நமது வைதிக ஸம்ப்ரதாயத்திற்குக் கொஞ்ச காலமாக ஒருவித மாசி
யம் ஏற்பட்டு வருகின்றது என்பதை எல்லாரும் உணர்ந்திருக்கலாம். இட்
படி அது மலினமாவதற்குப் பல காரணங்கள் உண்டு
வைதிக ஸம்ப்ர ஆனால், அவைகளுள் ஒன்று மற்றை எல்லாவற்றுக்கும்
தாயத்தின் மாலி மூல பூதமாக நிற்கின்றதென்பது நமது அபிப்ராயம்
ந்யமும் அதன் அதாவது, நமது ஸம்ப்ரதாயத்திற்கு நிக்ஷேப பூதர்களா
ஹேதுவும். யும் அதற்கு ரக்ஷகர்களாயுமிருக்கும் நமது வைதிக வி
வர்களைப் பற்றியும், நமது ஸம்ப்ரதாயத்திற்கு ஆதாரம
யுள்ள நமது சாஸ்த்ரங்களின் மஹிமையைப்பற்றியும், இக்காலத்தில் நிரு
கர்களென்று கொண்டாடப்பட்டுவரும் நமது லௌகிக ப்ரபுக்கள் விபரீ
க்ரஹணம் செய்து, அது காரணமாக அந்த வித்வான்களையும் அந்தச் சா
த்ரங்களையும் மிகவும் நிக்ருஷ்டங்களாக இகழ்ந்து வருவதே. நமது ஸம்ப்

தாயம் பண்டைய காலங்களின் ஸ்திதியை அநுஸரித்தே ஏற்படுத்தப்பட்டதென்றும், ஆகையால் இக்காலத்தில் அதன் விதிகள் அநுஷ்டானத்திற்கு ஸர்வதா அநர்ஹங்களென்றும், அவைகளை ஸமூலமாக மாற்றி, தேசாந்தரத்தில் வழங்கிவரும் ஆசாரங்களை நாம் அநுஷ்டித்து வந்தாலொழிய நமக்கு ச்ரேயஸ் ஸம்பவிக்கமாட்டாதென்றும் அந்த ப்ரபுக்கள் நினைக்கிறார்கள். அந்தக்காரணத்தலேயே அந்த ஸம்ப்ரதாயத்தை ஸம்ரக்ஷித்து வரும் வித்வாங்களையும் அவர்கள் வெறுக்கிறார்கள். இவ்விதம் அவர்கள் செய்வது ந்யாயத்திற்கு ஒத்ததா என்பதைக் கொஞ்சம் பரிசோதித்துப் பார்ப்போம்.

முதலில், நமது லௌகிகர்கள் நமது சாஸ்த்ரங்களைப் பற்றி க்ரஹித்திருக்கும் எண்ணம் தவறுதலான எண்ணமே. நமது சாஸ்த்ரங்கள், யுக தர்மங்களையும் தேச தர்மங்களையும், சிலவிடங்களில் பிரித்தும் மற்றும் சிலவிடங்களில் அவைகளை வ்யக்தமாகப் பிரிக்காமலும், உபதேசிக்கின்றன. ஆகிலும், அவைகளில் காலாநுகுணமாயும் தேசாநுகுணமாயும் உபாதேய அநுபாதேய அம்சங்களை ப்ராசீந நிபந்தநக்காரர்கள் பிரித்து வ்யவஸ்தை செய்திருக்கிறார்கள். இந்த வ்யவஸ்தையை ஆதாரமாகக் கொண்டு நமது சாஸ்த்ரங்களில் அநேக ப்ராசீந ஆசாரங்கள், சிஷ்டர்கள் ஸம்மதித்தே, இக்காலத்தில் அநுஷ்டானத்திற்கு வராமல் நின்றுவிட்டன. ப்ராஹ்மணர்களுள் மாம்ஸ போஜநம், அஸவர்ண விவாஹம், ப்ராஹ்மணஜாதிகளுக்குச் சூத்ரர்கள் பாகம் செய்வது, நியோகம், இன்னும் இவை போன்ற பல ஆசாரங்கள் முற்காலத்தில் இருந்ததை விட்டு முற்றிலும் மாறி இருக்கின்றனவென்பதை யார் அறியார்? இதைப் பார்க்கும் பொழுது நமது பூர்விகர்களான ருஷிகளும் ஆசார்யர்களும் காலாநுகுணமாய் விதிகள் மாறக்கூடும் என்பதை அங்கீகரித்திருப்பதாகவே தெரியவருகின்றது. ஆகையால, நமது சாஸ்த்ரங்கள், சலிப்பிக்கக் கூடாத விலங்குகள் போலப் பூட்டப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகளை நிச்சேஷமாக உடைத்தெறிவதே நாம செய்யவேண்டிய க்ருத்யமென்றும் நினைபபதற்கு ஹேதுக்களில்லை. ஆனால், அவ்விதமான மாறுதல்களைச் சிற்சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே செய்யவேண்டுமென்பது மாத்ரம்! நமது சாஸ்த்ரஜ்ஞர்களின் கருத்து. நமது சாஸ்த்ரத்தில், சிஷ்டாசாரத்தை ஒரு ப்ரமாணமாக எடுத்திருப்பதன் தாத்பர்யமே இதை நன்றாக விளக்குகின்றது. அல்பஜ்ஞர்களான சிலர் தமது அபிஸந்தியால மாத்ரம் தர்மங்களை மாற்றக் கூடாதென்பதும், ஒருவருக்கும் ஒருவித ஹானியையும் விளைவிக்காமலும் பஹுஜநாநுகூலமாயுமிருக்கும் மாறுதல்களெல்லாம் ,சிஷ்டர்களுக்கு ஸம்மதங்களாயிருக்கும் பக்ஷத்தில், உபாதேயங்கள் ஆகுமன்பதுமெனறோ அதன் தாத்பர்யம்?

தேசாந்தரங்களில் விபரீத ஆசாரங்கள் மஹாஜநங்களால் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன என்னும் ஒரு காரணத்தை மாத்ரம் அவலம்பித்து,



அந்த ஆசாரங்களுக்கு அநுகுணமாக நமது ப்ராசீந ஆசாரங்களை நாம் உடனே மாற்றிவிடவேண்டும் என்று நமது லௌகிகர்கள் ஆக்ரஹம் கொள்வதும் யுக்தமன்று. அந்த ஆசாரங்கள் அத்யந்தம் ஸுக ஹேதுக்களாவென்பதையும், அவை, நம்மால் எதிர் பார்க்கப்படாத வேறு ப்ரபலமான அநர்த்தமொன்றையும் விளைவிக்கமாட்டாவா வென்பதையும், முதலில் நாம் தீர்க்கமாக ஆலோசித்தல் வேண்டும். பிறகு, அவை, நமது மூலபூதங்களான தர்மங்களுக்கு விருத்தங்களல்லவா வென்பதையும் நன்கு பராமர்சித்தல் வேண்டும். அவ்விதம் பராமர்சியாமலும் சிஷ்டர்களென்று வ்யவஹரிக்கப்படும் பெரியோர்களுடைய ஸம்மதியைப் பெறாமலும், நமது சாஸ்த்ர விதிகளை மாற்றுவதை மாத்ரம் நமது பெரியோர்கள் தடுப்பார்கள். இது யுக்திக்கும் பொருந்தினது என்பது சற்று ஊன்றிப் பார்த்தால் விளங்கும்.

மேலும். நமது சாஸ்த்ரங்களின் மர்யாதையையும் அதன் நோக்கங்களையும் நமது லௌகிகர்கள் நன்றாக அறிந்த பிறகன்றோ அவைகளின் குண தோஷங்களைப் பராமர்சிக்கவும் அவைகளில் மாறுதல்களைப் போதிக்கவும் அவர்கள் அர்ஹராவார்கள்? இப்பொழுது அவைகளை அவர்கள் எவ்வளவு அறிவார்கள்? அவைகளில் ச்ரத்தையும் கௌரவ புத்தியும் அவர்களுக்கு உண்டோ? அப்படிப்பட்ட ப்ரபுக்கள் சாஸ்த்ர விதிகளில் மாறுதலை உபதேசிக்க ப்ரயத்நப்பட்டால், அவை அநுகூலங்களென்று நமக்கு எவ்விதத்தில் தோன்றும்? அவைகளை நாம் அநுசிதங்களென்று எண்ணினால், அப்படி நினைப்பதை பிடிவாதத்தினால் ஏற்பட்டதென்று சொல்லக்கூடுமோ? அம்மாதிரியான ஆசாரங்களை மாற்றுவதற்கு அநுகுணமாய் சட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்வதும் ந்யாயத்திற்கு ஒத்ததாக மாட்டாது. அதிகாரிகளும் அவர்கள் சொல்வதை மாத்ரம் ப்ரமாணமாக எடுத்துக்கொண்டு நம் எல்லோரையும் நிர்பந்தத்திற்கு உட்படுத்த ப்ரயத்நப்பட்டால் அது தைவ ஸம்மதமாகுமோ? நமது ஆசாரங்களில்எந்த எந்தச் சீர்திருத்தங்கள் அவச்யங்களோ, அவையெல்லாம், பஹுஜந ஸம்மதங்களாயும் நமது சாஸ்த்ரங்களுடைய தாத்பர்யத்திற்கு அவிருத்தங்களாயும் இருக்கும் பக்ஷத்தில், நம்மாலேயே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதை நமது லௌகிக ப்ரபுக்கள் மறக்கக் கூடாது. நிற்க, நமது சாஸ்த்ர விதிகளுக்கு த்ருஷ்டபலமே மாத்ரமுள்ளது என்று சொல்வதும் சரியன்று. அவைகளுக்கு அத்ருஷ்ட பலங்களுமுண்டு. இவைகளையும் நன்கு உணர்ந்தே அத்யவச்யங்களான மாறுதல்களை நாம் செய்து வருவதுதான் சாஸ்த்ர ஸம்மதமாகும்.

இரண்டாவது, நமது வைதிக பண்டிதர்களை நமது ராஜாக்களும் ப்ரபுக்களும் அநாதரிப்பதும் மிகவும் ந்யாய விருத்தம். அவர்கள் தைவத்தின் கட்டளையென்றே சாஸ்த்ரத்தைக் கைப்பற்றினவர்கள். அது நிற்க, ஒவ்

வொரு சாஸ்த்ரத்திலும் அநேக வர்ஷகாலம் பரிச்ரமப்பட்டு, க்ரந்தா பேக்ஷை இராமலே விஷய ஸ்பூர்த்தியுடன் விஷயங்களை உபதேசிக்கும் திறமை வாய்ந்துள்ள நமது வித்வான்களைப்போல வேறு ஒரு தேசத்திலும் பண்டிதர்கள் காணப்படவில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இப்பொழுது ப்ரசாரத்திலிருக்கும் க்ரந்தங்களெல்லாம் லுப்தங்களாகப்போனாலும், நமது பண்டிதர்களின் மநந தாரணங்களைக்கொண்டு ப்ராயேண நமது சாஸ்த்ரங்களெல்லாவற்றையும் புதிப்பிப்பது ஸாத்யமே. இப்படிப் பட்ட உத்தம உபகாரிகளை, அறியாதவர்களென்று இகழ்வுடன் நினைப்பது மிகவும் அநுசிதம். விசேஷித்த கௌரவத்திற்கு அவர்கள் பாத்ரமாக வேண்டியது போக, அவர்கள் ஆசாரச் சீர்திருத்தங்களை எதிர்க்கிறார்களென்றும் அது காரணமாக தேசத்தின் க்ஷேமத்திற்கு அவர்களுடைய ஸத்தையே பாதகமென்றும் சொல்பவர்களின் மௌட்யத்தையும் அவிவேகத்தையும் நாம் என் சொல்வோம்? அப்படிப்பட்ட பண்டிதர்களை அநாதரித்தால், அவர்களிடம் நிக்ஷேபமாயிருக்கும் வித்யையை அநாதரிப்பதாகும்; அப்படி அந்த வித்யையை அநாதரிப்பது நமக்குக் கொஞ்சமேனும் ச்ரேயஸ்கரமாகமாட்டாது. இது விஷயமாக நமது லௌகிக ப்ரபுக்கள் அவலம்பித்திருக்கும் ஆக்ரஹத்தின் வேகம் எப்பொழுது குறைகின்றதோ, நமது வைதிக வித்வான்களும் யதோசிதம் எப்பொழுது ஸம்மானிக்கப்படுகிறார்களோ, அப்பொழுதே நமது ஸம்ப்ரதாயம் வ்ருத்தி அடையும் என்பது நமது நம்பிக்கை.

## ஸ்ரீ பாஷ்யம்
### ச்ருத ப்ரகாசிகையுடன் தமிழ் மொழிபெயர்ப்பு

ஸ்ரீ ராமாநுஜ ஸ்ரீ பாஷ்யம் ச்ருத ப்ரகாசிகையுடன், மஹா மஹோபாத்யாயர் ஸ்ரீ, உ. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று ஸ்ரீ உ.வே. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியுடைய முகவுரையுடன், ஸ்ரீரங்கம் ஸ்ரீபாஷ்யம் கமிடி ப்ரஸிடெண்ட் ஸ்ரீமான் திருப்புறம்பயம் டி. டி. ராமஸ்வாமி நாயுடு அவர்களால் ப்ரகாசிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது அதன் முதல்பாகம் ஜிஜ்ஞாஸாதிகரணம் வெளியாகி இருக்கின்றது. விலை ரூ 7-8-0 இந்த விலையை மொத்தமாகக் கொடுக்கக் கூடாதவர்கள் 10 மாஸத்தில், மாஸம் ஒன்றுக்கு அணா 12 வீதம் செலுத்தலாம். இதைப்பற்றிய மற்றை விஷயங்களை அபேக்ஷிப்பவர்கள் ஸ்ரீரங்கம் தெற்கு ராய கோபுரம் எக்ஸ்டென்ஷன், ஸ்ரீமான் ஆர். எ. பங்கார ஸ்வாமி நாயுடு அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.



விஷ்வக்ஸேநஸகோ வீர வநசாரிந் வநப்ரிய ।
த்ரிவிக்ரம த்ரிலோகேஶ சக்ரபாணே சதுர்புஜ ॥
இத்யாதீநி பவித்ராணி நாமாநி ப்ரதிவேஶ்மஸு ।
ஸ்த்ரீபாலஸ்தவிரகோபாலைர் கீர்த்திதாநி து ॥
ருதே ஹரிகதாயாஸ்து நாந்யா வார்த்தா நிஶம்யதே ।
ஹரிணா நைவ வத்யந்தே ஹரிநாமாம்ஶபாஷிண: ॥
தஸ்ய ராஜ்ஞோ பயாச்ச வ்யாதைரரண்யஸுகசாரிண: ।
ந மத்ஸ்யா நைவ கூர்மா ந வராஹாஶ்ச கேநசித் ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ஹரிவாஸரே ।
[illegible] ॥
[illegible] ।

---

விஷ்வக்ஸேனனிடம் வைக்கப்பட்ட பாரத்தையுடையவனே, வீர, வனமாலின், காட்டில் ஸஞ்சரிப்பதில் ப்ரீதியுடையவனே, த்ரிவிக்ரம, மூன்று லோகத்திற்கும் ஈசனே, சக்ரபாணியே, நாலுகைகளையுடையவனே, என்று இம்மாதிரி பரிசுத்திகரங்களான நாமங்களை ஒவ்வொரு கிருஹத்திலும் ஸ்த்ரீகள், பாலர்கள், வ்ருத்தர்கள், கோபாலர்களெல்லாரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஹரிகதையைவிட்டு வேறுவார்த்தைகள் கேட்கப்படுவதே கிடையாது. ஹரியினால் (பகவனாலே) ஹரியின் நாமத்தில் ஏதோ ஒருஅம்சத்தை சொல்லிக்கொண்டிருந்தாலும் அவர்கள் கொல்லப்படுவதில்லை.

அரசனிடத்தில் பயத்தால், வேடர்களால்கூட காட்டில் ஸுகமாக ஸஞ்சரிக்கின்ற மத்ஸ்யங்கள் கொல்லப்படுவதில்லை. ஆமைகள் கொல்லப்படுவதில்லை. ஒருவனாலும், பன்றிகூட கொல்லப்படுவதில்லை.

அமித்ரஜித் ராஜ்யத்தில், ஏகாதசி வந்தால் குழந்தைகள் கூட ஸ்தந்யபாநம் செய்வதில்லை. ஏகாதசி வந்தால் பசுக்கள்கூட புல்லைத்தின்னாமல் உபவாஸம் பண்ணுகிறது. மனிதன் விஷயத்தில் கேட்பானேன் ?

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

---

அந்த அமித்ரஜித் என்னும் அரசன் பூமியை ஆளுகையில் (அந்த ந
ரத்தில் ஹரிதினமான ஏகாதசி வரும்போது அன்று ஸகலமான பட்ட
ணத்து ஜனங்களாலும் ஓர் பெரிய உத்ஸவமானது செய்யப்படுகிறது.

அந்த அமித்ரஜித்தின் ராஜ்யத்தில் எவனொருவன் விஷ்ணுபக்தி யி
லாமலிருக்கிறானோ அவன் தன் ப்ராணன்களாலும் தனங்களாலும் தண்டி
கத்தகுந்தவனாகிறான்.

அவன் ராஜ்யத்தில் சண்டாளர்கள் கூட தீக்ஷை செய்துகொண்ட சி
பக்தர்கள்போல் விஷ்ணு ஸம்பந்தமான காரியங்களுக்குண்டானதா
தீக்ஷையைப் பெற்று சங்க சக்ரத்தையும் தரித்துக்கொண்டவர்களா
ஆகிறார்கள்.

(அங்கு) எந்த சுபகர்மங்கள் ப்ரதிதினம் ஜனங்களால் செய்யப்படுகிவ
றனவோ, அவைகள் ஒரு பலத்தையும் விரும்பாத அந்த ஜனங்களா
ஸ்ரீ வாஸுதேவனிடத்திலேயே முடிக்கப்படுகின்றன. (அதாவது முடித்
ஸமர்ப்பிக்கப்படுகின்றன.)

பரமானந்த ஸ்வரூபியாயும், (தன் ஸ்தானத்திலிருந்து) என்றும் ந
வாமலிருப்பவனாயும், மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கிறவனுமிருக்கி
கோவிந்தனை விட்டு வேறொரு தைவமும் ஓரிடத்திலும் ஜனங்களால் ஜபி
க்கப்படுவதில்லை; வணங்கப்படுவதுமில்லை. ;பஜிக்கப்புடுவதுமில்லை.



[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

---

அந்த அரனுக்கு க்ருஷ்ணனே உயர்ந்த தைவமாயும், க்ருஷ்ணனே பரமகதியாயும், க்ருஷ்ணனே பரமபந்துவாயுமிருந்தான்' என்று ருத்ரனால் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஓ அரசனே! ஸகல வஸ்துக்களிலும் கோவிந்தனை தர்சிக்கிற நீயே பாக்யம் பெற்றவனாகிறாய், செய்யவேண்டியதைச் செய்தவனாகிறாய், கொண்டாடத்தகுந்தவனாகிறாய்.

'ஓ ராஜச்ரேஷ்டனே, யாதொரு விஷ்ணு வேதபுருஷனோ (வேத ப்ரதிபாத்யனோ), யாதொரு விஷ்ணு யஜ்ஞஸ்வரூபியோ, யாதொரு ப்ரபுவான விஷ்ணு இந்த உலகத்துக்கு அந்தராத்மாவாயும், ஸ்ருஷ்டி கர்த்தாவாயும், ஸம்ஹாரகர்த்தாவாயும், நன்மையைச் செய்கிறவனாயும் இருக்கிறானோ;

அவன்மயமாக இந்த லோகத்தைப பார்க்கிற உன்னுடைய ஸுகமாகக் கிடைக்கக்கூடிய தர்சனத்தை யடைந்து மிகவும் நல்ல (பரிசுத்த) மனதுடையவனாக ஆனேன்.

ஸகலமான இஷ்டத்தைக் கொடுக்கிறதான ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனது பாதாரவிந்தத்தின் பக்தி ஒன்றுதான் ஒரு க்ஷணங்கூட நிலையற்றதான (இந்த) ஸம்ஸாரத்திற்குள் (அதாவது ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கடிக்கிற விஷயத்தில்) பலமுள்ளது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

---

எவனொருவன் எல்லாவற்றையும் விட்டு விஷ்ணு ஒருவனையே எப்பொழுதும் பஜிக்கிறானோ; நல்ல ப்ரஜ்ஞையுள்ள அவனையே எல்லா வஸ்துக்களும் பஜிக்கின்றன.

எவனுடைய இந்த்ரியங்கள் ஹ்ருஷீகேசனிடத்தில் நிலையை யடைகின்றனவோ; அவனே மிகவும் சஞ்சலமுள்ள ப்ருஹ்மாண்டத்தில் தைர்யத்தை யடைகிறான்.

(எவனும்) பௌவநத்தையும், தநத்தையும், வயஸ்ஸையும், தாமரை இலையிலிருக்கும் ஜலத்துளியைப்போல் மிகவும் நிலையற்றதாக அறிந்து அச்யுதன் (என்றும் நழுவாமலிருக்கிறவன்) ஒருவனையே அடையவேண்டும்.

எவனுடைய மனதில் பகவான் த்யாநம் பண்ணப்படுகின்றானோ; அவனே மனித சரீரங்கொண்ட பகவானாக (எண்ணப்பட்டு) வணங்கத்தகுந்தவனாகிறான்.

உன்னைப்போல பூலோகத்தில் பலா பேக்ஷையற்ற த்யாநத்தினால் ஸ்ரீ லக்ஷ்மீ காந்தனை பகவானை ஸ்தோத்திரம் பண்ணி புருஷச்ரேஷ்டனாயிருக்குந் தன்மையை எவன் அடைந்தவன்? என்றும்,



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அத்ர நியமவசநாந்யபி பவந்தி —

விஷ்ணு ஸ்ம்ருதௌ:—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

---

நாரத மஹாரிஷியினால் நன்கு கொண்டாடத் தகுந்தவனும், ஸகல தேவர்களாலும் பூஜிக்கத் தகுந்தவனுமிருக்கிற 'அமித்ராஜித்' என்னும் அரசன்:—

"அகன்ற மார்பின் ப்ரதேசத்தில் தொங்கிக்கொண்டிருக்கிற ஸ்ரீ துளசி மாலையை உடையவனும், சங்கம் சக்கம் இவைகளின் அடையாளத்தையுடைய அழகான இரண்டு புஜங்களால் விளங்கிக்கொண்டிருக்கிறவனும்" என்றும், ருத்ரனால் பார்வதியினிடத்தில் வர்ணிக்கப்பட்டான், என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த விஷயத்தில் நியமவசநங்களு மிருக்கின்றன:—

விஷ்ணு ஸ்மிருதியில்:—

'சங்கம் சக்கரம் இவைகளின் அடையாளங்களும், அப்படியே நர்த்தநம், கீதம் (பாட்டு) முதலானவைகளுமான இந்த கர்மமானது சூத்ர ஜாதியினுடையது. ஒருக்காலும் ப்ராஹ்மண ஜாதிக்கல்ல.

எவனொருவன் சங்கம் சக்கரம் இதுகளை மண்ணினாலாவது தபிக்கப்பட்ட இரும்பினாலாவது (அடையாளம்) செய்துகொள்ளுகிறானோ; அந்த ப்ராஹ்மணன் ஸகலமான ப்ராஹ்மண கர்மங்களிலிருந்து சூத்ரன்போல் வெளியில் நீக்கத்தகுந்தவனாகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

...வ்ருத்த்யர்த்தம் ந்ருத்தகீதாதிகம் குர்வந்தஶ்சைவ
ஸம்ஸ்கர்தவ்யா யதாயோகம் ஶங்கசக்ராதி லக்ஷணை: |
ஆராதநாத்யா: கைங்கர்யா வா சக்ராதிஸம்ஸ்க்ருதா: ||

இத்யாதிவசநாநுஸாரேண ஶங்காங்கநம் குர்வந்தி | தத் த்விஜாதே நிஷித்யதே || ஏகஜாதேரேவ தர்மோ ந த்விஜாதேரிதி | ந ஜாத்விதி - ந கதாசிதித்யர்த்த: || அநேந வ்ருத்த்யர்த்தமேவ நிஷேதோ க்ருஹ்யதே |

---

பகவானுடைய ஆலயத்தில் ஜீவிப்பதற்காக, நர்த்தநம், காநம் முதலியவைகளைச் செய்யுமவர்கள், சங்கம் சக்ரம் முதலிய அடையாளங்களினால் க்ரமப்படி அடையாளம் பண்ணப்படவேண்டியவர்கள். இப்படியே ஆராதநம் முதலிய மற்ற கைங்கர்யங்களைச் செய்யுமவர்களும் கூட சங்கம் சக்ரம் முதலியவைகளினால் அடையாளம் பண்ணப்பட்டால்தான் அந்த கைங்கர்யங்களுக்கு யோக்யராகிறார்கள்.

இவை முதலிய வசநங்களை அநுஸரித்து சங்கம் சக்ரம் இவைகளினால் அடையாளம் பண்ணப்பட்டவர்கள்தான் (ஆலய கைங்கர்யங்களை)ச் செய்கிறார்கள்.

கீழே சொல்லப்பட்ட 'ஏகஜாதே ரேவதர்மோ ந த்விஜாதே:' என்கிற வாக்யத்தினால் தேவாலயத்தில் ஜீவநத்திற்காக நர்த்தநம், காநம், இவைகளைச் செய்வதும், அதற்காக சங்க சக்ராதிகளை தரிப்பதும் ப்ராஹ்மணனின் தர்மமன்று என்று சொல்லப்படுகின்றது.

இது 'ஏக ஜாதி யென்று சொல்லப்படுகிற சூத்ரனுடைய தர்மம்' என்று சொல்லப்படுகிறதேயல்லது; ப்ராஹ்மணன் சங்கம் சக்கரங்களை தரிக்கக் கூடாதென்று சொல்லப்படவில்லை.

'ந ஜாத்விதி' என்பதற்கு ஒருகாலத்திலும் செய்யக்கூடாதென்று அர்த்தம்.

இதனால் ஜீவநத்திற்காக சங்கம் சக்ரங்களை தரிப்பதற்குத்தான் நிஷேதம் ற்படுகிறது.



[illegible]

---

ஒவ்வொரு ஜாதி மனிதனும் தன் தன்னுடைய ஜாதிக்கு 'இன்னது தான் ஜீவிப்பதற்கு உபாயம்' என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட கார்யங்களினால் ஜீவிக்க முடியாத கஷ்டம் நேர்ந்தால், அப்பொழுது 'கீழ் ஜாதியின் ஜீவநத் தொழிலைச் செய்து ஜீவிக்கலாம்' என்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதால் அதை அநுஸரித்துப் ப்ராஹ்மணஜாதி மனிதனுக்கு தன் ஜீவனோபாயமான யாஜநம், அத்யயநம், ப்ரதிக்ரஹம், இவைகளினால் ஜீவிக்கமுடியாத ஸமயத்திலும் கூட தேவாலயத்தில் நர்த்தநம், காநம், இத் தொழில்களைக் கைப்பற்றி ஜீவிக்கலாகாதென்று சொல்லப்படுகிறது.

இந்தப் பொருள்தான் இந்த வாக்யத்திற்கு அர்த்தமென்று எப்படி ஏற்பட்டதென்றால் ஷை சப்தங்களுடைய ஸாமர்த்யம் அர்த்தத்தின் ஸாமர்த்யம் இவைகளினால் ஏற்படுகிறது.

அவ்விடத்தில் "சங்கம் சக்ரம் இவைகளினால் அடையாளம் செய்து கொள்வது சூத்ரஜாதியின் தர்மம்; நர்த்தநம், காநம், செய்வதும், சூத்ர ஜாதியின் தர்மம் ; என்று அந்வயம் செய்யக்கூடாது.

அப்பொழுது, இந்த வாக்யத்தில் இரண்டு விஷயங்கள் சூத்ரதர்மங்களாகச் சொல்லப்படுவதால், 'அயம்' என்று ஒரு விஷயத்தையே சொல்லக்கூடிய ஏகவசநாந்த சப்தத்திற்கு ஸ்வாரஸ்யம் குறைந்துபோகும்.

ஆனால் "சங்கம் சக்ரம் இவைகளினால் அடையாளம் செய்துகொள்ளுகிறதென்கிற இதுவும் ஏகஜாதி தர்மம். நர்த்தநம், பாட்டு முதலியவைகளைச் செய்வது என்கிற, இதுவும் ஏகஜாதி தர்மம்' என்று அந்வயிக்கலாம்;" என்று சொல்லக்கூடும்.

அப்படியானால், 'அயம்' என்கிற பதத்தை ஆவர்த்திசெய்து கொள்ள வேண்டியதுதான் அஸ்வாரஸ்யம் ஸம்பவிக்கும்.

தஸ்மாத் அயம் ப்ரஸித்தேந ஜீவிகார்த்தேந ஸம்பந்த: லாஞ்சநம், ந்ருத்த கீதாதிகம் சேதி யதுக்தம், ஆயதநே கர்த்தவ்ய தஸ்யாய: | அயமித்யேக வசநேந நிர்தேசாத், சக்ராதிதாரணஸ்ய ந்ருத்தாதி சேஷத்வம் கம்யதே | அநேக ப்ரமாண ப்ரதிபந்நஸ்ய நிஷேத்யத்வாஸம்பவ: | நாரதாத்யநுஷ்டிதஸ்ய கீதாதே: நிஷேத்யத்வம் அபி அர்த்தஸாமர்த்யாத் ||

த்விதீயவசநஸ்யாயமர்த்த: | கஸ்ய சக்ராதிசிஹ்நாகாங்க்ஷாயாம், கர்த்துரேவேதி ப்ராப்தே ந ஸ்வஸ்ய ஸ்வயம் ந கர்த்தவ்யம் | கிந்து தார்ச்சிகஸ்ய ந ப்ராக்ருதஸ்யேதி கேசித் |

---

அதைப் பொருத்து அம்மாதிரியான 'அந்வயத்தை அங்கீகரித்தாலும் இந்த வாக்யத்திற்கு இவ்வர்த்தத்தைச் சொல்வதினால் ப்ரயோஜநம் ஒன்றுமில்லை.

ஆகையினால் "கீழே சொன்னபடி 'ப்ரஸித்தமான ந்ருத்த காநங்களும், அதை ஆலயத்திலே செய்யவேண்டியதற்காகச் செய்துகொள்ள வேண்டியதான சங்க சக்ராதிகளுடைய அடையாளங்களும்' என்கிறது ஏக ஜாதியினுடைய தர்மம்." என்று சொல்வதே உசிதமாகும்.

இங்கு 'அயம்' என்று ஒரே தர்மத்தைக் குறிப்பிடுவதால், ந்ர்த்தந காந ரூபமான ஜீவிகைதான் இங்கு சொல்லப்படுகிறது. சங்கம் சக்ரங்களைத் தரிப்பது, இங்கு தேவாலயத்தில் அவைகளைச் செய்வதற்காகச் செய்துகொள்ளவேண்டியவைகளாகையினால் அதற்குச் சேஷமாகையால், இது வேறு விஷயமல்லவென்பது 'அயம்' என்கிற ஏக வசநத்தினால் தோன்றுகிறது. ஆகையினால் அநேக ப்ரமாணங்களால் சொல்லப்பட்ட ப்ராம்மணர்களையுடைய சங்க சக்ர அடையாளத்தை இந்த வாக்யம் நிஷேதிக்கிறதல்ல. இங்கு 'அர்த்த ஸாமர்த்யம் என்பது' தும்புரு நாரதர் முதலியவர்களினால் தினந்தோறும் அநுஷ்டிக்கப்படும் காநத்தை நிஷேதிப்பது அஸம்பாவிதமென்பதுதான்.

இரண்டாம் வசநத்துக்குக் கீழ் சொல்லுகிறபடி அர்த்தம் கொள்ள வேண்டியது.

"யாருக்கு சங்க சக்ராதிகளின் அடையாளம் பண்ணவேண்டும்' என்று கேள்வி பிறக்கும்போது 'கர்த்து:' என்று பதம் கிடைத்ததால், தானே



ஸூக்தம் து பௌருஷமசேஷஜகத்பவித்ரம்

...த்துத்தமம் பூருஷமேஷ ஜகாத || ௨௨

---

அப்ரகம்ப்யம்—பகவானும் சலிப்பிக்கப்படாதவன்; இந்த ஸூக்தத்தையும் எவ்வளவு யுக்திகளைக் கொண்டும் அசைக்க முடியாது; அதாவது, 'நாராயணனே பரதேவதை' என்று சொல்வதிலிருந்து சலிப்பிக்க வொண்ணாத அதாவது, புருஷஸூக்தமானது நாராயணனைத் தவிர்த்த மற்றொரு தேவதையைப் பரதேவதையாக ப்ரதிபாதிக்கின்றது என்று ஸ்தாபிக்க முடியாது என்று சொன்னதாயிற்று.

நாராயணாஹ்வயம்—பகவானுக்கும் நாராயணன் என்று பெயர், இதற்கும் அந்தப் பெயருண்டு. ஆபஸ்தம்பர் ஓரிடத்தில்

"ப்ரஹ்மமேதே நாராயணாநுவாகாப்யாம் உபஸ்தாநம்"

[ப்ரஹ்மமேதம் என்னும் க்ரியையில் நாராயண ஸூக்தங்களென்று சொல்லப்படும் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" "அத்ப்ய: ஸம்பூத:" ஆகிய இந்த இரண்டு ஸூக்தங்களாலும் உபஸ்தாநத்தைச் செய்தல் வேண்டும்] என்று புருஷஸூக்தத்தை நாராயண ஸூக்தங்களுள் ஒன்றாகப் பேசியிருக்கிறார். "அத்ப்ய: ஸம்பூத:" இத்யாதியான அநுவாகம் புருஷ ஸூக்தத்தைச் சேர்ந்ததானதால், இந்த இரண்டையும் இரண்டு நாராயண ஸூக்தங்களென்று சொல்லக்கூடும் என்பது ஆபஸ்தம்பரின் அபிப்ராயம்.

அநவத்யம்—தோஷமற்றது, அதாவது, ஆப்த தமம் என்று சொன்னதாயிற்று.

"வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம்

பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம்||"

[வேதங்களுள் புருஷ ஸூக்தமும், தர்ம சாஸ்த்ரங்களுள் மநுஸ்ம்ருதியும், பாரதத்தில் பகவத் கீதையும், புராணங்களுள் விஷ்ணு புராணமும் ஆப்த தமங்கள்] என்னும் வாக்யம் ப்ரமாணம்.

உத்தமம் பூருஷமேஷ ஜகாத—உத்தம புருஷனென்று சொல்லுகிறது; 'புருஷ ஸூக்தத்தில் பகவான் புருஷோத்தமன் என்று சொல்லப்படவில்லையே வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் என்று மஹா புருஷன் என்று மாத்ரம் சொல்லப்பட்டிருக்க, எப்படி இவ்விடத்தில் உத்தமனான புருஷன் என்று ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடும்? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். இந்த

ஆநந்த³மைச்²வரமவாங்மநஸாவஸாநம்
சக்ருராவிஷ்ச்²ருதய: ச²தகு³ணோத்தரிதக்ரமேண ।

---

"வேதா³ஹமேதம் புருஷம் மஹாந்தம்" என்னும் வாக்யத்தை பகவத் கீதையில் காணப்படும்

"உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா³ஹ்ருத:"

[கீழ் சொல்லப்பட்டுள்ள பத்த முக்த ஜீவன்களைக் காட்டிலும் இவன் வேறுபட்டவன்; இவனைப் புருஷோத்தமன் என்று ச்ருதிகள் சொல்லுகின்றன] என்னும் ச்லோகம் விவரிக்கின்றது. இந்த விவரணத்தில் 'மஹா புருஷன்' என்னும் பதம் 'புருஷோத்தமன்' என்று விவரிக்கப்பட்டிருக்கிறபடியால், இந்த ச்லோகத்திற் சொல்லப்பட்டிருக்கும் "உத்தமம் புருஷம்" என்பது உபபர்கமே என்று அறியவேண்டும்,

24. இன்னும் இரண்டு மூன்று ச்லோகங்களால் நாராயணனே பர தத்வமென்பதை நிரூபிக்கிறார். ச்ருதியில், 'ஈச்வரனுடைய ஆனந்தம் அளவிடத்தகாதது; அது வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாதது' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ச்ருதியிலேயே, 'அந்த ஈச்வரனானவன், எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாகவும், தாமரைப்பூப் போன்ற கண்களை உடையவனாகவும், ஸூர்ய மண்டலத்தில் வர்த்தித்துக் கொண்டு இருக்கும் நாராயணனே' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் அப்படி அளவிடக்கூடாமலிருக்கும் ஆனந்தம் நாராயணனுடையதே என்பது ஸித்தம்.

[ப - ரை] ஐச்²வரமாநந்த³ம் - ஈச்வர ஸம்பந்தமான ஆனந்தத்தை ச²தகு³ணோத்தரிதக்ரமேண - நூறு நூறு மடங்காகப் பெருக்கிவிட்டுக் கொண்டு போய், அவாங்மநஸாவஸாநம் - (முடிவில், அது) வாக்காலும் மனஸாலும் பரிச்சேதிக்கத்தகாதது என்று, (ச்²ருதய: - வேதங்கள்) ஆவிஷ்சக்ரு: - சொல்லியிருக்கின்றன. ஸோ(அ)யம் - அந்த ஆனந்தமானது, தவைவ - உன்னுடையதே; ஹி - ஏனென்றால், இஹ - இந்த ப்ரகரணத்தில, ந்ருஷு - மனுஷ்யர்களின் உள்ளில், த்வம் - நீ, அந்தராத்மா - அந்தராத்மாவாக இருக்கிறாய் என்றும், த்வம் - நீயே, புண்ட³ரீகநயந: - தாமரைப் பூ போன்ற கண்களை உடையவனென்றும், பௌருஷ: ஸவித்ருஸ்த²: - ஸூர்ய மண்டலத்தில் இருக்கும் புருஷனென்றும், (சொல்லப்பட்டிருக்கிறாய்).

ச²தகு³ணோத்தரிதக்ரமேண - தைத்திரீய உபநிஷத்தில் இதைக் காணலாம். ஈச்வரனுடைய ஆனந்தம் எவ்வளவு என்பதைக் கணக்கிடுவதற்காக, ச்ருதியானது, முதலில், ஒரு சிறிய ஆனந்தத்திற்கு மனுஷ்யானந்த மென்று பெயரிட்டது. அதாவது,



ஸோ(அ)யம் தவைவ ந்ருஷு ஹி த்வமிஹாந்தராத்மா
த்வம் புண்ட³ரீகநயந: ஸவித்ருஸ்த² பௌருஷ: ௨௪

---

ஒரு மனுஷ்யன் யுவாவாகவும் நல்ல ஜ்ஞானமுள்ளவனாகவும் ஸாத்தானாகவும் த்ருடகாத்ரனாகவும் மனோபலத்தைப் பூர்ணமாகப் பெற்றவனாகவும் இருந்து, இவையெல்லாவற்றுடன் கூட ஸகல தந தான்யங்களால் நிறைந்துள்ள பூமி முழுவதையும் தனது விபூதியாகவும் உடைத்தாயிருந்தால், அவன் எந்த ஆனந்தத்தை அநுபவிக்கக்கூடுமோ அது தான் ஒரு மனுஷ்யானந்தமென்று வைத்துக்கொள்ளப்பட்டது. இப்படி நூறு மடங்கு கொண்டதை மனுஷ்ய கந்தர்வர்களின் ஆனந்தமென்றும், அதைக்காட்டிலும் நூறுமடங்கு கொண்டதை தேவ கந்தர்வர்களின் ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை பித்ருக்களுடைய ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை ஆஜாநஜர்களான தேவர்களுடைய ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதைக் கர்ம தேவர்களுடைய ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை தேவர்களுடைய ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை இந்த்ரனுடைய ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை ப்ருஹஸ்பதியின் ஆனந்தமென்றும், அப்படி நூறு மடங்கு கொண்டதை சதுர்முகனின் ஆனந்தமென்றும், அப்படி நூறுமடங்கு கொண்டதை ப்ரஹ்மத்தின் ஆனந்தத்திற்கு உவமையாகச் சொல்லலாமென்றும் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு

"யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மநஸா ஸஹ",

[இவ்விதம் வாக்கும் மனஸ்ஸும் ப்ரஹ்மானந்தத்தின் கரையைக் காண ப்ரயத்னப்பட்டு அதைக் காணாமலே திரும்பிவிட்டன] என்று சொல்லி முடிக்கின்றது. இந்த அர்த்தம் தான் இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்தராத்மா— இந்த உபநிஷத்திலேயே ப்ராணமய மனோமயங்களை ப்ரஸ்தாவித்த பிறகு, விஜ்ஞானமயனென்ற ஜீவனை ப்ரஸ்தாவித்து,

"தஸ்யைஷ ஏவ சா²ரீர ஆத்மா"

[இந்த விஜ்ஞானமயனென்ற ஜீவனுக்கு ஆனந்தமயனென்ற பகவானே அந்தராத்மா] என்று சொல்லுகின்றது.

பௌருஷ: ஸவித்ருஸ்த²:—ஸூர்ய மண்டலத்தில் பகவான் இருக்கிறான் என்பது "யோ(அ)ஸாவாதி³த்யே" [எவன் ஸூர்யனிடத்தில் இருக்கிறானோ] என்பதால் விளங்குகின்றது. "ஸவிதா" என்பது ஸூர்யனுக்கு ஒரு பெயர். ஸவித்ருஸ்த²: மண்டலவர்த்தீ பௌருஷ:

யத் ப்ரஹ்ம காரணமவோச்யத ஸ்ருஷ்டிவாக்யை:
ப்ரஹ்மேதி வா ஸதிதி வா யதி வாத்மசப்தாத் ।

25. இச் ச்லோகங்களால், ச்ருதி வாக்யங்களெல்லாவற்றாலும் 'ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை' என்று விளக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்பட்டது. அப்படிச் சொல்வது கூடுமோ? ச்ருதிகளிற் சிலவிடங்களில் 'காரணம் து த்யேய:' [ஜகத்திற்கு எது பரம காரணமோ அதுவே த்யானிக்கத்தகுந்த வஸ்து] என்று த்யானிக்க வேண்டியதைக் குறிப்பிட்டு விட்டு, அப்படி த்யேயமான காரண வஸ்து எது என்பதைச் சொல்லிவரும் பொழுது, 'ப்ரஹ்ம வா இதமேக ஏவாக்ர ஆஸீத்' (ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரஹ்மம் ஒன்றே இருந்தது) என்று ஒரு இடத்திலும், 'ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்' (ஸ்ருஷ்டிக்கு முன் ஆத்மா ஒன்றே இருந்தது) என்று மற்றொரிடத்திலும், 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்' (நாராயணன் ஒருவனே இருந்தான்) என்று மூன்றாவது இடத்திலும் இவ்விதம் வெவ்வேறு பெயர்களால் காரண வஸ்து சொல்லப்பட்டிருக்கவில்லையோ!' என்று வரும் சங்கைக்குப் பரிஹாரத்தை இந்த ச்லோகத்தாலும் இதற்கு அடுத்து வரும் ச்லோகத்தாலும் விவரிக்கிறார்.

[ப - ரை] யத் - எந்த வஸ்துவானது, ஸ்ருஷ்டிவாக்யை: - ஸ்ருஷ்டியைப்பற்றிப் பேசும் ச்ருதி வாக்யங்களால்; ப்ரஹ்மேதி வா - 'ப்ரஹ்மம்' என்னும் பெயராலோ, ஸதிதி வா - 'ஸத்' என்னும் பெயராலோ, யதி வா - இல்லாவிட்டால், ஆத்மசப்தாத் - 'ஆத்மா' என்னும் சப்தத்தாலோ, ப்ரஹ்ம காரணம் - பரமகாரண வஸ்து வென்று, அவோச்யத - போதிக்கப்பட்டிருக்கின்றதோ, தம் - அந்த வஸ்துவை நாராயணஸ்த்விதி - நாராயணனே என்று, மஹோபநிஷத் - 'மஹோபநிஷத்' என்று சொல்லப்படும் உபநிஷத்தானது, விவ்ருணீதே - விளக்குகின்றது. ஸாபாலிகீப்ரப்ருதயோऽபி - ஸுபாலோபநிஷத் முதலியவைகளும், ஏநாம் - இந்த மஹோபநிஷத்தை, அநுஜக்மு: - அநுஸரிக்கின்றன.

ஸத் என்றும் ப்ரஹ்மம் என்றும் ஆத்மாவென்றும் வேறு உபநிஷத்துக்களால் வ்யவஹரிக்கப்படும் வஸ்துவானது, நாராயணனே என்று மஹோபநிஷத் ஸுபாலோபநிஷத் முதலியவை விளக்குகின்றன என்று சொன்னதாயிற்று. 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்' என்னும் வாக்யம் சாந்தோக்ய உபநிஷத்திலும், 'ப்ரஹ்ம வா' இத்யாதியான வாக்யம் வாஜஸனேயகத்திலும், 'ஆத்மா வா' இத்யாதியான வாக்யம் ஐதரேய உபநிஷத்திலும், 'ஏகோ ஹ வை நாராயண:' இத்யாதியான வாக்



நாராயணஸ்த்விதி மஹோபநிஷத் விவ்ருணீதே
ஸாபாலிகீப்ரப்ருதயோऽப்யநுஜக்முரேநாம் ॥ 25

யம் மஹோபநிஷத்திலும், 'திவ்யோ தேவ ஏகோ நாராயண:' என்னும் வாக்யம் ஸுபாலோபநிஷத்திலும் காணப்படுகின்றன. 'இப்படி பல உபநிஷத்துக்கள் பலவிதமாகச் சொல்லுகையில் மஹோபநிஷத்திற்கும் ஸுபாலோபநிஷத்திற்கும் மாத்ரம் ப்ராதான்யத்தைக் கொடுத்து அவை சொல்வதே நிர்ணயமென்று நிர்ணயிப்பது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ! என்று ஒரு ஆக்ஷேபம் ஏற்படக்கூடும். இந்த இரண்டு உபநிஷத்துக்களுக்கு ப்ராதான்யத்தைக் கொடுத்த அந்தக் காரணத்தாலே இந்த நிர்ணயம் செய்யப்படவில்லை. இந்த நிர்ணயம் செய்வதற்குக் காரணம் வேறொரு ந்யாயம் என்பதை நாம் அறிதல் வேண்டும். சப்தங்களுள் ஸாமாந்ய சப்தங்களென்றும் விசேஷ சப்தங்களென்றும் இரு வகுப்புக்கள் உண்டு. சேதநம் அசேதநம் இரண்டுக்கும் வாசகமாக இருக்கும் 'வஸ்து' என்னும் சப்தம் ஸாமாந்யம்; அதை அபேக்ஷித்து 'சேதநம்' என்னும் சப்தம் விசேஷம். மநுஷ்யன் தேவன் முதலியவைகளுக்கெல்லாம் வாசகமாக இருக்கும் இந்தச் 'சேதநம்' என்றும் சப்தம் 'மநுஷ்யன்' என்னும் சப்தத்தை அபேக்ஷித்து ஸாமாந்யம் ஆகும். 'மநுஷ்யன்' என்பது 'சேதநம்' என்பதை அபேக்ஷித்து விசேஷமாகும். இம்மாதிரியே மநுஷ்யன் என்பது ப்ராஹ்மணன் என்பதை அபேக்ஷித்து ஸாமாந்யம்; ப்ராஹ்மணன் என்பது மநுஷ்யன் என்பதை அபேக்ஷித்து விசேஷம். இம்மாதிரி ஸாமாந்யங்களாயும் விசேஷங்களாயும் இருக்கும் சப்தங்களை ப்ரயோகம் செய்து, ப்ரமாணங்களென்று எல்லாராலும் ஒத்துக்[illegible] வாக்யங்கள், ஒரு வஸ்துவைக் குறிக்கும் பக்ஷத்தில், அப்பொழுது அவ்விடத்தில் ப்ரயோகிக்கப்பட்டுள்ள [illegible]ங்களுக்கெல்லாம் விசேஷ சப்தத்தால் சொல்லப்படும் வஸ்துவிலேயே [illegible] கொள்ளுதல் வேண்டுமென்று ஒரு [illegible] அந்த ந்யாயத்தை அவலம்[illegible] இவ்விடத்தி[illegible] ஆத்மா [illegible]ங்களுக்கெல்லா[illegible] நாராயண சப்தத்தி[illegible] வாச்யமாயுள்ள புருஷோத்தமனி[illegible] சொல்லப்பட்டிருக்கிற[illegible], மஹோபநிஷத்தும் ஸுபாலோபநிஷத்தும் [illegible] உபநிஷத்துக்களை அபேக்ஷித்து ப்ரதானங்கள் என்னும் காரணத்தாலில்லை. ப்ரஹ்மம் என்பது ஸத் என்பதைக் காட்டிலும் விசேஷமென்றும், ஆத்மா வென்பது ப்ரஹ்மம் என்பதைக் காட்டிலும் விசேஷம் என்பதும், நாராயணன் என்பது அந்த ஆத்மா என்பதைக் காட்டிலும் விசேஷம் என்பதும் அந்தந்தச் சப்தங்களின் அர்த்தத்தை ஆலோசித்துப் பார்த்தால் விளங்கும். 'ஸத்' என்னும் சப்தமானது ஸத்தை (அதாவது இருப்பு) யுடன் கூடிய வஸ்துக்களெல்லாவற்றுக்கும் வாசகமாயிருந்து கொண்டு, ப்ருஹத்தாக (பெரிதாக) இருப்பவை ப்ருஹத்தாக இராமலிருப்பவை இருவகை வஸ்துக்களுக்கும் வாசகமாகின்றது; 'ப்ரஹ்மம்' என்னும் சப்தமோவென்றால் ப்ருஹத்தாக இருப்பவைகளை மாத்ரம்

ஜ்யோதி: பரம் பரதத்த்வமதோ பராத்மா
ப்ரஹ்மேதி ச ச்ருதிஷு யத்பரவஸ்த்வபீதம் ।

---

குறிக்கின்றது. ஆகையால் 'ஸத்' என்பதை அபேக்ஷித்து 'ப்ரஹ்மம்' என்பது விசேஷமாகின்றது 'ப்ரஹ்மம்' என்னும் சப்தம் சேதநமாகிற பர ப்ரஹ்மத்திற்கும் அசேதநமாகிற ப்ரதாநத்திற்கும் வாசகமென்று ப்ரயோகங்களிலிருந்து ஏற்படுகிறபடியால், சேதநமொன்றையே குறிக்கும் 'ஆத்மா' என்னும் சப்தம் 'ப்ரஹ்ம' சப்தத்தை அபேக்ஷித்து விசேஷமாகின்றது. 'ஆத்மா' என்னும் சப்தம் பரமாத்மா ஜீவாத்மா என்னும் இரண்டுக்கும் வாசகமாகிறபடியால், பரமாத்மா ஒருவனுக்கே வாசகமாயிருக்கும் 'நாராயணன்' என்னும் சப்தம் 'ஆத்மா' என்பதை அபேக்ஷித்து விசேஷமாகிறபடியால், இந்த ஸ்ருஷ்டி வாக்யங்களில் காணப்படும் சப்தங்களெல்லாவற்றுக்கும் நாராயண சப்தத்திற்கு வாச்யமாக இருக்கும் புருஷோத்தமனிடத்திலேயே தாத்பர்யமென்பது ஸித்தம். இது பூர்வாசார்யர்களுடைய நிர்வாஹம். ஈடு முப்பத்தாறாயிரப்படியில் பின் வரும் வாக்யங்களைக் காணலாம்.

"த்யேய வஸ்து தன்னை 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்' என்று ஸச்சப்தத்தாலே சொல்லி, சாகாந்தரத்திலே நின்று 'ஆத்மா வா இதமேக ஏவ அக்ர ஆஸீத்' என்று ஆத்ம சப்தத்தாலே சொல்லி, 'ப்ரஹ்ம வா இதமேகமேவ அக்ர ஆஸீத்' என்று ப்ரஹ்ம சப்தத்தாலே சொல்லி, அந்த ப்ரஹ்ம சப்தந்தானும் அநேக தத்வங்களை வசிக்குமாகையாலே 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்' என்று நாராயண சப்த வாச்யனைச் சொல்லி நின்றது."

26. கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தை இந்த ச்லோகமும் விவரிக்கின்றது.

[ப-ரை] ச்ருதிஷு — ச்ருதிகளில், யத் பரவஸ்து — எந்த உத்க்ருஷ்ட வஸ்துவானது, பரம் ஜ்யோதி: - பரமமான ஜ்யோதிஸ் என்றும், பரதத்த்வம் - பரமமான தத்வமென்றும், அதோ பராத்மா - பரமாத்மாவென்றும், ப்ரஹ்மேதி ச - பரமமான ப்ரஹ்மமென்றும், அபீதம் - படிக்கப்பட்டிருக்கின்றதோ, தத் - அந்த உத்க்ருஷ்டமான வஸ்துவானது, நாராயண இதி - நாராயணனென்றே, சாகா - ஒரு உபநிஷத்தானது, தத் - அதை, விசினஷ்டி - விசேஷித்துச் சொல்லுகின்றது. ப்ரவரா — வேறொரு உபநிஷத்தானது, தத் - அந்த வஸ்துவை, விஷ்ணோ: பரமம் பதம் - விஷ்ணுவினுடைய பரமபதமென்று, க்ருணாதி - சொல்லுகின்றது.



நாராயணஸ்ஸ இதி தத்விசினஷ்டி சாகா
விஷ்ணோ: பதம் பரமிதி ப்ரவரா க்ருணாதி ॥ ௨௬

---

'சாகா' [ஒரு உபநிஷத்] என்பதால் நாராயணோபநிஷத் விவக்ஷிக்கப்படுகின்றது. நாராயணோபநிஷத்தில்,

"நாராயண பரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: ।
நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: ।

[பர ப்ரஹ்மமென்றும் பரதத்வமென்றும் பரஞ்ஜ்யோதிஸ்ஸென்றும் பரமாத்மாவென்றும் சொல்லப்படுமவன் நாராயணனே] என்னும் வாக்யத்தில் காணலாம். இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ள 'ஜ்யோதிஸ்' 'தத்வம்' 'ப்ரஹ்மம்' 'ஆத்மா' இந்த சப்தங்களெல்லாம் இந்த உபநிஷத் வாக்யத்தில் ஒன்று சேர்ந்து காணப்படுகிறபடியால், இந்த உபநிஷத் வாக்யத்தையே ஸ்ரீ கூரேசன் இவ்விடத்தில் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பது வ்யக்தம்.

'ப்ரவரா' [மற்றொரு] உபநிஷத் என்பதால் கடோபநிஷத் நிர்தேசிக்கப்படுகின்றது. அதில்,

"விஜ்ஞானஸாரதிர்யஸ்து மந: ப்ரக்ரஹவாந்நர: ।
ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥"

[ஸமீசீனமான விஜ்ஞானத்தையும் மநஸ்ஸையும் உடையவன், ஸம்ஸாரமாகிற மார்க்கத்திற்கு பாரமாய் [போகவேண்டிய இடமாயிருக்கும்] ஸ்ரீவிஷ்ணுஸ்தாநத்தை அடைகிறான்] என்னும் வாக்யம் காணப்படுகின்றது. இந்த உபநிஷத் வாக்யத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'விஷ்ணோ: பதம்' என்பதற்கு [விஷ்ணுவினுடைய பதம்] என்பது பொருள். 'பரமாத்ம ஸ்வரூபத்தை அவன் அடைகின்றான்' என்று அர்த்தம் சொல்வதைக் காட்டிலும், பரமாத்மா எந்த ஸ்தாந விசேஷத்தில் இருக்கிறானோ அந்த ஸ்தாந விசேஷத்தை அடைகிறான்' என்று அர்த்தம் சொல்வதே ப்ரசஸ்தம் என்பதை 'விஷ்ணோ:' என்பதிலுள்ள ஷஷ்டியின் ஸ்வாரஸ்யமானது விளக்குகின்றது. பரமாத்ம ஸ்வரூபம் பரம பதமாக [பரம ப்ராப்யமாக] இருப்பதுபோல, அவனால் வஸிக்கப்படும் அப்ராக்ருத ஸ்ரீ வைகுண்டமும் பரம ப்ராப்யமே. இந்த விசேஷத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே, ஸ்ரீ கூரேசன், ஒரு உபநிஷத் அந்தப் பரவஸ்துவை நாராயணனென்று சொல்லுகிறதென்றும், மற்றொரு உபநிஷத் அதை விஷ்ணுபதமென்று சொல்லுகிறதென்றும் அநுக்ரஹித்திருக்கிறார். அதாவது, பரமாத்ம ஸ்வரூபம்போல பரமாத்மாவின் ஸ்தாநமும் பரம ப்ராப்யமென்று சொன்னதாயிற்று.

ஸந்தீத்ருச: ச்ருதிசிரஸ்ஸு ஸஹஸ்ரசஸ்ஸ

வாசஸ்தவ ப்ரதயிதும் ஸார்வேச்வர்யம் ।

கிஞ்சேஹ ந வ்யஜமண: க்ருமிசதுர்முகேஷு

க்ராமஞ் ஜகந்தி நிகிரஞ் ஜகதுத்கிரம்ச்ச ॥ ௨௭

---

27. ச்ருதி வாக்யங்களைக்கொண்டு நாராயணனுடைய பரத்வத்தை ஸ்தாபித்தது போதுமென்று எண்ணி, இனி அவனுடைய ஸாமர்த்யத்தைக்கொண்டு அந்தப் பரத்வத்தை ஸ்தாபிக்கிறார். 'இது க்ருமி, இவர் சதுர்முக ப்ரஹ்மா' என்னும் விசேஷத்தைக் கொஞ்சமேனும் கவனியாமலே, ப்ரளய காலத்தில் ஸகல வஸ்துக்களையும் தனது வயிற்றில் வைத்துக் காப்பாற்றியும், ஸ்ருஷ்டி காலத்தில் எல்லாவற்றுக்கும் நாம ரூபங்களைக் கொடுத்து அவைகளைக் கார்யக்ஷமங்களாகச் செய்தும், த்ரிவிக்ரமாதி அவதார காலங்களில் புல் பூண்டு வரையிலுள்ள ஸகல வஸ்துக்களுடைய சிரஸ்ஸிலும் தனது திருவடியை ஸமர்ப்பித்தும், இவ்விதம் எல்லாவற்றையும் அநுக்ரஹிக்கும் ஸாமர்த்யத்தை நாராயணனிடம் தவிர்த்து வேறு எவ்விடத்தில் காணலாம்? இந்த ஸாமர்த்யமே 'அவனே பரதத்வம்' என்பதை உணர்த்தப் போதாதோ! என்று சொல்லுகிறார்.

[ப - ரை] தவ - உன்னுடைய, ஸார்வேச்வர்யம் - ஸர்வேச்வரத்வத்தை, ப்ரதயிதும் - வெளியிடுவதற்கு, ச்ருதிசிரஸ்ஸு - உபநிஷத்துக்களில், ஈத்ருச: - இப்படிப்பட்ட, ஸஹஸ்ரசஸ: - ஆயிரத்தைக்காட்டிலும் அதிகங்களான, வாச: - வாக்யங்கள், ஸந்தி - இருக்கின்றன. கிஞ்ச - நிற்க, ஜகந்தி - ஜகத்துக்களை, க்ராமந் - அளந்துகொண்டும், ஜகந்தி - ஜகத்துக்களை, நிகிரந் - விழுங்கிக்கொண்டும், ஜகந்தி - ஜகத்துக்களை, உத்கிரந் - வெளிப்படுத்திக்கொண்டும், ஈஹ - அளப்பது முதலான அந்த வ்யாபாரங்களில், க்ருமிசதுர்முகேஷு - 'இது க்ருமி, இது சதுர்முக ப்ரஹ்மா' என்னும் விசேஷத்தை, ந வ்யஜமண: - நீ விசாரிக்கவில்லை.

இவ்விதம் ஸகல ஜகத்துக்களையும் நிஷ்பக்ஷபாதமாக ஸ்ருஷ்டித்தும் ஸம்ஹரித்தும் ரக்ஷித்தும் வரும் வ்யாபாரமே நாராயணனுடைய ஸர்வேச்வரத்வத்தை விளக்குவதற்குப் போதுமானது. சதுர்முக ப்ரஹ்மாவும் இந்த ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு உட்பட்டவர் என்பதும் இதனால் வ்யக்தமாகின்றது.



ண்டே கொடுவினை யுண்டதிற் பாத்தைப் பிறப்பெடுத்தே
னுண்டேன் மனமொல் லாவினை யுளூற்று வுடல்வளர்ப்பான்
றுண்டே வினதிமைப் பேன்பழ வினையின் பிணிதொலைப்பான்
கொண்டே யருள்புரப் பாயென வழுதா னணிதொழுதார். 36

நெஞ்சந் தனில்வஞ் சந்தனை யொருபோ தினுமினையாச்
செஞ்சொன் முனிவர ரன்னவள் செப்பும் படியுனதென்
றஞ்சன் மனமென வெண்ணுபு வபயம் மருள்செய்யா
நஞ்செந் தொழினீ யுங்கொடு புரிவா யெனநவின்றார். 37

அன்றே முதலவர் சொல்வண மடர்பூஞ் செடியோங்க
நன்றே பனிநீர் பெய்வது முதலே வையுநவிலா
முன்றோர்ந் தடைவொடு செய்தன ளொழுகத் திருமுனியுஞ்
சென்றேந் துபுவரு பிச்சையின் சேடந் தனையருள்வார் 38

மணியாழ் பலபணி யாடையு மலர்மா லையுமொருவி
யணையார் வெருவர மின்னுறை யகறுங் கிளர்வாள்போல்
கணைமா ரணியென நின்றவள் காலங் கருதியுமவ்
வணநாள் பலகழியும் வகைபணி யாற்றுபு வந்தாள். 39

மற்றோர் தினமயி லன்னவண் மணிநீர் கொடுதகும்பின்
சிற்றே ரிடையிடு கச்செடி யடியிற் பெயுஞ்செவ்வி
புற்றே லரவணை யான்றிரு வுருவே நிகர்புயல்வான்
முற்றே றுபுவெறி காலொடு மூண்டே பொழிந்தன்றே. 40

அவ்வே லையிலாழ் வார்சிறு குடிலுட் புகுந்தவளைச்
செவ்வாய் மடமயி லேயிவண் செறிகென் றினிதிசைப்ப
வெவ்வா ரூடலெங் கும்மழை விழுநீ ரினினையா
வொவ்வா மணியென வேநனி யொளிரச் செறிகுற்றார். 41

கந்தைத் துணிநனை யத்திகழ் காயங் குளிர்விஞ்சி
நொந்தத் தருணத் தேநடு நடுங்கும் படர்நோக்கி
யிந்தத் துகிலணி கென்றவர் மேலுள் ளதொன்றீந்தா
ரந்தக் கலையெதிர் கொண்டவ ளரையிற் செலவுடுத்தாள். 42

அக்கா லரவணை யானருள் சங்கற் பமுமனைய.
வெக்கா லினுமிழி யாவவ ரிதயம் மவனெழிலின்
புக்கா வருகுரு குங்கன னவநீ தமேபோலும்
மிக்கா வலினு ருகத்தனி மீளா மயல்கொண்டார். 43

அதுகண் டலரம் போன் விடுக்கணையும் மவன்வதன
விதுவின் றெறிவிழி வேல்களு மிதயந் தனுட்புதையப்
பதுமம் பொருகரங் கொண்டவள் பைம்பொன் னுடறழுவாப்
புதுமென் மணநறுந் தேறலின் போகந் தனியுண்டார். 44

வேறு.

பின்னரப் பிணையா ளொடும் பெய்கல னணிந்து திங்கண்
மென்னறுங் கலையே யானும் பூந்துகி லுடுத்து மின்ன
வன்னவ ரவண்மே லாசை நாடொறும் வளர வந்தப்
பொன்னவிர் திதலை பூத்த முலைவிலை மகளி னோடும். 45

காவத மணக்கும் பூவே கஞலிய சினையின் கீழும்
பாவளி பருகுந் தேன்சோ லலர்கொடிப் பந்த ருள்ளுந்
தேவரும் விழையு மின்னுந் திருத்தகு பொழிலி னூடே
மேவிய தலங்க டோறு மேவருஞ் சுகங்க டுய்த்தார். 46

கழிந்தபின் சிலநா ளரங்கே கதிர்மணி வடங்க டோய்ந்து
விழுந்திடாக் கொங்கை மங்கை விப்ரநா ரணரைக் கொண்டு
கொழுந்துக டருவின் மூடுங் குடிமிசேர் தனது மாடக்
கெழுந்தன டமக்கைக் கெல்லா மியம்பினள் களிப்பின் மாதோ. 47

தன்னமு மகல்கி லாது தங்கையி னமைசேர் தோண்மேன்
மன்னிய புயத்தி னோடு மணந்துறு மவரைக் கண்டு
கொன்னவின் முனைவேற் கண்ணுப் கோதறு மிவரை யென்னை
யென்னையிங் கிழைத்தா யந்தோ வென்றன ளவளு மாங்கே. 48

நங்குலக் குரிய வீறு நகைமதி முகத்தா யோரா
திங்கிது புகல்வ தென்னோ வென்பழி யகல முன்ன
மங்குநா னிழைத்த வொட்ட மமைவுற முடித்து விட்டேன்
பங்கமா ரடிமை விண்டே னென்றிவள் பகர்ந்து போனாள். 49

தவ்வையுந் தோழி மாருந் தன்றிறம் புகழ்ந்து பேசத்
திவ்விய மாத ராளத் தெய்வவான் முனியைத் தூர்த்த
ரெவ்வெவர் களுமி வர்க்கீ டின்றென விழைத்தே யின்பத்
துவ்வநன் களித்தெப் போழ்துந் துனியற வொழுகி னாளால். 50

அவருமுன் கலைக்கோட் டையன விரிழை மகளி ராலே
தவமிழந் தவர்பின் போன தன்மையாய்த் தேவ தேவி
குவிமுலைக் கோட்டில் வீழ்ந்து குளிர்புன லரங்கற் காற்று
நவையறு மலரின் றொண்டு நயந்திலர் மறந்தா ரன்றே. 51



காந்தண் மெல்விர லினைந்திக் காரிகை கரிய மாலி
னேந்திய வாளை வண்ண மிழைத்தன மினிநா மிந்தச்
சாந்தமா நிதிக்கு நம்பாற் சலிப்புறப் புரிது மென்று
தேர்ந்தன ளொருநா ளந்தத் திருமுனி வதன நோக்கா. 52

என்னகா ணந்த ஞானீ யிறையுநா னிலியா யிங்குப்
பொன்னொரு தினையுந் தாரா தின்பமே புசிக்க நின்று
யென்னிரு குலத்தோ ரெல்லா மேசுவா ரிதனைக் காணி
னின்னிலென் னருகு றாதே நீயினி யொதுங்கி யென்றாள். 53

மற்றுமிற் புறத்தே சென்று கடுத்திட வவரு மாழ்கிப்
பற்றுறு தலைந்து வாடும் படர்கொடி யெனவே காம
முற்றதஞ் சிந்தை பேதுகி யவள்கடைத் தலைவா யொன்றி
யற்றவ ரிரப்பக் காக்கு மவ்வணங் கிடந்தா ரன்றே. 54

ஈங்கிவ ரிருப்ப வேதோங் கெயிலகத் தவின் பாயற்
பாங்கரார் நாய்ச்சி மாரும் பங்கயத் தனைக்கும் புல்லி
னீங்கரு மின்பந் துய்க்கு மெல்லையி லரங்க னேயந்
தாங்குவோ னடியார்க் காங்கு நகைத்தனன் றனியின் மாதோ. 55

கண்டது கமலை பென்னோ காரண நிகழா தீங்குக்
கொண்டது முறுவ லென்னக் கோமுனி நிலையைக் கூறப்
பண்டைய துணர்ந்து லோகம் பயந்தவன் மற்றும் வெம்பி
யண்டர்க ளதிபா வெந்தா யருள்கினி யவர்பா லென்றாள். 56

நன்றென நளினை நாயக னன்றிர விடையில் வேதந்
துன்றுமோர் மறையோ னாகித் துலங்குமோ ரிரணி யத்தின்
தன்றிரு வள்ளந் தன்னைக் கரங்கொடு படர்ந்தத் தையன்
மென்றளிர்க் கரத்தி லீந்து மிழற்றுவல் கேட்டி நங்காய். 57

விரும்பிய நினது போகம் விப்பிர நார ணன்ற
னரும்பெருந் தூதாய் வந்தே னவனிதை நினக்குத் தந்தான்
கரும்புமென் கைக்குஞ் சொல்லாய் கழறிடு மெனது நாம
மிரும்புவி யடங்க வென்றே யழகிய மணவா ளன்காண். 58

என்கையி லவ்வா னந்த மெனுஞ்சல நிதியி லாடித்
தன்கையி லதனை யேன்று கொண்டவர் தமையிங் கின்னே
மின்கலும் மேனி யாய்நீ கொணர்கென வரங்கன் மீண்டு
மன்பட னவர்பாற் சென்றங் கவர்முன் றாத னானான். 59

அந்தண ராசே நின்னை யணிகிளர் தேவதேவி
வந்துதன் சயனம் வைக விரைந்தின்னே வழங்கு கென்று
ளிந்தகன் னிமிடந் தன்னி லெழுகென விதயம் பொங்கி
முந்துசென் முகுந்தன் பின்னே முடுகுபு நடந்து போனார். 60

போயவ ளொளிசேர் பொன்னின் வாயிலிற் புகுந்த மாயன்
மாயமாய் மறைந்து தன்மின் மணிமுடி நிலயஞ் சார்ந்தான்
றாயவ ரகத்துட் போகத் தோகையு மவரின் மார்பஞ்
சேயதன் கரங்க ளாலே தழுவின ளணையிற் சேர்ந்தாள். 61

ஈங்கிது நிகழ வோங்கு மெம்பிரான் சினக ரத்து
ளாங்கருச் சகனே யாதி யடியர்வை கறையிற் சென்று
பாங்குற விழைக்கும் பூசைப் பாத்திர மடைய நோக்கி
யேங்கின ரொருபொன் வட்டி லில்லெனக் குழம்பு மேல்வை. 62

வேசியி னகத்து வேலைக் காரியோர் விரகின் மிக்கா
ளாசையங் கின்ன மொன்றோ ரந்தணன் றேவ தேவிக்
காசையாய் நெருந லீந்தா னென்றன ளவரு மாங்கே
மாசறு முறையூர் வாழும் வளவன்கண் வழங்கிக் கொண்டார். 63

புரையறப் புரக்கும் பூமி பாலனப் புழுகு நாறும்
விரைமலர்க் குழலி னாளைக் கூயதை வினவ வன்னா
டுரையுறு விபுதன் விப்ர நாரணன் றந்தா னென்று
ளரைசனு முடனே யாழ்வார் தமைவிளித் துரப்பி மன்னோ. 64

வாய்மையை வழங்கு கென்று மருட்டிட வவரு மந்தோ
பாய்மதப் பகட்டி னாயோர் பாவமு மறியே னென்னத்
தூய்மைசே ரொருவன் றாதன் றந்தன னிவர்க்கா யென்றச்
சேய்மணிக் குழையாள் செப்ப வவரகஞ் சிதைந்து மற்றும். 65

றாதனு மெனக்கிங் கின்று தோன்றலே யவனி யென்று
நீதியிற் புரப்பா யென்ன நிருபனு மமைச்சர் காணி
ரீதுநங் காரியத் துண்மை யுணர்ந்துகற் பவர்கட் கேற்ப
வோதிய முறைமைத் தண்ட முனாற்றுகென் றுரைத்து விட்டான்.

அமைச்சரு மவரை மூன்று விதத்தினு லாண்டு பின்னர்க்
கமைக்கொரு நிதியன் னரே கள்ளரென் றுணர்ந்து தேறி
யமைக்குயர் புயத்தி னானை மனைக்கெழ வனுப்பி யன்னோர் [னே.
தமைச்சிறை யடைத்துத் தண்டம் விதித்திடத் துணிந்தார் மன்



மற்றந்த நிசியிற் றன்னின் மலர்ப்பத மடைந்தோர் துன்பஞ்
சற்றுங்கண் டிருக்க கில்லாச் சலசலோ சனனு மன்னன்
பற்றுஞ்செங் கனவி னானே பண்புறு மவர்க்கா யந்தப்
பொற்றங்கக் கிண்ணந் தேவ தேவிபாற் புகுந்த தந்தேன். 68

நானர வணையின் மேய நளினநா யகனீ யன்னோர்
பானலிந் திடவே தோன்றும் பார்த்திப விழையே யென்று
தானருள் புரிந்து தாழான் கரந்ததுந் தரணி பாலன்
வானமர் துயிலு ணர்ந்து மற்றது நினைந்து பொங்கி. 69

புலரியி லவைக்கண் போந்தெல் லரியணை பொலிந்து சூழும்
பலகலை யுணர்ந்த தேர்ச்சித் துணைவரே முதல் பல்லோர்க்
கலர்மகள் கொழுநன் சொப்ப னத்தெழுந் தறைந்த வெல்லாஞ்
செலமகிழ்ந் தறைந்தான் கேட்டோர் செப்பரு மிறும்பூ துற்றார். 70

பொள்ளென வழைத்தப் பாக வதரிரு புனித பாதந்
தெள்ளரி மகுடந் தீண்டப் பணிந்தெழுந் தடியேன் றேறு
துள்ளதை யிழைத்த வெல்லா முளங்கொளா தருள்க வென்றுந்
தெள்ளலி லுபசா ரங்கள் பலவிழைத் திறைவன் விட்டான். 71

பின்பவர் தெருண்டந் தோவென் பெரும்பிழை யிழைத்தேன் கண்
பொன்பயி லடியி லென்றன் புன்றொழிற் கவன்றா தாமோ [ணன்
னன்றென நடுங்கி நாணி நொந்தக நரக மானு
மன்பறு வனிதை மையற் படுகுழி யழுந்தி னேனே. 72

எனப்பல ரறிய வாய்விண் டிரங்கியம் மயலின் வேரை
நினைப்பெனுங் கனித்தி ரத்திற் களைந்தவ னிருந்து நீங்கித்
தனக்கெதி ரரிய பேறுற் றடம்பொழி லரங்க நண்ணி
நினைப்பருஞ் சுருதி யாதி நீதிநூற் பலவுந் தேர்ந்தார். 73

தேர்ந்துழுக் கமன மாற்றுந் தீவினை யகலு மாறே
ரார்ந்த பாகவதர் பாத தீர்த்தமே யருந்திப் பன்னாள்
கூர்ந்திடுந் தொண்டர் பாத தூளியென் றுலகங் கூறும்
சேர்ந்தன ரொருபேர் மற்றுஞ் சிறந்தனர் முன்னு மாதோ. 74

மறைமுடி யுணர்ந்தோ ரெல்லா மனமிக மகிழ்ந்து போற்றப்
பிறைமுடிப் பெருமான் றாதை பிறந்தபூ வுந்தி மாலி
னறைவன மாலை யஞ்ச மாகையி னனந்த ஞானக்
குறையுளா மெனவு மன்னை செல்வியங் கனிபோ லுற்றார். 75

திருப்பள்ளி யெழுச்சி யென்றுந் திருமாலை யென்று மெங்குந்
திருப்பெயர் புனைந்து போற்றுந் திவ்விய பிரபந் தங்க
ளுரைப்பரு மறையின் சார மொன்றியும் பர்களும் பாடக்
கருப்பினி னிரத மூறக் கழறி னருள்க முய்ய. 76

பண்டுசெள னகனின் பாக்கர்ச் சதானி கமுனியும் பைங்கேழ்க்
கொண்டல் போல்வண் ணனும மடையவுங் கூறக் கேட்டான்
றொண்டர் தாட்பொடி யாரின்று தோமற வருளு நூலிற்
கண்டுதன் பெயர்கண் முற்றுங் களித்தனன் கமலக் கண்ணன். 77

வேறு.

அருச்சைகளி லரங்க முடையானே பரம்பொருளா
யருச்சனை யடைந்தொளிரு மென்று துணிந்தவன்பா
லுருக்கிளரு முத்தமிதன் றொண்கனுமை யொழுகுந்
திருக்கிளரும் பக்திபோடத் தெள்ளிய ருறைந்தார். 78

அரங்கனடி யாரடி படிந்தமுடி யன்னார்
வரங்கொளய னுதியர் வணங்கடிய ராகிக்
குரங்கினி னிலங்கைமுன் கொளுத்திய வலற்காங்
கிரங்களி மலர்ப்பணி யிழைத்தனர் மகிழ்ந்தார். 76

பின்னவர் விரத்தியையும் பேரரு ளரங்கன்
முன்னமெழி லவர்களின் மூடனிடந் தூதாய்
மன்னவர் வணங்க வெழுந்தரு ளியது மான
வென்னுமை யெழுந்தனனே யென்பதையு மெண்ணி 80

கானமயின் மானுமெழி லக்கணிகை காதல்
தானுமொரு விக்கனக வள்ளமொடு தன்கண்
மானமுற வுள்ளபொரு ளுங்கொடு நடந்தே
வானவர் வணங்குதிரு வரங்கனடி வைத்தே. 81

ஆரணமு ஞானியரு மயனரனு மாதி
யோரணவு வானவரு மின்னதென வோராச்
சீரண வுமையவருள் செய்கவென வாழ்த்தி
நாரண னருள்கொடு நடந்தனன் மனைக்கே.

## * தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8 - க்குச் செய்யுள்—419

* குறிப்பு — இவரது வைபவம் ஆண்டாள் வைபவத்திற்கு அடுத்ததாக 14-வது சருக்கத்தில் வெளியிடுதல் வேண்டும். 8-வது சருக்கத்தில் வெளியிட்டது தவறுதல். மஹான்கள் க்ஷமித்தருளும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீ

# ஆண்டாள் வைபவம்

## 8 - வது சருக்கம்

வேறு.

வேதம் பயின்று மவையின் றெழுந்த
விரிநூல் பயின்று மிலகக்
கீதம் பயின்று மஃதன் றளித்த
குருவின் கிளர்ந்த வடியிற்
பேதம் பயின்று பிறவிக் குளாவ
லெதிரிற் பிறங்கு கனிமே
லேதம் பயின்று படுகா யருந்து
மிவருக் கிணைந்த நரரே. 1

முன்னே மொழிந்த திருவில் லிபுத்தூ
ருறைவிண் டுசித்த முனிவன்
பொன்னு டடர்ந்த தருசேர் பொதும்ப
ரெனவோங் ககன்ற பொழிலுட்
டென்னு தெனுவெ னளிபா டுகுலவை
வனமூடு சென்றோர் தினமே
தன்னோர் கனித்தி ரங்கொண்டு சொத்தி
நன்னீர் சொரிந்த தரைமேல். 2

போல வால மதனிற் றழைந்து
பெருகுந் துழாயி னடியி
லோராரு மின்னி லுனியொன்று விண்ணி
னின்றங்கு வீழ்ந்த தெனலா
யோராவி லக்க ளொளிரும் பரன்ற
னுரமின்னு கின்ற திருவின்
சீராரிளங்கு மூவியொன் றிலங்கு
செயல்கண்டு நின்று திகையா. 3

முன்பா ரளித்த சனகன் யொரேரி
னுழுசீரை தன்னின் முனையா
மின்பாவை யென்ன விவளிந்த மேதி
னியினின் றெழுந்தி லகுமென்

றன்பா யணைந்து தன்பொற் கரங்க
ளவைகொண் டெடுத்து மகிழ்போழ்
தின்பாக விண்டு சித்தற் கிசைத்த
தசரீரி யிந்த விதமே.

திருவில்லி புத்தூ ரிறையே முராரி
திகழ்மூன மாக முனமில்
விரிபா ரணங்கு கொடுவந்த வேலை
யவளைய நிற்கு விழைவா
யொருநன் கிழைக்க வடியா னெனக்கு
நின்னுள் ளுவந்த தருள்கென்
றிருகை குவிக்க வரியுங் களித்தெ
னெழிலம்பு விப்பெ ணிதுகேள். 5

திறைவுற்ற வெற்கு விழைவென் பதொன்று
நிகழ்கின்ற தில்லை யெனினுங்
கறையற்ற வென்ற னடியார் களிக்க
வவர்செய் யுயர்ந்த பணியு
ளுறைதற் கடங்க லறுமென் குணங்க
ளவைநன்கு போற்று கையுமின்
னுறையுற்ற வாச மலரொன்று மாலை
நனி கொண்டு சாத்து கையுமே. 6

என்னெஞ் சுவக்கு முயர்தொண் டிவற்றை
யிதமுற் றிழைக்கு மவர்கண்
மன்னுஞ் சிறப்பு மகிழக் கொடுப்ப
லவைநீ நசைந்து புரிவாய்
கொன்னஞ் செனக்கு லவுமஞ் சனத்தி
னயிலின் குணத்த விழியாய்
பொன்னுஞ் சுரக்கு மவனென் றறைந்து
புக்கா னுயர்ந்த லவுகே. 7

அன்றே தொடங்கி யவதா ரமாக
வவனிப் பெணுரு மருக
நின்றே யிருந்து மிவணீ யியைந்த
தகுமப் பனென்று குறியா
கன்றே யுமூன்ற னளிபின் பொழிற்க
ணுதயம் புரிந்த விகளை
நின்றே டருங்கு மூலியென்று காவ
லிசெய்க வென்ற தினிதே. 8

ஶ்ரீ:

வேதார்த்த ஸங்க்ரஹ ப்ரமாணவாக்யாநாம்

அகாராதி ஸூசிகா

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| | அ | |
| அக்ஷராணாம் | 300 | கீ. 10-33 |
| அக்3நே: ஶிவஸ்ய | 272 | ஸ்வா. 53-74 |
| அஜாமேகாம் | 199 | ஶ்வேதாஶ்வ. 11-5 |
| அஜாயமாநோ | 325 | தைத்தி. |
| அதத்வஸ்ய ஸர்வஸ்ய ஹவதி | 373 | தைத்தி. II. 8-4 |
| அத2 நாமதே4யம் | 120 | ப்3ரு. II. 3-6 |
| அத2 ய ஆத்மாநம் | 307 | சா. |
| அத2 யதி3த3ம் | 303 | சா. |
| அத2 வைஶ்வாநரம் | 373 | தை. II. 8-3 |
| அதா2த ஆதே3ஶோ | 119 | ப்3ரு. |
| அத்3ருஶ்யம் | 286 | தை. |
| அநேந ஜீவேந | 185 | சா. |
| அநேந ஸர்வக3தத்வம் | 328 | ப்3ர. ஸூ. III 2-36 |
| அந்தஸ்தத்3த4ர்மோபதே3ஶாத் | 397 | ப்3ர. ஸூ. I. 1-21 |
| அந்த: ப்ரவிஷ்ட: | 54-184-237 | யஜுராரண்யக. 3-20 |
| அப ஶ்வ ஸஸஜ்ஜ | 329 | உபஶ்ருதி. 1-8 |
| அபரேயம் | 201 | கீ. VII. 8. |
| அபஹதபாப்மா | 235 | சா. 8-1-5 |
| அயநம் தஸ்ய | 330 | வி. பு. I. 4-6 |
| அயமாத்மா ப்3ரஹ்ம | 9 | ப்3ரு. 5 |
| அவித்3யா | 158-388 | வி. பு. VI. 7 |
| அவ்யக்தாதீ3 | 132 | ம. பா. ஶாந்தி. |
| அஸதே3வ | 110 | சா. |
| அஸ்வாதா3யீ | 200 | ஶ்வே. |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| அஹிம்ஸா | 305 | ஸா. |
| அவிஷ்யா | 381-404 | தை. ஆ III. 28 |
| அஹங்கா | 187 | ம. கீ. 10-20 |
| அஹம் க்ருஷ்ண ஜகத: | 300 | ம. கீ. 7-6 |
| அஹம் ஹி | 365 | ம. கீ. 9-26 |
| **ஆ** | | |
| ஆத்மா வா | 263 | ப்ர. உ. 1-4 |
| ஆத்மா ஜ்ஞாநயோகேன | 420 | வி. பு. VI. 7-22 |
| ஆவ்ருத்தி | 311 | ப்ர. ஸூ. 4-1-3 |
| ஆநந்தோ ப்ரஹ்ம | 117-417 | தை. III. 6 |
| ஆயாஸ | 375 | ம. கீ. 16-20 |
| **இ** | | |
| இமான் லோகான் | 261 | வி. பு. 6-6-12 |
| இஷ்டாபூர்த்தம் | 363 | ஹா. நா. VI. 1-6 |
| இதி ஹேய | 221 | ம. கீ. 5-19 |
| **உ** | | |
| உபயபரிகல்பித | 259 | ஸித்தித்ரய. |
| உப வக்தவ்ய | 328 | ப்ரஹ்ம. ஸூ. III. 2-31 |
| **ஐ** | | |
| ஐதாத்ம்ய | 412 | நாராயண VI. 120-77 |
| **ஏ** | | |
| ஏகஸ்வபாவ | 226 | வி. பு. |
| ஏகாந்திந: | 396 | வி. பு. 1. VI. 38 |
| ஏவமேகா தேவ: | 209 | |
| ஏகோ ஹ வை நாராயண | 283 | ம. நா. 2 |
| ஏதஸ்யைவா | 32-373 | ப்ரு. V. 8-9 |





| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஏத தேவ நிர்யாண: | 132 | உ. ஸா. ஸாந்திபர்வ. 198-9 |
| ஏதாவ | 312 | உ. ஸா. மோக்ஷபர்வ. 169-18 |
| ஏததேகே | 212-412 | உ. 12-123 |
| ஏவமேஷ | 134 | வி. பு. 6-5-76 |
| ஏவம் ப்ரகாரம் | 134 | வி. பு. 1-22-53 |
| ஏஷ ஸர்வ | 10 | ஸு. 7 |
| ஏஷ ஆத்மா அபஹதபாப்மா | 237 | ப்ரு. 5-7 |
| ஏஷ தேவ | 250 | ஸுபாலோப. 3-9 |
| ஏவ தேவ | 373 | தை. உ. II. 8-1 |
| **ஐ** | | |
| ஐததாத்ம்யமிதம் ஸர்வம் | 52-236-412 | ஸா. 6-8-7 |
| **ஔ** | | |
| ஔத்பத்திகஸ்ய | 406 | ஜை. ஸூ. 1-1-7 |
| **க** | | |
| கல்யாண | 276 | வி. பு. 1-2-8 |
| கர்ம நாம ஜகத: | 36 | ஸா. |
| கலா முஹூர்த்தா: | 135-397 | வி பு. 4-3-84 |
| கம் ப்ரஹ்ம | 420 | ஸா. உ. 4-10-5 |
| காரண: | 397 | உ. ஸா. ஊ. 5-27 |
| க்ருஷ்ண ஏவ | 133 | உ. ஸா. |
| க்ருதிஸாத்யம் | 358 | பஞ்சிகா. 2 |
| கேசவ ஸ்ருஷ்டம் | 314 | உ. ஸா. |
| க்ரீடா | 135 | வி. பு. 1-2-18 |
| **க்ஷ** | | |
| க்ஷேத்ரஜ்ஞ: | 133 | யாஜ்ஞ |
| க்ஷரம் ப்ரதான | 382-385-389-404 | உ. நா. 1-5 |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| | ம | |
| மளாராஜ்யம்தவதீ | 200 | ஐம்திகு. |
| | வ | |
| வதாமொஹாதாராः | 367 | தெ. க்ரு. 3-21 |
| | ஜ | |
| ஜமதவ்யம் மரீசம் தெ | 186 | வி. வா. |
| ஜமதெதந்ஹாஸ்யம் | 232 | வி. வா. |
| ஜநாஜ்வஸ்ய யதா | 281-313-326 | ஸு. ஸூ. 1-1-2 |
| ஜ்யோதீம்ஷி | 412 | வி. வா. 2-12-38 |
| | ஜ்ஞ | |
| ஜ்ஞாஜ்ஞௌ | 186 | ஐம்திகொவநிஷத |
| ஜ்ஞாநஶக்தி | 133 | வி. வா. 6-5-79 |
| | த | |
| த ஐதெ | 387 | ஸா. உ. 8-3-7 |
| தமேதா யஜ்ஞகதாரா | 278 | ஸ்ரு. 3-10-11 |
| தஸ்வஹே | 9-242 | ஐஹவா. 6-8-7 |
| தத்ர வாஸு | 184 | வி. வா. 6-5-77 |
| தஸ்ம்கல்ப நிபம்யநா | 374 | ஸு. ஹாஷ்ய |
| தஸ்வம்செ | 323 | வி.வா. 1-22-33 |
| தஸ்யஷா | 184 | தெ. உ. 2-6-18 |
| தயாநூ வ்ருதிஷெபாக | 328 | ஸு. ஸூ. 3-2-35 |
| தக்ஷரெ வாரெ வெஷூ | 229-385-390 | ஐ. நா. 6-1-1 |
| தவெ வீதயெ | 421 | வி. வா. 2-6-4[illegible] |
| தவெவாஸி: | 364 | தெ. உ. 6-1-[illegible] |
| தவெக்ஷத | 25-44-314 | ஸா. 6-[illegible] |
| தஹ்ணவஸாரகஸ்ரக | 72 | ஸு. ஸூ. 2-3-2[illegible] |
| தஹ்ணாஸ்வ | 383 | ஜெ. ஸூ. 1-4-[illegible] |



| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| தஸ்வாவெஸா | 390 | |
| தஹ்வெஷா: வாஸம் வஹம் | 382-386 | தெ. ஸ. 4-2 |
| தஸாஷெஸ வராக்ஷ: | 44 | ஸா. |
| தஸீஸாராணாம் | 236 | ஸ்ரு. 6 |
| தஸெஹம் | 10 | ஸு. 6-4-21 |
| தஸெவ ஹாம்தஸநஹாதி | 405 | கூ. 2-5-15 |
| தஸெவம் விதாநு | 10-261 | வா. ஸூ |
| தயா | 139 | வி. வா 61 |
| தவாம்தாராதா | 311 | ஐ. ஸா. ஜொக்ஷ 179-4 |
| தஸ்ஸாஸ்ஹாணாய | 370 | தெ. ஸ. III 6-10-2 |
| தஸ்ஸிநு ஜஜெக்ஷு | 349 | ஐ. ஸு. 1-9 |
| தாநஹம் த்விஷத: க்ரூராநு | 255-375 | ஐ. தீ. 16-19 |
| தெஷாஸெவாநகம்வாயம் | 254 | ஐ. தீ. 10-11 |
| தெஷாம் ஸதத யக்தாநாம் | 253 | ஐ. தீ 10-10 |
| தெஜஸா நீம்தியாணி | 170 | வி. வா. |
| தள த | 394 | ராஸ. 1-4-6-2 |
| க்வம் யஜ்ஞம் | 412 | ராஸ. 6-120-20 |
| | த | |
| தஹரெஸ்மிம்தராகாஶ: | 304 | ஸா. 1 |
| திவ்யம் ஸாதம் | 397 | ஐ. ஸா. ஸ. 5-27 |
| தெவகெ | 396 | வி. வா. 1-9-145 |
| தெவீஹெஷா | 223 | ஐ. தீ. 7-14 |
| த்வாவிஸெ வராஷள | 131 | ஐ. ஸா. ஶாம்தி. 196-9 |
| த்வா வஸவணஹா | 184 | ஐணக. |
| த்வெ வாவ ஸ்ஹணொ | 119 | |
| | ந | |
| ந கஸ்மாவிஹாமாக | 198 | ஸு. ஸூ. 2-1-35 |
| ந வக்ஷுஷா | 403 | கூ. |
| ந தக்ஷூ | 272 | ஐ. தீ. 18-40 |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ந தவெஷ்யெ | 314 | உ. நா. |
| ந தா: ஷு: | 209 | |
| ந ஹ்ருத்வஸம்வ: | 325 | உ. ஸா. |
| நாசகஸ்வஷ்டு | 421 | வி. பா. 2-6-46 |
| ந ஸம்ஜ்ஞெஶ | 423 | கம். |
| நாத்ர ஶுசெத: | 197 | ப்ர. ஸூ. 2-3-18 |
| நாந்ய: பந்தா | 224-314 | ப. ஸூ. |
| நாராயணம் ச | 63 | வி. பா. |
| நாயஸாத்ரா | 262 | கம். 1-2-23 |
| நிசெத்யெவஷா | 396 | வி. பா. 1-22-63 |
| நிசெத்யா | 185 | கம். |
| நியதம் குரு | 374 | ஸ. கீ. 3-8 |
| நியொஜ்ய | 361 | பம்ஹிதா 2 |
| நிவருணஸய | 219 | |
| நிஷ்க்ஷயம் | 29 | |
| நீலதொயத ஸம்ஸ்தா | 380 | உ. நா. 1-11 |
| நேஹ நாநாஸ்தி | 120-234-314 | ப்ரு. |
| நைநஸ்ச்ருஷ்டம் | 284 | ஸா. நா. 6-1-2 |


ப


| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| பதிம் விஶ்வஸ்ய | 236-358 | தை. நா. உ. நா. IV. 11 |
| பரஸ்த: | 327 | ப்ர. ஸூ. III 2-30 |
| பராஸ்ய | 74-405 | ஶ்வே. |
| பரிபஷ ஸவ | 314 | பா. ஸ. |
| பரிபஷ: | 263 | ஸ. கீ. 8-22 |
| பரு: ப்ராணிந: | 136 | |
| ப்ரயமாத்ராநம் | 185-236-242 | ஸம்ஹிதா. |
| ப்ரயிவ்யாப: | 322 | விம்பா. 1-2-68 |
| ப்ரக்ருதி: | 316 | |
| ப்ரக்ருதிஸ்து | 196-313-326 | ப்ர. ஸூ. 1-4-23 |





| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ப்ரக்ருதிம் பரிபஷம் | 201 | ஸ. கீ. 13-19 |
| ப்ரக்ருதிம் ஸ்வாம் | 202 | ஸ. கீ. 9-8 |
| ப்ரக்ருதெஶ்தாவத்ஸம் | 120 | ப்ர. ஸூ. 3-2-21 |
| ப்ரக்ஷா உபாஸி | 119 | |
| ப்ரஜாபதிரசாயஸயத | 236 | தை. நா. |
| ப்ரயாணகெக்ஷத்ரஜ்ஞ | 185 | ஸம்ஹிதா. |
| ப்ரயாந பரம்வெஸா: | 205 | வி. பா. |
| ப்ரவ்ருத்திம் ச | 275 | ஸ. கீ. 18-30-31-32 |
| ப்ரஶாஸிதாரம் | 32-135-210 | மநு. 12-122 |
| ப்ராஜ்ஞெந | 73 | |
| ப்ராணம் மநஸி | 277 | |
| ப்ராதுர்பாஸீஜ | 329 | மநு. |
| ப்ரியொ ஹி | 423 | ஸ. கீ. VII. 19 |


ப


| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| பாஹ்யமு | 327 | ப்ர. ஸூ. III. 2-32 |
| ப்ரஹ்மணா விபஶ்சிதா | 73 | தை. |
| ப்ரஹ்ம வநம் | 314 | |
| ப்ரஹ்ம வா | 282 | ப்ரு. 3-4-10 |
| ப்ரஹ்ம விதாப்நொதி | 10-261-290-339-423 | தை. 2-1-1 |
| ப்ரஹ்ம விஷ்ணு | 278 | சயபருஶிவா. |
| ப்ரஹ்ம வெத | 261-423 | முண்டக III. 2-9 |


ஸ


| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஸக்த்யா ஸாம் | 263 | ஸ. கீ. 18-55 |
| ஸக்த்யாத்வநந்யயா | 263-424 | ஸ. கீ. 11-54 |
| ஸமவாய | 41 | ஸா. |
| ஶீஷாஸ்யாஸ | 373 | தை. உ. II. 8-5 |
| ஸ்ருதிராசொ | 201 | ஸ. கீ. VII. 4 |
| மொக்ஷ | 185 | ஸம்ஹிதொபநிஷத |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ഹോതൃ ഹോത്രം | 236 | ശ്വേ. 1. |
| ഹോതൃണാം | 367 | ഭ. ഗീ. V. 29. |
| **ഉ** | | |
| ഉദോദയഃ | 381 | ഛാ. உ. III. 1-19 |
| ഉപാത്തതിലം | 224 | ഭ. ഗീ. 9-4-5 |
| ഉപാധ്യക്ഷേണ | 202 | ഭ. ഗീ. 9-10 |
| ഉഭി സർവപുരാണി | 374 | ഭ. ഗീ. III. 30 |
| ഉഹാനാജന്തം സംഹം | 381 | ப்ரு. V. 3-6 |
| ഉറച യാ | 422 | ഭ. ഗീ. 14-26 |
| ഉഷ്ടും ബ്രഹ്മ | 396 | வி. பா. I. 22-63 |
| ഊർദ്ധ്യാഃ | 234 | ப்ரு & க. |
| **യ** | | |
| യ ക്രൂതനി ദിവ്യു | 9-182 | ப்ரு. 5-7-22 |
| യ ഞനം വിരും | 261 | தை. நா. |
| യഃ പൃഥിവിൻ തരഃ | 183 | സുബാ. |
| യഃ പൃഥിവ്യാം | 182 | ப்ரு. |
| യജ്ഞവപുജ്ഞ | 73-74-234-405 | മുണ്ഡക. 1-1-10 |
| യജ്ജുഷ്വ | 365 | வி. பா. V. 20-97 |
| യതോ വാ | 281 | தை. 3-1-7-8-9-10-11 |
| യച്ച കിം ചിജ | 186 | வி. பா. |
| യത്ര ത്വസ്യ | 234 | ப்ரு. |
| യത്ര പ്രവിഷ്ട | 390 | பா. ஸூ. 18 |
| യത്രഷ്ടുയഃ | 390 | தை. ஆா. II. 60 |
| യസ്തദ്ധ്യം | 184 | தை. உ. 2-6-25 |
| യഥാ സരിത് | 40-100 | ஸா. |
| യദാപശ്യ | 383 | தை ஸ |
| യദാ തദഃ | 279 | ശ്വേ 4-18 |
| യദാത്മതത്ത്വേന | 295 | ശ്വേ 3-10 |







| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| യേനാശ്രുതം ശ്രുതം | 284 | ഛാ 6-1-3 |
| യമേവൈഷ | 423 | മുണ്ഡക III 2-3 |
| യസ്മാത് പരം | 278 | ശ്വേ 3-9 |
| യസ്മിന് കവിള | 271 | ഉദ്ധ |
| യസ്യാത്മാ ശരീരം | 49 | ப்ரு |
| യസ്യ ജ്ഞാനമയം | 235 | മുണ്ഡക 1-1-10 |
| യസ്യ പൃഥിവീ | 237 | ப்ரு 5-7 |
| യാവദാത്മഭാവിത്വാച്ച | 73 | ப்ர ஸூ II 3-30 |
| യാവാന്യായോ | 304 | ஸா 1 |
| യാ വേദ ബാഹ്യാഃ | 269 | மனு 12-95 |
| യേനാക്ഷരം പുരുഷം | 375 | ഭ ഗീ III 33 |
| യേ തേ ഉദദിതം | 375 | ഭ ഗീ III 32 |
| യേ യജന്തി | 213 | |
| യേഷാം ന യശോ | 365 | வி பா V 30-19 |
| യോക്ഷരം | 183 | സുബാ. |
| യോഽസ്യാധ്യക്ഷഃ | 380 | தை. ப்ரா. II 7-1-35 |
| യോ ബ്രഹ്മാണം | 273 | ശ്വേ. 6-35 |
| യോ മാമജം | 131 | ഭ. ഗീ. 10-3 |
| യോ ഭൂതാനാം | 183 | സുബാ. |
| യോ യോ യാം യാം | 364 | ഭ. ഗീ. 7-21. |
| യോ വേദ | 385-389 | தை. ஆ. I-1 |
| യോ വേദ | 229-382 | தை. உ. 2-1-4 |
| **ര** | | |
| രസോ വൈ സഃ | 417 | தை. II 1-7 |
| **വ** | | |
| വർണാശ്രമാചാരവതാ | 266 | வி. பா. 3-8-9 |
| വായവ്യം | 369 | தை. ஸ. II. 1-1 |
| വിജ്ഞാതാരം | 74 | ப்ரு. |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| விஜ்ஞானஞ்சாவிஜ்ஞானம் ச | 260 | ஸாங்க்ய. உ. 11 |
| வித்³யாவிநய | 220 | ஸ. கீ. 5-18 |
| விஷ்ணுஹ்ருதயம் | 225 | ஸ. கீ. 10-42 |
| விஷ்ணுராத்ரா | 312 | பா. ஸா. மோக்ஷபர்வ. 169-18 |
| விஷ்ணோ: | 317 | வி. பு. |
| வேதாஹமேதம் | 380 | பு. ஸூ. |
| வேதைஶ்ச ஸர்வைரஹமேவ | 219 | ஸ_கீ. 15-15 |
| வைஷம்ய நைர்க்ருண்யே | 197 | ப்³ர. ஸூ. 2·1-14 |
| வ்யக்தம் | 203 | வி. பு. |
| வ்யக்திஶ்ச பரமாத்மா | 394 | நார. ℓ-114-14 |

ஶ

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஶக்தய: | 230 | |
| ஶாராநா | 395 | நார. VII· 110-12 |
| ஶாஸ்த்ரத்³ருஷ்ட்யா | 302-310 | ப்³ர. ஸூ. I. 1-31 |
| ஶுபாஶ்ரய | 133 | வி. பு. 6-6-12 |

ஸ

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஸம்ஸ்ப்ருஶ்யமானா | 319 | வி. பு. |
| ஸ ஏவ | 323 | வி. பு. 1-2-68 |
| ஸ ஏஷ | 401 | ஸா. I· 6-7 |
| ஸ ஏஷோऽந்தராதித்யே | 330 | ஸா. உ. I 6-7 |
| ஸ ஏவாந்தர்ஹ்ருதய | 380 | தை. உ. I. 6 |
| ஸங்கீர்ணா | 270 | ஸ்ம்ருதி. |
| ஸஞ்ஜாயதே | 319 | வி. பு. |
| ஸதயா | 365 | ஸ_கீ. 7-22 |
| ஸத்வாத்ஸஞ்ஜாயதே | 274 | ஸ. கீ. 14-17 |
| ஸத்யம் ஜ்ஞானம் | 29-117-389-405 | தை. 2-1-3 |
| ஸதா பஶ்யந்தி ஸூரய: | 404 | |





| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஸதேவ ஸோம்ய | 42-282-314-391 | ஸா. 6-8-7 |
| ஸந்தோஷா: | 25 | ஸா. |
| ஸத்வகல்யாண | 318 | வி. பு. |
| ஸத்வமேயாஸ்ரிதம் | 385-387 | வி. பு. I. 2: -53 |
| ஸத்வா: | 396 | வி. பு. VI· 7-70 |
| ஸமஸ்தம் | 386 | வி. பு. I. 23-42 |
| ஸர்வகர்மா | 139 | வி. பு. 62 |
| ஸர்வகல்யாணாத்வி | 376 | ஸ. கீ. 18-56 |
| ஸர்வகந்த: ஸர்வரஸ: | 310 | வி. பு. 1-19-88 |
| ஸர்வம் ஹ்யேதம் | 235-412 | ஸா. 3-14-1 |
| ஸர்வம் பரவஶம் | 419 | உப. IV. 6 |
| ஸர்வதா | 160 | வி. பு. |
| ஸர்வஸ்ய சாஹம் | 187 | ஸ. கீ. 15-15 |
| ஸர்வஸ்ய வஶீ | 120-236-314-358 | ப்³ரு. 6-4-22 |
| ஸர்வாணி | 235 | பு. ஸூ. |
| ஸர்வே நிமேஷா | 235-314-380 | தை. நா. 1-8 |
| ஸர்வே வேதாயத் | 208 | |
| ஸர்வேஷாம் | 62 | உப. |
| ஸ ஸர்வபூதஸ்த: | 318 | வி. பு |
| ஸம்ஸார | 138 | வி. பு. 7 |
| ஸம்ஸாரதாபார் | 388 | வி. பு. 1-62 |
| ஸஹஸ்ரஶீர்ஷம் | 288 | நார. ஸப |
| ஸர்வேஷாம் ஸத்வம் | 209 | |
| ஸஹஸ்ராம்ஶுநே: | 422 | உப |
| ஸாக்ஷாத்ர்யா | 327 | ஞா. ஸூ. III 2-31 |
| ஸிஷ்யஞ்சா: | 329 | உப. 1-7 |
| ஸூர்யசந்த்ரமஸௌ | 68 | தை. நா |
| ஸூர்யஸ்த: | 320 | வி. பு. 1-2-66 |
| ஸேவா | 419 | உப. IV. 6 |
| ஸோऽகாமயத | 414 | தை. உ. II 6-1 |

| ப்ரதீகம் | பக்கம் | ஆகரம் |
|---|---|---|
| ஸௌஹார்தாந்தரம் | 309 | |
| ஸ்வாத்மஸம்ஸ்ருதி | 316 | வி. வ. |
| ஸ்தோபாஸ்மி | 31 | உபா. |
| ஸ்ரூத விசேஷாஸ | 327 | ஜ. ஸூ. III 2-33 |
| ஸ்வேதா ஸ்வதம் ப்ரஹ்ம | 321 | வி. வ. 1-[illegible]-6 |
| ஸ்வகர்மநிரதஃ | 266 | ஸ. தீ. 18-46 |
| **ஹ** | | |
| ஹம்ஸாஹவிஷா | 47-210 | உபா. |
| ஹிரண்யநியம் | 372 | உபா. VII [illegible]-2 |
| ஹ்ருஷ்டேந்த்ர ஸ்வஸ்தி | 287-381-404 | உ. நா. 6-1-4 |


158954

## கும்பகோணம் திவான்பஹதூர் V. K. ராமாநுஜாசாரியார் எழுதி அச்சிட்ட தமிழ் புஸ்தகங்கள்.

**1.** ச்ரௌதம் — விலை ரூ. 1—0—0

இதில் வேதத்தில் கர்மகாண்டத்தில் சொல்லப்படும் அக்னி ஹோத்ரம், தர்சம், பூர்ணமாஸம் என்கிற இஷ்டிகளும், அக்னிஷ்டோமம் என்கிற ஸோம யாகமும் விரிவாயும், மீமாம்ஸையைப் படிக்கிறவர்களுக்குத் தெரியவேண்டிய மற்ற யாகங்கள் சுருக்கமாயும் சொல்லப்படுகின்றன. வேதாந்த தீபிகையில் அச்சிடப்பட்டுவரும் மீமாம்ஸா சுருக்கத்தைப் படிக்கிறவர்களுக்கு இது அவசியம் வேண்டியது.

**2.** ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த கீதாபாஷ்யம் கிரந்த அக்ஷரத்திலும் அதற்கு எளிதான தமிழ் நடையில் உரையும், அதின் வ்யாக்யானமான தாத்பர்ய சந்திரிகையிலிருந்து குறிப்புகளும் அடங்கியது.

| | |
|---|---|
| முதல் ஆறு அத்தியாயம் | ரூ. 1—4—0 |
| இரண்டாவது ஆறு அத்தியாயம் | ரூ. 1—0—0 |
| கடைசி ஆறு அத்தியாயம் | ரூ. 0—12—0 |

**3.** ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த **ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில்** உள்ள **அதிகார ஸங்கிரஹப் பாட்டுக்களும்,** அவைகளுக்கு எளிதான தமிழ்நடையில் பதவுரையும், கருத்தும் விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. 0—8—0

**4.** அதே புஸ்தகத்தில் பிரமாணங்களாகக்காட்டப்பட்ட **ஸம்ஸ்கிருத வசனங்களுக்கும், தமிழ்** வசனங்களுக்கும், அரும்பதங்களுக்கும் எளிதான தமிழ்நடையில் பொழிப்புரை. ரூ. 1—0—0

**5.** அதே புஸ்தகத்தில் ஒவ்வொரு அதிகாரத்தில் முதலிலும் கடைசியிலுமிருக்கும் **அதிகாரஸங்கிரஹ ச்லோகங்களும்** அவைகளுக்கு எளிதான தமிழ் நடையில் பதவுரையும். கருத்தும், விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. இது அச்சிடப்பட்டு வருகிறது. விலை 0—8—0 ஆக இருக்கும்.

---

N. B.— இவைகளை வேண்டுகிறவர்கள் கும்பகோணம் பாட்டராசாரியர் தெருவில் ஸ்ரீ-உப-வே சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்டராசாரியருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

**Registered No. M. 916.**

# Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| ,, | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| ,, | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| ,, | T.D. Sreenivasachari, M.A., B.L. | ,, |
| ,, | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | ***Treasurer.*** |
| ,, | N.T. Shamanna, Solicitor. | ***Director*** |
| ,, | M. Sudarsana Iyengar, Merchant. | ,, |
| ,, | C.V. Venktaramana Iyengar, B.A., B.L. Coimbatore. | ,, |
| ,, | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | ,, |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.